Madras & Andhra Universities

THE

TAMIL TEXT BOOK

(for Detailed Study—Group A)

FOR

The S·S·L·C· Public Examination

AND

Matriculation Examination

1933

MADRAS;
PRINTED BY THOMPSON & CO., LTD.

உள்ளுறை

செய்யுள்

I. கடவுள் வாழ்த்து:— பக்கம்

(i) தேவாரம்—திருநாவுக்கரசு சுவாமிகள் 5

(ii) திருக் குறுந் தாண்டகம்—திருமங்கை ஆழ்வார் 7

(iii) திரு அருட்பா—சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் 9

II. திருக் குறள் 10

III. பழமொழி நானூறு—முன்றுறை அரையர் 13

IV. கம்ப ராமாயணம்—அயோத்தியா காண்டம்—குகப் படலம் 18

V. காஞ்சிப் புராணம்—சிவஞான முனிவர்—தழுவக் குழைந்த படலம் 29

VI. சேக்கிழார் பிள்ளைத் தமிழ்—மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை 37

VII. புலவர் புராணம்—முருக தாசர்—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் சருக்கம். 39

வசனம்

1. சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம்—அஷ்டாவதானம்—பூவை-கலியாணசுந்தர முதலியார் 44

2. ஜ்யார்ஜ் நார்ட்டன் துரை உபந்நியாசம்—(பச்சையப்பன் ஹால் திறந்தபோது செய்தது) 64

3. ஜன விநோதினி—வால்யம் IX

(i) மக்களுக்குச் செய்த நற்போதனை 91

(ii) பட்டுப் பூச்சி 99

4. ஜன விநோதினி—வால்யம் XIX

சுத்த வீரன், அமைச்சன், கவிவாணன் ஆகிய இம்மூவரில் தன் நாட்டுக்குப் பெரும்பயன் விளைவிப்பவன் எவன்? 107

5. சிசுபால சரிதம்—சுருக்கம்—அ. குமாரசாமிப் புலவர் 121

குறிப்புரை: 129

S--2

மனப்பாடம் செய்யவேண்டிய

பகுதிகள்

எண்.		வரிகள்.
1.	தேவாரம்:—1, 2, 4, 5 பாசுரங்கள்	24
2.	திருக் குறுந் தாண்டகம்:—1, 4 பாசுரங்கள்	16
3.	திரு அருட்பா:—2, 3 ,,	12
4.	திருக்குறள்:—1, 4, 5, 6, 8, 10, 12, 13, 14, 20 செய்யுட்கள்	20
5.	பழமொழி:—2, 8, 11, 15 ,,	16
6.	இராமாயணம்:—10, 11, 16, 18, 24, 30, 51, 53, 54 செய்யுட்கள்	48
7.	காஞ்சிப் புராணம்:—18, 24, 26 ,,	20
8.	சேக்கிழார் பிள்ளைத்தமிழ்:—2 ,,	16
9.	புலவர் புராணம்:—2, 4, 6 ,,	12
		184

I

திருநாவுக்கரசு சுவாமிகள்

தேவாரம்

(i)

நான்காம் திருமுறை

திரு ஒற்றியூர்—திரு நேரிசை

ஓம்பினேன் கூட்டை வாளா
        உள்ளத்(து) ஓர் கொடுமை வைத்துக்
காம்(பு)இலா மூழை போலக்
        கருதிற்றே முகக்க மாட்டேன்;
பாம்பின்வாய்த் தேரை போலப்
        பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய்
        ஒற்றியூர் உடைய கோவே! 1

மனம்எனும் தோணி பற்றி
        மதிஎனும் கோலை ஊன்றிச்
சினம்எனும் சரக்கை ஏற்றிச்
        செறிகடல் ஓடும் போது
மதன் எனும் பாறை தாக்கி
        மறியும்போ(து) அறிய ஒண்ணா(து)
உனைஉனும் உணர்வை நல்காய்
        ஒற்றியூர் உடைய கோவே! 2

ஆறாந் திருமுறை

கோயில்—பெரிய திருத் தாண்டகம்.

அருந்தவர்கள் தொழு(து) ஏத்தும் அப்பன் றன்னை
அமரர்கள்தம் பெருமானை அரனை மூவா
மருந்(து) அமரர்க்(கு) அருள்புரிந்த மைந்தன் றன்னை
மறிகடலும் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்(து) ஒளிய தாரகையும் திசைகள் எட்டும்
திரிசுடர்கள் ஓர் இரண்டும் பிறவும் ஆய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 3

திருக் காளத்தி—திருத் தாண்டகம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாய்ஆரத் தன்அடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்(து) அப்பாலான் இப்பால் செம்பொன்
* புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதின் உள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றின் உள்
கனத்தகத்தான் கயிலாயத்(து) உச்சி யுள்ளான் [ளான்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே. 4

திருவினாத் திருத்தாண்டகம்.

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லான்;
ஒப்புடையன் அல்லன்ஓர் உருவன் அல்லன்
ஓர்ஊரன் அல்லன்ஓர் உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவன்அருளே கண்ஆகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவன்இறைவன் என்(று)எழுதிக் காட்டொ ணாதே. 5

---

* புனத்தகத்தார் என்றும் பாடம்.

திருமங்கை ஆழ்வார்

திருக் குறுந் தாண்டகம்

அறுசீர் விருத்தம்

இரும்(பு)அனன்(று) உண்ட நீர்போல்
எம்பெரு மானுக்(கு) என்தன்
அரும்பெறல் அன்பு புக்கிட்(டு)
அடிமைபூண்(டு) உய்ந்து போனேன்
வரும்புயல் வண்ண னாரை
மருவிஎன் மனத்து வைத்துக்
கரும்பினின் சாறு போலப்
பருகினேற்(கு) இனிய வாறே. 1

இம்மையை மறுமை தன்னை
எமக்குவீ டாகி நின்ற
மெய்ம்மையை விரிந்த சோலை
வியன்திரு அரங்கம் மேய
செம்மையைக் கருமை தன்னைத்
திருமலை ஒருமை யானைத்
தன்மையை நினைவார் என்தன்
தலைமிசை மன்னு வாரே. 2

உள்ளமோ ஒன்றில் நில்லா(து)
ஓசையில் எரிநின்(று) உண்ணும்
கொள்ளிமேல் எறும்பு போலக்
குழையுமால் என்தன் உள்ளம்
தெள்ளியீர்! தேவர்க்(கு) எல்லாம்
தேவராய் உலகம் கொண்ட
ஒள்ளியீர்! உம்மை அல்லால்
எழுமையும் துணையி லோமே. 3

திரு நெடுந் தாண்டகம்

ஆசிரிய விருத்தம்

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை
இருநிலம்கால் தீநீர்விண் பூதம் ஐந்தாய்ச்
செந்திறத்த தமிழோசை வடசொல் ஆகித்
திசைநான்கு மாய்த்திங்கள் ஞாயி(று) ஆகி
அந்தரத்தில் தேவர்க்கும் அறிய லாகா
அந்தணனை அந்தணர்மாட்(டு) அந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவா(து) என்றும்
வாழுதியேல் வாழலாம் மடநெஞ் சமே! 4

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேரா(து)என் நெஞ்சின் உள்ளாய் !
பெருமான்!உன் திருவடியே பேணி னேனே. 5

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திரு அருட்பா

அருள் விளக்க மாலை

அறையாத மிகுபெருங்காற்(று) அடித்தாலும் சிறிதும்
அசையாதே அவியாதே அண்டபகி ரண்டத்
துறையாவும் பிண்டவகைத் துறைமுழுதும் விளங்கத்
தூண்டாதே விளங்குகின்ற சோதிமணி விளக்கே!
மறையாதே குறையாதே களங்கமும்இல் லாதே
மயக்காதே பனிக்காதே வயங்குகின்ற மதியே!
இறையாய்எவ் வுயிரகத்தும் அகப்புறத்தும் புறத்தும்
இலங்குநடத்(து) அரசே!என் இசையும்அணிந் தருளே.

ஆளுடைய நம்பிகள் அருள்மாலை.

தேன்படிக்கும் அமுதாம்உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போ(து) என்னை
நான் அறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிருந்
தான்படிக்கும் அனுபவம்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே! 2

வள்ளலார் திரு உள்ளம்.

ஒத்துணையும் பேதம் உறு(து) எவ்வுயிரும் தம்உயிர்போல்
எண்ணி உள்ளே
ஒத்(து) உரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர்:அவர்
உளம்தான் சுத்த
சித்(து) உருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்என நான்
தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்(கு)ஏவல் புரிந்திட என் சிந்தைமிக
விழைந்த தாலோ. 3

II

திருக் குறள்

அறத்துப்பால்

அன்புடைமை

அன்(பு) இலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்(பு) உடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 1

அன்போ(டு) இயைந்த வழக்(கு) என்ப, ஆர்உயிர்க்(கு)
என்போ(டு) இயைந்த தொடர்பு. 2

அன்(பு)அகத்(து) இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த் தற்று. 3

அன்பின் வழிய(து) உயிர்நிலை; அஃ(து) இலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு. 4

விருந்தோம்பல்.

இருந்(து) ஓம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்(து) ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 5

விருந்து புறத்ததாத் தான் உண்டல், சாவா
மருந்(து) எனினும் வேண்டற்பாற் றன்று. 6

அகன்அமர்ந்து செய்யாள் உறையும், முகன்அமர்ந்து
நல்விருந்(து) ஓம்புவான் இல். 7

மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 8

இனியவை கூறல்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்(கு)
அணி; அல்ல மற்றுப் பிற. 9

இனிய உளவாக இன்னாத கூறல்,
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. 10

செய்ந் நன்றி அறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் மாற்றல் அரிது. 11

தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரி வார். 12

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 13

அடக்கம் உடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும். 14

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்,
சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு. 15

பயனில சொல்லாமை

பயனில்சொல் பாராட்டு வானை மகன் எனல்;
மக்கள் பதடி எனல். 16

ஒப்புரவு அறிதல்

ஊருணி நீர் நிறைந் தற்றே, உல(கு) அவாம்
பேர் அறி வாளன் திரு. 17

ஈகை

வறியார்க்(கு) ஒன்(று) ஈவதே ஈகை; மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர(து) உடைத்து. 18

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃ(து) ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 19

புகழ்

தோன்றில் புகழொடு தோன்றுக; அஃ(து) இலார்
தோன்றலில் தோன்றாமை நன்று. 20

III

முன்றுறை அரையர்

இயற்றிய

பழமொழி நானூறு

i. கல்வி

கல்வியின் சிறப்பு

ஆற்றவும் கற்றார் அறிவுடையார். அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நா(டு)இல்லை. அந்நாடு
வேற்றுநா(டு) ஆகா: தமவேயாம். ஆயினால்
ஆற்(று)உணா வேண்டுவ(து) இல். 1

குலவித்தை கல்லாமல் வருதல்

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன், குலவிச்சை
கல்லாமல் பாகம் படும். 2

கற்றோர் அருமை கற்றோர் அறிதல்

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்:—நலமிக்க
பூம்புனல் ஊர! பொதுமக்கட்(கு) ஆகாதே
பாம்(பு) அறியும் பாம்பின கால். 3

ii. இன்னா செய்யாமை

மதிப்பு மிக்கவரை அழிக்க முயலுதல்

மிக்குடைய ராகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறும் என்றல் இழுக்(கு)ஆகும்.
நற்(கு)எளி தாகி விடினும், நளிர்வரைமேல்
கற்கிள்ளிக் கை உய்ந்தார் இல். 4

iii. சான்றோர் இயல்பு

பீடு இலாவிடத்தும் பெருந்தகைமையில் வழுவாமை

மாடம் அழிந்தக்கால் மற்றும் எடுப்பதோர்
கூடம் மரத்திற்குத் துப்(பு) ஆகும். அஃதேபோல்
பீடிலாக் கண்ணும் பெரியோர் பெருந்தகையர்.
ஈடில் லதற்(கு) இல்லை பாடு. 5

கல்வி இல்லாவிடத்தும் மாட்சிமை மிகுதல்

கற்ற(து) ஒன்(று) இன்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்(று) ஒன்(று) அறிவாரின் மாண்மிக நல்லரால்;
பொற்ப உரைப்பான் புகவேண்டா, கொற்சேரித்
துன்னூசி விற்பவர் இல். 6

உயர்ந்தோரிடத்துக் குற்றம்

நிரைதொடி தாங்கிய நீள்தோள்மாற்(கு) ஏயும்
உரைஒழியா வாகும் உயர்ந்தோர்கட் குற்றம்,
மரைஆ கன்(று) ஊட்டும் மலைநாட! மாயா:
நரைஆன் புறத்(து)இட்ட சூடு. 7

iv. சான்றோர் செய்கை

சிறியார் செல்வமும் பெரியார் வறுமையும்

சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே.—தெரியின்

மதுமயங்கு பூங்கோதை மாண்இழாய்! மோரின்
முதுநெய்தீ(து) ஆகலோ இல். 8

v. கீழ்மக்கள் இயல்பு

பெரியரோடு சேர்ந்தாலும் பெரியர் ஆகாமை

தக்காரோ(டு) ஒன்றித் தமராய் ஒழுகினார்
மிக்காரால் என்று சிறியாரைத் தாம்தேறார்.
கொக்(கு)ஆர் வளவயல் ஊர! தினலாமோ
அக்காரம் சேர்ந்த மணல். 9

vi. கீழ்மக்கள் செய்கை

பெரியோரை அடாத வார்த்தை சொல்லுதல்

நெறியால் உணராது நீர்மையும் இன்றிச்
சிறியார் எளியரால் என்று—பெரியாரைத்
தங்கண்நேர் வைத்துத் தக(வு)அல்ல கூறுதல்
திங்களை நாய்க்குரைத் தற்று. 10

vii. முயற்சி

தாம் நன்மை அடைதற்குத் தாமே காரணம்

எமக்குத் துணையாவார் வேண்டும்என்(று) எண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாம்தெரிதல் வேண்டா.
பிறர்க்குப் பிறர்செய்வ(து) உண்டோ! மற்றில்லை
தமக்கு மருத்துவர் தாம். 11

viii. கருமம் முடித்தல்

உளைய உரையாது உறுதி கொள்ளல்

நிலைஇய பண்பிலார் நேர்அல்லர் என்(று)ஒன்(று)
உளைய உரையா(து) உறுதியே கொள்க.
வளைஒலி ஐம்பாலாய்! வாங்கி யிருந்து
தொளைஎண்ணார் அப்பம் தின்பார். 12

சோம்பனை ஏவிய காரியம் முடிவுபெறாது

மடியை வியங்கொள்ளின் மற்றைக் கருமம்
முடியாத வாறே முயலும்—கொடி அன்னாய்!
பாரித் தவனை நலிந்து தொழில்கோடல்
மூரி உழுது விடல். 13

கருமம் செய்ய அயோக்கியரை வையாமை

கட்டுடைத் தாகக் கருமஞ் செயவைப்பின்
பட்டுண்டாங் கோடும் பரியாரை வையற்க.
தொட்டாரை ஒட்டாப் பொருள் இல்லை: இல்லையே
அட்டாரை ஒட்டாக் கலம். 14

ix. பொருள்

பொருளுடையாரிடம் கருமம் உள்ளவர் தேடிவருவர்

அருமை யுடைய பொருளுடையார் தம்கண்
கருமம் உடையாரை நாடார்.—எருமைமேல்
நாரை துயில்வதியும் ஊர! குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றார் இல். 15

சிறிய முதற்பொருளால் பெரிய தனிகன் ஆகுதல்

உள்ளூ ரவரால் உணர்ந்தா முதல்எனினும்
எள்ளாமை வேண்டும். இலங்(கு)இழாய்!—தள்ளா(து)
அழுங்கல் முதுபதி அங்காடி மேயும்
பழங்கன்(று)ஏ (று) ஆதலும் உண்டு. 16

x. நன்றியில் செல்வம்

அறிவில்லார் செல்வம் பெறுதல் துன்பம் பெறுதலே

தொன்மையின் மாண்ட துணி(வு)ஒன்றும் இல்லாதார்
நன்மையின் மாண்ட பொருள்பெறுதல்,—இன்ஒலிநீர்
கன்மேல் இலங்கு மலைநாட! மாக்காய்த்துத்
தன்மேல் குணில்கொள்ளு மாறு. 17

xi. ஊழ்

கூடுங் காலத்தில் செல்வம் வந்து கூடுதல்

பன்னாளும் நின்ற இடத்தும் கணிவேங்கை
நன்னாளே நாடி மலர்தலால்,—மன்னர்
உவப்ப வழிபட்(டு) ஒழுகினும், செல்வம்
தொகற்பால போழ்தே தொகும். 18

ஆவார்க்குத் தீமையும் நன்மை ஆகுதல்

இதுமன்னும் தீ(து) என்(று) இசைந்ததூஉம் ஆவார்க்(கு)
அதுமன்னும் நல்லதே ஆகும்—மதுமன்னும்
வீநாறு கானல் விரிதிரைத் தண்சேர்ப்ப!
தீநாள் திருவுடையார்க்(கு) இல். 19

xii. அமைச்சர்

அரசன் எப்படி அமைச்சரும் அப்படி.

செயிர்அறு செங்கோல் சினவேந்தன் தீமை
பயிர்அறு பக்கத்தார் கொள்வர்.—துகிர்புரையும்
செவ்வாய் முறுவல்நற் சின்மொழியாய்! செய்தானை
ஒவ்வாத பாவையோ இல். 20

IV

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்

குகப் படலம்

பரதன் சேனை கங்கைக்கரையை அடைதல்

பூவிரி பொலன்கழற் பொருவில் தானையான்
காவிரி நா(டு)அன்ன கழனி நா(டு) ஒரீஇத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான். 1

கான்றலை நண்ணிய காளை பின்படர்
தோன்றலை அவ்வழி தொடர்ந்து சென்றன
ஆன்றவர் உணர்த்திய அக்கு ரோணிகள்
மூன்றுபத் தாயிரத்(து) இரட்டி முற்றுமே. 2

சேனையைக்கண்டு குகன் ஐயுறுதல்

அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
துப்புடைக் கடலின்நீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோ(டு) உடற்ற வேகொலாம்
இப்படை எடுத்த(து)என்(று) எடுத்த சீற்றத்தான். 3

குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகைமுரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகைமிகக் கண்கள் தீ நாற, நாசியில்
புகைஉறக் குனிப்(பு)உறும் புருவப் போர்விலான். 4

கட்டிய சுரிகையன், கடித்த வாயினன்,
வெட்டிய மொழியினன், விழிக்கண் தீயினன்,
கொட்டிய துடியினன், குறிக்கும் கொம்பினன்,
கிட்டிய(து) அமர்எனக் கிளர்ந்த தோளினன். 5

"எலிஎலாம் இப்படை அரவம் யான்" என
ஒலிஉலாம் சேனையை உவந்து கூயினன்
வலிஉலாம் உலகினில் வாழும் வள்உகிர்ப்
புலிஎலாம் ஒருவழி புகுந்த போலவே. 6

மருங்(கு) அடை தென்கரை வந்து தோன்றினன்
ஒருங்(கு) அடை நெடும்படை, ஒல்என் ஆர்ப்பினோ(டு),
அருங்கடை யுகந்தனில் அசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே. 7

[குகன் தன்சேனையை நோக்கிக் கூறுவது:—8-19.]

தோன்றின புளிஞரை நோக்கிச், "சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்(கு)
ஏன்றனென் என்உயிர்த் துணைவற்(கு) ஈகுவான்
ஆன்றபேர் அரசுநீர் அமைதிராம்" என்றான். 8

"துடிஎறி, நெறிகளும் துறையும் சுற்றுற
ஒடிஎறி அம்பிகள் யாதும் ஓட்டலிர்;
கடிஎறி; கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடிஎறி பட" எனப் பெயர்த்தும் கூறுவான். 9

வேறு

"அஞ்சன வண்ணன்என் ஆர்உயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனை யால்அர(சு) எய்திய மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீஉமிழ் கின்றன செல்லாவோ!
உஞ்(சு)இவர் போய்விடின் நாய்க்குகன் என்(று)எனை ஓதாரோ! 10

"ஆழ நெடுந்திரை யாறு கடந்(து) இவர் போவாரோ!
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ!
தோழமை என்(று)அவர் சொல்லிய சொல்ஒரு சொல்அன்றோ!
ஏழமை வேடன் இறந்திலன் என்(று)எனை ஏசாரோ! 11

“முன்னவன் என்று நினைந்திலன்! மொய்புலி அன்னான்ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்! அன்னவை பேசானேல்,
என்!இவன் என்னை இகழ்ந்த(து)இவ் எல்லை கடந்(து)அன்றோ!
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடும்சரம் வாயாவோ.! 12

“பாவமும், நின்ற பெரும்பழி யும்,பகை நண்போடும்,
ஏவமும் என்பவை மண்ணுல(கு) ஆள்பவர் எண்ணாரோ!
ஆவது போக,என் ஆர்உயிர்த் தோழமை தந்தான்மேற்
போவது, சேனையும் ஆர்உயி ருங்கொடு போயன்றோ! 13

“அருந்தவம் என்துணை ஆள, இவன்புவி ஆள்வானோ!
மருந்தெனின் அன்(று) உயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனோ!
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று! கழிக்குவென் என்கடன் இன்றோடே. 14

“தும்பியு மாவு மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பியல் தார்இவர் வாள்வலி கங்கை கடந்தன்றோ!
வெம்பிய வேடர் உளீர்துறை ஓடம் விலக்கீரோ!
நம்பிமுன் னேஇனி நம்உயிர் மாய்வது நன்(று)அன்றோ! 15

“போன படைத்தலை வீரர் தமக்(கு)இரை போதா இச்
சேனை கிடக்கிடு; தேவர் வரின்,சிலை மாமேகம்
சோனை படக்,குடர் சூறை படச்,சுடர் வாளோடும்
தானை படத்,தனி யானை படத்,திரள் சாயேனோ! 16

“நின்ற கொடைக்கைஎன் அன்பன் உடுக்க நெடுஞ்சீரம்
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தைஎன் அம்பாலே
கொன்று குவித்த நிணம்கொள் பிணக்குவை கொண்(டு) ஓடித்
துன்று திரைக்கடல் கங்கை படுத்(து)இடை தூராதோ! 17

“ஆடு கொடிப்படை சாடி, அறத்தவ ரேஆள
வேடு கொடுத்தது பார்எனும் இப்புகழ் மேவீரோ!
நாடு கொடுத்தஎன் நாயக னுக்(கு)இவர் நாம்ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி, எடுத்தது காணீரோ! 18

"மாமுனி வர்க்(கு)உற வாகி வனத்திடை யேவாழும்
கோமுனி யத்தகும் என்று மனத்திறை கொள்ளாதே
ஏமுனை உற்றிடில் ஏழு கடற்படை என்றாலும்
ஆமுனை யில்சிறு கூழ்என இப்பொழு(து) ஆகாதோ". 19

என்பன சொல்லி, இரும்பன மேனியர் ஏனோர்முன்
வன்பணை வில்லினன், மல்உயர் தோளினன், வாள்வீரற்(கு)
அன்பனை நின்றனன் நின்றது கண்(டு)அரி ஏ(று)அன்ன
முன்பனில் வந்து மொழிந்தனன் மூரிய தேர்வல்லான். 20

சுமந்திரன் பரதனுக்குக் குகனைப்பற்றிக் கூறுதல்:

"கங்கை இரு கரையுடையான், கணக்(கு) இறந்த நாவாயான்,
உங்கள்குலத் தனிநாதற்(கு) உயிர்த்துணைவன், உயர்தோளான்,
வெங்கரியின் ஏ(று)அனையான், வில்பிடித்த வேலையினான்,
கொங்(கு)அலரும் நறுந்தண்தார்க் குகன்என்னுங் குறியுடையான்.

"கற்காணுந் திண்மையான், கரைகாணாக் காதலான்,
அற்காணிற் கண்டனைய அழகமைந்த மேனியான்,
மற்காணுந் திருநெடுந்தோள் மழைகாணு மணிநிறத்தாய்!
நிற்காணும் உள்ளத்தான் நெறிஎதிர்நின் றனன்" என்றான். 22

பரதன் குகனைக் காணச் செல்லுதல்

தன்முன்னே அவன்றன்னை தந்தைதுணை முந்(து)உரைத்த
சொன்முன்னே உவக்கின்ற துரி(சு)இலாத் திருமனத்தான்
"மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்(கு)இனிய துணைவனேல்,
என்முன்னே அவற்காண்பென் யானேசென்(று)" எனஎழுந்தான்.

பரதனைக் கண்டு குகன் பரிதவித்தல்

வற்கலையின் உடையானை, மா(சு)அடைந்த மெய்யானை,
நற்கலையின் மதிஎன்ன நகை இழந்த முகத்தானைக்,
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்;
விற்கையினின்(று) இடைவீழ விம்முற்று நின்றொழிந்தான். 24

"நம்பியும்என் நாயகனை ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான், தவவேடந் தலைநின்றான்;
துன்பம்ஒரு முடி(வு) இல்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்(பு)?" என்றான்.

"உண்(டு)இடுக்கண் ஒன்(று)உடையான்; உலையாத அன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்(பு) எல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன்; காமின்கள் நெறிஎன்னாத்
தண்துறைஓர் நாவாயில் ஒருதனியே தானவந்தான். 26

பரதன் குகப் பெருமானை வணங்குதல்

வந்(து)எதிரே தொழுதானை வணங்கினன் மலர்இருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனும்அவன் அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத் தழுவினன் தக(வு)உடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான். 27

வேறு

பரதன் தன் செய்தியை அறிவித்தல்

தழுவின புளினர் வேந்தன், தாமரைச் செங்கணானை
"எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்திய(து) என்னை?" என்ன,
"முழு(து)உல(கு) அளித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவினன்; அதனை நீக்க மன்னனைக் கொணர்வான்" என்றான்.

செய்தி கேட்ட குகன் நிலைமை.

கேட்டனன் கிராதர் வேந்தன், கிளர்ந்(து)எழும் உயிர்ப்பன் ஆகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்; விம்மினன் உவகை வீங்கத்,
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன், பொய்யில் உள்ளத்தன் புகல லுற்றான்: 29

"தாய்உரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச், சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ? தெரியில், அம்மா. 30

"என்புகழ் கின்ற(து) ஏழை எயினனேன்? இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்,
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய், உயர்குணத்(து) உரவுத் தோளாய்!"

என இவை அன்ன மாற்றம் இயையன பலவும் கூறிப்,
புனைகழல் புலவு வேல்கைப் புளினர்கோன், பொருவில் காதல்
அனையவற்(கு) அமைவில் செய்தான் ஆர்அவற்(கு) அன்(பு)இலாதார்?
நினைவருங் குணங்கொ(டு) அன்றோ இராமன்மேல் நிமிர்ந்த காதல்?

அவ்வழி அவனை நோக்கி, அருள்தரு வாரி அன்ன
செவ்வழி உள்ளத்(து) அண்ணல் தென்திசைச் செங்கை கூப்பி,
"எவ்வழி உறைந்தான் நம்முன்" என்றலும், எயினர் வேந்தன்
"இவ்வழி, வீர! யானே காட்டுவல்; எழுக" என்றான். 33

ஸ்ரீராமன் பள்ளிகொண்ட இடத்தைக் கண்ட பரதன் ஆற்றாமை

கார்எனக் கடிது சென்றான்; கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்;
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்; பருவரற் பரவை புக்கான்;
வார்மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான். 34

"இயன்றதென் பொருட்டி னால்இவ் இடர்உனக்(கு) என்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும் காயும் அமிர்(து)என, அரிய புல்லில்
துயின்றனை எனவும் ஆவி துறந்திலென்; சுடருங் காசு
குயின்றுயர் மகுடம் சூடும் செல்வமும் கொள்வென் யானே!" 35

பரதன் இலக்குமணனைக் குறித்துக் கேட்டல்

தூண்தர நிவந்த தோளான் பின்னரும் சொல்லு வான் "அந்
நீண்டவன் துயின்ற சூழல் இதுஎனின், நிமிர்ந்த நேயம்
பூண்டவன், தொடர்ந்து பின்னே போந்தவன் பொழுது நீத்(து)
யாண்டு?" என இனிது கேட்டான் ; எயினர்கோன் இதனைச்
சொன்னான். 36

குகன் கூற்று

"அல்லையாண் டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்,
கல்லையாண் டுயர்ந்த தோளாய்! கண்கணீர் சொரியக், கங்குல்
எல்லைகாண் பளவு நின்றான்; இமைப்பிலன் நயனம்" என்றான். 37

பரதன் தன்னை வெறுத்தல்

என்பத்தைக் கேட்ட மைந்தன், "இராமனுக் கிளையார் என்று
முன்பொத்த தோற்றத் தேமில், யான்என்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானேன்; அவன்அது துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை உண்டே? அழகி(து)என் அடிமை" என்றான். 38

அவ்விடை அண்ணல் தானும் அன்றரும் பொடியின் வைகித்,
"தெவ்விடை தரநின் றார்க்கும் செறிகழற் புளினர் கோமான்!
இவ்விடைக் கங்கை யாற்றின் ஏற்றினை யாயின், எம்மை
வெவ்விடர்க் கடல்நின்(று)ஏற்றி, வேந்தன்பால் விடுத்த(து)"
என்றான். 39

படகுகள் வருதல்

நன்(று)எனப் புளினர் வேந்தன் நண்ணினன்; தமரை: "நாவாய்
சென்றினித் தருதிர்" என்ன, வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்றெனக், குனிக்கும் அம்பொற் குவடெனக், குபேரன் மானம்
ஒன்றென, நாணிப் பல்வே றுருவுகொண் டனைய வான 40

நங்கையர் நடையின் அன்னம் நாண்உறு செலவின் நாவாய்
கங்கையும் இடம் இலாமை மிடைந்தன; கலந்த எங்கும்;
அங்கொடிங்(கு)இழித்தி ஏற்றும் அமைதியின், அமரர் வையத்(து)
இங்கொடங்(கு)இழித்தி ஏற்றும் இருவினை என்ன லான. 41

"வந்தன வரம்பில் நாவாய், வரிசிலைக் குரிசில் மைந்த!
சிந்தனை யாவ(து)?" என்று சிருங்கிபே ரியர்கோன் செப்பச்,
சுந்தர வரிவி லானும் சுமந்திரன் றன்னை நோக்கி:
"எந்தை!இத் தானை தன்னை ஏற்றுதி விரைவின்" என்றான். 42

சேனை கங்கையைக் கடத்தல்

குரிசில(து) ஏவ லால்அக் குரகதத் தேர்வ லானும்
வரிசையின் வழாமை நோக்கி, மரபுளி வகையின் ஏற்றக்,
கரி,பரி, இரதப், காலாள் கணக்கறு கரையில் வேலை
எரிமணி திரையின் வீசுங் கங்கையா(று) ஏறிற் றன்றே. 43

இக்கரை இரைத்த சேனை எறிகடன் முகந்து, வெஃகி,
அக்கரை அடைய வீசி, வறியன அணுகு நாவாய்
புக்கலை ஆழி நன்னீர் பொறுத்தன போக்கிப் போக்கி
அக்கணத் துவரி மீளும் அகன்மழை நிகர்த்த அம்மா! 44

ஆனனம் கமலத் தன்ன, மின்அன்ன, அமிர்தச் செவ்வாய்த்
தேனனை குழலார் ஏறும் அம்பிகள் சிந்து முத்தம்
மீன் என, விரிந்த கங்கை விண்எனப் பண்ணை முற்றி
வானவர் மகளிர் ஊரும் மானமே நிகர்த்த(மாதோ.) 45

மய்யறு விசும்பின், மண்ணின், மற்றுமோர் உலகின், முற்றும்
மெய்வினை தவமே அன்றி, மேலுமொன் றுளதோ? கீழோர்
செய்வினை நாவாய் ஏறித் தீண்டலர், மனத்திற் செல்லும்
மொய்விசும்(பு) ஓடம் ஆகத் தேவரின் முனிவர் போனார். 46

வேறு

சுழித்துநீர் வருதுறை யாற்றைச் சூழ்படை
கழித்துநீங் கியதெனக், குள்ள ஆசையை
அழித்துவே றவனிபண் டாண்ட வேந்தரை
இழித்துமேல் ஏறினான் தானும் ஏறினான். 47

தன்னன தம்பியும், தாயர் மூவரும்,
சொன்னதேர் வலவனும், தூய தோழனும்
துன்னினர் ஏறலும், துழாது டுப்பெனும்
நன்னயக் காலினால் நடத்தல் மேயினான். 48

வேறு

பரதன் தன் தாய்மாரைக் குகனுக்கு அறிவித்தல்.

சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்,
"கொற்றத்தார்க் குரிசில்! இவர் ஆர்?" என்று
குகன்வினவக், "கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல்தேவி, மூன்றுலகும்
ஈன்றானை முன்ஈன் றானைப்
பெற்றதால் பெறும் செல்வம் யான்பிறத்த
லால்துறந்த பெரியாள்" என்றான். 49

என்றலுமே, அடியின்மிசை நெடிதுவீழ்ந்(து)
அழுவானை "இவன்யார்?" என்று
கன்றுபிரி காராவின் துயருடைய
கொடிவினவக், கழல்கால் மைந்தன்,
"இன்துணைவன் இராகவனுக்(கு); இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்;
குன்றனைய திருநெடுந்தோள் குகன் என்பான்
இந்நின்ற குரிசில்" என்றான். 50

"நைவீர் அலீர், மைந்தீர்! இனித்துயரால்
நா(டு) இறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலம்ஆயிற்
றும்(அன்றே) விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறனைய காளைஇவன்
றன்னோடுங் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகல்இடத்தை
நெடுங்காலம் அளித்திர்" என்றாள். 51

அறந்தானே என்கின்ற அயல்நின்றாள்
தனைநோக்கி, "ஐய! அன்பின்
நிறைந்தானை உரை" என்ன, நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப(து) ஆக்கி
இறந்தான்றன் இளந்தேவி; யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன்என்னப் பிரியாதான்
றனைப்பயந்த பெரியாள்" என்றான். 52

சுடுமயா னத்திடைத்தன் துணைஏகத்,
தோன்றல்துயர்க் கடலின் ஏகக்,
கடுமைஆர் கானகத்துக் கருணைஆர்
கலிஏகக், கழல்கால் மாயன்
நெடுமையால் அன்(று)அளந்த உலகெல்லாம்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை, "யார்இவர்?என்(று)
உரை"என்னக், குரிசில் கூறும்: 53

"படர்எலாம் படைத்தாளைப், பழிவளர்க்கும்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய

உடர்எலாம் உயிர்இலா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர்இலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்றாள் என்னை ஈன்றாள். 54

வேறு

என்னக் கேட்டவ் இரக்கம் இலாளையும்
தன்நற் கையின் வணங்கினன் தாய்என
அன்னப் பேடை சிறையில தாய்க்கரை
துன்னிற் றென்னவும், வந்தது தோணியே. 55

பரத்தின் நீங்கும் பரத்துவன் என்னும்பேர்
வரத்தின் மிக்குயர் மாதவன் வைகிடம்
அருத்தி கூர அணுகினன் ஆண்டவன்
விருத்தி வேதிய ரோ(டு) எதிர் மேவினான். 56

V

சிவஞான முனிவர்

இயற்றிய

காஞ்சிப் புராணம்

தழுவக் குழைந்த படலம்

இறைவி பாங்கிமாரோடு காஞ்சிக்கு எழுந்தருளுதல்

எழுசீர் விருத்தம்

'உலகெலாம் ஈன்ற எம்பெரு மாட்டி,
ஓங்(கு)உயர் விழுப்புகழ்க் கம்பத்
தலைவரை விதியான அருச்சனை செய்யச்,
சார்கின்றாள்' என்றுபேர் ஓகை
மலிஎடுத்(து) இயம்பு மங்களங் கேளா,
உருத்திர மடந்தையர் முதலோர்
அலகிலா மகிழ்ச்சி மீக்கொளுங் களிப்பின்
ஆர்த்(து) எழுந்(து) ஒருங்குவந்(து) இறுத்தார். 1

தாமரை மடவார் புடைபரந்(து) அணுகத்
தாமரை மடவரல் வந்தாள்,
நாமிசைக் கிழத்தி பற்பல வெள்ள
நாரியர் புடைவர வந்தாள்,
கோமள வனப்பின் ஆம்பல்மெல் லியலார்
குழாத்துடன் உயர்சசி வந்தாள்,
காமரு மாதர் எழுவரும் சங்கக்
கன்னியர் சூழ்தர வந்தார். 2

வான்மட மகளிர், வேறுபல் வகுப்பின்
மங்கையர் பற்பலா யிரவர்
ஊன்மலி சூலத்(து) இடாகினி, தூளி,
யோகினித் திறத்தவர் அனேகர்,
நீன்முகில் கூந்தல் முனிவர் புன்னியரும்
நிரந்தரம் மிடைந்தனர்; உவகைப
பான்மையின் இறைஞ்சி அவரவர்க்(கு) அடுத்த
பணிதலை நின்(று) உடன் போத; 3

தேவர் முதலியோர் உடன் செல்லுதல்

உரகர்கந் தருவர், இராக்கதர், இயக்கர்,
உருத்திரர், மருத்துவர், வசுக்கள்,
கருடர்கிம் புருடர், சாரணர், சித்தர்,
கடவுளர் அயன் அரி, முனிவர்,
மருவுபல் சமய தேவர்கள் முதலோர்
வந்தனர், அடிதொழு(து) இறைஞ்சிப்,
பொருவருங் களிப்பால் சயசய
போற்றி போற்றியென்(று) ஏத்திமுன் செல்ல; 4

இசைக் கருவி முழக்கம்

தண்ணுமை முருடு, குடமுழா, மொந்தை,
தகுணிச்சம், பேரிகை, தக்கை,
அண்ணலம் பதலை, அதிர்குரல் முரசம்
ஆதிய எழுப்புவ பிறவும்
பண அமை சின்னம், காகளம், கோடு,
பணிலமே, தீங்குழல், முதலா
எண் அருந் திறத்தின் ஊதுவ பலவும்
எழுகடல் முழக்கினை அடக்க; 5

பல்லாண்டு இசைத்தல்

பயிர்மணிக் கவரி, கவிகை, சாந்தாற்றி,
படர்ஒளி ஆலவட்டங்கள்
வயின்வயின் வயங்கக, கற்பகத் தாரு
மலர்மழை எங்கணும் இறைப்பக்,

குயின்மொழி மடவார் குழாம்குழாம் ஆகிக்
குலவுபல் லாண்(டு)எடுத்து இசைப்பக்,
கயின்மணிக் குழையார், ஆண்உடை தாங்கிக்
கதிர்த்தவாள் ஏந்தினர் ஏக; 6

ஜீவதகம் பயக்கும் சிலைமுதல் ஆன
விம்மிதத் திறத்தன பலவும்,
பூதிமிக் களிக்கும் கடவுளர், தருக்கள்,
புண்ணிய தீர்த்தங்கள், நதிகள்,
ஏதம்இல் சிறப்பின் இனையன பிறவும்
உடன்செலச், சிந்தொடு குறள்கள்
காதலின் முன்னே கையிணை வீசிக்
கதும்எனக் குறுகுறு நடப்ப; 7

ஒலிச் சிறப்பு

கலகல முழக்கும், களகள முழக்கும்,
கலின்கலின் முழக்கமும், கருவிச்
சலசல முழக்கும், சளசள முழக்கும்,
சடசட முழக்கமும், ஏனைச்
சிலசில முழக்கும், அரகர முழக்கும்,
சயசய முழக்கும்எண் திசைவாய்ப்
பலபல முழக்கும் அடைத்துமேல் ஓங்கிப்
படியொடு வானமும் நிறைப்ப; 8

'மறைமுதல் ஒருபால் மணந்தவள் வந்தாள்!
வானவர்க்(கு) அரியவள் வந்தாள்!
நிறைபெருங் கருணை நாயகி வந்தாள்!
நிருமலப் பேர்ஒளி வந்தாள்!
அறைபுனற் காஞ்சிக் கம்பரை வணங்க,
அகிலமும் ஆதிநாட் பயந்த
இறைவியே வந்தாள்' என்றுபல் சின்னத்(து)
எழும்ஒலி யாங்கணும் விம்ம; 9

இறைவி செல்லுதல்

அளவிலாக் கருணைப் பெருங்கடல் என்ன,
அடர்ந்தவல் இருள்உடைந்(து) ஓடும்
கிளைவழி துருவித் துரந்துகொண்(டு) எய்தும்
கேழ்கிளர் ஒளிக்குழாம் என்ன,
வளமலி தென்பால் செய்தவம் திரண்டு
வருவதே என்னவும், உலவாக்
களிவரு சிறப்பின் வான்நெறி படர்ந்தாள்
கணவனார் அருள்வழி நின்றாள். 10

சந்தக் கலிநிலைத்துறை

மாந்தர் பெருக்கம்

எண்ணி லார்மி டைந்துவிண்
பரப்(பு)அடைத்(து) இயங்கலால்,
அண்ணல் ஞாயி(று) ஆதிவாள்
மறைந்(து)இருள் அடர்ந்திடக்
கண்ணு றுத்(து) அயிர்க்குமுன்
கடுப்பின்எய்து வோர்ஒளி
வண்ண மவ்வி ருள்கிழிப்ப
நோக்கி ஞால மாந்தர்தாம். 11

மாந்தர் வியத்தல்

மாலு றுக்கு நீர்மையோடு தோன்றியிங்கு மாய்ந்தது
நீல மின்னல் போலும்என்பர் என்னு முன்னர், நீளிடைச்
சால மிக்க ஓதைகேட்டு, மின்பயந்த தண்முகில்
காலும் ஓதை யாங்கொல்'என்று காதின்ஓர்த்து நிற்பரே. 12

செல்லு வோர்நெ ருக்கிடைத் தெறித்திடும் பொலஞ்சுடர்ப்
பல்ல ணிக்க லன்களுக்க பன்மணித் திரள்களை
ஒல்லை நோக்கி ஆர்த்தமேகம் ஒன்பதிற்று மாமணிக்
கல்லின் மாரி பெய்வதென்று காண்தொறும் வியப்பரே. 13

முறையி னல்அ டுக்கநண்ணு மொய்குழாத்தை நோக்குவார்
இறைவி யென்று சின்னமெங்கும் ஏங்குமோசை கேட்குவார்

நிறைம கிழ்ச்சி யிற்கிளர்ந்து நீடுமின்ப வெள்ளநீர்த்
துறைப டிந்து கண்கணீர் துளிப்பநின்று போற்றுவார் 14

'எம்பி ரான்த னிப்பஅம்மை இங்குவந்த தென்?'எனக்
கம்ப வாணர் பூசைசெய் கருத்தின்வந்த தாம்என,
நம்பி னேங்கள் வீடுபேறு நண்ணுகாலம் ஈதென,
இம்பர் ஞாலம் எத்தவம் படைத்ததென்ன விள்ளுவார். 15

அம்மை காசி அடைதல்

மண்ண கத்து வைகுமாந்தர், இன்னர்ஆக, மாணிழைப்
பெண்ணின் நல்ல வள்விமான நின்றுமிப் பெரும்புவிப்
புண்ணி யத்த லங்கள்தோ(று) இழிந்திழிந்து, போர்விடை
அண்ண லார்இ லிங்கபூசை செய்துகாசி அண்மினாள். 16

கச்சிக்குப் புறப்படுதல்

முச்ச கம்பு கழ்ந்துபோற்று மொய்கொள்காசி மாநகர்
விச்சு வேசா பூசைஆற்றி, வேறிலிங்கம் ஒன்றமைத்(து)
அர்ச்ச னைத்தி றத்தினேத்தி, வைகி,அங்க கன்றுசீர்க்
கச்சி யம்ப திக்கண்வைத்த காதலுய்ப்ப ஏகினாள். 17

தொண்டை நாடு நண்ணல்

அங்கண் அங்கண் எந்தையார் அமர்ந்துவாழ் இடந்தொறும்
பொங்கு கின்ற காதலோடு பூசைசெய்து, செய்துபோய்
மங்க லத்த மிழ்ப்புவிக்கு வாள்முகம் எனத்தகும்
துங்க மிக்க கீர்த்திபெற்ற தொண்டைநாட்டை நண்ணினாள். 18

எழுசீர்ச் சந்த விருத்தம்

நகர மாந்தர் அணி செய்தல்

மலையான் மடமகள் மறுகு(டு) அணைதலும்,
வளமா நகரவர் தொழுதாடி,
உலவா நகையொடு பணிவார்; மனமகிழ்
உறுவார்; வயின்வயின் அணிசெய்வார்;

குலநீள் கதலிகள், கமுகந், துகில்விரி
கொடியென்(று) இனையன நடுவார்கள்;
மலர்மா லிகை,நவ மணிமா லிகை,எழில்
மலிதோ ரணநிரை, நிறைவிப்பார். 19

மறு(கு)எங் கணும்விரை கமழும் படி,குளிர்
பனிநீர் விடுவர்கள்; மறைஓதி
நிறுவும் தவநிலை முனிவோர் கரமிசை
நிறைபொற் குடமுடன் எதிர்கொள்வார்;
சிறுநுண் இடைமறை மடவார் வாழ்த்(து)இசை
திகழ்மங் கலமொழி உரைசெய்வார்;
நறவம் பயில்குழல் அரமங் கையரொடு
நரமங் கையர்நடம் இடுவாரால். 20

சத்திமார்கள் பாதுகாவல் செய்வது

பொங்கும் பெரு(கு)எழில் புனையும் திருநகர்
புரிவில் வலம்வரு முறைபானை,
தங்கும் கலைமகள், மலர்மா(து), இமையவர்
மடவார், காளிகள், சாத்தன்சீர்
எங்கும் பரவிய திறல்யோ கினிகளை,
எழுமா தர்களை இடந்தோறும்
அங்(கு)அங்(கு) இருவினள் என்நெஞ்(சு) இருவிய
அம்பொன் திருவடி பிறர்காணாள். 21

ஏகம்பம் சார்தல்

குணபால் முதல்,நதி முடியார் இனி(து)அமர்
கோயில் முழுவதும் முறையிற்சென்(று)
இணரார் மலர்கொடு வழிபட்(டு), அருளொடும்
எனைஆள் உடையவள் எய்துற்றாள்,
உணரா(து), அரிஅயன் முதலோர், அலமரும்
ஒருபேர் ஒளிமரு மலர்தூவும்
மணமா நிழலிடை, வெளியே, எளிவர
மாகம் புவிதொழும் ஏகம்பம். 22

இறைவி இறைஞ்சுதல்

ஏணிற் பொலிமலை அரசன் தருமயில்
உள்ளம் களிவர, எம்மானை
ஆணைப் படிமன நினைவிற் கடவுளர்
யவனன் புரியும் அருட்கோயில்
மாணப் பலமணி குயிலுங் தமனிய
வடிவிற் புரிசையின் நோக்கத்தைக்
காணப் பெறுகழி காதற் கடலிடை
மூழ்கித் துளைபவள் கரைகாணுள். 23

இறைவியின் மெய்ப்பாடு

விழிநீர் பொழிதர, உள்ளம் குழைவுற,
மெய்யில் புளக முகிழ்ப்(பு)எய்தப்,
பொழிகார் மழைநிகர் கற்றைப் புரிகுழல்
மிசையே கைஇணை குவியப்போய்க்
குழுவா னவர்மிடை விண்வத்(து) உபரிய
கொடிநீள் கோபுர நெடுவாய்தல்
தொழுநீர் மையினில் இறைஞ்சிப், பன்முறை
துதிசெய்(து) உவகையி னுள்புக்காள். 24

[திரு ஏகம்பம் உடையாரைக் காமக்கண்ணியார் தொழுது முடித்தவுடன் ஏகம்பர் காட்சி கொடுக்க, அம்மையார் வணங்கி அடியில் வருமாறு போற்றுகின்றனர்.]

ஆறுசீர் விருத்தம்

இறைவி போற்றுதல்

பெறல்அரும் பெரும்பே(று) இன்று
பெற்றனன் அடியேன் போற்றி!
முறைமுறை உலகம் எல்லாம்
முகிழ்த்தளித்(து) அழிப்பாய்! போற்றி!

அறைகழல் கறங்க மன்றின்
ஐந்தொழில் நடித்தாய்! போற்றி!
நிறைமலர்த் தனிமா நீழல்
நித்தனே! போற்றி! போற்றி! 25

கறைமணி மிடற்றாய்! போற்றி!
கண்ணினுள் மணியே! போற்றி!
மறவியின் வழிபட் டோர்க்கும்
வழங்குபேர் அருளாய்! போற்றி!
நிறைபரஞ் சுடரே! போற்றி!
நெஞ்சக விளக்கே! போற்றி!
மறைமுதல் தனிமா நீழல்
வள்ளலே! போற்றி! போற்றி! 26

VI

திரு ஆவடுதுறை ஆதீனத்து

மஹா வித்வான்

திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

இயற்றிய

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

செங்கீரைப் பருவம்

புண்ணிய முதலே! பொங்(கு)ஒளி மணியே!
பொய்யாப் பெருவாழ்வே!
பொள்ளலில் முத்தே! கள்ளமில் வித்தே!
புரைஇல் சுவைப்பாகே!
தண்ணிய அமுதே! மண்இயல் மதியே!
தமிழ்நா வலர்ஏறே!
சத்துவ நிதியே! பொத்திய மலநோய்
சாடு பெரும்பகையே!
எண்ணிய அன்பர் உளத்தமு(து) ஊற,
இனிக்கும் நறுந்தேனே!
என்றும் பத்தி ரசங்கனி கனியே!
எந்நா ளினும் எங்கட்(கு)
அண்ணிய பொருளே! ஆய்பவர் தெருளே!
ஆடுக! செங்கீரை
ஆர்அருள் ஆகர! சேவையர் காவல!
ஆடுக! செங்கீரை.

தாலப் பருவம்

சோறு மணக்கும் மடங்களெலாம்;
தூய்மை மணக்கும் சிந்தையெலாம்;
சுவண மணக்கும் ஆடையெலாம்;
தொங்கல் மணக்கும் தோள்களெலாம்;
சேறு மணக்கும் கழனியெலாம்;
செல்வ மணக்கும் மாடமெலாம்;
தென்றல் மணக்கும் மேடையெலாம்;
தெய்வ மணக்கும் செய்யுளெலாம்;
நீறு மணக்கும் நெற்றியெலாம்;
நெய்யே மணக்கும் கறிகளெலாம்;
நெருப்பு மணக்கும் குண்டமெலாம்;
நேய மணக்கும் வீதியெலாம்;
சாறு மணக்கும் குன்றத்தூர்த்
தலைவா! தாலோ! தாலேலோ!
சகலா கமபண் டித! தெய்வச்
சைவா! தாலோ! தாலேலோ!

VII

முருக தாசர்

இயற்றிய

புலவர் புராணம்

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் சருக்கம்.

தென்கலை வயிணவன், செகமெ லாம்புகழ்
இன்கவிப் பிரபலன், இணைஇல் பட்டர்தம்
நன்கணத் தினர்களில் ஒருவன், நாரணன்
பொன்கழல் அன்றி மற்(று) ஒன்றும் போற்றலான். 1

மருவழ கியமண வாள தாசனென்(று)
ஒருபெயர் புனைந்தவன், "உரைக்கும் ஓர்சொலால்,
பொருள்பல தரும்கவி பொறிக்கும் பொற்பினில்
பெருமிதன்" எனப்பலர் பேசும் பெற்றியான். 2

செவ்விய சொற்சுவை சிறிதும் தேர்ந்திடா(து)
அவ்விடப் போர்பொரும் அவர்கள் அன்றி,மற்(று)
எவ்வியற் புலவரும் இசைந்து, நாடொறும்
"திவ்விய கவி"எனச் செப்பும் சீர்த்தியான். 3

தேனையும் அமுதையும் அனைய தீம்சொலோர்ந்(து),
ஆனையின் கன்றென அமைக்கும் பாடலான்;
ஏனைய பாடலொன் றேனும் ஓதிலான்;
பூனைபோல் வஞ்சனைப் புந்தி கொண்டிலான். 4

அயன்புரை வயிணவ அந்த ணர்க்கெலாம்
செயந்தரும் ஒருபெரும் சீய ஏறனான்,
நயம்பொலி ஆய்ச்சியர் நண்ணும் கண்ணன் போல்,
வயங்கு "பிள் ளைப்பெரு மாள்" என் பேரினான். 5

"காவிரி ஆற்றிடைக் கவின்செய் பாம்பணை
மேவினன் அல்லது, வேறோர் தேவரை
நாவினால் துதிசெயேன்" என்று, நற்றமிழ்ப்
பாவினம் பற்பல பகர்ந்திட் டான்அரோ. 6

கலம்பகம் யமகஅந் தாதி கற்புறழ்
நலம்பயந் திடும்படி நவின்று, நான்மறை
இலம்பகம் புகழ்பதத் திட்டோர் எள்துணை
அலம்படா(து) இன்புற ஆசித்(து) உற்றனன். 7

பூரணன் என்(று)எணு விடினும், பொங்(கு)அருள்
நாரணன் ஒருவனே என்று நண்ணிலான்;
பாரணங் கின்தலைப் பலதலந் தொறும்
சீரணங் கினர்பலர் என்று தேர்ந்தனன். 8

அப்படிக் கருதவன் அரனை, வேதனை,
எப்படித் தரத்தினில் எண்ணி னான்கொலோ?
இப்படி(று) ஒழித்தவற்(கு) இதஞ்செய்(து), ஆட்கொள்வான்
முப்படி யினர்தொழு முகுந்தன் முன்னியே. 9

ஒருபெருங் கனவினில் உலகம் உண்டுமிழ்
திருநெடு மால்எனத் தெரியத் தோற்றியே,
"பொருவில்வேங் கடத்தினைப் புகழ்ந்து, சில்கவி
தருதி" என்(று), அன்பொடு சாற்றி னான்அரோ. 10

வரங்கமழ் அம்மொழி மதித்தும், தன்ஒரு
சிரங்கொடப் பணியுடன் செய்திடா மல்"எம்
அரங்கனைப் பாடிய அருமை வாயினால்
குரங்கனைப் பாடிடேன்" என்று கூறினான். 11

வேறு

விண்ட போ(து) அரி தன்விளை யாடலால்
கண்ட மாலை கதுவிடக் கண்டவன்
கொண்ட ஆண்மை குலைந்துசி லேடையாம்
ஒண்ட கைச்சொல் உறும்ஒரு மாலையும், 12

திரிவந் தாதியும் செப்பினன்; அப்புறத்(து)
அரிய சோலைம லைக்கொரந் தாதியும்
பிரிய மோடுரைத் தான்;பினுஞ் சிற்சில
தெரியல்செந் தமிழிற் செய்திட் டான்அரோ. 13

எண்வ கைப்பிர பந்தமி சைத்ததா
மண்வ யிற்பல மானிடர் கூறுவார்
தண்வ ளம்பெறு தாமரைப் பூத்துணைக்
கண்வ லான்திரு உள்ளம் கணிப்பவே. 14

"சிவனை நிந்தனை செய்தவ னே"என
இவனைச் சிற்சில் இளஞ்சைவர் ஏசுவார்;
அவன்றன் மாயவன் ஆகத்திற் பாதியென்(று)
உவந்து பாடிய பாக்களும் உள்ளவே. 15

என்றென் றும்தன(து) இட்டதெய் வத்தையே
நன்றென்(று) ஏத்திடல் ஞானிகள் சம்மதம்;
அன்றென்(று) ஓத ஒண்ணாதத னால்,அவன்
குன்றென்(று) அச்சுதனைக்குறிக் கொண்டதே. 16

சைவ ரிற்சிலர் தாமரைக் கண்ணனை
வைவ(து) ஒப்ப, வயிணவ ரியாவரு கலம்: கண்டம்
மைவ ணக்கள வள்ளலை நிந்தனை
செய்வ தில்லை; திருவருள் சாட்சியே. 17

வானந் தத்தற வல்வில் வளைத்தவன்
கூனந் தக்கரக் கொண்டல்பொற் றுள்களில்
தானந் தப்புனை தாமோடு நீர்புனை
ஆனந் தத்தரன் ஆடினன் என்றதும், 18

அத்தன் வேதன் அணித்தலை கொண்டதால்,
பித்தம் எயதிப், பிணஞ்சுடு காட்டுறக்,
கைத்த லத்ததை நீக்கிக், கயிலைமேல்
வைத்த னன்திரு மாலெனச் சொன்னதும், 19

மாத வன்றன் மலர்த்திரு உந்திவாழ்
வேதன் நல்க விளங்கினன் மேருவின்
நாதன் என்ன நவின்றதும், ஆதியா
நீத முற்றுணர் நித்திய சித்தர்தாம், * 20

அண்டம் உண்டவன் ஆகத்தைச் சூலமேல்
கொண்ட னன்சிவன் என்றதி லுங்குளிர்
கண்ட னைத்திரு மால்அரன் கால்மிசைப்
பண்ட ணிந்தனன் என்றுசொல் பண்பினும், 21

"மாயன் சோரியை மால்விடைப் பாகன்கைத்
தூயஓட் டிற்கொண் டான்" எனும் சொல்லினும்
தீய என்றுசெப் பார்;மத வாதிகட்(கு)
ஏய தீக்குணம் என்றென்றும் உள்ளவே. 22

திரிவு சொற்றிறம் தேடித், தினம்தினம்
அரியின் மேற்கவி பாடிடும் அந்தணன்,
கரிவ லஞ்செய் கருவைமன் தன்னிலும்,
பெரிது நிந்தனை பேசிலன் உண்மையே. 23

* முருகதாசர் கையேட்டுப் பிரதியின்படி, அவர் மாணவரும் மகனாரும் ஆகிய வித்வான் சந்தப்புலமை - திருஆமாத்தூர் செந்தில் நாயகம் பிள்ளை அவர்கள் இப்போது அச்சிட்டுள்ள புலவர் புராணம் இரண்டாம் பதிப்பில் இந்த அடி 'நீத முற்றுணர் வித்திய சித்தர்தாம்' என்று காணப்படுகிறது. சித்தர்தாம் என்னும் எழுவாய், 22-ம் பாட்டிலுள்ள 'செப்பார்' என்பதைக் கொண்டு முடியும். திருஆமாத்தூர் விழுப்புரத்திற்கு மூன்று மைலில் உள்ளது.

—பதிப்பாளர்

வளங்கு லாந்துறை மங்கல வாசன்போல்,
உளங்க னன்றறி அன்பர் ஒருவரும்
களங்க றுத்தவர் ஆயிரர்க் காதுதல்
விளங்கொர் பாடல் விளம்பிலர் மெய்ம்மையே. 24

அரன் அரிக்கடி மைத்திறம் ஆற்றுவார்,
பரவு பல்பவம் தீர்ந்தபின், பாண்டியன்
கரவின் மந்திரி யைப்புளிக் கண்ணுழை
உரமு ளானையொப் பாவரி துண்மையே. 25

பொன்னு றைந்தபொற் பாருரத் தான்புகழ்
பன்னு நாவலர் பற்பலர் தம்மினு
முன்னு ரைக்கு முரணேயங் காரதாம்
என்னு மாற்றமிவ் இம்பரில் உள்ளதே. 26

நாமம் ஒன்றை நவின்றவர்க் கும்பெரு
வாம மார்திரு வைகுந்த நல்குமால்
பாம லர்த்தொடைப் பாகவ தற்கதன்.
சேம நல்கல் வியனன்று, தேரினே. 27

தெய்வமே துணை.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சித்தாந்த சரபம்-அஷ்டாவதானம்

கலியாண சுந்தர யதீந்திரர் இயற்றிய

சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம் *

விநாயகர் வணக்கம்

பாக்கிழார் நாளும் பரிந்துவக்குங் குன்றத்தூர்ச்
சேக்கிழார் நற்சரிதஞ் செப்புதற்கு—மாக்கிழார் †
பொற்பமர வீற்றிருந்து போற்றிவரு நந்தில்லைக்
கற்பகவி நாயகனுர் காப்பு.

சேக்கிழார் அவதாரம்

ஜெபங்கொண்ட தொண்டைமண்டலத்திலே, புலியூர்க்கோட்டத்திலே, ‡ குன்றைவளநாட்டிலே, குன்றத்தூரிலே, பரம்பரைச் சைவ விற் பெற்ற வேளாளர் தொல்குலத்திலே சேக்கிழார் மரபிலே, கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் கடலென வாய்க்கப் பெற்றுச் சிவபெருமான் திருவடிக்கீழ் இடையருத அன்பும், அவ் அன்பின் மிகுதியாற் சிவனடியார்பால் வழுவாது இயற்றுந் திருத்தொண்டும் வாய்ந்த வெள்ளியங்கிரி முதலியார் என்பவருக்கும், அவர் தன்மைக்கு இயைந்த அழகாம்பிகை எனுங் கற்புடைய மனைவியாருக்கும் ஒருசற்புத்திரன் அவதாரஞ்செய்து, அருண்மொழித்தேவர் என்னும் பிள்ளைத்திருநாமம்பெற்றனர். தாய்தந்தையரிருவருக்கும் இன்பம் விளைய அன்பு, அறிவு, அடக்கம், ஆசாரம், நிராசை, சத்தியம், தவம், ஆராய்ச்சி, சிவநேச முதலிய எல்லாம் உடன் வளர வளர்ந்து, ஐந்துவயதாகிக் கல்வி பயிலத் தக்க பருவம் வந்தவுடன்

---

* இந்நூலாசிரியர் வரலாறு அனுபந்தம் I ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

† (மாக்கிழார்: மா-திருமகள்; கிழார்-தலைவர்: -திருமால்.)

‡ சென்னைக்குத் தெற்கே பல்லாவரம் ஸ்டேஷனுக்கு மேற்கினும், பூவிருந்தவல்லிக்குத் தெற்கினும் மூன்று மைல் தூரத்தில் உள்ளது.

பள்ளியிலமர்ந்தனர். கண்டவர் எல்லாரும் வியக்கும்படி ஆசாரியர் முன்னிலையாக எல்லா நூல்களையுங் குறைவற ஓதிமுடித்து, பூர்வவாசனையால் சிவபக்தி, அடியார்பக்தி, ஜீவகாருணிய முதலிய ஒழுக்கமுழுவதும் அடைந்து வாழ்ந்து வருவாராயினர்.

இவருக்குப்பின் மற்றொரு நற்புத்திரர் அவதரித்துப் **பாலறுவாயர்** என்னும் அருமைப்பெயருடன் வளர்ந்து வந்தனர்.

சோழன் ஔவைப்பாடலின் உண்மை ஆராய்தல்

அக்காலத்தில் சோழமண்டலத்திலே **அநபாய குலோத்துங்க சோழ மகாராஜன்** என்பவன் பூலோக சரஸ்வதியாகிய ஔவைப் பிராட்டியார்,

வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்;— பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத்; தெண்ணீர்வயல் தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து.

எனப் பாடியிருப்பதைக் கேள்வியுற்று, "தொண்டைநன்னாடு சான்றோருடைத்து" என்னும் வாக்கியத்தின் உண்மையைச் சோதிக்கக் கருதி, ஞாலத்தினும், கடலினும், மலையினும் பெரியன யாவை என்னும் வினாக்களை எழுதித் தொண்டைமண்டலத்தரசனிடம் அனுப்பி விடை கேட்டனன்.

சேக்கிழார் விடை எழுதுதல்

அத்திருமுகங்கண்ட தொண்டைமண்டலத்தரசன் தம்மிடத்துள்ள ஆஸ்தான வித்துவான்களில் முதன்மையாகிச் சிறந்திருந்த குன்றத்தூர் வெள்ளியங்கிரி முதலியாரிடத்தில் அதைக்கொடுத்துச் சீக்கிரத்தில் விடையெழுதித் தரும்படி உத்தரவு கொடுத்தனன். அம்முதலியார் அதைஏற்றுத் தம்வீடுசேர்ந்து, அவ்வினாக்களுக்குப் பதில்வரைதற்குத் தமக்கு ஒன்றுந் தோன்றாது வியாகூலசித்தராயிருப்பதை அவர் புத்திரர் அருண்மொழித் தேவராகிய

* சேக்கிழார் தெரிந்துகொண்டு அவ்வினக்களைப் படித்துப்பார்த்து, தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் திருவாய்மலர்ந்தருளிய

காலத்தி னற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

நிலையில் திரியா(து) அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

என்னும் மூன்று திருக்குறள்களை மூன்று வினக்களுக்கும் உத்தரங்களாக எழுதிக்கொடுத்தனர். இதனைக் கண்ணுற்றுத் தமது புத்திரர் கல்வி, புத்தியாகிய இவைகளிற் சிறந்திருக்குந் தன்மைக்கு வெள்ளியங்கிரி முதலியார் ஆனந்தம் அடைந்து, அவரைத் தழுவிச் சந்தோஷ சித்தராகி வேந்தனிடத்து விரைவிற்சென்று விடையைத் தெரிவித்தார்.

சேக்கிழார் முதல் மந்திரியானது.

அரசன் அதைச் சோழராஜனிடம் அனுப்பினன். சோழன் அதைப்பார்த்து மிக்ககளிப்புற்று, அங்ஙனம் விடை கொடுத்த கல்விப்பிரபுவைத் தம்மிடம் அனுப்பும்படி பல்லக்குமுதலிய பல வரிசைகள்கொடுத்தனுப்பினன். அதைக்கண்டதொண்டைமண்டலத் தரசன் தமது ஆஸ்தான வித்துவ சிரோமணியாகிய முதலியாரைச் சோழனிடம் போகும்படி உத்தரவுசெய்தனன். அதற்கு அவர் தமதுபுத்திரர் அருண்மொழித்தேவரே விடைகொடுத்தவராகலின் அவரை அனுப்புவித்தார். சோழன் அவரைக்கண்டு அதிபாலியத்திலேயே அவருக்குண்டாயிருக்கும் வித்தை, புத்தி, யுக்தி சாமர்த்தியங்கட்கு மிக்க வியப்படைந்து தமது மந்திரிமார்களில் முதன்மந்திரியாக நியமித்து உத்தமச்சோழப்பல்லவன் என்னும் பட்டமுங் கொடுத்தனன்.

* சேக்கிழார் என்னும் குடியைத் தமது பெரும்புகழால் விளக்கினமையால் இவருக்குச் சேக்கிழார் என்னும் சிறப்புப்பெயர் அமைந்தது. கிழார் என்பது வேளாளர்க்கு உரிய பட்டப் பெயர். சேக்கிழாரது சரித்திரத்தைக் கொற்றவன்குடி-உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் புராணம் எனப் பாடினர்.

மந்திரியின் திறமை

சேக்கிழார் அநபாய சோழமகாராஜனுக்கு முதன்மந்திரியான வுடன், அரசாங்க சம்பந்தமாகத் தொழிலை நடத்தும் போது, சிறிய முயற்சியினுற் பெரிய பயனைத் தருவதான வினையும், அவ்வினை செய்யுங்கால் அதற்கு வேண்டிய பொருளும், அதற்கு இயைந்த படையும் அதற்கு ஏற்ற காலமும், அது தொடங்கும் உபாயமும், அதுசெய்யுமாறும், அது இடையூற்றின்நீங்கி முடிவுபெறுமாறும் ஆகிய இவைகளோடு தனக்குத் துன்பம் நேரிட்டகாலத்தும் வினைசெய்தற்கண் அசைவின்மையும், குடிகளைக் காத்தலும், முயற்சியும், நீதிநூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும் ஆகிய அவரது சிறப்பியல்கள் பலர்க்கும் விளங்கின. அன்றியும், வினைவந்துழி பகைவர்க்குத் துணையாயினரைப் பிரிக்கவேண்டிற் பிரித்தலும், தன்பாலாரை, அவர் பிரியாமற் கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்ளுதலும், முன்னே தம்மினுந் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டும் பொருத்த வேண்டிற் பொருத்தலும், ஒரு காரியம் பலவாற்ருல் தோற்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்து அறிதலும், அது செய்யுங்கால் வாய்க்குந் திறம் நாடிச்செய்தலும், சிலரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலது என்று துணிவுபிறக்கும் சொல்லுதலும் ஆகிய ஆற்றலில் மேம்பட்டனர்.

அரசனுக்கு ஆக்கமே குறித்தனவாகுந் திறலும், நல்லன அறிந்து சொல்வாரது அறிவையும் கருதாது அரசன் தானும் அறியானேயாயினும் அக் குற்றம் நோக்கி வாளா ஒழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதலும், நூல்நெறியான் வினைசெய்யுந் திறங்களை அறிந்தவிடத்தும் அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து அதனேடு அவற்றைப் பொருந்தச்செய்தலும், தன் அரசன் சுருங்கிய காலத்தும் பெருகிய காலத்தும் இடைநிகராய காலத்தும் அவனுற் செய்யப்படும் அறங்களை அறிந்து நிறுத்தற்கு ஏற்ற கல்வியால் நிறைந்து அமைந்த சொல்லையுடையவராய் வினை செய்யுந் திறங்களை அறிவதுமாகிய இயல்புகளுடன் அமைச்சியல் நடத்துதற்கு ஏதுவாகிய சாமர்த்தியங்கள் அவர்பால் அமைந்து விளங்குதல் யாவர்க்கும் புலனுயிற்று. சோழராஜனும் அவற்றைக் கண்டு வியப்படைந்து அவ்வவ் அமயங்களில் பற்பல பரிசுகள் அவருக்குத் தந்து மிகுந்த அன்பு பாராட்டி வந்தனன்.

சேக்கிழார் சோழநாட்டில் திருநாகேச்சுரம் என்னுந்தலத்தில் மிகுந்த பக்திபாராட்டி வந்ததற்கு ஏற்ப, தமது ஊராகிய குன்றத்தூரிலும், மடவளாகத்தை ஏற்படுத்தி அதனுள் திருக்கோயிலொன்றைப் பிரதிட்டை செய்து திருநாகேச்சுரம் எனத் திருப்பேர் சாற்றி, நித்தியபூசையும் அதற்கு அங்கமான திருவிழாவுமாகிய சிறப்புகளைச் செய்தற்குரிய பரிசனங்களையும் நியமித்து அநபாய சோழனுக்கு உரிய செங்கோலினை இமசேதுபரியந்த நடாத்தி வந்தனர்.

சேக்கிழார் சோழனுக்கு அறிவுறுத்தல்.

இந்நாளில், கலகத்தையே செய்கின்ற முருடர்களாகிய சமண வஞ்சகர்கள் பொய்யினையே ஒருகாவியமாக ஏற்படுத்தி வழங்கச் செய்த சிந்தாமணி யென்னுநூலை உண்மையென்று கருதி இவ்வுலகத்திலுள்ளோர் சிலர், கற்றுக்கொண்டு, நெல்லினைக் குத்தி உண்ணுமல் உமியைக் குத்திக் கை வருந்தியும், கறவைப்பசுஇருக்க மலட்டுப்பசுவைக் கறந்து மனந்தளர்ந்தும், குளிர்ந்த மலர்ச்சோலை வழியிருக்கப் பள்ளத்தில் விழுந்து அதிலுள்ள சேற்றைப் பூசிக் கொண்டும், கரும்புஇருக்க இரும்பைத்தின்றும், தீபம்இருக்க மின்மினிப் பூச்சியைத் தீயென்று கருதிக் குளிர்காய்ந்தும் வீண்படுதல்போல நொந்தார்கள்.

அநபாய சோழனும் குண்டரான சமணர்கள் காப்பியமாகச் செய்த பொய்யாகிய சிந்தாமணிக் கதையை உண்மையென்று மன மகிழ்ந்து பலவாருகப் பாராட்டிக் கேட்டுக்கொண்டிருக்க, முதன் மந்திரியாகிய சேக்கிழார் அறிந்து அநபாய சோழனைப்பார்த்து "மகாராஜனே! பெண்டுகள் இலம்பகம் பல பெரிதும் பாராட்டும் சமண்குண்டர் நூலான சிந்தாமணியானது பொய்ம்மையாகிய சரித்திரம்; சமண்தேவர் வைதிகநூல்வழக்குத் திருடியும் தம்நூற்கதைகள் சிலவற்றை மாற்றியும், இல்லன சில புனைந்தும் கட்டி நடத்திய புரட்டுக் கதை. இச்சிந்தாமணிக் காப்பியத் தலைவனுகிய சீவகன், கழிகாமக்கடலில் முழுகி அறிவு புறம்போன சச்சந்த மன்னன் தமோகுணவிர்த்தியிற் பிறந்த மேன்மையில் (இல்-இல்லாத) கான்முளை. அவன் செல்கதி பிழைத்து இங்குழல்கிய சாமானிய மானிடன். அவன் பழவினைநோயிற் பரிபவமுற்றுத் தெளிவில் அச்சணந்திபால் சிலகலை தேர்ந்தோன். அவன் தன்னின் நலமுடையனுஞ் சுதஞ்சணன் றன்தாள் பின்னர்வழிபட்டு வரம்

பெறு பீடிலான். அவன் தந்தை முதற் பல தையலார் மணாளன். அவன் பகற்சூறையாடும் பழித் தொழில் வாழ்நராம் எளிய வேட்டு வரையும் கைதவம் பழுத்த கட்டியங்காரனும் மெய்வலி யிலானையும் வென்றிகொண்டவன். அவன்தந்தை முதலாக இலக்கணை ஈறுக எட்டு மனைவியர் கட்டியிருப்பவும் தேசிகப்பாவையாம் நாடகப்பரத்தை காமம் விரும்பும் ஏமமில்தூர்த்தன். அவன ஏமாங்கத நாட்டிடஞ் சில ஆண்ட சாமானியனும் ஒரு சிறு மன்னன். அவன் அருகந்தர் சில்லோர் ஆசையிற்கட்டிப் பாட நின்ற நாடக மானிடன். அவன் பொய்த்தவம், பொய்யாப் பொருந்து ஞானம் இத்தரைஎய்திய ஏதில்அருகன்பாதம்போற்றிப் பழிபடு வீதசோகமென் சூனியகதியுறு தொழும்பன். இத்தகைய சாமான்யன் சரித்திரமாகிய சிந்தாமணி இம்மைக்கும் மறுமைக்கும் உதவாது” என்றனர்.

சோழன் வினா

இவைஅனைத்துங்கேட்ட சோழன் சேக்கிழாரை நோக்கி “ஐய ! சீவக சிந்தாமணி அவலமானதாய்ப் பிரயோசனம்அற்ற வீண் கதையாகில், மறுமைக்கும் இம்மைக்கும் பயன்களைக் கொடுக்கத் தக்க கதை யாது ? அதைக் கற்றுணர்ந்த திறமையுடையவர் யாவர் ? அது புதிய கதையோ ? பழமையான கதையோ ? அதற்கு முத னூல் ஒன்று உண்டோ ? அக்கதையை இவ்வுலகத்திற் சொன்னவர் யாவர் ? கேட்டவர்கள் யாவர் ? அது தவநெறியைக் கூறுங் கதையோ ? அல்லது தவத்தைச்செய்து பேறுபெற்றாரது சரித்திரமோ ? அதைமுறையாகச் சொல்லும்” என்றனன்.

சேக்கிழார் விடை

சேக்கிழார் பெருமான் கேட்டுச்சோழனைப் பார்த்து “ஏந்தலே ! உலகத்தின்கண் திருவருட் பெருஞ்செல்வர்கள் ஞானதான வள்ளல் களாக விளங்கும் அறுபான் மும்மை நாயன்மார்கள் அளவற்ற மகிமையினையும், அவர்கள் பக்திஞானவழிச் சென்ற முத்திப் பர மானந்த ஒழுக்கத்தையும் தெரிவிக்கும் பொருட்டு, செல்வத் திரு வாரூர்த் தியாகராஜப் பெருமான் ‘‘தில்லைவாழந்தணர்’’ என்று முத லடி எடுத்துக்கொடுத்தருள, திருநாவலூர்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதினொரு திருப்பாட்டாகப் பாடியருளிய திருத்தொண்டத் தொகைக்கு, திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார்பொருள் அருளிச்

செய்ய அதனல் நம்பி யாண்டார் நம்பி கலித்துறைத்திருவந்தாத்யைச் செய்தனர். அது, திருமுறைகண்ட சோழராகிய அபயகுலசேகரரும், சிவாலயதேவர் ஆதியாயுள்ள அறிஞர்பலரும் வியந்து கொண்டாடத்தக்க பெருமைவாய்ந்து, இந்நாள்காறும் சுத்தசைவ சித்தாந்த வைதிக சைவர்கள் யாவரும்சிரமேற்கொண்டு போற்றப் பட்டு வருவதொன்ருகும். அதுவே இம்மைக்கும், மறுமைக்கும் பயன் படத்தக்க ஒரு பெரிய ஞானநூல்" என்றுகூறி அதிற்குறித்த தில்லை வாழந்தணர் முதலாகத் திருநீலகண்டயாழ்ப்பாணர் ஈருகவுள்ள உண்மை நாயன்மார்கள் திவ்யசரித்திரங்களை நன்குமுறையே விளக்கினர்.

சோழன் திருத்தொண்டர் சரித்திரத்தைக்
காவியமாகப் பாடும்படி வேண்டல்.

அநபாயசோழன்கேட்டு, அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் திருவருளைக்கொண்டாடி சுத்தாத்துவித வைதிக சித்தாந்த அதீத சைவசமயத்தின் உண்மை தேர்ந்து, திராவிடவேதந் தந்து வைதிகசைவந் திருந்த நிறுத்திய, பரமாசாரியர்திருவடிபத்தியில் திளைத்து, சிவஞானசம்பந்தமெய் விளக்கம் பெற்று, சைவநெறியிற் சிறந்த சேக்கிழார் திருமுகத்தைப் பார்த்து, "அடியேன் புண்ணியமேதிரண்டு ஒரு வடிவெடுத்தாலென்ன என்முன் வந்துவைதிகசைவ பரமாசாரியர்கள் பிரபாவ அமிர்தத்தை ஊட்டிய மாமதியூகியாகிய அமைச்சரே! சிவானந்தச் செல்வர்களாகிய உண்மைநாயன்மார்கள் அவதரித்த நாடுகளும், அவர்களிருந்த ஊர்களும் அவர்கள் வந்துதித்த திருமரபுகளும், திருநாமங்களும், அவர்கள்திருத்தொண்டுகளும், திருத்தொண்டத் தொகையருளிச் செய்ததற்கு முற்காலத்திலும் பிற்காலத்திலும் சிவபெருமானது திருவடிக் கீழ்அமர்ந்தவர்களும், சீவன்முத்தர்களாய் இங்கு இருப்பவர்களும், இனிப் பிறப்பவர்களும், அடியார்களையடைந்து திருவருளைப் பெற்றவர்களும், அடியார்களிடத்துப் பகைகொண்டு கதி யடைந்தவர்களும், அவர்கட்குப்பகைவராய் நரகம் அடைந்தவர்களும், இல்லறநெறிக்கணின்று மிக்குயர்ந்த முத்தியை யடைந்தவர்களும், இல்லறத்தின்கண் இருந்து அனுபவிக்கும் சிற்றின்ப வாழ்வை நீக்கி நல்லறமாகிய துறவறத்தி லிருந்து பேரின்ப முத்தியடைந்தவர்களும், பிரமசாரிகளாகவே யிருந்து அருள் பெற்றுக்கரையேறினவர்களும், ஞானசாரியரது திருவருளால் முத்தி பெற்றவர்களும், சிவபூசையைச்செய்து பர

முத்தியடைந்தவர்களும், அஞ்ஞானம் நீங்கிச் சிவவேடமே யுண்மைப் பொருளென மனதிற்கொண்டு சிவபெருமானடிக் கீழ்ப்பொருந்தச் சென்றவர்களும் ஆகிய இவர்கள் திவ்விய சரித்திரங்களைக்கிரமமாகத் தனித்தனி கேட்கப்புகுங்கால், எல்லோருக்கும் மனதில்தரிக்கவும், செவிகொடுத்துக்கேட்கவும், நாவினால் பிறருக்குச்சொல்லவும், பலருக்கும் இனிதின்விளங்கித்தோன்றவும் தமக்குத்தாமே ஒப்பான இச்சரித்திரங்களை யாவருங்கற்றுணரவும் என்றைக்கும் நிலைநிற்கவும் பெரியகாவிய ரூபமாக விரிவாக இயற்றித் தந்தருள்வீர்" என்றனன்.

சேக்கிழார் தெய்வம் பராவல்.

அநபாய சோழ மகாராஜன் வேண்டுகோளுக்கு இயைந்து வேண்டிய எண்ணிறந்த திரவியம் பெற்றுக்கொண்டு வைதிகசைவ சூளாமணியாகிய சேக்கிழார் சர்வலோகேசனாகிய மகா நடராஜப் பெருமான் ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளும் தில்லைஎல்லையை அடைந்து, அட்டாங்க பஞ்சாங்கமாக வணங்கி, எழுந்து, புண்ணிய சிவகங்கையில் மூழ்கி, நடராஜமூர்த்தியின் பரமானந்த தாண்டவ தரிசனஞ் செய்து, ஆனந்தவாழ்வுகூர்ந்து, இரண்டுகரங்களையுஞ் சிரசின்மேல்வைத்துக்கொண்டு, மன முருகிக்கசிந்து, ஒளிப்பிழம்பான சிவானந்தக்கடலில் மூழ்கி, குஞ்சிதபாதத்தைக் கும்பிட்டு, நாநலம் படத் தோத்தரித்து, "பசுபதிப்பெயரிய தனிமுதற்கடவுளான பரம சிவனே! தேவரீர் திருவடியிற் பத்திசெலுத்திப் பரமானந்தப் பெரு வாழ்வு அடைந்த உண்மை நாயன்மார்கள் சிறப்பினை அடியேன் ஒரு நூலாய்த் திரட்டற்கு முதலடி எடுத்துத் தந்தருள்வீர்!" என்று திருவருளை நினைந்து வணங்கினர்.

"உலகெலாம்" என்னும் மொழி எழுதல்

அவ்வமயம், சமயங்களெல்லாங் கடந்த தத்துவாதீத சொரூப சச்சிதானந்த நடராஜமூர்த்தியின் திருஅருளால் "உலகேலாம்" என ஒரு மெய்ம்மொழி சுத்த முதலிய மாயாகாரிய ஆகாயங்களி னன்றி, நாதாதீதமாய்ச் சிதாகாசம் என்று வேதாகமங்களான் மீக் கூறப்பட்ட சிற்சபைக்கண் அடியார்கள் செவிப்புலமெங்கும் நிறைந் தது. தில்லைவாழந்தணரென்னும் மகா வைதிக சைவாசாரியர்களும், சிவத்துவிஜரான ஆதிசைவாசாரியர்களும், சைவாதீன மடாதிபதிக ளும்கேட்டு அஞ்சலி செய்தனர். உடனே, நடராஜ சந்நிதியினின்றும் திருமாலையும், திருநீறும், திருப் பரிவட்டமும் கொணர்ந்து, ஞான சிகாமணியாகிய சேக்கிழார் சுவாமிகளுக்கு அளிக்க அவர் ஏற்று,

அறுபான் மும்மை நாயன்மார்கள் வைபவத்தை விளக்குவதற்கு ஆயிரக்கால் மண்டபத்தை அடைந்து அவண்எழுந்தருளி, முழுமுதற் கடவுளாகிய நடராஜப்பிரபு எடுத்துக்கொடுத்த மெய்ம்மொழியை முதலாகக் கொண்டு தேனினும்இனிய செந்தமிழ்த்தொடையின் விளக்கமுற்ற திருவிருத்தத்தால் புராணஞ்செய்யத் தொடங்கினர்.

* * * *

சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் இயற்றுதல்.

சுந்தர மூர்த்திசுவாமிகள் திருத்தொண்டத் தொகை ஓதிய அக்காலத்தில் திருவடித்தொண்டு செய்துகொண்டிருந்த அடியார்கள் சிலர். அவர்காலத்திற்கு முன் திருத்தொண்டு செய்தவர்கள் சிலர். அவருக்குப் பிற்காலத்தில் திருத்தொண்டு செய்கிறவர்கள் சிலர். இவ்வாறுகச் சேக்கிழார்சுவாமிகள் சேர்த்துச் கோவை செய்த அடியவர்கள் எண்ணிலர். அத்திருத்தொண்டர்தாம் ஒரு நாடோ? ஒருதிசையோ? ஓர்ஊரோ? தங்களுள் ஒருமரபோ? ஒருவரோ? ஓரேகாலமோ? அவர்செய்திதாம் ஒரு வமிச சரித்திரத்தைச் சொல்லும் கதையோ? பலவமிசச் சரிதங்கூறும் பெருங்கதையோ? ஒருபெயரோ? இவ்வளவுங்கண்டு யாரால் சொல்லமுடியும். சர்வ லோகேசனுகிய மகா நடராஜப்பெருமான் "உலகெலாம்" என எடுத்துக்கொடுத்த மெய்ம்மொழியைக் கொண்டு தொண்டர்சீர் பரவ வல்லார் ஆகிய சேக்கிழார் சுவாமிகள் புராணம் பாடி முடித்தனர். கருங்கடலைக் கையினல் நீந்திக் கரையேறுதல்எளிதாகும், கடற் கரையிற் பொருந்திய நுண்ணிய மணலையும் இவ்வளவுஎன்று அளவிட்டுச் சொல்லலாம்; கடலில் மறித்து மறித்து வருகின்ற அலைகளை யும் ஒன்று இரண்டு என்றுஎண்ணிப் பிரிவாக எழுதி மொத்தத் தொகைக்கூட்டி உரைக்கலாம்; கடல் மச்சங்களையும் இவ்வளவு என்று அளவிடலாம்; ஆகாயத்தின்கண் விண்மீன்களையும் கணக்கு எடுக்கலாம்; கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் திருவடிகளைச் சிரத்திற்கொண்ட சிவானுபூதிமான்களாகிய அறுபான் மும்மை நாயன்மார்களான திருத்தொண்டர்கள் புராணத்தின் சிறப்பை

* ஈண்டு விடுபட்ட பாகத்தில் இவ்வசன நூலாசிரியர் 63 அடியார்களின் பெயர்கள், மரபுகள், தொண்டுகள் முதலியவற்றைக் கூறியுள்ளனர்.

—பதிப்பாளர்.

அளவிட்டுச் சொல்ல சிவஞானதபோதனராகிய நமது சேக்கிழார் சுவாமிகளுக்கு அல்லது மற்றையர் யாருக்கு முடிவதன்று.

தனியடியார்கள் அறுபதின்மரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக அறுபத்தொன்பது என்னும் சிவனடியார்கள் சரித்திரத்தினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகையாகிய பதிகத்தின் முறைப்படி திருநாரையூர் நம்பியாண்டார்நம்பி செய்தருளிய திருஅந்தாதியை ஆதாரமாக வைத்துக்கொண்டு பாடச்சேக்கிழார் தாம் தொடங்கிய புராணத்தை இரண்டுகாண்டங்களாகப் பிரித்துச், சரித்திரத்தின் விரிவைத் தொகுப்பாகச்செய்து, சருக்கங்கள் பதின்மூன்றாக வைத்து, நாலாயிரத்திருநூற்றைம்பத்து மூன்றாகத் திருவிருத்தம் அமைத்துத், திருத்தொண்டர் புராணம் எனத்திருப்பெயரிட்டு, ஏட்டில் எழுதி, மைக்காப்புச் செய்து புத்தகக்கவளிகையில் வைத்தனர்.

சோழன் சேக்கிழாரிடம் தூதரை அனுப்புதல்.

இதற்குள் அநபாய சோழமகாராஜன், ''சிவபக்தசிரோமணியாகிய சேக்கிழார் சுவாமிகள், புராணக்கதையைப் பிரித்துத்தொகை செய்ய நினைத்து எம்மைவிட்டு நீங்கினபின்பு, அவர் அருகில் இருந்தவர் யாவர்? இதுவரைக்கும் புராணம் எவ்வளவாயிற்று? எங்கேயிருந்து புராணத்தை இயற்றுகின்றனர்? இனி ஆகவேண்டியது யாது? அவைகளை நான் தெரிந்துகொள்ளவேண்டுமாதலால், அவைதெரிந்துவருக'' என்று தூதர்களை அனுப்பினான்; அத்தூதுவர்கள் அறியாமல் ஒற்றர்களையும் அனுப்பினான். சென்றவர்களிற் சிலர் அப்புராணத்தில் அடங்கிய சரித்திரம் பாதி ஆயிற்று என்று விரைந்துவந்து சொல்லினர். சிலர் இன்றுநாளை முடிவுபெறும் என்று சொல்லினர். அத்திசையைநோக்கிச்சோழன் வணங்கினான். சிலர் சென்று அப்புராணம் நிறைவேறியதென்று உறுதியாகச் சொல்லினர். இவ்வாறு வந்துசொல்லிய தூதுவர்களுக்கெல்லாம் சோழன் நவரத்தினங்களையும் நல்லாடைகளையும் பொன்னையும் எடுத்துக்கொடுத்தான்.

சோழன் புறப்படுதல்.

பிறகு, "அற்புத சின்மய பரமநாயகமூர்த்தியான நடராஜ மூர்த்தி முதலடி எடுத்துக்கொடுத்தருள, அம்மெய்ம்மொழியை முதலாகவைத்துக்கொண்டு பாடி மகிழ்ச்சியுற்ற சிவஞானசம்பன்ன ராகிய சேக்கிழார்சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருத் தொண்டர் புராணத்தை அடியேன் தரிசித்துத் தொழுவேனோ" என்று எத்தனித்து, தெய்வமணம் வீசும் தில்லைச்சிதம்பர திவ்விய க்ஷேத்திரத்திற்குப் புறப்படவேண்டும் என்று வீதி வீதிகள்தோறும் பேரிகை முழக்கிக், கணிதசாஸ்திரிகள் கணித்துச் சொல்லிய சுபதின மும் இலக்கினமும் முகூர்த்தமும் நன்குய்த்தெரிந்துகொண்டு இரத கஜ துரகபதாதிகள்சூழ்ந்துவரச் சோழமகாராஜன் பட்டத்து யானை மீதேறிச் சென்றனன். இரதம் ஒலிக்கின்ற ஒலியும், மேகத்தைப் போல மதம்பொழிகின்ற சிந்துரந்தீட்டிய யானைகள் பிளிறு கின்ற ஒலியும், பதாதிகள் ஒருவர்க்கொருவர் எதிரில்வந்து நெருங்கிக் கெர்ச்சிக்கின்ற பேரொலியும், ஆயுதங்கள் ஒன்றுட னொன்று தாக்குதலால் உண்டாகின்ற ஒலியும், சப்தமேகங்களின் ஒலியைப்பார்க்கிலும் பல மடங்கு அதிகமாகிக், கடல்முழக் கம்போல முழங்க, அநபாய சோழமகாராஜன் வருகின்ற செய்தியை அறிந்து தில்லைவாழந்தணர்களும், சைவமடாதிபதிகளும், மற்றும் உள்ள அனேக பெரியோர்களும், தெய்வ அசரீரி வாக்கைக் கொண்டு திருத்தொண்டர்புராணத்தைத் திருவாய் மலர்ந்தருளிய சிவஞானச்செல்வராகிய சேக்கிழார் சுவாமிகளும் சோழனை எதிர்கொண்டு ஆசிமொழிகள் பல இயம்பினர்.

சோழன் சேக்கிழாரைக் காணுதல்.

திரிபுண்டரமாகத் தரித்த விபூதியும், சிகையில் ஒருமணியும் சிரத்தில் முப்பத்தாறு மணிகளும், காதுகளில் அவ்வாறு மணிகளும், கண்டத்தில் முப்பத்திரண்டுமணிகளும், மார்பினில் நூற்றெட்டுமணி களும், புயங்களில் பதினறு பதினறு மணிகளும் கரங்களில் பன்னி ரண்டு பன்னிரண்டு மணிகளும் பொருந்தச் சிவவேடப் பொலிவுடன் விளங்கும் தெய்வத்திரு அருட்புலமை சான்ற சேக்கிழார் சுவாமி களைச் சோழன் தரிசித்தான். தரிசித்தமாத்திரத்துத்தன்னையறியா மல் இரண்டுகைகளும் அஞ்சலியாகச் சிரசின்மீதுபொருந்த, ' இவர்

கொண்டிருக்கும்வேடம் சிவனடியார்வேடம்; இது குறைவில்லாத தவவேடம்' என்று தேவதேவனாகிய மகாதேவன் கிருபையை நினைந்து, அவரை அம்மகாதேவன் அடிமையாக்கொண்ட பெருமையையுஞ் சிந்தித்து, சிவானந்தச் செல்வராகிய அச்சுவாமிகளின் திருவடிப்பாதுகையில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியெழுந்து நின்றான்.

சேக்கிழார் முதலியோர் நடராஜரைப் போற்றுதல்

பிறகு சோழமகாராஜன் நடராஜப்பெருமான் குஞ்சிதபாதத்தை வணங்க நினைந்து; சைவதுல்யராகிய சேக்கிழார் சுவாமிகளும், தில்லை வாழந்தணர் மூவாயிரவர்களும், துறவறத்திற் சிறந்த சைவமடாதிபதிகளும் தன்னைத்தொடர்ந்துவர, வந்து; தில்லைச் சிற்றம்பலத்திலே ஞானதாண்டவஞ் செய்தருளுந் திருக்கோலத்தினைத் தரிசித்துக்; கண்களினின்றும் சொரிகின்ற நீர்த்துளிகளாகிய அருவியானது இடையீடின்றிப் பொழியவும், இருகைகளும் அஞ்சலிகொள்ளவும், மனமுருகி மயிர் சிலிர்க்கவும், சிவானந்தவெள்ளமானது பெருக்கெடுக்கவும், வாக்கினின்றும் உதித்த தூயசொற்கள் குழறவும், அன்புடனே அதிக விம்மிதம் அடைந்து; திருஅருள் மேலிட்டுத் தெண்டனாக முன் விழுந்தெழுந்து மிகத்துதித்துநிற்க, "சோழனே! சேக்கிழான் நமது அடியார்கள் சிறப்பைத் துதிசெய்ய நமது வாக்கினால் "உலகேலாம்" என்று முதலடி எடுத்துக் கொடுக்கக்கொண்டு புராணஞ்செய்து நிறைவேற்றினன். நீ விரைவிற்கேட்க" என்று கனகசபையின்கண் யாவர்க்கு மகிழ்ச்சி விளைக்கும்படியான ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று; அவ்வோசையுடன் குஞ்சிதபாதத் திருச்சிலம்பின் ஓசையும் உண்டாயிற்று. உடனே அநபாயசோழன் ஆனந்தபூரிதனாய், "சிவாக்கிரயோகியாகிய சேக்கிழார்சுவாமிகள் அறுபான்மும்மை நாயன்மார்களின் சரித்திரங்களைக் கருணாநிதியாகிய நடராஜப்பெருமான் திருஅருளினால் விரித்துரைத்த திருத்தொண்டர்புராணத்தைக்கேட்டு ஆனந்தம் அடைதற்குச் சிவனடியார்கள் யாவரும் விரைவாக வரக்கடவர்கள்" என்று திக்குகள்தோறும் திருமுகம் எழுதித் தூதுவர்கள்பாற் கொடுத்தனுப்பினன்.

புராணங் கேட்க அடியார்கள் திரண்டு வருதல்.

விபூதி உருத்திராக்கங்களாகிய கவசங்களை அணிந்து, ஒருவருக் கொருவர் இனிமைபாராட்டுங் குணமும், உடல் நடுக்குற்றுப் பரவசம் அடையும்படியான சிவசிந்தையினையும் அன்பு நீங்காத மேன்மை யினையும் உடைய சிவனடிமைத் தொண்டும், முண்டனஞ் சடைமுதலிய சிவசாதனங்களும் பொருந்தும்படி சைவ சமயிகள் யாவரும்வந்து கூடினர். மறையவர்கள் வேதமோதும் ஓசையும், அவ்வேதத்தைத் தமிழாற் கூறியமூவர்கள்தேவாரத்தின் ஓசையும், அடியவர் அரகர என்று புகழ்ந்து துதிக்கும் ஓசையும், மேகத்தின் ஒலியையும் அடக்கி மேலிட்டன.

திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றுதல்

அவ்வடியார்களுள் திருத்தொண்டர் புராணத்தை எழுதிப் பூசைசெய்கின்றவர்கள் சிலரும், அவ்வாறு பூசித்து நடராஜப்பிரபு வின் திருவடிகளைத் தியானிக்கின்றவர்கள் சிலரும், அத்திரு முறையை விருப்பமுற வாசிக்கின்றவர்கள் சிலருமாக எங்கணும் இருந்து மகிழ்ச்சி அடைந்தார்கள். தும்புரு நாரதர் கானம் பாடி னார்கள் ; விண்ணில் அரம்பையர்கள் இசைபாடிக் கொண்டாடினா கள் ; மண்ணுலக மகளிர்கள் கரங்களைச் சிரசின்மேற் குவித்துத் தொழுதார்கள் ; திருமால் முன் அறியாது மயங்கிய நமது நடராஜப் பெருமான் இரண்டு திருவடிகளையும், இப்போது எளிதாகத் தரி சித்து அடியார்கள் ஆனந்தித்தார்கள் ; சங்குகள் பேரிகைகள் வீணை கள் தாளங்கள் வேய்ங்குழல்கள் எக்காளங்கள் உடுக்குகள் தக்கை கள் திருச்சின்னங்கள் பம்பைகள் வலம்புரிச் சங்கங்கள் கைம்மணி கள் இவைமுதலாகிய மங்கல வாத்தியங்கள் எங்கும் சந்தித்துச் சிறப்பெய்தின. மறையவர்கள் புரிகின்ற யாகத்தில் உண்டாகின்ற மிகுந்த புகையும், தேவாலயங்கள்தோறும் அடியவர்களிடும் குங்கி லியப் புகையும், கரும்பின்சாற்றைக் காய்ச்சுதலால் உண்டாகின்ற புகையும், தோரணங்கட்டிய வீதிகள்தோறும் மாதர்கள் தங்கள் கூந்தலுக்கு ஊட்டுகின்ற அகிற்புகையும் எங்கும் கலந்தன. பொன்னாலாகிய நாடகசாலைகளிலும், முத்துக்களால் அலங்கரித் திருக்கும் பெரிய மண்டபங்களிலும், மேடைகளிலும், சபைகளி

லும், நிலாமுற்றங்களிலும், வீடுகளிலும், மாளிகைகளிலும், அவற்றின் சிகரங்களிலும், மற்றெல்லாவிடங்களிலும் மலர்மாலைகளையும், பொன்னரி மாலைகளையும் அலங்காரஞ்செய்தார்கள். திருஅலகிட்டுக் கோமயங்கரைத்த நீரைத்தெளித்து, மலர்த்தோரணங்களும் கொடிகளும் மேல் விதானங்களும் அலங்கரித்துவீதிகளைச்சிங்காரஞ் செய்தனர். தேவாரத்திருமுறைகளில் வல்லவர்களும், சிவாகமங்களை ஓதி உணர்ந்தவர்களும், ஞானநூல்களைக் கற்றுணர்ந்தவர்களும், வேத வித்துக்களாகிய மறையவர்களும், குரு உபதேசிக்கும் பாரம்பரிய நெறியில் நிற்பவர்களும், இலக்கண இலக்கியங்களைக் கற்றவர்களும், காப்பியங்களையும் புராணங்களையும் எடுத்துச்சொல்ல வல்ல புராணிகர்களும் எங்கும் நெருங்கினர். சிற்சபைக்குமுன்னே மறையவர், கோமய சலத்தான்மெழுகி, அழகானகோலமிட்டு, அறுகாற் பீடம்அமைத்து, அதன்மேல் வெண்பட்டு வஸ்திரத்தினை விரித்து, மலர்களைப்பரப்பி, திருத்தொண்டர்புராணத் திருமுறையை அதன் மேல்வைத்து, அருச்சித்து, தூபதீபங்கொடுத்து வணங்கித் துதித்தார்கள். சிவபஞ்சாட்சர நாவினராம் சேக்கிழார்சுவாமிகள் திருத்தொண்டர்புராணம் யாவருக்குந் தெரியும்படி விரிவாகப் பொருள் அருளிச்செய்ய, அநபாயசோழமகாராஜன் முதலிய அடியார் யாவருஞ் சூழ்ந்திருந்து அரியபெரிய தெய்வச் செந்தமிழ் ஞானநூலாகிய இப்புராணம் நடராஜப்பெருமான் திருவாக்கென அஞ்சலியாகக் கைகூப்பிச் சிரவணஞ் செய்தார்கள்.

'அகிலலோகநாயகனாகிய நடேசப்பெருமானது திருநாமத்துக்கு உரிய திருநாளும், திருஞானசம்பந்த சுவாமிகள் அவதாரஞ்செய்த திருநாளும், அவர்அமுது ஞானப்பால்உண்டருளிய திருநாளும் திருஆதிரை நட்சத்திரமாகையால், சித்திரைமாதந் திருவாதிரைத் திருநாளில் இப்புராணத்தை அரங்கேற்றத் தொடங்கி, மறுவருடஞ் சித்திரைமாதந் திருவாதிரைத் திருநாள்வரையில் நடத்தி நிறைவேற்றுவோம்' என்று துணிந்து புராணத்தை யரங்கேற்றஞ் செய்ய, அனைவரும் நாள்தோறுங்கேட்டுக் கொண்டுவந்தனர்.

* * * *

புராணத்தின் அருமையை யாவரும் வியத்தல்

நாள்தோறும் புராணங்கேட்கவந்த அளவிறந்த சிவனடியார்க் கெல்லாம் திருமடங்களும், அம்மடங்கள்தோறும் தீபங்களும் அமைத்து, அவர்கள் தரித்துக்கொள்ள உடைகளும், போர்த்துக் கொள்ளப் போர்வைகளும், சம்பாநெல் லரிசியால் ஆகிய திருஅமுதும், கற்கண்டும், இனிய பழவருக்கமும், அறு சுவையோடு கூடிய கறிஅமுதும், நறுநெய் கட்டித்தயிர் திரட்டுப்பால்புதுத்தேன் நல்லபணியார முதலிய வருக்கமும், தண்ணீரமுதும் பாக்கு வெற்றிலை முதலிய முகவாசங்களுமாகிய இவை எல்லாம் சோழமகாராஜாவின் உத்தரவின்படி அமைச்சர் நாடோறும் கொடுத்துவந்தனர். சச்சிதானந்தப் பிழம்பாகிய நடராஜப்பெரு மானுக்குத் தினந்தோறும் மகாபூஜைகளை நடத்தித் தில்லை வாழந்தணர்களுக்கும் வெவ்வேறாகத்திருஅமுதம் அமைத்தற்கு அமுதுபடி கறியமுது முதலிய பொருள்களை யெல்லாம் கொடுத்து வந்தனர். அப்போது, பதஞ்சலிமுனிவரும் வியாக்கிரபாதமுனிவரும் தவஞ்செய்த தில்லைப் பதியாகிய பெரும்பற்றப்புலியூர் பூலோக சிவலோகம் என்னும்படி விளங்கியது.

புராணங் கேட்கவந்த அடியார் திருத்தொண்டர் புராணத்தை எழுதப் புத்தகம் சேர்ப்பவர்களும், எழுதுபவர்களும், வாசிப் பவர்களும், பொருள் சொல்பவர்களும், கேட்டுக்கொண் டிருப்பவர் களும், சிரக்கம்பஞ் செய்துகொண்டாடி மகிழ்ச்சி அடைபவர்களும், ஆனந்தத்தினால் நகைகொள்பவர்களும், தேனிக்கின்றவர்களும், குன்றைமுனி யென்னுஞ் சேக்கிழார்சுவாமிகள் செய்தருளிய தவத்தைக்குறித்து வியப்பவர்களும், ஆண்டவன் "உலகேலாம்" என அடியெடுத்துக் கொடுத்த மெய்ம்மொழியை எண்ணி எண்ணி ஆனந்திப்பவர்களும் திருத்தொண்டர் புராணத்தைக்கேட்ட அநபாய சோழன் செவிக்குச் சிந்தாமணிப் புரட்டு முருட்டுக் கதை ஏற்குமோ இனி என்பவர்களும் ஆயினர்.

திருத்தொண்டர் புராணத்துடன்
சேக்கிழார் யானையின்மீது வலம் வருதல்.

இத்தன்மையான சிறப்புடனே திருத்தொண்டர் புராணத்தை அன்பர்களிருந்து பாராட்டுதல்செய்ய அது நடந்து மறுவருடம் சித்திரைமாதம் திருவாதிரைத் திருநாளில் நிறைவேறிற்று. அதனை அறிந்து சிவனடியார்கள் துதிக்கும் அரகா என்னும் பேரோசையானது, மேலோங்கி அதிகரித்து, எழுகடலின் ஒலியையும் அடக்கிப், பிரமாண்டத்தின் இடை வெளியைமூடித், தேவர்கள்செவியை நிறைத்து, மேலேயெழுந்து பொன்னுலகுக்கு அப்பாலும் புகப் பொலிந்தது. திருத்தொண்டர்புராணத்தை எழுதிய திருமுறையைத் தில்லைவாழந்தணர்கள், மூர்த்திமந்திரத்தாலும் மூலமந்திரத்தாலும் அருச்சனைசெய்து வணங்கி, இருக்கு முதலாகிய நான்குவேதங்களுடன், இன்றுமுதல் தமிழ் நூலாகிய இதுவும் ஐந்தாவது வேதம்ஆக விளங்கும் என்று கருத்திற்கொண்டு, திருஅமுது தாம்பூலம் தூபதீபங்கள் சாமரை குடை கண்ணடி ஆலத்தி விபூதி இவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு, உபசாரஞ்செய்தனர்.

அதனைத் தரிசித்துப் பின் அநபாயசோழ மகாராஜன் திருமுறையைப் பொற்பட்டினுற் சூழ்வித்துப், பொன்தட்டில்வைத்து, யானையின் பிடரியில் அப்பொன்தட்டை எடுத்து வைத்தபின், ஞான கவீந்திரராகிய சேக்கிழார் சுவாமிகளை அந்த யானையின்மேல் எழுந்தருளச்செய்து,

பேந்தமெலாம் போக்கும் பெரியபுரா ணந்தந்த
எந்தைபிரான் சேக்கிழார் இவ்வுலகில்—வந்திலரேல்
நாயன்மார் கீர்த்தியெங்கே நல்லதமிழ் வேதமெங்கே
தூயசிவ பக்தியெங்கே சொல். *

எனக் கூறித், தோத்தரித்துத், தானும் அந்த யானைமேலேறிச், சைவ முனிவராகிய சேக்கிழார்சுவாமிகள் பின்னுக இருந்து, தனது

[* கலியாணசுந்தர யதீந்திரர் இயற்றியது.]

இரண்டுகைகளாலும் இரண்டு சாமரைகளைவீசிக்கொண்டு, வேதங்கள் முழங்கவும், விண்ணவர்கள் கற்பகப்பூமாரி மிகப்பொழியவும், திருவீதி வலமாக வரும்போது, சர்வைஸ்வரிய சம்பன்னரான நடராஜப்பெருமானின் திருவருளை நினைந்து "இதுஅன்றோ நான் செய்த தவப்பயன்!" என்று ஆனந்தித்தனன்.

சுவாமிகள் அரசனுடன் யானையின்மீது பவனிவரக்கண்ட மறையவர்கள், வீதிகள்தோறும் திருஅலகிட்டு நீர் தெளித்து, வாழைமரங்களை நிறுத்தி, பூரணகும்பம் அமைத்து, பொரிகளைத் தூவி, பொன்னரி மாலைகளையும் நறும்பூமாலைகளையுந்தொங்கவிட்டு, தோரணங்களை வரிசையாகக்கட்டி, வாசனை கமழ்கின்ற தூபத்தை யும் எடுத்து, சுடர்விளக்கு ஏற்றி, மாணிக்கத்தீபங்கள் வைத்து வேதங்களை விரிவாகஓதி, எதிர்கொண்டுவந்து அறுகினால் ஆலாத்தி செய்ய, அரமாதர் மங்களம்பாடினார்கள். மேகசாலங்கள் மின்ன லுடனே மழைத்துளிகளைப்பெய்தன. தேவர்கள் கற்பகத்தருவின் வாசனைபொருந்திய மலர்மாரி பெய்தனர். செந்தமிழ்க் கவி வாணர்கள் சிவராஜ யோகியாகிய சேக்கிழார்சுவாமிகள் இன்புறும் படி நாவுக்கிசைந்த அமிர்தபாடலாகிய மழைபெய்தனர். அநபாய சோழமகாராஜன் யாசகர்களின் வறுமையான கோடை நீங்கும்படி அள்ளிஅள்ளிஎடுத்துப் பொன்மழைபெய்தனன். சிவனடியார்கள் உருகிறமனமுடன் ஆனந்தக்கண்ணீர் மழைபெய்தனர். சிவனடியார் களுள் சிலர் இவர் அரசர் இவர் தவசி, தவசிக்குஅரசர் சாமரை போடத்தகுமோ என்று சொன்னார்கள்; சிவஞானச்செல்வராகிய சேக்கிழார்சுவாமிகள் சிவவேடங்கொண்ட சிறப்பாகிய இதுமேம் பட்டசிறப்பாயிருந்தது என்று சிலர் சொன்னார்கள்; தேவரும் எழுது தற்கு அரிய வேதத்தைத்தமிழ் செய்து திருப்பதிகம் பாடியருளிய மூவர் முதலிகளும் சேக்கிழார் சுவாமிகளென ஒருமூர்த்தியாய் இவ்வுலகத்தில் திருஅவதாரஞ்செய்தனர் என்று சிலர் சொன் னார்கள்.

திருத்தொண்டர் புராணத்தின் இலக்கிய மாட்சி

தொல்காப்பிய முதலிய இலக்கணச் செழுஞ்சுவை பழுத்த சொல்நலங்களும், வடமொழி இலக்கணநயங்களும், தேவார திரு வாசக முதலிய திருமுறைகளின் வழக்குகளும், வேதாகம விழுப்

பொருள்பழுத்த தொல்நலங்களும், சைவ சித்தாந்த மாண்பொருள் களும், வைராக்கியம்பழுத்த மாட்சிமைகளும், பக்திச்சுவைபழுத்த பண்புகளும், ஞானச்சுவைபழுத்த நண்புகளும், சிவாநந்தம் பழுத்த செந்நெறிகளும், நால்நில ஐந்திணை நடைகளும், சமயாசார சங்கதிகளும், வருணபேத வருணனைகளும், ஆச்சிரமநான்கின் அறங் களும், மனுநூல்கூறும் வழக்குகளும், சாதிமலிந்தநீதிகளும், சந்தம் மலிந்த பாக்களும் வாய்ந்து, காவியலட்சண முழுதும் பொருந்த நவரச புஞ்சமென்று அறிஞர் வியந்து கொண்டாடத் தெய்வச் சேக்கிழார் வகுத்தருளிய திருத்தொண்டர்புராணச் சொற்சுவைப் பொருட்சுவைப் பெருக்கம் நாவிலும் அடங்கா! பாவிலும் அடங்கா! என்பார் சிலர். இதுபெரிய புராணம்! பெரியபுராணம்!! என்பார்பலர்.

அருண்மொழித் தேவராகிய சேக்கிழார்பிரான், உம்பர்நாயக ராகியநடராஜப் பெருமான் "உலகேலாம்" என்று மெய்ம்மொழி உதவி யருளிய அடிமுதலாகக்கொண்டு திருத்தொண்டர் புராணம் இயற்றி அவர்சந்நிதியில் அரங்கேற்றிய ஞான்றே சமண்தேவர்செய்த சீவக சிந்தாமணி என்னும் சைனகாவியம் ஆதித்தன் உதயத்தில் தாரகை போலத் தன்பெருமைகுன்றி யதன்முன் வருதற்குஅஞ்சிஒடுங்கிற்று என்பார் சிலர். அன்றுந்தமிழ் நிறுத்தினர் வைதிகசைவமுனிவரே இன்றுந் தமிழ் நிறுத்தினர் வைதிகசைவமுனிவரே; இடையில்வந்த ஆருகதர் முதலியோர் தமிழாக்கம் தோல்வியுற்று விரைவுகொண்டு ஓடியது என்பார் சிலர். சிவஞானசம்பன்னராகிய சேக்கிழார்சுவாமி களுக்கு மதுரஇராமாயணகதையுரைசெய்த வான்மீக முனிவரும் ஒப்பல்ல என்பார் சிலர்; பாரதத்தைக் காவியமாகச்செய்து நீதிகளை வரையறுத்த வேதவியாசமுனிவரும் ஒப்பல்ல என்பார் சிலர், ஆயிர நாவுடன் அறிவின்மேப்பட்ட ஆதிசேடனும் ஒப்பல்லஎன்பார் சிலர்; பொதியமலையில் வீற்றிராநின்ற அகத்தியமுனிவரும் ஒப்பல்ல என்பார் சிலர்.

சுவாமிகள் திருமேனியிற்பூண்ட சிவசாதனங்களும், விபூதி தரித்திருக்குங் காட்சியும், அஞ்சலி யத்தமும், உருத்திராக்கம் அணிந்த கண்டமும், புத்தகக்கவளிகையும், உள்ள மானது உரு குந்தோறும் சிவசிவஎனுந் திருநாமமும், நாமெல்லாரும் பிறவித் தடுமாற்றத்தினின்றும் பிழைக்கும்படி அருளும் கருணை நோக்க மும் மிகஅழகுள்ளன என்றுசொல்லி, உலகத்தவரெல்லாருந் தொழுதனர். வெள்ளியதாமரையில் வீற்றிருக்கும் நாமகள் வெண்

தாமரைப்பூவை மறந்தனள்; சங்கத்தார்களுடைய காவியங்களை மறந்தனள்; தேயத்திலுள்ளோரிடத்து நிகழும்இனிய சொல்திரளின் பொருள்நயத்தினை மறந்தனள்; பிரமன்றன் நாவைமறந்தனள்; அகத்தியமுனிவரை மறந்தனள்; ஞானச்செல்வராகிய சேக்கிழார் சுவாமிகள் திருநாவினிடத்து வந்து குடியிருந்தனள் என்றார் எவரும்.

திருமுறை வகுப்பு.

இவ்வாறு தில்லைச்சிதம்பரத்திலே இம்பரும் உம்பரும் ஏனோரும்சொல்லித் துதித்துக்கொண்டு சூழ்ந்துவர, திருவீதியை வலஞ் செய்துவந்து சிற்சபையின் திருவாய்தலின்கண் யானையினின்றும் சுவாமிகளும் அரசனும் இழிந்து அந்தணருடன் திருத்தொண்டர் புராணத்தினை நடராஜப்பெருமான் சந்நிதியின்கண் வைத்தனர். நடேசப்பிரான் சந்நிதியில் அட்டாங்க பஞ்சாங்கமாக அரசனுள்ளிட்டார் யாவரும் வணங்கிஎழுந்து, தவசிரேட்டராகிய சேக்கிழார்சுவாமிகளுக்குத் "தொண்டர்சீர்பரவுவார்" என அருமைப் பெயர் தந்து, ஞான மகுடத்தைத்தரித்துச் சுவாமிகளை மகா மண்டபத்தில் எழுந்தருளச் செய்து வணங்கினர். திருஞான சம்பந்தசுவாமிகள்முதலாகியமூவர் அருளிச்செய்ததிருமுறைகள்ஏழு மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருமுறைஒன்று, திருவிசைப்பா என்னுந் திருமுறைஒன்று, திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திரமாலை என்னுந் திருமுறைஒன்று, திருஆலவாய்ச் சோமசுந்தரக்கடவுள் திருவாய்மலர்ந்தருளிய திருப்பாசுரமுதலாகக் கோவைசெய்த பிரபந்தத்திருமுறை ஒன்று, அருண்மொழித்தேவராகிய சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணமாகிய திருமுறைஒன்று, ஆகத்திருமுறைகள் பன்னிரண்டாக அரசனுள்ளிட்டார் வகுத்துத், தோடுடைய செவியன் என்று ஆளுடையபிள்ளையார் முதற்பாசுரம் எடுத்து ஓதியருளிய தேவாரத் திருமுறையுடன் இதுவும்ஒப்பாகும்என்று எடுத்துக்கூறிச், செப்பேட்டிலெழுதி, நடேசப்பிரான் சந்நிதியில் வைத்தார்கள்.

இவ்வாறுசெய்தது பாலாறுசூழ்ந்த தொண்டைநாடுசெய்த தவமோ, வளமிக்க குன்றத்தூர் செய்த தவமோ, கங்கைகுலதிலகராகிய கருணைவள்ளல் சேக்கிழார் மரபினர் செய்த தவமோ,

உலகத்தில் வாழுஞ்சிவனடியார்கள் செய்ததவமோ அறியகில்லோம். அப்பொழுது, சைவத்தவவேடம் பூண்டு சிவஞானச்செல்வராய்ச் சேக்கிழார்சுவாமிகள் தில்லையின்கண்ணே யெழுந்தருளியிருந்தமையின், குன்றத்தூரில் பாலறுவாயர் கேணியென்று ஒரு தடாகம் அமைத்துத் திருநாகேச்சுரரது திருப்பணி யியற்றிக்கொண்டிருந்த சுவாமிகள் தம்பியாராகிய பாலறுவாயரை அநபாயசோழன் அழைப்பித்துத், தனக்கு மந்திரியாக அமைத்துக்கொண்டு, தொண்டைமான் என்று பட்டப்பெயருந்தந்து, சேக்கிழார்சுவாமிகள் திருவடிகளை மறவாது திருத்தொண்டர் புராணத்தையே பாராயணஞ் செய்துகொண்டு, சிவபக்த சிரோமணியாய் வாழ்ந்தனன். தொண்டைமண்டலத்தில் ஒருகாலத்தில் பஞ்சம்நேரிட அம்மண்டலத்தினின்றுஞ் சோழமண்டலத்தை யடைந்த யாவரையும் ஆதரணைசெய்து வந்தமையின் பாலறுவாயர்க்குத் தொண்டைமண்டலங் காத்த பெருமான் எனவும் பெயராயிற்று. தொண்டர்சீர்பரவு சேக்கிழார் குரிசில் தில்லைமாநகரத்தில் அறுபான்மும்மை நாயன்மார் திவ்விய சரித்திரங்களையே தியானஞ்செய்துகொண்டு, அண்டவாணர்அடியார்களுடன் அருந்தவத்திலிருந்து இண்டைவைத்த சடையம்பலத்தவர் குஞ்சிதபாத நீழலில் * இடபரவி பூசநாள் எழுந்தருளினர்.

---

* வைகாசித் திங்கள் பூச நட்சத்திரம்.

ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள் பிரசங்கம்.

பச்சையப்ப முதலியார்
தரும விசாரணைக் கர்த்தர்களாகிய
சீனிவாசப் பிள்ளையவர்களுக்கும் மற்றக் கண்ணியவான்களுக்கும்: *

இந்த நல்ல சமயத்தில் என்னுடைய மனப் பூர்வமான இஷ்டத்தோடு நான் உங்களுக்குச் சில சங்கதிகள் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கட்டடத்தின் அருகில் வந்திருக்கிற மகாஜனங்களெல்லோருங் கேட்கும்படி பேசவேண்டுமாகில் இடிமுழக்கம் போன்ற தொனியுடன் பேசவேண்டும். ஆகையினால் என் சமீபத்திலிருந்து கேட்பவர்கள் நான் சொல்லுஞ் சங்கதிகளை யெல்லாம் மற்றவர்களுக்குச் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுடைய சுயபாஷை எனக்குத் தெரியுமானால், அதிலேயே பேசலாமென்கிற ஆசை எனக்கிருக்கின்றது. இப்படிப்பட்ட சம்பிரமங்களைப் பார்ப்பதினால் எனக்குண்டாகிய ஆனந்தத்தை வெளியிட்டுச் சொல்லத்தகுந்த உறுதியான சொற்கள் அகப்படவில்லை. இன்றையதினங் கொண்டாடுகிற சிறப்பினால் இந்து சமூகத்தார் இனி அடையப்போகிற பெருமைகளைக்குறித்து என்மனம் பூரிக்கின்றது. இவ்வளவும் உபயோகமில்லாமல் வேடிக்கையார்த்தமாகவே செய்வீர்களாகில் உங்களில் நானொருவனாக வந்திருக்க மனமிருக்கமாட்டாது. நாமெல்லோரும் இவ்விடத்திற்கூடிய பெரிய நிலையானகாரியங்களுக்குள் முக்கியமானது ஒன்றுண்டு. அது நாம் எவ்வளவு சிறப்பும் வேடிக்கையுஞ் செய்தபோதினும் எல்லோருக்கும் விருப்பமானதாகவேயிருந்து இன்றையதினத்தைப் புத்திர பவுத்திராதிகள் நினைத்துக்கொண்டிருக்கும்படி செய்விக்கும்.

உபகாரசிந்தையுள்ள சில தருமவான்கள் கல்வி விஷயமாக வைத்துப்போன திரவியத்தைக்கொண்டு மகா உன்னதமான கட்டடம் ஒன்று கட்ட அஸ்திவாரம் போடும்பொருட்டு இந்தத் தேசத்தார் அனந்தந் திரளாகக் கூடிக் களிப்புடன் கொண்டாடுவதன் மத்தியில் இவ்வளவு பெரிய சபை கூடும்படி இந்தியாவுக்குள்ளே இதற்கு முன் யாதொரு சமயமும் நேரிடவில்லை. இந்தத் தரும வரும்படியும் இத்தருமங்களை நடத்திவருவதுமாகிய இவையெல்லாம் உங்களைச்

---

* இதனைப் பதிப்பித்தவர் வரலாறு, அனுபந்தம் II பார்க்க.

சார்ந்தவைகள். இப்படி வரும்படிகளை யூரோப் தேசத்தாராவது கவர்மெண்டாராவது செய்விக்கவுமில்லை. மேலும் இவைகள் அவர்களுடைய உதவிக்கு எதிர்பார்த்திருக்கவுமில்லை. இன்னும் அனேக தருமக் கட்டடங்கள் சந்தேகமில்லாமல் கட்டப்படுவனவா யிருந்து அவைகளெல்லாம் இந்த நகரத்திலுள்ளவர்களுடைய பெருமைக்கு ஆதாரமாயிருந்தபோதிலும், இந்த ராச்சிய முழுவதுந் தேடினுலும் இதற்கு ஒப்பான தருமஸ்தாபிதங் கிடையாது.

அது ஏனென்றால், இப்போது சிறப்பாக நடத்திவருகிற தருமத்தைப்போலத் தருமங்களைச் செய்யச் சிந்தையுடையவர்கள் உங்களில் அனேகர் இருப்பதுமன்றிப் பச்சையப்ப முதலியார் தம்முடைய திரவியத்தில் இத்தேசத்தாருடைய கல்வி விஷயமாக வைத்த மிகுந்த பொருளைச் செவ்வையாகப் பரிபாலனஞ் செய்வதற்குப் பிரயாசை யெடுத்துக்கொள்ளத் தக்கவர்கள் உங்களுக்குள் இல்லாமற்போகவுமில்லை. இந்தத் தேசத்தாருக்கு இப்படிப்பட்ட உபகாரங்களைச் செய்து வருவதற்காக உங்களிடத்தில் மிகுந்த மதிப்பையும் நன்றியறிதலையும் பெற்ற சில புண்ணியவான்களுடைய பெயரை நான் இந்தச் சமயத்தில் எடுத்துச் சொல்லாமல் விடுவேனுகில் என்மனத்துக்குத் திருப்தியாயிருக்கமாட்டாது.

உங்களுக்குள் அக்கிராசனுதிபதியாயும் என் இஷ்டராயும் இராநின்ற ஸ்ரீநிவாச பிள்ளை நானறிந்த மட்டில் இப்படிப்பட்ட தருமவான்களுக்குள் மகா பிரபலராயிருப்பது உங்களுக்குத்தெரியுமே. இவரோடு நான் பழக்கமான இந்த 15-வருஷ காலமாக உங்கள் தேசாபிமான விஷயத்தில் பாடுபட்டுக் கொண்டுவருகிறுர். இவர் நெடுங்காலமாகத் தனக்கு ஒழிவான சமயங்களிலும், மற்றக்காலத்திலும் இந்தத்தேசத்து வித்தியாபிவிர்த்தி செய்விப்பதிலும், ஒருமைப்பாடு செய்விப்பதிலும் வேண்டிய முயற்சி செய்துவருகிறுர். அனேகரால் நன்கு மதிக்கப்பட்டு விசுவாசிக்கப்பட்டிருப்பதே இவருக்குப் பிரதிபலனுக இருக்கின்றது. இவர் இத்தேசத்தாராகிய உங்களுக்குள் ஒருவராக வாழ்ந்துகொண்டு இவர் வாழ்நாள்தோறும் உங்களுடைய மாறுத அன்பைப் பெற்றிருப்பது எப்படிக்கொத்த பாக்கியம். இந்தப் பிரகாரம் உங்களுக்கு உபகாரங்களைச் செய்துகொண்டிருக்கும்படி இவரிடத்தில் தைரியத்தைத் தூண்டுவித்து இவரோடொப்பாகப் பிரயாசை யெடுத்துக்கொள்ளுகிற என்னைப் பார்க்கிலும் இவரே அதிர்ஷ்டவான்.

எங்கள் தேசத்தார் உங்கள் விஷயமாக அநுதாபப்படுகிறது போல நானும்படுகிறேனென்று பெருமையாகச் சொல்லமாட்டேன். ஏனென்றால், நான் உங்களோடு கூடியிருந்து என்னுடைய வாழ் நாட்களைப்போக்குதற்கு இல்லாமையால் என்னுடைய பெயரும் ஞாபகமுங் காலாந்தத்தில் உங்களைவிட்டு மறைந்துபோம். இன்னும் இதைவிட நான் துக்கப்படுவதுயாதெனில், இந்து சமூகத் தருக்காக நான் செய்துவரும் இப்படிப்பட்ட முயற்சிகள் ஒருவேளை இவ்விடத்திலிருக்கிற என்னுடைய தேசத்தாராகிய பிரபலவான்களு க்கு முன் பழிப்புக்குள்ளாக்குவிக்குமோ யாதோ, ஆனால் அவர்கள் தகுந்த காரணமில்லாமல் எண்ணமாட்டார்களென்று நினைக்கிறேன். ஆனாலும் நான் இப்படிப்பட்ட யோசனைகளினாலே அச்சப்பட்டிருக் கிறேனென்று நீங்கள் நினைக்கவேண்டாம். அப்படிக்கில்லை. நான் முன் நடந்துகொண்டதையும், என் மனசாட்சியையும் ஆராய்ந்து பார்க்குமிடத்தில், இத்தேசத்தாருக்கு யாதொரு பிழையுஞ் செய்ய வில்லையென்று மனப்பூர்வமாக அறிந்துகொள்ளுகிறேன். நான் முயன்ற காரியங்கள் எல்லாவற்றுள்ளும் உங்களுக்கு உண்டாகிய சுதந்தரத்தை விர்த்திசெய்வித்தேன். நான் என்னைக்குறித்து அதிக மாகச் சொல்லிவிட்டேன்.

உங்களெல்லோருக்கும் உண்மையான சினேகராயும், இந்தத் தரும விசாரணை திரஸ்டீஸ்களுக்குத் தலைமையாயு மிருந்து இறந்து போன இராகவாசாரியரைக் குறித்து நான் சொல்லவேண்டும், அவரை நீங்கள் நேசித்திருந்ததைவிட நான் அதிகமாக நேசித்திருந் தேன். அவர் இப்போதிருந்தால் இன்றையதினம் நடக்கிற ஆடம் பரத்தைப் பார்த்து அதிக சந்தோஷப்படுவார். அன்றியும், உங்க ளுக்குள் சிறந்தவராய் மேன்மையான நேட்டிவ் மேஜிஸ்திரேட்டு என்னும் உத்தியோகத்தை யடைந்து, அவர் காலமெல்லாம் வித்தியா விஷயங்களை விர்த்தி செய்வதிலும், இந்தத் தரும காரியங்களை ஊர் ஜிதப்படுத்துவதிலும் போக்கினார். அவருடைய பேர் உங்களுக் குள் அழியாமல் வழங்கிவரக்கடவது.

இன்னும் இப்படிப்பட்ட தகுதியுடையவர்களை எடுத்துச் சொல்வேன்; ஆனால் பொழுதில்லை. எப்படி யிருந்தபோதிலும், வெகுவாகப் புகழ்பெற்றிருக்கிற இந்தத் தரும ஏற்பாடுகளைக்

குறித்துக்கொஞ்சம் சொல்லுவேன். பச்சையப்ப முதலியார் என்பவர் தரும சிந்தையோடு தம்முடைய மிகுந்த ஆஸ்தியைத் தேவஸ்தானங்களுக்கும், மற்றத் தருமங்களுக்குமாகச் செலவழித்தார். அவருக்குச் சந்ததியாவது மற்றப் பாத்தியஸ்தர்களாவது இல்லாமற் போன படியால், அவருடைய குலதர்மப்படி தன் சொத்துகளை எல்லாம் சத்திரம் சாவடிகள் கட்டுவதற்காகவும், ஏழைகளுக்கு அன்னதான வஸ்திரதானங்கள் செய்வதற்காகவும் வைத்து இறந்து போனார். அப்படிப்பட்ட தருமங்களுக்கு நானாவது மற்ற எந்த யூரோப்பியனாவது, தெரிந்தாவது தெரியாமலாவது, இடையூறு செய்யக்கூடாது. அவைகளெல்லாம் நீங்களே ஒருவருடைய சகாயம் எவ்வளவும் இல்லாமல் நிர்வாகஞ்செய்து பரிபாலனம் பண்ணும்படியா யிருக்கின்றன.

பச்சையப்ப முதலியாருடைய அபிப்பிராயத்துக்கும், இந்த மகாஜனங்களுடைய வழக்கத்துக்கும் ஒத்தாற்போல் சூப்பிரீம் கோர்ட்டாரவர்களுடைய ஏற்பாட்டின்படிக்கு இந்தத் தேசத்து நல்ல வித்தியா விஷயத்துக்காக நான்கு லக்ஷம் ரூபா வரையிலும் கொடுக்கப்பட்டது. இவ்வளவு பெரிய மொத்தப் பணத்தைச் சேதப்படுத்தவொட்டாமலும், அபகரிக்கவொட்டாமலும் இந்த விஷயத்துக்காகக் காப்பாற்றுகிற நிமித்தம் நான் எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டேன். மேற்படி முதலியார் பெயரால் தருமப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதில் எவ்வளவு என்னுடைய ஒழிவுகாலங்களைச் செலுத்திவந்தேன். அது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இப்படி நான் செய்தது சிலர் பழி சொல்லும்படியிருந்தபோதிலும், அது வெளிக்கு வருமாகில், எனக்கு அதனால் பெருமையும் திருப்தியும் உண்டாகும்.

இந்தத் தர்ம வித்தியாசாலைகள் கோர்ட்டு ஆப் டிரக்டர்களுக்கு ஒப்பாக இருப்பதுமன்றி, இந்தக் கவர்ன்மெண்டாரும் இதற்குவேண்டிய சகாயங்கள் செய்யும்படியாக அவ்விடத்திலிருந்து வந்த உத்தரவை அப்போது இவ்விடத்திலிருந்த கவர்னரும் சந்தோஷமாக ஒப்புக்கொண்டார்.

அதனினும் சிறந்தது யாதெனில், இந்தியாவுக்கு வந்த ஜட்ஜிகளுக்குள்ளே மகா கியாதாவாயும், மகா பண்டிதராயுமிருந்த

ஸர் ராலே பால்மர் என்பவர் சூப்பிரீம் கோர்ட்டுக்கு ஜட்ஜியாக இருந்தகாலத்தில், இந்த வித்தியா தர்மங்களும், மற்றத் தருமங்களும் கோர்ட்டாருடைய தீர்ப்பு முன்னிலேக்கு உத்தரவாயிருக்கின்றன என்று யாவரும் அறியவேண்டுவது யுக்தமல்லவா? இன்னும் அவர் இந்த வித்தியாசாலேகள் ஏற்படுத்தி நடத்திவருகிற கிரமங்களுக்கு வேண்டிய ஆலோசனேகளும் புத்திமதிகளும் சொல்லி உதவி செய்தாராதலால், நல்லவர்களும், இத்தேசத்தாருக்கு அனுகூலமாகியவர்களும் கொண்ட அபிப்பிராயத்தின்படி நாம் நடந்து கொள்ளவில்லே என்கிற பயம் நமக்கு வேண்டுவதில்லே. பள்ளிக்கூடத்து ஏற்பாடுகளேயும் சிக்ஷாக்கிரமங்களேயும் ஒழுங்கு செய்வதற்கு நன்ருக வடித்தெடுத்த யூரோப் தேசத்தாருடைய சகாயம் முக்கியமாக வேண்டியது. அதற்காக நானும், இன்னும் மிகுந்த உபயோகமுள்ளவராகிய யூநிவர்ஸிற்றி என்னும் சகல சாஸ்திரப் பள்ளிக்கூடத்துக்குத்தலேமை உபாத்தியாயராகிய பவல் துரையவர்களும் இருக்கிருேம். அவரும் இதோ வந்திருக்கிருர்.

இப்போது சொல்லிவருகிற வித்தியாப்பியாசம் வெகு நன்ருயிருக்கின்றது. இந்தக் கிரமப்படி இந்த ஸ்கூலுக்குத் திறமையுள்ள பிரின்ஸிப்பலாகிய யூயிங்கு துரையவர்கள் நடத்துவார்களென்று நம்புகிறேன். அவருடைய சிந்தையும் சாமர்த்தியமும் நானறிவேன். வித்தியா தர்மங்கள் இப்படிப் பட்டனவாக இருக்கின்றமையால், 600 சிறுவர்கள் வரைக்கும் உபயோகமான கல்வியை எளிதில் அடைந்து அதனுல் மரியாதையான ஜீவனங்களேச் சம்பாதிக்கும்படி இருக்கிறதினுல், தர்மங்களுக்குள்ளே இதை முதலான தருமம் என்று சொல்லவேண்டும். அனேகர் இம்மாதிரியான பயனடைந்து பிறரும் தங்களேப்போல் ஆகும்படியான அளவிடக்கூடாத நன்மைகளேப் பெற்றிருக்கிருர்கள். இன்னும் இப்படி அனேக ஆயிரம்பேர் ஆகப் போகிருர்கள். ஆகி இந்தக் கல்வியினுல் உண்டாகும் பெரும் பயன்களே இந்து ராஜ்ஜியம் முழுவதும் வியாபிக்கச் செய்யப்போகிருர்கள்.

சிறப்படைய வேண்டுமென்று விரும்புகிற சாமர்த்தியமுள்ள பிள்ளேகளுக்குத் தைரியத்தை ஊட்டுவிக்கவேண்டிய தூண்டுகோல் இல்லாமற் போகவில்லே. மதராஸ் யூநிவர்ஸிற்றி என்னும் சகல

சாஸ்திரப் பள்ளிக்கூடத்து எல்லாப் பிரிவுகளிலும் பச்சையப்ப முதலியாருடைய தருமச் சம்பளம் ஏற்படுத்தி யிருக்கின்றது. அதைக்கொண்டு மிகுந்த எளியவனும் ஆதரவில்லாதவனும் படித்துக்கொண்டு பள்ளிக்கூடத்துப் பெருமைவகித்துச் சமஸ்தானத்தில் பெரிய உத்தியோகத்தையும் அடையத் தகுதியுடையவனுகலாம். இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவும் உங்கள் முகாந்தரமாக உண்டாகிய உற்சாகமான கோரிக்கைகள் அல்லவா? இத் தேசத்தாருடைய வித்தியாபிவிர்த்திக்கு வேண்டிய முகாந்தரங்கள் உறுதியானவைகளாகவும் நிலையானவைகளாகவு மிருக்கின்றன. இதனுல் உங்கள் எல்லோருக்கும் தேசாபிமானம் உண்டாயிருக்கின்றது.

திரஸ்டீஸ்களாகிய நீங்கள் பிரயாசை எடுத்துக்கொண்டது போல இத் தேசத்தார் நிமித்தமாக உபகாரஞ்செய்து மனச் சந்தோஷத்தோடு பிரயாசை எடுத்துக்கொண்டு மாருத செய்ந்நன்றி உணர்தற்குப் பாத்திரவான்களாகத் தக்கவர்கள் இல்லாமற் போகவில்லை. தர்ம காரியங்களுக்காக வைத்திருக்கப்பட்ட பணங்களை உங்கள் கையில் கொடுக்கவும் அதை நீங்கள் பரிபாலனம் பண்ணவும் பூர்த்தியான நம்பிக்கை உடையவர்களாய் இருக்கிறீர்கள் என்பது இந்தியா முழுவதிலும் இருக்கிற எல்லோருக்குந் தெரிந்திருக்கின்றது. எளியவர்களிடத்தில் நீங்கள் வைத்திருக்கிற தர்மசிந்தையைப் போல் அன்னிய பிரயோஜனமான முயற்சியுஞ் சத்தியத்தில் வைத்திருக்கிற சிரத்தையும் தெரியவருகின்றது. மேலும் தகுந்த உற்சாக மிருக்குமேயாகில் இதர தேசத்தாரைப்போலவே தங்கள் தேசத்தினிடத்தும் மகா அபிமான முண்டாயிருக்கும்.

இவ்விடத்தில் கூடியிருக்கிற பச்சையப்ப முதலியார் வித்தியார்த்திகளுக்குச் சில சொற்கள் சொல்லவேண்டுமென்று கோருகிறேன். ஆனுல் அவர்கள் என் சொல் கேட்கப்படாத அவ்வளவு தூரத்தில் இருக்கிருர்கள். ஆகையால், இங்குச் சமீபத்திலிருக்கிற நீங்கள் செய்துவரும் உபகாரத்தை யறிந்து அதற்குத் தகுதியாய் அவர்கள் நடந்துகொள்ளவேண்டுமென்றும், அவர்கள் செவ்வையாகப் படித்துக் கொண்டால் என்னைப்போல் அனேக அபிமான கர்த்தர்கள் அவர்களுக்குக் கிடைப்பார்களென்றும் நான் கோருகிறதாக நீங்கள் சொல்லவேண்டும். பச்சையப்ப முதலியார் வித்தியார்த்திகளுக்குள்ளே மிகவும் சிறந்த ஒருவர் எழுதிய பத்திரிகை

யைப் படித்ததை நான் சந்தோஷத்தோடு கேட்டேன். அந்தச் சிறுவர் எழுதிய அபிப்பிராயங்கள் அவருக்கு ஒப்பான பள்ளிக் கூடத்து வித்தியார்த்திகள் கவனிக்கத் தக்கவையாயிருக்கின்றன.

ஆனால் இன்றையதினஞ் செய்த சிறப்பின் வரிசைக் கிரமங்களுள் நம்முடைய கிருபையுள்ள ராணியாகிய விக்டோரியாவினிடத்தில் வைத்திருக்கிற இத்தேசத்துக் குடி மரியாதையாகிய அன்புக்கும், இந்த ராஜ்ஜியத்தில் பிரிட்டிஷ் துரைத்தன ஏற்பாடுகளிடத்தில் வைத்திருக்கிற விசுவாசத்துக்கும் அடையாளமாக நீங்கள் செய்த மரியாதைகளைக்காட்டிலும் வேறொன்றும் எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்திருக்கமாட்டாது. இப்படிப்பட்ட குணங்களை உங்களிடத்தில் நான் தூண்டுவிக்க வேண்டுமென்று எனக்கு எப்போதும் இச்சையுண்டு. இப்படிப்பட்ட இச்சைகள் துரைத்தனத்தார் பெருமைக்கும் இயல்பாகவே இருக்கவேண்டுவதென நான் யோசிக்கின்றேன்; அன்றியும், இந்தப் பெரியதேசத்தினுடைய செல்வம் ஓங்கச்செய்ய உதவுமென்றும் எண்ணுகிறேன்.

இன்றையதினம் நடந்த மகோற்சவத்தைக் குறித்துக் கொஞ்சம் சொல்லப்போகிறேன். அப்படிச் சொல்லுவதற்கு முன்னமே இந்த ஸ்தானத்தில் கட்டப்போகிற மகா உசிதமான கட்டடத்துக்காகப் பிளான் போட்டுக்கொடுத்த கேப்டன் லட்லோ துரையவர்களுக்கு நீங்கள் மிகவும் பாத்தியப்பட்டவர்களா யிருக்கிறீர்களென்று நான் தெரியப்படுத்துகிறேன். இவர் சொந்த உத்தியோக அலுவலில் மிகவும் பிரவேசித்திருந்த போதிலும், இந்தக் கட்டடத்தைச் சேர்ந்த விவரங்களில் சாஸ்திரோக்தமான ஆலோசனைகளைச் சொல்லி யிருக்கின்றார். இந்த ஸ்தாபித ஏற்பாட்டின் பெருமைக்குத் தகுதியாகவே முடியுமென்று எண்ணுகிறேன். இது நெடுங்காலம் நிலையா யிருந்து, கடைசிக் காலத்திலிருக்கிற சந்ததியார் தங்கள் நாளையில் இந்தத் தேசத்தில் விர்த்தியாயிருக்குங் கல்வி முதலிய நன்மைகளைப் பார்த்து, இவையெல்லாம் பச்சையப்ப முதலியார் தர்ம வித்தியாசாலையால் உண்டாகிய பிரயோஜனம் என்று நினைப்பதற்கு ஓர் அடையாளமா யிருக்குமென்று நம்புகிறேன். ஆகையினாலே, இந்தத் தர்ம வித்தியாசாலைக்குத் தலைவராகிய சீனிவாச பிள்ளை யவர்கள் பேராலும், மற்றக் கண்ணியவான்களுடைய பேராலும் பச்சை

யப்ப முதலியாருடைய பேர் என்றைக்கும் அழியாதிருக்கும்படி இத்தேசத்து ஜனங்களுக்கு உபயோகமாகத்தக்கதாக இந்தக் கட்டடத்தை நான் சமர்ப்பிக்கிறேன்.

இந்தத் துரையவர்கள் கோரியபடியே ஈசுவரனுங் கிருபை செய்ய, நூதனமாக இந்தத் தேசத்துக்கு வந்தவர்களும் பச்சையப்ப முதலியாரை யறிவதற்கும், அவர் பேரால் பட்டணத்திலுண்டாயிருக்கின்ற ஒரு பெரிய பாடசாலையின் காரியங்களை நடத்துவதற்கும், ஆயிரம் பேராகிலும் உள்ளடங்கி அதில் நடப்பதை எல்லோரும் மறைப்பில்லாமற் சமமாய்ப் பார்ப்பதற்குங் கேட்பதற்கும் இப்படிக் கொத்தது இப்பட்டணத்துக்கு இல்லாமலிருந்த குறைவு நீங்குவதற்கும் அனுகூலமாய், வேலைசெய்த சனங்களுக்கு ஒரு வித அபாயமும் நேரிடாமல் மூன்றரை வருஷத்துக் குள்ளாகவே நிறைவேறிய இந்தக் கட்டடமானது பூமிக்குள் அஸ்திவாரம் சாதி அடியால் 20-அடி ஆழமும், 8-முதல் 16-அடி வரையில் சுவர்க் கனமும், பூமி மட்டத்துக்கு மேல் அடியில் $4\frac{3}{4}$-முதல் நுனியில் 3-அடி வரையில் சுவர்க்கனமும், முதல் அந்தஸ்து 16-அடி உயரமும், உள்ளளவு தெற்கு வடக்கு 65-அடி நீளமும், கிழக்கு மேற்கு 45-அடி அகலமு முடையதாய், மத்தியில் தூண்கள் வளைவுகள் ஒன்றும் இல்லாமல் இருப்புக் கைகள் வைத்து இவைகளுக்கு மேல் யூரோப் சிலேட்டுப் பலகைகளால் மூடப்பட்டுச் சாசுவதமாய் இத்தேசத்தில் இதற்கு ஒப்பில்லை யென்றுசொல்லத்தக்கதாக முதலியார் பெயரையே தன் பெயராகக் கொண்டிருக்கும் 'பச்சையப்பாஸ் ஹால் என்னும் ஒரு மாளிகையும், அதற்கருகில் 600 சிறுவர்கள் வாசிக்கும்படியாய் 12-அறைகளும், பிராந்தாக்களுமாக வகுத்திருக்கும் மூன்று அந்தஸ்துகளையுடைய ஒரு பாடசாலையும் உள்ளன: இவற்றின் கிருகப் பிரவேசத்தில் நடந்த சம்பிரமமாவது :

1850-ஹு மார்ச்சிமீ 20உ-யில் கவுன்ஸிலர்களும், கமான்றர்-இன்-சீப் முதலாகிய அனேக ஸிவில் மிலிட்டரி துரைகளுந் துரைசானிகளும், இப்பட்டணத்து ஸாவுகாரர்களும், பெரிய மனுஷர்களும், ஆயிரம்பேருக்கு அதிகமாய்ச் சூழ்ந்துவரத் தக்கதாக இத்தேசத்துக் கவர்னராகிய ஸர் ஹேன்றி பாட்டிஞ்சர் மெத்தையின் மேலே போய் இந்த ஹாலின் கதவைக் கையால் திறந்து உள்ளே

பிரவேசிக்கும்போது ஜயத் தொனியிட்டு எல்லோருங் கைதட்ட இங்கிலீஷ் தேசத்தார் கீதங்களைப் பாடினபின் கவர்னரவர்கள் அக் கிராசனத்தில் வீற்றிருந்தார். இந்தக் கட்டடத்தின் கிரமத்தை யெழுதிக்கொண்டு வந்து இஞ்சினீர் கேப்டன் இச்சன்சன் படித்தார். இந்த மாளிகையின் உபயோகத்தையும், வித்தையினால் வரும் பலனை யும், அதற்குத்தகுந்த முயற்சிகளைத் தேச ஜனங்கள் அக்கறையாகச் செய்யவேண்டுமென்பதையுங் குறித்து அப்பொழுது சேர்ந்திருந்தவர்கள் அனைவருங் கேட்டுக் களிக்கும்படி அதிகமான வல்லமையோடு விரிவாக ஜார்ஜ் நாட்டன் துரையவர்கள் இங்கிலீஷ் பாஷையில் பிரசங்கித்தவை தமிழில் மொழி பெயர்த்து இதிற் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

அப்போது அக்கிராசனுதிபதியாய் இருந்த
கவர்னர் ஸர் ஹேன்ரி பாட்டிஞ்சர் துரையவர்களை நோக்கி

ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள்

சொல்லியது.

மகாகனம் பொருந்திய ஐயா,

இந்த்த் தேசத்தார் பெரிய சமூகமாகக் கூடிய இந்தக் காலத்தில் எல்லோருங் கேட்டுக் கிரகிக்கும்படி இந்த மகோற்சவத்திற்குத் தகுதியான கல்வி விஷயமாய் ஒரு பிரசங்கஞ்செய்ய என்னைக் கேட்டுக் கொண்டார்க ளாகையால், நாமெல்லோருஞ் சமமாக விரும்புகிற வித்தியாப்பியாச விஷயத்தில் பயன்பட வேண்டும் என்கிற இந்தத் தேசத்தாருடைய இஷ்டத்தை நான் மனப்பூர்வகமாய் ஒத்துக்கொள்ளுகிறேன். நான் இந்தக் கல்வி நிமித்தமாக வெகு நாள் பிரயாசை எடுத்துக்கொண்டு ஞாபகத்தை யெல்லாஞ் செலுத்தினவனுனபோதிலும், இப்போது இவர்கள் எனக்கு நியமித்த வேலையைத் தெளிவாக விவரித்துச் சொல்லப் பாத்திரவான் அல்லனு யிருப்பது எனக்கு முக்கியமான சங்கடமாயிருக்கின்றது. ஆகிலும், நான் சொல்லப்போகிற சங்கதிகள் உலக வழக்கத்துக்கும், உபயோகத்துக்குந் தகுதியாக இருக்கும் என்றும், புத்திமான்களாயும், படித்தவர்களாயும், பூரணமான கல்வியை அடைந்த சிறுவர்களாயும் இராநின்ற எல்லோராலுந் தெளிவாய் உணரப்படும் என்றும் நான் நம்பும்படியான தைரியங் கொள்ளுகிறேன்.

கல்வியின் உபயோகம் இப்படிப்பட்டது என்றும், அதன் பயன் இவ்வளவு என்றும் அறிந்து கொள்வதே அதை விர்த்திசெய்வதற்கு உண்மையான ஆதாரமாயிருந்த போதிலும், அக்கல்வியினுடைய எதார்த்த பாவத்தையும் முடிவையும் யோசித்துணர்ந்தவர்கள் மிகுதியாக என்முன் இருக்கிறதாய்க் காணப்படவில்லை. கல்விப் பொருள் இப்படிப்பட்டது என்றும், அதன் பயன் இவ்வளவு என்றும் நுட்பமாகத் தெரிந்து கொள்ளாவிட்டால் அதனிடத்தில் ஊற்றமும் மனப்பூர்த்தியான முயற்சியும் உண்டாகமாட்டா. நாம்

பூர்த்தியாகத் தெரிந்துகொள்ளாத விஷயத்தில் சந்தோஷம் அடைய மாட்டோம். கல்வி, சாஸ்திர முதலியவைகளை விர்த்தி செய்வதினால் இத் தேசத்தாருடைய செல்வத்தை உயர்த்தும்பொருட்டு இத் தேசத்தில் தனவான்களாயும், பிரபலர்களாயும் இருப்பவர்களுடைய கூட்டுறவை நாம் விரும்புவோமாகில், இது காரியத்தில் அவர்களுடைய இஷ்டத்தைப் பெற்றுக்கொள்ள முந்திப் பிரயத்தனஞ் செய்யவேண்டும். இப்படிக்கொத்த அபிப்பிராயத்தினால் கல்வியைக் குறித்துச் சொல்லவேண்டிய பிரசங்கத்தில் விவரமான சங்கதிகளை யெல்லாம் ஒழித்துவிட்டு அதன் முக்கிய தாற்பரியம் இன்னதென்றும் அதனாலுண்டாகும் பயன் இப்படிப்பட்டதென்றும் நான் சுருக்கமாகச் சொல்வேன்.

இந்தச் சபை கூடியிருக்கிற இடத்தைச் சுற்றிப் பார்ப்பீர்களானால், கல்விப்பயனாற் சிறந்ததாகவும், பெருமை பெற்றதாகவும் இருக்கிற ஒன்றைக் காணலாம். மேலும், இதோ உங்களுக்கு முன்னே உத்தரவாதமான அலுவலையும் அதிகாரமான தொழிலையுமுடைய சில புருஷர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய உத்தியோகத் தன்மை பிறரை நடத்தத்தக்கதும், அடக்கியாளத்தக்கதும், வெகு ஜன சவுக்கியத்தை விளைவிக்கத்தக்கதும், தேச நன்மைக்காக அனேகர்களைப் பிரயாசைப்படச் செய்யத்தக்கதுமா யிருக்கின்றது. அவர்களுடைய அனுபவம் சிறந்ததாகவும், இதரர்களுடைய அனுபவத்திற்கு வேறுபட்டதாகவும் இருக்கக் காண்பீர்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட நிலை எவ்வாறு கிடைத்தது என்று நீங்கள் பொறாமைப்படலாமானாலும், அவர்களுடைய தொழில்களில் நீங்கள் பழகி யிருக்கிறீர்களா, அல்லது அவைகளைக் கற்றுக்கொள்ளத் திறமை யுடையவர்களா யிருக்கிறீர்களா, அல்லது இனிமேல் பழகி வருவீர்களா, உண்மையாய் யோசித்துப் பாருங்கள். இந்தத் தேசத்தாருடைய அபேக்ஷைக்குத் தகுதியாய்க் கண்ணியமான சகல உத்தியோகங்களும் சிறந்த பெருமைகளும் முடிவில் நேரிடப் போகின்றன என்று உங்களுக்குக் காட்டத் தக்கவர்களில் நான் ஒருவன். ஆகிலும், இப்படிப்பட்ட உண்மையான பிரயோஜனமானது படிப்படியாகவே கிடைக்கவேண்டும். ஆனால், இது துரைத்தன ஒழுங்கையுந் தேசத்தாருடைய ஸ்திதியையும் அனுசரித்திருக்க வேண்டும்; யாவையினும் முக்கியமாய் உங்களுடைய கல்வித்

திறத்தையே அனுசரித்திருக்க வேண்டும். ஆதலால், இந்த விஷயத்தில் நீங்கள் மோசம் போகாதீர்கள்.

என்னைச் சூழ்ந்திருக்கின்ற யூரோப் தேசத்துக் கனவான்கள் கல்வியினால் அடைந்திருக்கிற பயன்களை நான் காட்டவேண்டுவதில்லை. இந்தச் சபையிலும், நீங்கள் நாள்தோறும் செய்து வரும் பழக்கத்திலும், இத்தேசத்தார்களில் அனேகர் நன்றாக வாசித்தவர்களையும் காண்கிறீர்கள். இவர்களில் வெகுபேர் சிறந்த கல்வியை அடைந்து பெருமைபெறத் தக்க மேன்மையான தொழில்களில் பிரவேசித்திருக்கிறார்கள். நான் கேள்விப்பட்டபடி, சுயமாயும், மகா சாமர்த்தியமாயும், சந்தோஷப்படத் தக்கதாயும் எழுதிய விண்ணப்பப் பத்திரிகை உங்களில் ஒருவனால் வாசிக்கப்பட்டதை நீங்களும் கேட்டீர்கள். இப்படி படித்தவர்களுக்கும் அவர்களைச் சூழ்ந்திருக்கிற படியாத பெரிய கூட்டத்திற்கும் உண்டாயிருக்கிற விவேக வித்தியாசத்தையும், சத்காலக்ஷேப பேதத்தையும், எண்ணத்தின் விகற்பங்களையும் நீங்கள் காணாமற் போக மாட்டீர்கள். எல்லாருக்கும் பொதுவாகிய சுபாவங்களையும் சாமர்த்தியங்களையும் கடவுள் கொடுத்திருப்பதைக் கண்டிருக்கிறீர்கள். மேலும், மனிதன் தன் அக்கிரமத்தினால் அவருடைய எத்தனங்களைத் தடுக்கலாமென்று நீங்கள் சொல்லக்கூடாது. பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் ஏற்பாடா யிருக்கிற சட்டத்தினால் நாம் எல்லோரும் தோழமையா யிருக்கின்ற குடிகளைப்போலே சமானமான சுதந்தரங்களைப் பெற்றிருக்கிறோம். எல்லாருடைய கல்வியையும் விவேகத்தையும் விர்த்தி செய்வதினாலே உயர்ந்த உத்தியோகத்துக்கும், ஒருமைப் பாடான வாழ்க்கைக்கும் வழிகாட்டுவது நம்முடைய துரைத்தனத்தாருடைய பிரபலமான எண்ணமா யிருக்கின்றது.

உற்சாகத்தை விளைவிக்கும்படியான இந்தச் சங்கதியைக் குறித்து இன்னும் விவரித்துச் சொல்ல எனக்கு இஷ்டமுண்டு. ஆனால், இப்போது ஒருவனைக் கல்வியானது மற்றொருவனினின்று இப்படி உயர்த்திக் காட்டுகின்றது என்றும், மேலும் அந்தக் கல்வி தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் வெகு ஜனங்களுக்கும் இப்படிப்பட்ட பிரயோஜனங்களைக் கொடுக்கிறது என்றும் விவரித்துச் சொல்வது என்னுடைய முக்கிய அலுவலா யிருக்கின்றது.

நமக்காவது, நம்மோடொத்த பிறப்பினர்க்காவது மிகவும் உபயோகம் உள்ளவைகளைக் கற்பது கல்வியின் நோக்கமாம். திறமையோடு பளுவை நிரவி எடுத்துக்கொண்டு போகிற ஒரு கூலிக்காரனை ஒரு விதத்தில் கற்றவன் என்று யோசிக்கவேண்டும். ஆனால், அவன் ஒரு உபாத்தியாயரைப் பார்த்து, இவர் வித்தியார்த்திகள் ஜீவனும் சத்துக்குச் சம்பாதித்துக் கொள்ளும்படியான உழைப்புகளை நன்றாகவும் நாளுக்கு நாள் மேலாகவும் கற்பித்துக் கொடுக்கிறார் என்றும், சௌக்கியத்துக்கும் செல்வத்துக்கும் முகாந்தரங்களைத் தேடிக் கொள்ளுவதற்கு உபயோகமான தொழில்களில் பிரவேசிக்கச் செய்யும்படி கற்பிக்கிறார் என்று மாத்திரமே பிசகாக நினைப்பான். ஆனால், எவ்வளவாவது நன்றாக யோசித்து விசாரணை செய்வார்களாகில், பள்ளிக்கூடங்கள் மேற்சொன்ன விஷயங்களைக் கற்பிப்பதற்கு மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டன அல்ல என்றும், கைத்தொழிலின் திறமையினும், ஆயுதத் தொழிலின் சாமர்த்தியத்தினும் வேறுபட்டிருக்கிற கல்வியின் முயற்சிக்காகவும் பயனுக்காகவும் ஸ்தாபிக்கப்பட்டன என்றும் தெரிந்து கொள்வார்கள். பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படுவது மேற்கண்ட தொழில்களை அனுசரித்திருக்க மாட்டாது. விவேகத்திறத்தை அனுசரிக்காமல் அற்பமான தொழில்களில் ஜீவனத்திற்குத் தேடிக்கொள்வதைவிட வேறொரு விதமும் தெரியாத ஒருவனை நாம் கற்றவன் என்று ஒருபோதுஞ் சொல்லக் கூடாது. மேலும், எல்லோரும் முன்னதாகக் கல்வியறிவை விர்த்தி செய்து கொள்ளாமல் கவனிக்கக் கூடாதனவாயும், பிரவேசிக்கக், கூடாதனவாயும் இருக்கிற சில தொழில்கள் உண்டென்றும், அப்படி முன்னதாகக் கற்றுக்கொண்ட விதத்தையும் அத் தொழில்களுக்கு நேரான சம்பந்த மில்லாததாகவும் இருக்கின்றதென்றும் நீங்கள் அறிந்து கொள்ளலாம். கல்வி என்னப்பட்ட சப்தத்தைத் தெளிவாகக் கண்டறியாமற் போனபோதிலும், அந்தக் கல்வியென்னும் சொல்லில் ஒரு விசேஷமான பொருளும் பயனும் இருக்கிறதாக எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியது. கல்வியின் முதற் பிரயோஜனம் விவேக சாமர்த்தியங்களைச் சாதகப்படுத்தி விர்த்தி செய்வதும், இரண்டாவது உறுதியான ஞானத்தை விளங்கச் செய்வதுமாய் இருக்கின்றது.

ஒருவன் உழவுத்தொழில் கற்றுக்கொள்வது போலவும், ஒரு கருணீகன் எழுதக் கற்றுக்கொள்வது போலவும், ஒரு சிறுவன்

பள்ளிக்கூடத்துக்குச் செல்வதன் முக்கிய நோக்கமானது அவனுக்கு உபயோகமுள்ளனவாயும் வழக்கத்துக்கு வேண்டியனவாயும் இராநின்றவைகளைக் கற்றுக்கொள்வதே என்பது எல்லாருடைய அபிப்பிராயமுமாய் இருக்கின்றது. நிலையானதாய்த் தற்காலத்திற்கு உபயோகமாய் இருக்கின்ற கல்வியை மாத்திரங் கற்பிப்பதுவே பள்ளிக்கூடத்துச் சிக்ஷையில் முக்கியமானதாய் இராமல், சிறுவர்களுக்கு அறிவின் திறத்தை விர்த்தி செய்வதும், பெரியவர்களாகும் போது செல்வமடைந்து நாகரிகமான வாழ்க்கையில் பிரபலப்படும் படி விவேக முயற்சியில் பழக்கப் படுத்துவதும் அதனுடைய முக்கிய நோக்கமாய் இருக்கின்றது.

ஒரு சிறுவன் அனேக கோடிகாலம் வருத்தப்பட்டு வாசித்த வித்தையினுடைய முக்கியமான அனந்தஞ் சங்கதிகளில், கொஞ்சம் மறக்கிறதும் ஒரு வேளை முழுதும் மறக்கிறதும் உண்டு. நுட்பமாக ஒன்றை யோசித்தறியவும் தெளிவான தர்க்க நியாயங்களை ஆழ்ந்து விசாரணை செய்யவும் வழக்கப்படுத்திக் கொண்டால் மறந்துபோவ தரிது. அவன் கற்ற இலக்கண விதிகளும், தேசங்கள் பட்டணங்கள் முதலானவைகளினுடைய இடங்களும், சரித்திரங்களின் தேதிகளும், இலக்கண நூலின் விவரங்களும் வழுவிப் போனபோதிலும், அவசியமான காலத்தில் அவைகள் ஞாபகத்திற்கு வந்து உபயோகப் படுவதும் அன்றி அவனுக்கு நேரிட்ட காரியங்களின் ஞாபகத்தைப் போலவும் மனதில் உறுதிப்பட்டிருக்கும். ஆதலால் ஒன்றை அறியும்படியான வல்லமையையும், உண்மையைக் கண்டறியத்தக்க முயற்சியையும், மேலுமேலுங் கற்றுக்கொள்ள வேண்டிய நிர்வாகத்தையும், ஒன்றைக் கண்டறியுஞ் சூட்சும புத்தியையும், முகாந்தரங்களை நிதானித்தறியுஞ் சக்தியையும், இன்னும் மனதிற்குண்டான சகலவித நற்குணங்களையும் நிரந்தரமாக விர்த்திசெய்து கொள்ளலாம். இதனால் ஒருவனுடைய மனது கல்விக்குத்தானே ஆதாரமாகின்றது ; அன்றியும் நிலைத்து நிற்கிற நீர்போல் அல்லாமல் தன்னிலே ஊறுகின்ற ஊற்றைப்போலாகின்றது. நிலையான கல்விப் பயிற்சிகளும், விவேகப் பழக்கங்களும் ஒருமைப் பட்டவைகளே. ஆகிலும், கல்வி மார்க்கத்தினால் விவேகங்கள் விர்த்தி அடைகின்றன என்பது யாவருக்குந் தெரியும். ஆனால் அப்படியல்லாமலும், சீக்கிரமாகக் கிரகிப்பதும், தெளிவாக நியாயம் உணர்தலும், நிதானமுள்ள

சிந்தனேயும், கல்வியின் யுக்தியான மார்க்கங்களால் விர்த்தி செய்யப் படலாம். ஆதலால், ஒரு சிறுவனுக்கு உலகப் பழக்கத்தினுல் வரும் அறிவைப் பார்க்கிலும் கல்விப் பழக்கத்தினுல் வரும் அறிவு கொஞ் சமா யிருந்தபோதிலும், அதனுலே மனேசக்தியாகிய முக்கியமான பயனே அடையலாம்.

தர்க்கம், கணக்கு, ஆத்மவிசாரணே, அளவின் விகற்பம், தொகை களின் விகற்பம், ஞாபகவிர்த்தி, விவேக விர்த்தி இரக்கமுடைய குணவிர்த்தி, சகல மனிதருக்குங் கடவுள் அளித்திருக்கின்ற நல் உணர்ச்சி முதலானவைகள் சரித்திரத்திலும், சாஸ்திரத்திலும், தத்துவத்திலும் உண்மையைக் காட்டமாட்டாவென்றும், உதவி யானதொழிலேக் கற்பிக்க மாட்டாவென்றும் நீங்கள் எண்ண வேண்டுவதில்லே. அப்படிக்கொத்த நூல்களில் அடங்கிய சங்கதிகள் உங்களுக்குத் தெரியவில்லே என்றே எண்ணவேண்டும்.

கணக்கு சகலவிதமான தொழில்களுக்கும் வர்த்தக வியாபாரங் களுக்கும் முக்கியமாய்வேண்டும். ஆனுல், இப்படியே க்ஷேத்திர கணிதத்தினுடைய பிரதம சிக்ஷையானது எஞ்சினீர் உத்தியோகஸ் தனுக்கு அவசியமாக வேண்டும். ஆனுல் அந்தக் கணக்கில் அதிகப் பழக்கமும் அவசரமாகச் சொல்லுதலும் உபயோகமில்லே. இந்த நூல் சில சாஸ்திரங்களுக்கு ஆதாரமும் அனேக சாஸ்திரங்களுக்கு முக்கிய பிரயோசனமுமானதாய் இருக்கின்றது. ஆனுல் அந்தக்ஷேத்திர கணித சாஸ்திரத்தைப் பூர்ணமாக அப்பியாசஞ் செய்திருக்கிறவர்கள் சிலர் உண்டோ இல்லேயோ, இந்த நூல் சில சாஸ்திரங்களோடு எவ்வளவும் சம்பந்தப் படவில்லே. இப்படிப்பட்ட நூலேப் படியாத அனேக பூர்ண வித்துவான்களும் இருக்கின்றுர்கள். அப்படியிருக்க, இப்படிப்பட்டதைக் கற்கவேண்டியது ஏன் என்றுல், இது உலக வழக்கத்திற்கும் இதர சாஸ்திரங்களுக்கும் எவ்வளவு உதவியாகலாம் என்பதைக் குறியாமல், இதையும் இதற் கொப்பான இன்னும் சில நூல்களேயும் படித்தால், எல்லோருக்கும் எப்போதும் அறிவுவிளங்கிக் கிரகிக்கிற தீக்ஷணிய புத்தியுண்டாகி நீதிவிசாரணே வல்லமை நிச்சயமாய் உறுதிப்பட்டுச் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் உண்டான வேறுபாட்டை அறியச் சீக்கிரத்தில் வல்லவர்களாகின்றேம்.

இப்படிப்பட்ட கல்வி அறிவினுல் ஒருவன் மற்ருெருவருனிற் சிறந்திருக்கிருன். விவேகமானது கல்வியை விர்த்தி செய்வதினுல் பெருமை யடையலாம். அந்தக் கல்வியின் உயர்வு தாழ்வு இவ்வள வென்று யோசிப்போமாகில், அது மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையில் இராநின்ற வித்தியாசத்துக்குச் சற்றேறக்குறைய நிகரா யிருக்கலாம். அப்படியே மனிதர் அறிவின் இயற்கையையும், அது பயன்படும்படி செலுத்தும் உறுதி மார்க்கத்தையுங் கற்பிக்கத்தக்க புத்தகங்களைப் படிப்பதும், கவி கற்பனைக் கதைகள் முதலானவை போல் நம்முடைய நானுவித இச்சைகளை விளைவிக்கும் வீணுன புத்தகங்களை வாசிப்பதும் நம்முடைய வாழ்க்கைக்கு உபயோகம் இல்லாதன ஆயினும், அப்படிப்பட்ட படிப்பினுல் உயர்ந்தோர் பிறரை அடக்கி நடத்தும்படி திறமை உள்ளவர்களாகின்ருர்கள். பலரும் தம்மை இச்சிக்கும்படியாகவும் எல்லோரும்அதிசயிக்கும்படி யாகவுஞ் செய்து கொள்ளுகிருர்களாதலால், பாலிய சிக்ஷை யினுடையமுக்கிய தன்மை எப்படி யிருக்கவேண்டுமென்ருல், லாப மானதொழில்களுக்குத் தற்காலத்தில் உடனே உபயோகப்படுகிற கல்வி சாஸ்திரங்களைக் கற்பிக்காமல் உலகத்தில் உயர்வாயும் கண்ணியமாயும் இராநின்ற தொழில்களுக்கு மனதை விர்த்திசெய்து விவேகத்தை உயர்த்தும்படி நாம் ஞாபகத்தில் வைக்கத்தக்கதாய் இருக்கவேண்டும். கல்வியாவது இப்படிப்பட்டது என்றும், அதனுல் கற்பிக்கப்படும் உறுதியான விவேகம் இத்தன்மை யுடையது என்றும் நான் எடுத்துச் சொல்லுகிறேன்.

சிறு பள்ளிக் கூடங்களிலுஞ் சர்வசாஸ்திர பள்ளிக்கூடங் களிலுஞ் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட சிக்ஷையானது ஜீவன அலுவல்களுக்குத் தற்கால உபயோகமானதாய் இராமற்போனபோதி லும், அவ்விடங்களில் அடையுங் கல்வி உண்மையானதும்,உப்யோக மானதும், மேலான சவுக்கியத்திற்கு ஆதாரமானதுமாய் இருக் கின்றது. மேலும், பள்ளிக்கூடங்களிலாவது மற்ற இடங்களிலாவது சிறுவர்களுக்கு அல்லது பெரியவர்களுக்குக் கற்பிக்கும் எல்லாக் கல்விகளிலும் அந்தந்தப் பாஷைகளின் முக்கிய கருத்தைச் சொல் விப்பது முதன்மையாயிருக்கின்றது. அப்படிச் சொல்விக்கவேண்டிய காரணம் விசிதமாயிருக்கலாம். பாஷைகள் இப்படிப்பட்டன என்று அறிந்தால் அது எல்லாக் கல்விகளுக்குந் திறவுகோலாயிருக்கும்.

மனிதருடைய இருதயத்தில் உண்டாகாநின்ற எண்ணங்களும் உணர்வுகளும் நீதிகாரணங்களும் பேசுகிற அல்லது எழுதுகிற அடையாளங்களினால் தெரியப்படுகின்றன அல்லவா? மேலும் பாஷையின் மூலமாக நாம் பிறரோடு சம்பாஷணை செய்யும்போது கடவுளால் சிருஷ்டியா யிருக்கப்பட்ட பொருள்களின் நிலைமையும் அவைகளை உபயோகப்படுத்திக்கொள்ளும் தந்திரப் முதலிய யாவுந், தெரியவருகின்றன. ஆதலால், பலமும் அர்த்தபுஷ்டியும் விஸ்தாரமான சொற்களுங் கூடிய ஒரு பாஷையைப் பூர்ணமாகக்கற்பது கல்வியில் சிறிது ஞானம் அடைய விரும்புகிறவர்களுக்கு முக்கியமாக வேண்டியது. மேலும் ஒரு பாஷையை எவ்வளவு கற்பிக்கின்றோமோ, அதை எவ்வளவு பலத்தோடு உபயோகப்படுத்துகின்றோமோ, அதற்குத் தகுதியாகவே உண்மையான அறிவின் மிகுதியும், நம்முடைய அறிவை யடக்கி யாளும்படியான வல்லமையும், பிறருடைய இஷ்டங்களை நம்முடைய வழிக்குத் திருப்பும்படியான சக்தியும் உண்டாகும். அவரவர்கள் கற்ற வித்தைகளினாலல்லது வேறு விதத்தினால் நாம் படித்தவர்களுக்கும் படியாத மூடருக்கும் இருக்கிற வித்தியாசங்களைத் தெளிவாகக் காட்டமுடியாது.

உலகத்தில் வழங்கி வருகின்ற நானாவித பாஷைகளிற் சில பாஷைகள் மாத்திரம் மற்றவைகளினும் மிகவுஞ் சிறந்தவைகளா யிருக்கின்றன. மேலே நான் எடுத்துக்காட்டிய எல்லாப் பாஷைகளினுடைய முடிவும் பயனும் முற்றும் உணரப்படாத பூர்ணம் உடையவைகளாயும் இருக்கின்றன. இதனால், நாம் சமஸ்தமான கல்விச் சாலைகளிலும் இரண்டொரு பாஷைகளை மாத்திரம் மிகுந்த உழைப்பெடுத்துக்கொண்டு கற்பிக்கவேண்டுங் காரணம் இன்னதென்று காணலாம். இந்தியா தேசத்தில் இங்கிலீஷ் பாஷையையுந் தேசபாஷைகளையுங் கற்பிக்க ஏற்பட்ட சிக்ஷை இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருப்பதுவே இதற்குப் போதுமான திருஷ்டாந்தம்.

உலகத்திற் சொல்லப்பட்ட பாஷைகளைப்போலவே இங்கிலீஷ் பாஷையும் ஸாஹித்தியத்திலுஞ் சாஸ்திரத்திலுந் தத்துவத்திலும் தக்கதா யிருக்கின்றது என்பது எல்லாருக்குந் தெரியும். ஆயினும், ஒருபொழுதும் யூரோப் கண்டத்தில் வழங்குகிற மற்றப் பாஷை

களினும் மேற்சொல்லிய விஷயங்களில் உயர்ந்ததாகச் சொல்லப்படாது. ஏனெனில், எந்த எண்ணத்தைக் கருதி ஓர் உயர்ந்த பாஷையைக் கற்பிக்கின்றார்களோ அதற்கு அது உதவி ஆகலாம். ஆனால் நாம் எல்லோரும் தோழமையான குடிகளாகையால் நாம் கீழ்ப்பட இருக்கிற ராஜாங்கத்தின் முக்கிய பாஷையாகிய இங்கிலீஷ் பாஷையானது எல்லோருக்கும் பொதுவான பாஷையாய் இருக்கின்றது. சிறந்த கல்விக்கு உண்டான சம்பூர்ணத்தை அடைய எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலமட்டும், இப்படிப்பட்ட வலுமையும் அர்த்த புஷ்டியும் நாகரிகமுள்ள பாஷையின் மூலமாகத் தேசபாஷைகளின் குறைவுகளை நிவிர்த்திக்கவேண்டும்.

கிழக்குத் திசையில் வழங்குகிற சகல தேசபாஷைகளும் அறிந்த யாராவது ஒரு நிமிஷ மாத்திரஞ் சிந்தித்துப் பார்ப்பார்களாகில், மேலே நான் சொன்ன பயன்களைத் தருவதற்கு ஏற்றதாயிருப்பது ஒரு பாஷையும் இல்லையென்று கண்டறியலாம். மனிதர்கள் எழுத்தினாலாவது, சொல்லினாலாவது தங்கள் மனதில் தோன்றியவைகளை வெளியிற் சொல்லுவதற்குமுன் ஓர் உறுதியான பாஷைக்கு முதற் கருவிகளாகிய நினைவுகளையும் அபிப்பிராயங்களையுங் கொள்ளவேண்டும். ஆதலால், யூரோப்தேசத்து நூல்களையும், சாஸ்திரங்களையும், தத்துவத்தையும் ஸாஹித்ய விவரங்களையும் தெளிவாக உணர்த்தும்படியாய் இத்தேச பாஷைகளில்வாசகநடையில் எழுதிய புத்தகங்கள் உண்டா? தக்க சொற்கள் அடங்கிய ஒரு பாஷையை இத் தேசத்தார்கள் கற்றுக்கொள்ளுகிறவரைக்கும் தங்கள் புத்தியில் நுழையாதவைகளும் எட்டாதவைகளும் ஆகிய சொற்களை எப்படிச் சேகரிக்கமாட்டுவார்கள். இத் தேசத்தார்களுக்குள் நன்றாகவும் விசிதமாகவும் வாசித்துணர்ந்த புத்திமான்களில் அனேகர் ஒன்றைச் சிந்திக்கும்போது இங்கிலீஷ் பாஷையில் யோசிக்கிறதாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். தங்கள் மனதில் தட்டுகிற யுக்திகளையெல்லாம் இத்தேச பாஷைகள் தெளிவாய்க் காட்டமாட்டா. மேலும் இந்தப் பாஷைகள் இங்கிலீஷ் பாஷையைப்போல் தோற்றிய யுக்திகளைத் தெளிவாக விவரிக்க மாட்டா. இங்கிலீஷிலும் இத்தேச பாஷைகளிலும் பூர்ணப் பிரக்ஞையடைந்த ஒரு பண்டிதன் இங்கிலீஷைத் தேச பாஷைகளில் மொழிபெயர்க்கும்போது, இந்தப் பாஷைகளில் தகுந்த சொற்கள் இல்லாமையால், வாக்கியங்கள் தோறும் மயங்கி

நிற்பான். ஒரு பாஷையிலுள்ள கருத்தும் அபிப்பிராயமும் மற்றொரு பாஷையிற் பேர்த்தெழுதும்போது தெளிவாகும்படி சுலபமான சொற்களைக்கொண்டு தெரிவிக்கவேண்டும். இங்கிலீஷ் ஜாதியில் நாகரிகம் இல்லாமல் மூடர்களாயிருந்த முன்னோர்கள் தாங்கள் கற்ற சுலபமான பாஷையும் நாகரிகம் இல்லாத வசனங்களும் போதும் என்று சும்மா இருந்துவிடுவார்களாகில், அதில் இப்போது கற்கிற சகல கலைகளுக்கும் அது வழியா யிருக்குமோ என்று யோசித்துப் பாருங்கள். இங்கிலீஷ் பாஷா சரித்திரத்தையும், அந்தப் பாஷை ஏற்பட்ட கிரமத்தையும் அறிந்த எல்லோரும் மேற்சொன்ன விதமா யிராமல் வேறுவிதமா யிருக்கக் காண்பார்கள்.

ஆகையினாலே, சுதேச பாஷைகளைக் கற்றுக்கொள்ளாமல் திரஸ்கரித்து நீக்கிவிடலாமோ என்றால், நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் செய்யவுங் கூடாது. நான் தேசபாஷாபிவிர்த்திக்கு உதவிசெய்கிறதில்லையென்று சிலர் எண்ணியிருப்பதற்குச் சரியாக இவ்விடத்தில் இருக்கிறவர்களில் ஒருவரும் என்னிடத்தில் அபவாதத்தை ஆரோபிக்காமலிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். நான் இப்போது தலைமையாயிருக்கிற வித்தியாசாலையில் தேசபாஷாபிவிர்த்திசெய்யவேண்டியதற்கு உபாயமான பங்கீடுகளை ஏற்படுத்த எனக்கு நல்ல ஆலோசனை சொல்லும்படியானவர்களோடு கூடி யோசிப்பதில் வெகுகாலம் போக்கினேன். அவைகளை விர்த்தி செய்ய வேண்டிய காரணம் என்னவெனில், இங்கிலீஷ் சாஸ்திராப்பியாசிகளினாலே அந்தப் பாஷை கற்கப்பட்டும், விர்த்தி செய்யப்பட்டும், விரிவாக்கப்பட்டும், சீர்திருத்தப்பட்டும், இருப்பதும் அன்றி அதில் அனேககிரந்த கர்த்தாக்களுடனே நாமும் சகாயமாய்க் கூடி இடைவிடாது விர்த்தி செய்துகொண்டு வருகிறோமாகையால் அதுபோலவே அந்தந்தத் தேசத்தார் அந்தந்தத் தேசத்துக்குரிய பாஷைகளை நுணுக்கமாக ஆராய்ந்து பூரணமாய் அறிய வேண்டியது. ஒரு தேச பாஷையை நீக்கிவிடப் பிரயத்தனஞ் செய்வது எவ்வளவும் நினைக்கக் கூடாத வேலையாயும், அயுக்தமானதாயும் இருக்கின்றதென்று எனக்குத் தெரியும். ஆகையால் அந்த பாஷையைக் கற்கவேண்டியது அவசியம் என்று நான் நிரம்பவும் உறுதியாகச் சொல்லுவேன்.

தேசபாஷைகளை விர்த்தி செய்யவேண்டியதற்கு நான் சொல்லும் உபாயத்திற்கும் இன்னும் மற்றவர்கள் சொல்லுகிறதற்கும் வித்தியாசம் இருக்கலாம் ஆனால், நான் சொல்லும் அபிப்பிராயம் மிகுந்த உறுதியானதாயிருக்கும். இத்தேசத்து உபாத்தியாயர்கள் சாதாரணமாக நடத்திவருகிற தேசபாஷையின் சிக்ஷையானது நியாயமாகத் தகுதியும் உபயோகமும் உள்ளதாய் இருக்கிறதாக எனக்குத் தோற்றவில்லை. அப்படிக் கற்பிக்கவின் பயன் எப்படிப்பட்டதோ அதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை. சொற்களையும் வாக்கியங்களையுஞ் சொல்லும் சித்திரத்திற்காக நான் அதிசயிக்கவில்லை. அவைகளைச் சொல்லிப் பிள்ளைகளைக் கலவரப்படுத்தும் உபாத்தியாயருடைய சாமர்த்தியத்தை நான் நம்பவும்மாட்டேன். ஒரு பாஷையின் பொருள்களைத் தெளிவான சொற்களைக்கொண்டு சொல்லாமல் மறைத்துக் காட்டுகிறவர்கள் பாஷையினுடைய பயனானது நாம் நினைக்கும் அபிப்பிராயங்களைத் தெளிவாகக் காட்டுவதற்குத்தான் என்று உணராதவர்களாயிருக்கவேண்டும். சிலநாளைக்கு முன் என் கைபளவு நீண்ட ஒரு சொல்லை நான் கண்டு அதை எழுதிய அவமதிக்கு அதிசயப்பட்டேன். தேச பாஷையையாவது மற்றப் பாஷையையாவது கற்பிக்கவேண்டிய முறை எப்படிப்பட்டது எனில், கலவரப்படுத்தாமலும் வருத்தப்படுத்தாமலும் ஒரு அருத்தத்தைத் தெளிவாகக்காட்டி உறுதிப்படுத்துவிக்கிற இலக்கண விதிகளைக்கொண்டு விவரித்துச் சொல்லிப் போதிக்க வேண்டும். தேசபாஷைகளைச் சாக்கிரதையோடு உழைத்துக் கற்பதினால் உண்டாகும் பயன்களை விஸ்தாரப்படுத்தி விர்த்தியடைகிறதற்குத் தகுதியாகப் பல மொழிகளைக்கொண்டு செழுமையாக்கி, இன்னும் அதிகமாகத் தெளிவுபடுத்திப் பொருள்வன்மை சொல்வன்மை உண்டாக்குவிக்கலாம். இப்படிப்பட்ட விஷயங்களை ஒரே காலத்திற் பெறுவதற்குக் கூடாது. தேசபாஷையோடு சில சிறந்த பாஷைகளையும் கற்பதினாலும், அவைகளிலுள்ள நல்ல பொருள்களைப் படிப்படியாகக் கீழ்த்திசைப் பாஷைகளுக்குள் கலக்கச் செய்வதினாலுமன்றி அது சிறப்படையமாட்டாது.

பள்ளிக்கூடங்களில் கற்பித்துக்கொண்டுவருகிற உபயோகமான கல்வியின் வேறு பிரிவுகளையும், அவைகளின் பிரயோசனத்தையுஞ் சொல்லுவேன். அவைகளில் சில எல்லோருக்கும் உபயோகமானவைகளாயிருக்கின்றன. அவை எவையென்னில், எழுதுந்திறமை

கணக்குக் கூட்டும் விரைவு, நல்ல தொனியோடும் உச்சரிப்போடும் பேசுந்திறமை என்றிவை. மேலும் முக்கியமாக நம்முடைய தேச சரித்திரமும், பூகோள சாஸ்திரமுங் கற்கவேண்டும். இதைக் கற்பதினால் நாம் இருக்கிற உலகம் இன்னவிதமா யிருக்கிறதென்றும், அதனுடைய கமனங்களை உண்டுபண்ணுகிற காரணம் இப்படிப் பட்டதென்றும், அதனுடைய தேசப்பிரிவுகள் துரைத்தனப் பிரிவுகள் எல்லைகள்முதலானவைகள் இவையென்றும் அறியலாம். இப்படிப் பட்ட படிப்புகள் ஜீவன அலுவல்களுக்குத் தற்காலம் வேண்டியவைகள் அல்லாத போதிலும், நம்முடைய சற்காலக்ஷேபமான சிந்தனைகளில் விருப்பத்தை உண்டு பண்ண மூலமாயிருக்கும். இன்னும் இன்னும் படிக்கவேண்டும் என்கிற ஞாபகமே ஓர் ஆனந்தமாயிருக்கும். இயற்கையை உணர்தலும், பொருள்களின் தத்துவங்களை ஆராய்ந்தறிதலும் மனத்திருப்தியை உண்டாக்குகின்றன. இந்தக் கல்விகளெல்லாம் உண்மையான பெருந்தன்மையையும், கண்ணியத்தையும், கல்விமான் என்கிற அழியாத கீர்த்தியையும் கொடுக்காநின்ற சாஸ்திர வித்தைகளைக் கற்கிறதற்கு வழி காட்டுகின்றன.

இப்போது நான் சொல்லிக்கொண்டுவந்த கல்வியினது அருத்தமும், முடிவும், பயனுஞ் சரியென்று உங்களில் யாராவது ஒப்புக்கொள்வீர்களாகில், பூர்த்தியாய்க் கற்றுணர்ந்த கல்விமானுக்கு உண்டாகிய நிசமான யோக்கியதையும் ஒப்புக்கொள்வீர்கள். அவன் தன்னுடைய கல்வியின் யோக்கியதைக்குத் தகுந்தபடி கவுரவத்தையும், இந்த விவேகமுள்ள துரைத்தனத்தாரிடத்தில் பெரிய உத்தியோகத்தையும் எதிர்பார்க்கலாம். ஆனால் அவன் எண்ணப்படியே நடக்குமா, எல்லாரும் யோக்கியதையைப் பற்றியே தயவுவைக்கிறார்களா, கல்விமான்களெல்லாருமே தனவான்களும் கனவான்களும் ஆகின்றார்களா, அப்படியிருக்கமாட்டாது என்று தெரியாமையால், பிறர் சொல்லுகிறதைக்கேட்டு நீங்கள் நம்பவேண்டாம். ஆகிலும் நான் சொல்லுகிற ஒரு நிசத்தை நீங்கள் மனதில் உறுதியாக எண்ண வேண்டும். அது எதுவென்றால் ,கல்வியின் திறமைக்குத் தகுந்தபடி உத்தியோக பிரபலத்தையுஞ் சிறந்த மதிப்பையும் அளவிளக்கூடாத காரிய சித்திகளையும் மற்றொரு விதத்தினாலே பெறக்கூடாத பிரயோசனங்களையும் ஒரு கல்விமான் சகசமாக அடைவதுமன்றி, மற்ற வெளிச் செல்வங்களினாலே யடையக்கூடாத பரிசுத்தமான ஆத்ம சவுக்கியங்களையும் அடைகிறான் என்று நீங்கள் அறியவேண்டும்.

கல்வியை விர்த்திசெய்ய வேண்டுமென்று நிசமாக விரும்புகிற வர்களும், விவேகசாலிகளா யிருக்கிறவர்களும், அந்தக் கல்வி அநேக நன்மைகளை உண்டுபண்ணுகிறதாகச் சொல்லும் பயன்களுள் முக்கியமாகச் சொல்லவேண்டியது ஒன்றுண்டு. அது யாதெனில், பகிரங்கமாயுண்டாகும் நன்மைகளேயல்லாமல் மனதிலுண்டா கும் இஷ்டங்களுஞ் சுகங்களுமாம். நன்றாக வாசித்தவன் ஆராய்ந்து பார்க்கும்போதெல்லாம் அவனுக்குத்தோற்றுகின்ற சலனமில்லாத மனோசந்துஷ்டிகளை நமக்கு யார் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லுவார்கள். சத்தியமாகவே அவன் தனக்கு ஒப்பான மனுஷ கணத்தோடு சகல சுபாசுபங்களையுஞ்சமுசார துக்கங்களையும் வியாதி களையும் உலகவியற்கையான இன்பதுன்பங்களையும் அனுபவிக்க வேண்டியிருந்தபோதினும், நாகரிக வாழ்க்கைக்கு இடுக்கண்களாகிய பெரியோரைப்பழிக்குங் குணமும், ஈடானவர்களை யிகழ்தலும், கீர்த்தி பெருமையில்லாமற் போதலும், வீண் எண்ணமும், மந்த புத்தியும், இன்னுஞ் சில இப்படிப்பட்ட துர்க்குணங்களும் அவனை அணுகா. பின்னும், சத்தியவானுஞ் சற்குணவானுமாய் இருப்பா னாகில் மேற்படி குணங்கள் நோக்கவே மாட்டா. எப்படிப்பட்ட சுக துக்கங்கள் நேரிட்டபோதிலும் கல்விமானானவன் தரித்திரம் வந்தபோது பொறுமையினையும் செல்வம் வந்தபோது சந்தோஷப் படும்படியான விவேகத்தையும் கைவிடமாட்டான்.

ஆனால் ஒரு கல்வியற்ற மூடனுக்கு இவ்வாறு நடந்துகொள்ளத் தெரியாது. கல்விமான் தான் இருக்கும் இடத்திலேயே சொற்ப செலவு செய்து வெளிச்செல்வங்களுக்கு எவ்வளவும்ஒப்பிடக்கூடாத செவிச்செல்வத்தைச் சம்பாதித்துக்கொள்வான். அவன் படித்த புத்தகங்களும், அவனுடைய அறிவும், சிந்திப்பும் அவனை இடை விடாமல் சூழ்ந்திருக்கும். இவைகள் அவன் போகிறஇடமெல்லாம் பின்சென்று வெளித்தேசங்களில் ஆனந்தமுண்டாக்கி, சுதேசத்தில் நல்வரவு கொண்டாடச்செய்யும். நித்திரைசெய்யப் போம்போது ஆனந்தத்தையும், விழித்துக் கொள்ளும்போது சந்தோஷத்தையும் விளைவிக்கும். இவைகள் அவனுக்கு ஓர்அங்கமாகின்றன. எவ்வளவு வெளிச்செல்வம் உடையவனானாலும்,மனோசம்பத்தை இழக்கத்தக்க எண்ணமுடைய கல்விமான் எவனாகிலும் உண்டா? இல்லை. பூர்வம் இருந்ததாகத் தெரியவருகிற முனிவர்களில் மகா ஞாதாக்களாய் இருந்த அதிக தரித்திரர்களும் பிறரிடத்திற் பெற்றுக்கொள்ளுங்

கேள்விகளினாலும், தாங்கள் தத்துவத்தை உணரும்பொருட்டுத் தனிமையான விசாரணைசெய்வதினாலும், ஏகாந்தமாகத் தாங்களே நிஷ்டை செய்துகொள்வதினாலும், மனித இயற்கைக்கு இயல்பாகிய அறிவுக்கு எட்டாத ஞானத்தையடைந்து, உலக சுகதுக்கங்களைக் குறித்து மனங்கலங்காமலும், அகாலமரணம் அநியாயமாகத் தங்கள் மேல்விதித்தபோதிலும் அப்படிப்பட்ட அந்த மரணாவஸ்தைக்குக் கூட மனஞ் சலியாமலும் அனுபவித்தார்கள் அல்லவா?

இவ்வாறு கல்வியினால் உண்டாகும் குணங்களையும் பயன்களை யும் சுருக்கமாகச்சொன்னேன். இத்தன்மையாகிய காரியங்களுக்கும் பயன்களுக்குமாகவே நாம் கூடியிருக்கிற பாடசாலை ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. இந்த வித்தியாசாலை ஓர் அளவுக்கு உட் பட்டதும் ஆரம்பசிக்ஷைக்குள் அடங்கியதுமாய இருந்தபோதிலும், இனிப் பிறகாலத்தில் இதனால உண்டாகப்போகிற பெரிய பிரயோஜனம் இப்படிப்பட்டதென்று யார் சொல்லக் கூடும்? இது யாருடைய உதவியை நோக்கியிருக்கின்றது? உபகாரமுள்ளகவர்ன மெண்டாரையும்நோக்கி யிருக்கவில்லை. இன்றையதினம் சிறப்பாகச் செய்த தர்மத்தையும் சார்ந்ததன்று. என்னைப்போல் பேசவரு கிறவர்களையும் சார்ந்திருக்கமாட்டாது. பின்னை எப்படி யென்றால், உங்களுக்கு வேண்டியவைகள் இப்படிப்பட்டவை யென்று நன்றாக அறிந்து அப்படி வேண்டியவைகளைச் சேகரித்துக்கொள்ள வேண்டுமென்கிற உறுதியான தீர்மானங்களையே நோக்கியதாய் இருக்கின்றது.

இந்த வித்தியாசாலைக்குள்ளாகச்சொல்விக்கும் ஆரம்ப சிக்ஷை அளவற்ற மதிப்புடையதா யிருந்தபோதிலும், இத்தேசத்திலுள்ள வெகுஜன உதவிக்காகவும் ஆதரவற்றவர்களுக்காகவும் நீங்கள் செய்துவரும் உபயோகமான கல்விப் பயிற்சியின் முயற்சியானது எவ்வளவு விஸ்தாரமானதா யிருந்தபோதிலும் இந்த மட்டில் தானே நீங்கள் சும்மா இருந்துவிடலாமென்று யோசிப்பது எனக்கு இஷ்ட மில்லை. கல்வியானது நாளுக்குநாள் விஸ்தாரமாய் வியாபிக்கவேண் டும். ஜீவாதாரமாகக் கற்றுக்கொண்ட சிறந்த கல்வியின் ஒவ்வொரு அம்சமும் ஆத்மாவுக்கு நிலையான இன்பத்தைக் கொடுக்கும். இவ்விடத்தில் உங்களுள் சிலர்செய்துவருகிற முகாந்தரத்தினாலே

வெகுபேர் கல்விச்செல்வத்தை யடைந்து, அதனால் தாங்கள் அடைந்த பிரயோசனங்களைப் பின்னாலே யுணர்ந்து, அதற்குக் கைம்மாறாகத்தாங்களும் இப்படிப்பட்ட உபகாரிகளாய்ச் சிரத்தை யுடன்கல்விப்பயிற்சிக்கு வேண்டிய தருமங்களைச்செய்பவர்களுக்குள் கலந்து கொள்வார்கள். இத் தேசத்தார் தங்களுக்கு நாகரிகமுஞ் செல்வமும் பெருகப் பெருக இவைகள் எந்தக் காரணத்தினால் உண்டாயின என்று தெளிவாய் அறிந்துகொள்வார்கள். அப்போது நீங்களும் உங்களுடைய பின்னோரும் இப்படிப்பட்ட அநேக வித்தியாசாலைகளை அபிமானித்து நடத்திவருவதில் உங்களுடைய நற்சிந்தைகளுந் திரவியங்களும் உதவியாகக் காண்பீர்கள்.

இப்போது இந்த வித்தியாசாலை யிருக்கிற கிரமமானது, நானூறு பிள்ளைகளுக்கு ஆரம்ப சிக்ஷை சொல்லுவிக்கப் போதாத வரும்படியுடைய ஒரு தருமப் பள்ளிக் கூடமாகத்தானிருக்கின்றது. இனி உத்தரோத்தரம் நாலாயிரம் பிள்ளைகள் படிக்கும்படியான பாட சாலைக்கு இதுவே பீடமாகலாம்.* இருபதினாயிரம் பிரஜைகள் அடங்கிய ஒரு செல்வமுள்ள இராஜதானிக்குத் தகுந்த விசாலமுடைய கட்டடமாகலாம். இப்படி எப்போதாகும்? தகுந்த காலம் வந்து ஒத்துக்கொண்டு, அந்தக் காலத்தில் உங்களுடைய நிஜப் பிரயோசனங்களைக் கண்டறிந்து அவைகள் நிமித்தமாகத் தகுந்த முயற்சி நீங்கள் செய்தாலல்லது வேறொன்றால் இத்தன்மையாகிய எண்ணங்கள் நிறைவேறுமோ? ஒருவன் எளியவனா யிருந்தபோதிலுந் தனிகனா யிருந்தபோதிலுந் தன் பிள்ளைகளும் பிள்ளைகளுக்குப் பிள்ளைகளுந் தன்னைக் காட்டிலுஞ் செல்வவான்களாவது கல்வியின் பலத்தினாலென்று தன் திருஷ்டிக்கு முன் நடக்கிற சில திருஷ்டாந்தங்களினாலே யறியலாம். அப்படியாக ஒன்றுக்குப் பத்து பலனாகப் போகிற நன்மைகளுக்குக் கொஞ்சம் பணம் உதவி செய்ய ஒருவனுக்கு மனமுண்டாகும். அப்படிப்பட்டவர்கள் இந்தப் பாடசாலைக்குள் தாராளமாக நுழையலாம். எவ்வளவு கொடுத்தாலும் பிரியமாயிருக்குப்படியான கல்விக்குக் கிஞ்சித்துச் சபளங் கொடுக்க

* இப்போது, சென்னையில் உள்ள கல்லூரியிலும் கல்விசசாலைகளிலும், காஞ்சிபுரம் சிதம்பரம் என்னும ஊர்களில் உள்ள கல்விச்சாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களின் தொகை நாலாயிரம் இருக்கும்.

—பதிப்பாளர்.]

வேண்டுமென்கிறதே யொழிய, இவ்விடத்தில் படிப்பவர்களுடைய தொகையைச் சுருக்கவும் இவ்விடத்தில் கற்பிக்கும் கல்வியைச் சூக்ஷ்மமாக்கவும் வேண்டுமென்கிற தில்லை.

ஆதலால், இந்தச் சிறந்த கட்டடம் விர்த்தியடைந்தாலும் அல்லது க்ஷீணம் அடைந்தாலும் அது உங்களைச் சார்ந்தது. உலகச் சரித்திரத்தில் இந்த மாளிகை யில்லாமற் போம்படியான காலம் எவ்வளவு சீக்கிரம் நேரிடுமோ, அதோடுகூட இந்தத் தரும ஏற்பாடு களும் அழிந்து போகுமோ என்னவோவென்று கவலை உண்டாயிருக் கிறது. அல்லது லோக சங்கார கால வரைக்கும் இருந்து முடிவிற் பொடியாய் நொறுங்கிப் போகலாமோ? இந்தக் கட்டடம் இப்போது இருக்கிறபடிக்கு இருந்து தேசத்தார் ஈனர்களாகி இதைக் காப்பாற்ற முடியாமற் போமோ? அல்லது தேசத்தார்கள் பெருமைக்கு உதவியாகிய சகல காரியங்களிலும் பிரபலப்பட்டு இந்தக் கட்டடம் போதாதென்று சொல்லும்படி நேரிடுமோ வென்னவோ? பிரிட்டிஷ் துரைத்தனத்திலே எந்த எண்ணத்தின்படி முடியுமோ? விதித்த காலம் வரும்போது இந்தக் கட்டடம் எந்தக் காரணத்துக்காகக் கட்டப்பட்டதோ அப்படிப்பட்ட கல்வி விஷயங்களை விஸ்தாரப் படுத்த உங்களுக்குப் பிற்காலத்தி லிருப்பவர்கள் இதன் அஸ்தி வாரத்தின் மேல் வேறொரு கட்டடங் கட்டப் பார்க்க நேரிடக்கடவ தாகுக. *

இப்போது நான் பேசிக்கொண்டிருக்கிற இடத்துக்கு அடியி லிருந்து நல்ல சுப லக்கினத்திலே என்னுடைய அபாத்திரமான

---

* ஜார்ஜ் நார்ட்டன் துரை விரும்பியபடியே, பச்சையப்பன் கலாசாலைக் கட்டடமானது, துரையவர்கள் காலத்திய கட்டடத்தோடு இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பின்புறத்தில் கட்டியுள்ள மூன்று அடுக்குக் கட்டடங்களும் சேர்ந்து இப்போது மிகப் பெரிதாய் விளங்குகின்றது. ஷை கலா சாலையில் ஸ்கூல் பைனல், இண்டர்மீடியேட், பீ. ஏ ஹானர்ஸ் என்னும் பரீக்ஷைகளுக்கு மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

அன்றியும், சேத்துப்பட்டில் ரெயிலுக்கு அருகிலும் ஆற்றுக்கு அருகிலும் அகன்றுள்ளதோர் இடத்தில் இருநூறு மாணவர்கள் உண்பதற்கும் தங்குவதற் கும் பயன்படும்படி பச்சையப்பாஸ் ஹாஸ்டல் என்னும் பெயரால் மிக அழகான ஊட்டிடம் (உண்பிக்கும் இடம்) ஏற்பட்டுள்ளது.

—பதிப்பாளர்.]

கையினாலே போடப்பட்ட அந்தக் கல்லு தோண்டி யெடுக்கப் பட்டு அதின் மேல் எழுதியிருக்கிற பிரார்த்தனை இப்படிக் கொத்த தென்று சொல்லி என்னுடைய பிரசங்கத்தை முடிக்கின்றேன். அது யாதெனில், இவ்விடத்தில் வைத்திருக்கப்பட்ட சாசனமானது ஒரு காலத்தில் மனிதருக்குத் தோற்றப்படுமாகில் அது அதிக நாகரிகமும் அன்னியோன்னிய வாழ்க்கையுஞ் சவுக்கியமு முடையவர்களாய்த்தாங்களும் அன்னியர்களுங் கலந்து சமாதானமா யிருக்கத்தக்கவர்களுக்குள் அகப்பட்டிருக்கக் கடவதாகுக என்பதே.

கவர்னரவர்களும் இந்தப் பிரசங்கத்தை ஒத்துக்கொண்டு இந்தக் கட்டடத்தின் பெருமைகளையும் இதை உபயோகிக்கும் பிரதம தினத்தில் தாம் வந்திருக்கும் படியான பாக்கியந் தமக்குக் கிடைத்த தென்பதையும் எடுத்துப் பேசித் திரஸ்டீஸ்கள் தருமங் களை நடத்துந் தன்மையினையும் சிறுவர்களைப் படிப்பிக்குங் கிரமத்தையும் புகழ்ந்து, அவர்களுக்கு விசேஷ சன்மானமும் பண்ணினார். இவைகள் விவரமாய் இத்தேசத்தின் நியூஸ் பேப்பர்களில்பிரசித்தப் பட்டிருக்கின்றன.

தஞ்சாவூர்த் தோல்ஜா மகாராஜா முன் முதலியார் நிற்கின்ற வடிவ மாயும், மத்தியில் சர்க்கில் தத்தாசி அப்பாவென்பவர் துபாசித்தனம் பண்ணுகிற முறைமையாகவும் முதலியார் உருவமுள்ள ஒரு சிறிய படமானது அந்த மாளிகையின் பாக்கிய வசத்தால் திரஸ்டீஸ்க ளுடைய கிருஷி முன்னிலையில் அகப்பட்டுச் சீமைக்கு அனுப்ப, அதைப் பார்த்து, பெரிய கடுக்கன், தோடா, ரத்தினமாலை யணிந்து நெட்டங்கியின் மேல் மஞ்சள் சாலுவை போர்த்துக்கொண்டிருக்கிற அலங்காரத்துடன் சில பர்வத சமீப ஆலயத்தின் முன்னிற்குந் திருக்கோலமாய் ஒரு சிறுவனுக்குக் கல்வியின் உபயோகத்தைத் தெரிவித்து அவனுக்கொரு புஸ்தகங் கொடுப்பதுபோலச்,

சுந்தர விலாசம் உள்ளதாக முதலியார் உருவம்

எழுதி வந்த ஆறடி உயரமும் நாலடிஅகலமும் உள்ள படத்தை மாளிகையிற் கட்ட, முதலியார் புகழ் எல்லாருடைய காதுக்கும் இன்பங் கொடுத்துக் கொண்டிருப்பது போல அம் மாளிகையும் அதற்குள் அவர் உருவமும் பார்க்கிறவர்களுடைய கண்களுக்கு இன்பங் கொடுக்கத் தக்கவைகளாய் இருக்கின்றன.

[ஜ்யார்ஜ் நார்ட்டன், சீனிவாச பிள்ளை, போலீஸ் ராகவாசாரியார் முதலியோர் உருவப்படங்கள் பச்சையப்பன் மண்டபத்தில் இப்போது உள்ளன. ஜார்ஜ் நார்ட்டன் துரைக்குப் பிறகு இந்த தர்மத்திற்காகப் பாடுபட்டவரும் அவர் குமாரருமாகிய ஜான் புரூஸ் நார்ட்டன் துரை படமும் இருக்கிறது.

மேலும், பிற்காலங்களில், பச்சையப்பன் தர்ம விசாரணைக் கர்த்தர்களே தங்கள் தருமங்களையும் நடத்தும்படி எழுதிவைத்த N. பொன்னம்பல பிள்ளை, S. விஜயராகவலு செட்டி, A. கோவிந்து நாய்க்கர், S. ஜெயராம செட்டி, G. லக்ஷ்மிநாசு செட்டி, P. T. செங்கல்வராய நாய்க்கர் ஆகிய இப்புண்ணியர்களின் படங்களும் பச்சையப்பன் மண்டபத்தில் உள்ளன.

பச்சையப்பன் கல்விச்சாலைக்குப் பல ஆண்டுகள் உழைத்த தலைமை ஆசிரியர்களாகிய E. B. பவல், B. லவரி என்னும் துரைகளின் படங்களும் உள்ளன. —பதிப்பாளர்].

IV

ஜன விநோதினி (IX-வால்யம்)

(i) மக்களுக்குச் செய்த நற்போதனை

அறிவும் விவேகமும் உலகவழக்கமும் மிகுதியாயுள்ள ஒருவன் தன் மரணத்தருவாயில் தன் மக்களுக்கு ஒருவகையாய் நற்புத்தி போதித்திருக்கின்றான்; அது யாவர்க்கும் நன்றாய்ப் புலப்படும்படி அடியில் ஒருவாறு சுருக்கிச் சொல்லுகிறோம்:

பிள்ளைகளே, நான் இனி நெடுநாள் பிழைத்திருக்கமாட்டேன் என்பது நிச்சயம். என் காலத்திற்குப் பிறகு நீங்கள் நல்லது செய்தால் அதைக் கண்டு களிப்பவருமில்லை; தீயது செய்தால் அதைக் கண்டு துக்கித்து உங்களை நல்வழியில் திருப்புவாருமில்லை. எப்படியாயினும் நீங்கள், 'ஒப்புர வொழுகு' என்கிறபடி, உலகவழக்கத்திற்கு ஒக்கவும், எம்பெருமான் திருவுள்ளம் உவக்கவும் நடந்து நல்லவர்களென்று பேர்பெற்று வாழவேண்டும் என்பது என் கொள்கை. ஆகையால், உங்களுக்கு இன்றியமையாதவையான சில நியாயங்களை இப்போது அறிவிக்கிறேன். இவற்றை நீங்கள் கவனமாய்க் கேட்டு, என்றும் மறவாமல் கருத்தில் தரித்து, அவற்றின்படி நடப்பீர்களானால், நீங்கள் ஆயுளளவும் ஒருகுறையுமின்றிச் சுகமாக வாழ்வீர்கள்.

எது பொய் என்று உங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறதோ, எது பொய்யா யிருக்கலாம் என்று உங்கள் புத்தியில் தோற்றுகிறதோ, அப்படிப் பட்டவைகளை மெய்யென்று சொல்லி ஒருபோதும் எடுத்துப் பேசக்கூடாது. பொய் சொல்வது கடவுளது கட்டளையை மீறி நடப்பதாம். கடவுள் நமக்கு வாயை அளித்திருப்பது உண்மை பேசவும் கடவுளை வாழ்த்தவுமேயல்லது, பொய்பேசவும் கண்டவரைத் திட்டவும் அன்று.

மேலும் பொய்யென்பது மனிதர் இயற்கைக்கே மிகவும் ஒவ்வாததாயிருக்கின்றது. ஏனெனில்,

வாய்மை, உண்மை, மெய்மை.

ஸத்தியத்தை உபேக்ஷைசெய்து பொய்யும் புரட்டுமாய் நடப்பவர்கள் ஒருபோதும் ஒருவர்க்கொருவர் ஒன்றி வாழமாட்டார்கள். மேலும், அதனால் பொய் பேசுகிறவனுக்கே தீமைகள் அநேகமாய் விளையும். பொய்பேசுவது, பேசுகிறவனுக்கு அந்தச் சமயத்தில் இகழ்ச்சி யுண்டாக்குகிறதென்பதுந் தவிர, அவன் மனதின் பெருமையைப்போக்கி, அதை ஈனமாக்கி, அவனைப் பின்பு ஒருகாலும் உண்மை உரைக்கத் திறமையற்றவனாயும், பொய்பேசச் சிறிதும் அவசரம் இல்லாதகாலத்திலுங்கூடப் பொய்பேசுவதைத் தவிர்க்கக் கூடாதவனாயும் ஆக்கிவிடுகின்றது. அப்படியிருந்து வரவரச் சில காலத்தில் இவன் வாயில் வருவதெல்லாம் பொய்ப்பேச்சென்று பிறர் நினைக்கும்படியாகவும், தான் சொல்வது பொய்யென்று தனக்கே தெரியாமலும் ஆகத்தக்க வழிக்கு அவன் வந்துவிடுவான்.

நீங்கள் பொய்பேசாதபடி கவனமாய் இருக்கவேண்டுமென்பது மாத்திரமேயல்ல; பொய்யென்பதை உங்கள் அருகிலேயே அண்டவொட்டக்கூடாது. நாம் ஒரு கருத்தாய்ப் பேசப் பிறர்க்கு வேறொரு பொருள்படத்தக்க பேச்சுகளும் பேசுவது கூடாது. ஊரார் பேச்சைக் கேட்டாவது, ஒருவிதமான ஊகையினாலாவது, நமது சொந்தக் கருத்தைக் கொண்டாவது, நாம் நேரில் கண்ணால் காணாத செய்திகளை இப்படித்தான் என்று சாதனை சாதிக்கவுங் கூடாது.

'மிகைபடச் சொல்லேல்' என்னும் ஔவை யுரையை முக்கியமாய் ஆதரித்து, நாம் வாய்விட்டு எப்போதும் அதிகமாய்ப் பேசாதிருக்க வேண்டும். நம்முடைய மேலோர்களாவது வேற்று மனிதர்களாவது வந்திருக்கிற காலங்களில் அதைக் கவனிக்க வேண்டுவது அவசியம். அப்படியின்றி வாய் ஓயாமல் வதறுவோமானால் நம்மிடத்திலுள்ள குறைவுகளெல்லாம் தாமே வெளிப்படும். நாம் அதிகப்பிரசங்கமாய்ப் பேசுவதைக்கேட்டு, வந்த விருந்தினர் வாயெடுத்துப்பேசாதிருந்து விடுவார்களாகையால், நாம் விசேஷமாய் விவேகமும் அறிவும் அனுபவமும் அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும்படி வாய்த்த நல்ல சமயமும் வீணாய்ப் போம்.

நாம் பேசுகிற தருணங்களில் மிதமிஞ்சின ஆவலும் அவசரமும் கூச்சலும் கொடுமையும் கொள்ளக்கூடாது. நியாயமாகிய கடிவாளத்தைக்கொண்டு எதிரிகளின் வாயைக் கட்டவேண்டுமேயன்றி, பெருங் கூச்சலிட்டு அவர் வாயை அடக்குவது கூடாது.

மற்றொருவன் பேசிக்கொண்டிருக்கும்போது இடையிடையே நாமும் போய் வாயிடக்கூடாது. அவன் முழுதும் பேசி முடிக்குமளவும் பொறுத்திருக்கவேண்டும். அப்படிப் பொறுத்திருப்போமானல் பிறருடைய கருத்தும் இப்படிப்பட்டதென்று தெளிவாய்த் தெரியும்; பிறகு அதற்கு ஏற்றபடி விடைகொடுக்கத் திறமையும் உண்டாகும்.

நாம் எது பேசினுலும் முதலில் ஆய்ந்தோய்ந்துபார்த்தே பேசவேண்டும். அதனுல் ஆகவேண்டிய காரியம் சிறந்ததாயிருக்குமானல் அதை முக்கியமாய்த் தீர விசாரித்தே பேசவேண்டும். நாம் பேசக்கருதிய கருத்தை நன்ருய் ஆராயவேண்டும். நன்ருய்ப் பிறர்க்குப் போதமாகத் தக்கனவாயும்,நாம் பேசுவதற்கேற்றனவாயும், பிறர்க்கு மனவருத்தமுண்டாக்காதனவாயும் இருக்கின்ற சொற்களையேஎடுத்துரைக்க முயலவேண்டும்.முன் யோசனையில்லாத மனிதர்கள் தாம் பேசுமளவும் பேசப்போவது இப்படிப்பட்டதென்று அதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்க மாட்டார்கள். வந்தபின் காப்பவன்போல், பேசின பிறகு சிந்திப்பவர்களும் அநேகருண்டு.

உலகத்தில் சிலர் வேளாளத்தொழிலில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள்; சிலர் தோட்டக்கால் பயிர் செய்வதில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள்; சிலர் பற்பல வித்தைகளிலும் சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். சம்பாஷணை செய்யும்போது, 'கேள்விமுயல்' என்று படித்ததை மறவாமல், நாம், எவரெவர்க்கு எந்தெந்த விஷயத்தில் பயிற்சியதிகமோ அதை நன்ருய் ஆய்ந்தறிந்து, அவரவர்களை அந்தந்த விஷயத்தைப்பற்றியே பேசச்செய்து, அவர் சொல்லுகிற விஷயங்களைக் கவனமாய்க்கேட்டுக் கருத்தில் ஊன்றச்செய்து ஏட்டிலுங் குறித்து வைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வோமானல், அவரவருடைய திறமையும் அறிவும் இவ்வளவென்பதை நன்ருய் அறிந்து கொள்ளலாம். நமக்கு அவசியமான பல சங்கதிகளும் சுலபமாய்த் தெரிந்துபோம்.

அறிவீனரும் அகந்தையுடையவரும் வீண்வாதஞ் செய்பவரு மான பலவித துஷ்டர்களோடு சந்திக்கும்படி எப்போதாவது ஒருகால் நேரிடுமானால், அப்போது அவர்களுடைய குற்றங்களுங் குறைகளும் நம்மிடத்தில் சிறிதும் அணுகாதபடி, நம்முடைய பேச்சையும் நடத்தையையும் கவனமாய்க் காத்துக்கொள்ளவேண்டும்.

யாராவது ஒரு புதுமனிதன் புதிதாய் ஒரு செய்தியைச் சொல்வானானால், அவன் உண்மையும் பெருமையும் கண்ணியமும் உள்ளவனென்று நமக்கு நன்றாய்த் தெரியுமளவும், துரிதப்பட்டு அவன் சொல்வதை நம்பி அதன்மேல் ஒருகாரியஞ்செய்ய முயலக்கூடாது. அவன் நமக்கு நன்றாய்ப் பழக்கமானவனாய் இருந்தாலொழிய நாம் எதிர்த்துரைக்கவுங்கூடாது. நமது கருத்தை வெளியிடவேண்டியதாய் அவசரம் நேரிடுமானால், அப்போது நாம், 'சுளிக்கச் சொல்லேல்' என்பதை நினைத்து, மிகவும் அடக்கமும் மரியாதையுமாய்ப் பேசவேண்டும்; துடுக்காய் அவசரப்பட்டுப் பேசக்கூடாது. அப்படிப் பயந்து நடப்போமானால் பிறருக்கும் மனவருத்தம் உண்டாகாது; நமக்கும் விவேகம் அற்றவன் என்று பலரால் நிந்தனைப் பேச்சு நேரிடாது.

நம்மிடத்திலுண்டாகும் பல குற்றங்களுள் தற்புகழ்ச்சி செய்துகொள்வது முக்கியமானது. யாராவது ஒருவன் தன் வாயைக்கொண்டே தன்னை விபப்பித்துக்கொள்வானானால், அந்தத் தற்புகழ்ச்சியே,

'பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து'

என்கிறபடி, அவன் பெருமை மிகவும் அற்பம் என்பதையும்,

'தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவது'

* * * *

என்கிறபடி தப்பித்தவறி நின்றிருக்கும் பெருமையும் துரிதத்தில் அழிந்துபோமென்பதையும் நன்றாய்க் குறிப்பிக்கும். அவன்

பெருமை போனாற்போகிறது; அதைக் கேட்டவருக்காவது அவனிடத்தில் சிறிது மதிப்பு உண்டாகுமோ? அதுவுமில்லை. அப்படிப்பட்ட தற்புகழ்ச்சியைக் கேட்கும்போதே பிறர்க்கு அருவருப்பும் மனவருத்தமும் உண்டாகும்.

ஒருவன் எதிரில் இல்லாத காலத்தில் அவனைப்பற்றிப் பேசத்தக்க தருணம் வாய்த்தால், அக்காலத்தில் நன்மைகளையே பேசவேண்டும். இந்தக்குற்றம் இன்னாரிடத்திலிருக்கிறதென்று நன்றாய்த் தெரிந்து, அதை வெளியிடுவதனால் அவனுக்குத் திருத்தமாவது பிறர்க்கொரு நன்மையாவது அவசியம் உண்டாகுமென்று தெளிவாய்த்தெரிந்தாலொழிய எவன் குற்றத்தையும் எடுத்துரைக்கலாகாது.

சாதாரணமாய்ப் பேசுகிற காலங்களில் ஆணை சத்தியம் சபதம் முதலியவைகள் வாயில் வரவொட்டாமல் தடுக்கவேண்டும். தெய்வச்செயலினால் உண்டான ஒருவனுடைய குறைவுகளைக்கண்டு ஏளனஞ்செய்து இகழ்ந்து பேசலாகாது. அப்படிச் செய்வதனால் அவர்களுக்கு உண்டாகும் மனத்துயரம் ஆயுளளவும் பற்றாமல் மனதை வருத்திக்கொண்டேயிருக்கும்.

'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.'

ஒருவனைக் கண்டு கோபித்துப் பேசுவதும் வெருட்டுவதும் திட்டுவதுமாகிய பொல்லாத் சொற்கள் நமது வாயிலிருந்து வரவொட்டாமல் வெகு கவனமாய்க் காக்கவேண்டும். நல்வசனம் நேசப்படுத்தும்; தீயவசனம் விரோதப்படுத்தும். இக்கருத்து கொண்டே 'நாவன்றோ நட்பறுக்கும்' என்றார் பெரியோர். ஒருவன் ஒரு நல்ல பேச்சு பேசி நல்ல நட்பைப் பெறுவது எவ்வளவு நலமாயிருக்கின்றது! இப்படி நயமாயே நட்ப பெற விரும்புவது நற்புத்தியின் பெருமை யல்லவா? ஒரு தீயசொல் சொல்லிப் பலரை விரோதப்படுத்திக் கொள்வதைவிடப் புத்திஈனம் வேறென்ன? அப்படித் தீயசொற் சொல்வதிற் பயன் ஏதாவதொன்றுண்டா? அதுவுமில்லை. ஒருவன் ஒரு குற்றஞ்செய்தால் அதைக் கண்டு எவனும் கண்டிக்கலாம்; எஜமானனாயிருப்பவன் அதைக் கண்டிக்கவேண்டுவது அவசியமே, ஆயினும், அதைக் கடுஞ்சொல்லும் கோபவார்த்தையுமில்

Sri Rengam

லாமல் இனிப்பாகவே பேசித்தடுக்கக்கூடாதோ? எதுவும் நல்ல தனத்தாலாவதுபோல் கெட்டதனத்தாலாகாது. நாம் ஒருவனைக் கோபித்துத் திட்டி ஒரு காரியத்தைச் சாதிக்க முயன்றால், அதனால் அவனுடைய தப்பிதம் திருந்தாமற்போவதுந்தவிர, அவனுக்கு இன்னம் கோபம் அதிகமாகி, அவன் தன்னைத்தண்டிக்கவந்தவனையே திருப்பிக்கொண்டு தண்டிக்கும்படியாகும்.

ஒருவன் கோபம் மிஞ்சினவனாகிக் கெட்டபேச்சு பேசுவனானால் அவனுடைய தன்மையைக்கண்டு நாம் பரிதாபப்பட வேண்டுமே யன்றி நாமும் பதிலாகக் கோபித்துக் கொள்ளக்கூடாது. நாம் அடங்கி வாயைத் திறவாமல் இருந்தாலும், அல்லது அடக்கமாய் இரண்டொரு வார்த்தைசொல்லி நின்றுவிட்டாலும், அதுவே அவனுக்கு மிகவும் ஏற்ற தண்டனையாம். அப்படி நாம் செய்வது ஒருவேளை அவனுடைய கோபகுணத்தை லகுப்படுத்தி, நாம் புத்தி யீனமாய்க் கோபித்தோமேயென்று அவனே பச்சாத்தாபப்படும்படி செய்தாலும் செய்யும். இல்லாவிட்டாலும் அவன் குற்றத்திற்கு ஏற்ற பரிகாரமும் தண்டனையும் ஆகுமென்பதற்குச் சந்தேகமே யில்லை.

ஒருவர்க்கு மானக்கேடான பேச்சுகளை ஒருபோதும் பேசக் கூடாது. பெரியோர் கொள்கைகளை எடுத்து ஏளனமாயுரைக்கக் கூடாது. எப்போதாவது ஒருகால் கடவுளுடைய திருநாமத்தை யாவது, வேத வசனங்களையாவது எடுத்துரைக்க வேண்டிய அவசரம் நேரிட்டால் அவைகளை மிகுந்த பயபக்தியோடும் பெருமை யோடும் எடுத்துக்காட்ட வேண்டுமே யன்றி அலக்ஷியமாய்ச் சொல்லலாகாது. அப்படிச் செய்தால் அது கடவுளையே பழித்தது போலாகும். 'தெய்வம் இகழேல்' என்பது உங்கள் கருத்தில் ஊன்றி யிருக்குமானால், நீங்கள் அப்படி ஒருபோதும் செய்யத் துணிய மாட்டீர்கள்.

இப்போது நான் சொன்னதெல்லாம் நீங்கள் இவ்வுலகில் நன்மையாய் நடப்பதற்கு வேண்டிய விதிகளில் நூற்றிலொரு பங்கு கூட ஆகவில்லை. முழுதுஞ் சொல்லி முடிப்பதென்றால் எவராலும் ஆகாது. மேலும் ஒருவர் கற்றுக்கொடுத்த வித்தையும் கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளைக்குத் தாங்கும்? ஆதலால், நான்

இதுவரையில் அவ்வப்போது உங்களுக்குச் சொல்லியிருக்கிற நீதிகளையும், இப்போது சொன்னவைகளையும் ஊன்றுகோலாகக் கொண்டு, உங்கள் புத்தியால் தீர விசாரித்துப் பார்த்து, எக்காலத்திலும் உங்களுக்குத் தவறு நேரிடாதபடி அந்தந்தத் தருணத்திற்கு நேர்ந்தபடி யுக்தி யாலோசனை செய்துகொண்டு சீராக நடப்பீர்களானால் உங்களுக்கு எந்நாளும் எக்குறையும் உண்டாகாது.

அவற்றுள் முக்கியமான சிலவற்றைக் கடைசியாய்க் குறிப்பிக்கிறேன். காலையும் மாலையும் தவறாமல் கடவுளைத் துதிக்கவேண்டும். 'ஆலயந் தொழுவது சாலவு நன்று' என்பதை மறவாமல், தக்க தருணங்களில் கோயிலுக்குப்போய்க் கடவுளைத் தொழவேண்டும். நமதுவாழ்க்கைக்கு உபயோகமான நல்ல தொழில்ஏதாவதொன்றை அவசியம் கைக்கொள்ளவேண்டும். நாம் ஒருபோதும் சோம்பேறியாய் இருக்கக்கூடாது.சோம்பேறித்தனமானது பாபத்திற்கிடமான பல வீண் எண்ணங்களையும் கெட்ட நினைவுகளையும் உண்டாக்கி, மனதைக் கெடுத்து, வாழ்க்கையைத் தாறுமாறாக்கும். ஒருவர்க்கொருவர் ஆசையும் அன்புமா யிருக்க வேண்டும். நம்முடைய மேலோர்களைக் கண்ணியப் படுத்தவேண்டும். வேலைக்காரர்களிடத்தில் சுடு மூஞ்சியும் கடுஞ்சொல்லுமா யிராமல், குளிர்ந்த முகமும் இனிய சொல்லுமாய் இருக்கவேண்டும். எல்லாரிடத்திலும் வணக்கமும் மரியாதையுமாகவே நடக்கவேண்டும்.

நான் உங்கள் எதிரில் இல்லாமற் போனாலும் இருப்பது போலவே பாவித்து, மிகவும் பய பக்தியோடு நடக்கவேண்டும். நீங்கள்செய்யும் காரியங்களைப் பார்க்க நான் இல்லாமற் போனாலும், உங்கள் வெளிக்காரியங்களை மாத்திரமே யல்லாமல் உள்ளத்தையும் உள்ளக் கருத்தையுங்கூடத் தீர அறிந்துகொண்டு, எக்காலத்திலும் எவ்விடத்திலும் உங்கள்மேலேயே கண்ணுய்ப் பெரிய தகப்பனார் ஒருவர் காத்துக்கொண்டிருக்கிறார் என்பது உங்கள் உள்ளத்தில் உறுதியா யிருக்கவேண்டும். என் வாழ் நாளில் நான் உங்களுக்குச் சொன்ன நற்போதனைகளையும் செய்த நன்மைகளையும் ஒரு நாளும் மறவாமல் என்னிடத்தில் நன்றியும் வணக்கமும் கீழ்ப்படிதலும் உடையவர்களாய், அந்தந்தக் காலங்களில் நான் செய்த நன்மைகளை நினைத்துப் பல முயற்சிகள் செய்து என்னிடத்தில் நீங்கள் பட்ட

கடனைக் கழித்துக்கொள்ளுங்கள். வீண் செலவு செய்யாமல் வெகு சீராய்க் குடித்தனஞ் செய்யவேண்டும். வீட்டுக்கு வேண்டிய பொருள்கள் ஒன்றுலொன்று குறையில்லாமல் சமிர்த்தியாய் நிறைந்திருக்கவேண்டும். 'ஐயம் இட்டுண்' என்கிறபடியே, இயன்ற மட்டும் இரப்போர்க்குப் பிச்சையிட்டு, 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்கிறபடி விருந்தாளிகளோடு விநோதயாய் உண்டு நல்லபடியே காலத்தைக் கழியுங்கள்.

எப்போதும் கடவுளிடத்தில் பயமும் பக்தியும் வணக்கமும் உங்கள் மனத்தில் குடிகொண்டிருக்கும்படியாகவும், அப்படி அவர்க்கு ஊழியஞ் செய்வதனுல் உண்டாகும் நன்மை இப்படிப்பட்டதென்று உங்களுக்கு நன்ருய்த் தெரியும்படியாகவும், அவருடைய தயவும் ஆசீர்வாதமும் தோற்றமும் உங்களைவிட்டு நீங்காமலிருக்கும்படியாகவும் செய்யவேண்டும் என்று நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். இந்தக் கிழவன் ஏதோ சொன்னுன் என்று என் சொல்லை அலக்ஷியஞ் செய்து தான்தோன்றியாய்த் திரியாதேயுங்கள். 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்றும், 'மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்' என்றும் பூரணமாய் நம்பிச் செம்மையாய் நடந்து சீராக வாழ்ந்திருங்கள்.

(ii)

பட்டுப் பூச்சி

சாதாரணமாய் நமது பார்வைக்கு மிகவும் அற்பமானவைகளாய்த் தோன்றுகிற பிராணிகள் வெகு சிறந்தவையாகத்தோன்றுகின்றவைகளைவிட விசேஷமாய் உபயோகப்படுகின்றன வென்பது அநேகர்க்கு அநுபவத்தினுல் தெரிந்திருக்கலாம். முதலில் சாம்பல் நிறமான ஒரு புழுவாயிருந்து பிறகு ஒரு சிறு பூச்சியாக மாறும் பட்டுப் பூச்சியைப் பார்த்தவர்கள், வெகு அழகாய் வெயிலில் பறந்துகொண்டு திரிகிற வண்ணரப்பூச்சி, தோட்டத்துச் செடிகளை அரிக்கிற கம்பளிப்பூச்சி வகையைச்சேர்ந்த பூச்சிகள் இவைகளுக்கு,ஒருபோதும் அழகில் பட்டுப்பூச்சி ஈடாகாதென்றுநன்ருய்ச் சொல்வார்கள். ஆயினும் வண்ணரப்பூச்சி நமது கண்ணுக்கு மாத்திரம் பகட்டே யொழியக் காரியத்தில் ஒன்றுமில்லை. கம்பளிப்பூச்சி வகைகள் கண்ணுக்கு எவ்வளவு அழகாய்த் தோன்றினுலும், அவை செய்கிற தீமைகளைப் பார்த்து அவற்றைக் கொல்வதற்கு நாம் அதிக ஆவல் கொள்ளும்படி அவ்வளவு கொடியவைகளாயிருக்கின்றன. இவையெல்லாம் இப்படியிருக்க, பட்டுப்பூச்சியானது சிறந்த கனவான்களும் பிரபுக்களும் தரிக்கத்தக்க உயர்ந்த ஆடைகள் நெய்வதற்கேற்ற நூல்களை நூற்றுக் கொடுக்கிறதென்ருல், அதற்கு இதைவிடப் பெருமை வேறென்ன ! பட்டுப்பூச்சியானது கம்பளிப்பூச்சி வர்க்கத்திற் சேர்ந்த ஒரு ஜந்து. இந்தப் பூச்சியொன்று செய்கிற நன்மை அதன் இனத்தைச்சேர்ந்த ஜந்துக்கள் அனைத்தாலும் செய்யப்படுகிற தீமைகளுக்கெல்லாம் ஈடா யிருக்கின்றது. தனக்குத்தானே வருந்தி வேலை செய்கிற இந்தச் சிறு ஜந்து முக்கியமாய் மனிதர்களுடைய உதவிக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜந்து உண்டாக்கிக் கொடுக்கின்ற உடையைப் போலச் சிறந்த உடை உலகத்தில் வேறெந்த ஜந்துவும் உண்டாக்குகிறதில்லை. இவ்வாறு இந்தச் சிறந்த உடைகள் உண்டாவது

தவறிப்போமாயின், பிறகு அந்தக் குறையைத் தீர்க்க எந்த முயற்சியாலேதான் முடியும்?

ஆதியில் பட்டு உற்பத்தியானதும் ஆடைகளாக நெய்யப்பட்டதும் சீனு தேசத்திலே யென்று தோன்றுகிறது. அக்காலத்தில் பட்டு ஐரோப்பாவில் வெகு அருமையாயிருந்தது. கொஞ்சம் ரோமாபுரிக்குக் கொண்டு போகப்பட்டதென்றாலும் அது பொன் நிறையாய் நிறுத்து விற்கும்படியா யிருந்தது. எவனாவது ஒருவன் கொஞ்சநஞ்சம் பட்டுக்கலந்த போர்வை போர்த்துக்கொண்டு வெளிப்படுவானுனல், வீண் டம்பக்காரனென்று அவனை இகழ்வார்கள். அப்பட்டணத்து அரசன் கூடத் தன் மனையாளுக்கு ஒரு பட்டாடை வாங்கிக்கொடுக்க மயங்கினுனென்றால், அதன் அருமையைப் பற்றி வேறு என்ன சொல்லவேண்டும்! அக்காலத்தில் பாரசீக தேசத்தில்கூடப் பட்டென்பது இப்படிப்பட்டதென்று தெரியாது.

பட்டு ஒரு சிறிய பூச்சியினுல் உண்டாக்கப்பட்ட பொருளென்பது தெரிவதற்கு முன்னமே ஐரோப்பியர் வெகுகாலமாய் பட்டுடைகள் மட்டும் உடுத்திக்கொண்டிருந்தார்கள். ரோமானியருக்குக் கூடக் கிறிஸ்து பிறந்த ஆறும் நூற்றுண்டு வரையில் பட்டுப் பூச்சியின் வரலாறு தெரியாது. பன்னிரண்டாம் நூற்றுண்டு வரையில் பட்டுப்பூச்சி ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகப் படவில்லை யென்கிறுர்கள். பிறகுதான் இரண்டு சந்நியாசிகள் சில பட்டுப்பூச்சிகளை ஒரு தடிக்குள் போட்டு மறைத்துக்கொண்டு சீனுவிலிருந்து ஐரோப்பாவிற்குக் கொண்டு போனுர்கள். பின்பு ஸிஸிலியின் அரசரான ஒருவர் சிற்றுசியாவிலிருந்து பட்டு வேலையிற் கைதேர்ந்த வேலைக்காரரை வரவழைத்து அந்த வியாபாரத்தைத் தம் தேசத்தில் விருத்தி செய்தார். அவ்விடத்திலிருந்துதான் ஐரோப்பாவின் மற்றத்தேசங்களிலெல்லாம் பட்டு வியாபாரம் பரவினது. இப்போது ஐரோப்பாவின் தென் தேசங்களில் விசேஷ லாபம் உண்டாக்குகிற வர்த்தகப் பொருள்களுள் பட்டும் ஒன்றுயிருக்கின்றது.

பட்டுப்பூச்சியானது பன்னிரண்டு காலும் சாம்பல் நிறமுமுள்ள ஒரு பூச்சி யென்று இப்போது எங்கும் பிரசித்தமாய்த் தெரியும். அது பெரிய பூச்சியாகி ரக்கை முளைத்து வெளியே பறக்கும்படியான காலம் வருமளவும் அந்தப்பூச்சி பட்டினுல் ஒரு கூடுகட்டிக்

கொண்டு அதனுள் வசித்துக் கொண்டிருக்கும். அந்தக் கூட்டினுள் மெல்லிய அழகான நூலிழைகள் பலவற்றை ஒன்றாய்ச் சேர்த்துப் பெருத்த நூலிழைகளாக்கி நன்றாய்ச் சுற்றிப் பட்டுகளாக எடுப்பார்கள். பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதும், பட்டு நூல்களைச் சேர்ப்பதும், சுற்றுவதும், பின்பு அவைகளைப் பட்டாடைகளாக நெய்வதுமாகிய இவையெல்லாம் ஐரோப்பாவிலுள்ள பலவகைக் கைத்தொழில் வியாபாரங்களில் முக்கியமானவையா யிருக்கின்றன. மனிதர்களுடைய போகங்கள் அதிகம் ஆக ஆக இந்த வியாபாரங்களெல்லாம் அதிக அவசியமாகின்றன.

பட்டுப்பூச்சிகளை வளர்க்க இரண்டு வழி உண்டு. அவைகள் இயற்கையாய் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் இடமான மரங்களிலேயே அவைகளைச் சுயேச்சையாய் இருக்கச்செய்து அங்கேயே வளரும்படி செய்தாலும் செய்யலாம். அல்லது அதற்கென்று நன்றாய் ஒரு கட்டடம் கட்டி அதில் அவைகளை விட்டு நாள்தோறும் புதிதாய் இலைகளை இரையாகக் கொண்டு போட்டு வளர்த்தாலும் வளர்க்கலாம். முதலிற் சொன்ன விதமாய்ச் சீனா முதலிய உஷ்ண பூமியான கீழ்த்தேசங்களில் பட்டுப்பூச்சி வளர்க்கப்படுகின்றன; இயற்கையாயிராமல் வேண்டுமென்று அவைகளைக்கொண்டு வைத்து வளர்க்கின்ற இடங்களிலெல்லாம் பின் சொல்லிய விதமாயே வளர்க்கப்படுகின்றன. ஆனால் அப்படி வளர்க்கப்படுகிற பூச்சிகள் தானாய் வளர்கிற பூச்சிபோல் அவ்வளவு செழிப்பாய் வளருவதில்லை. உஷ்ண தேசங்களில் பட்டுப்பூச்சிகள் மல்பரி யென்று வழங்குகிற கம்பளி அல்லது முசுக்கொட்டை மரங்களிலேயே அம்மரத்தின் இலைகளைப் புசித்துக்கொண்டு வளர்கின்றன. அப்பூச்சிகள் அம்மரத்திலேயே முட்டையிட்டு மழை காற்று ஒன்றுக்கும் அசையாத பத்திரமான இடங்களில் அம்முட்டைகளைச் சேர்த்து வைக்கின்றன. மழைக் காலமெல்லாம் பூச்சிகள் முட்டையை விட்டு வெளிப்படுவதே யில்லை.

அந்தப் பூச்சி ஜீவிப்பதற்குப் போதுமான உணவைக் கடவுள் உண்டாக்கி வைக்குமளவும், அதாவது முசுக்கொட்டை மரங்கள் நிரம்பத் தளிர்த்து இலை விட்டுத் தழையுமளவும், பட்டுப்பூச்சி முட்டையினின்றும் வெளிப்படுவதில்லை. மரங்களெல்லாம் அழகாய்த் தளிர்த்துத் தழைந்தவுடனே பட்டுப்பூச்சிகள் பெரும்பசி

கொண்டவை போல முட்டையினின்றும் வெளியே வந்து வெகு ஆவலுடன் அம்மரத்து இலைகளைப் புசிக்கத் தொடங்குகின்றன. இலைகளைப் புசிக்கப்புசிக்க அந்தப் பூச்சிகள் பெருக்கும். அப்படியே விடாமல் இரண்டொரு மாதம் புசித்துக்கொண்டிருந்து பின்பு அதை நிறுத்திவிட்டு, வெகு நேர்த்தியான பட்டுச் கூடுகள் கட்டிக் கொண்டு அவற்றுள் ஒவ்வொன்றும் புகுந்து கொள்ளும். அப்பொழுது மரந் தெரியாமல் அதில் பட்டுக்கூடுகள் நிறைந்திருப்பதைப் பார்த்தால், ஒரு அழகான பசுந்தரையில் நிரம்பப் பொன்னிறமாய்ப் பழங்கள் இருப்பதாக எழுதப்பட்ட சித்திரம்போல வெகு அற்புதமாயிருக்கும். இதுதான் பட்டுப்பூச்சிகள் கீழ்த்தேசங்களில் வளருகிற விதம். இப்படி வளருவதுதான் அந்தப் பூச்சிகளுக்குச் சௌக்கியம். வளர்ப்பவனுக்கும் வருத்தம் இல்லை. சீத பூமியான ஐரோப்பாவிலேயோ இப்படியல்ல. சீதோஷ்ண நிலை அடிக்கடி மாறுவதும், மாலைவேளைகளில் பலமாய்ப் பெய்கிற பனியும் முக்கியமாய் இராப்பொழுதுகளில் பட்டுப்பூச்சிகளைக் காப்பாற்றுவதற்கு வெகு வருத்தத்தைக் கொடுக்கின்றன. பறவைகளால் உண்டாகும் தீமைகளை விலக்க வேண்டுமானால் அப்பூச்சிகளைக் கூடுகளில் விட்டு வைத்துச் சுலபமாய்க் காப்பாற்றலாம். குளிர் மழை காற்று முதலியவை யெல்லாம் அவைகளை அநேகமாய் அழிக்கின்றனவே. ஆதலின், ஐரோப்பாவில் பட்டுப் பூச்சிகளை வளர்ப்பதென்றால் இந்தத் தீமைகள் ஒன்றும் உண்டாகவொட்டாமல் அவைகளைத் தகுந்த இடங்களில் விட்டுக் காக்கவேண்டும்.

இதற்காக ஐரோப்பாவில் குளிர்ந்த வாடைக் காற்று அடிக்கவொட்டாமல் தெற்கு முகமாய் வாயில் வைத்துப் பெரிய கூடங்கள் கட்டி அவற்றுள் பட்டுப் பூச்சிகளை விட்டு வளர்க்கிறார்கள். சிறிதளவும் காற்று உள்ளே புகவொட்டாமல் ஜன்னல்களிலெல்லாம் அழுத்தமாய்க் கண்ணாடிகள் புதைத்து, ஈ கொசுகு கூட உள்ளே வர வழியில்லாமல் மேல் தளமும் நன்றாய்ப்போட்டு அந்தக் கூடங்கள் வெகு பத்திரமாய்க் கட்டப்பட்டிருக்கும். அந்தக் கூடங்களின் நடுவே வெகு விசாலமாய்ச் சதுரமாக நான்கு தூண்கள் நாட்டி அந்தத் தூண்களின் நடுவே ஒன்றின்மேல் ஒன்றாக, ஓரங்களெல்லாம் தூக்கிக் கட்டிப் பல அந்தஸ்துக்கள் அமைக்கவேண்டும். ஒவ்வொரு அந்தஸ்தின் மேலும் ஒவ்வொரு தடுக்கு அமைத்து,

அந்தத் தடுக்கு அதன்கீழ் அந்தஸ்து எல்லாம் கப்பிகள் கட்டித் தொங்கவிட்டு வேண்டும்போது இறக்கவும் தூக்கிக் கட்டவும் ஏற்றவையாய்ச் செய்யவேண்டும்.

பட்டுப்பூச்சிகள் ஒவ்வொன்றும் சுமார் இருநூறு முட்டை யிடும். ஒவ்வொரு முட்டையும் கடுகளவு பரிமாணந்தான் இருக்கும் பட்டுப்பூச்சி முட்டையிட்டானவுடனே அம்முட்டைகளை யெல்லாம் அநேகம் முட்டைகள் கொள்ளும்படியான பெரிய காகிதப் பெட்டியிலாவது துணிப்பெட்டியிலாவது விட்டு வைப்பார்கள். அந்த முட்டைகளெல்லாம் குஞ்சு பொரித்தானவுடன் முசுக்கொட் டைச் செடியின் இளந்தளிர்கள் சேகரித்து அந்தப் பூச்சிகளுக்கு இரையாக அப்பெட்டிகளில் போடவேண்டும். அந்தப் பூச்சிகளுக்குக் கொஞ்சம் வலிமை வந்தவுடனே, கீழ்ச்சொன்ன மாதிரியாய் ஏற்படுத்திய பெரிய கூடங்களில் நடுவே ஒவ்வொரு அந்தஸ்திலும் முசுக்கொட்டைத் தளிர்களைப் பரப்பி அவற்றின்மேல் அந்தப் பூச்சிகளை எடுத்து விடுவார்கள். விட்டால் அவை உடனே அந்த இலைகளைப் பற்றிக் கொண்டு அவைகளைப் புசிக்க ஆரம்பித்து அவை யெல்லாம் புசித்தானவுடனே மேலே யிருக்கின்ற தடுக்கின் தடிகளைப் பற்றிக்கொள்ளும். பின்பு ஒருபோதும் கீழே விழாம லிருக்கும்படியாக, சிலந்திகள் கீழே இறங்கவும் ஏறவும் ஏற்றதாய் நூல்நூற்றுக் கொள்வதுபோல், இந்தப் பட்டுப்பூச்சிகளும் நூல் நூற்கும்; அந்த நூல்கள் பிறகு அவை விசேஷமாய் நூற்கப் போகிற பட்டுக்குச் சிறிதும் சமானமானதல்ல. அக்காலத்தில் அந்தப் பூச்சிகளுக்கு நாள்தோறும் காலையில் தப்பாமல் புதிதுபுதிதாய் இலைகள் கொண்டுவந்து எங்கும் ஒரே அளவாக அவற்றின்மேல் பரப்பிப் போடவேண்டும். பரப்பினால் அந்தப் பூச்சிகள் பழைய இலைகளை விட்டுப் புது இலைகளைப் பற்றிக்கொள்ளும். உடனே கீழிருக்கிற பழைய இலைகள் குப்பை செத்தை யெல்லாவற்றையும் மெதுவாய் அப்புறப்படுத்தி அவ்விடத்தை நன்றாய்ச் சுத்தமாக்க வேண்டும். ஏனெனில், அசுத்தம் நாந்தல் இவைதாம் பட்டுப்பூச்சி களுக்கு அதிகமாய்த் தீங்கு செய்பவைகள். பட்டுப்பூச்சிகள் பிழைத் திருக்கும் காலம் மிகவும் சொற்பமாகையால், அவை மேல், தோலை மாற்றுகிற காலந் தவிர மற்றப் பொழுதெல்லாம் அந்த இலை

களை ஓயாமல் தின்றுகொண்டே யிருக்கும். ஆதலின், அதற்குத தேவையான இலைகள் எப்போதும் சுலபமாய்க் கிடைக்காவிட்டால் கிடைக்கிறபொழுதே சேகரித்துப் பத்திரமாய் வைத்துக் கொள் வார்கள். முசுக்கொட்டை இலை கிடைப்பது அருமையாயிருக்கிற இடங்களில் அதற்குப் பதிலாக வேறு சில இலைகளை உபயோகப் படுத்துவது உண்டு. ஆனால் அதைத் தின்கிற பூச்சிகள் முசுக் கொட்டை இலையைத் தின்கிற பூச்சிபோல் அவ்வளவு செழிப்பாய் வளர்கிறதில்லை. பட்டும் விசேஷமாய் உண்டாக்குகிறதில்லை. அந்தப் பட்டு அவ்வளவு நன்றாயும் இருக்கிறதில்லை.

இப்படியாகப் பட்டுப்பூச்சிகளுக்கு வெகு கருத்துடன் செய்ய வேண்டிய காரியம் இரைபோடுவது ஒன்று மாத்திரமேயல்ல, வேறொன்றும் இருக்கிறது. தகுந்தபடி அவற்றின்மேல் நல்ல காற்று வீசச்செய்ய வேண்டும். அதாவது, வெயில் நன்றாய்க் காய்கிற வேளைகளில் அந்தக் கூடங்களின் ஜன்னல்களைத் திறந்து வேண்டு மான நல்லகாற்று உள்ளே புகச் செய்யவேண்டும். அவ்விடங்களைக் கூடிய வரையில் சுத்தமாயே வைத்துக்கொண்டு இருக்கவேண்டும். பட்டுப் பூச்சிகளின் மலத்தை ஏற்கும்படியாக வைத்திருக்கிற பல அந்தஸ்துகள் மாத்திரமேயல்ல, அந்தக்கூடம் முழுமையுமே அடிக்கடி சுத்தி செய்து கொண்டு வரவேண்டும். இவையெல்லாம் கருத்தாய் நடத்தப்படுமானால், பட்டுப்பூச்சிகள் வெகு சுகமாய் வளர்ந்து விருத்தியாகும்.

பட்டுப்பூச்சி முட்டையினின்றும் வெளிப்படுகிற காலத்தில் மிகவும் சிறிதாய்க் கறுப்பு நிறம் உள்ளதாயிருக்கும். உடலைவிடத் தலை அதிக கறுப்பாயிருக்கும். சில நாளைக்குப் பிறகு சாம்பல் நிறமாக மாறும். பூச்சி இன்னும் கொஞ்சம் பெருத்தவுடன் சாம்பல் நிறத்தோல் போய் சுத்த வெண்மையான தோலுண்டாகி அப்படியே கொஞ்ச நாளிருக்கும். அந்தந்தத் தேசத்துச் சீதோஷ்ண நிலைக் கும் நாம் இடுகிற உணவுக்கும் ஏற்றபடி சில நாள் அப்படியே இருந்து, பிறகு உணவை நிறுத்திவிட்டு, இரண்டு நாள் ஒரே அள வாகத் தூங்குவதாய்க் காணப்படும். பிறகு அசைய ஆரம்பித்து மேல் தோல் மறுபடியும் வீழ்ந்துபோமளவும் பரபரப்பாயோடி அதை வாங்கி விடும். இவ்வளவு காரியமும் மூன்று வாரம் அல்லது

ஒரு மாதத்திற்குள் நடந்துபோம். மறுபடியும் முன்போலவே இலை தின்ன ஆரம்பித்துச் சிலநாளில் அதை நிறுத்தி முன்போலவே இரண்டொரு நாள் தூங்குவதுபோலிருந்து பிறகு அப்போதிய மேல் தோலையும் மாற்றிவிட்டு, மறுபடியும் இரை யெடுக்க ஆரம்பிக்கும். இப்படியாக வேண்டுமான இரை தின்று தேகம் நன்ருய் ஒழுங்கு பட்டவுடனே, கடைசியாய் இரை யெடுப்பதை விட்டுத் தனியே யாதொரு தீங்கும் உண்டாகவொட்டாமல் தன்னைத்தானே காத்துக் கொள்ளும்படி தனியிடம் ஒன்று செய்துகொள்ள ஆரம்பிக்கும். அக்காலத்தில் பட்டுப்பூச்சி அசையாமல் உயிரற்றதுபோலவே காணப்படும்.

இப்படிப் பட்டுப்பூச்சி கட்டத் தொடங்குகிற தனியிடமானது கோகூன் என்று வழங்குகிற பட்டுக்கூடே யன்றி வேறல்ல. அதை வெகு விநோதமாகக் கட்டும்படியான சாமர்த்தியத்தைக் கடவுள் அதற்குக் கொடுத்திருக்கிருர். பட்டுப்பூச்சிக்கு இறகோடு கூடிய வடிவம் வருமளவும் அது அந்தப் பட்டுக் கூட்டுக்குள்ளேயே புகுந்து கொண்டிருக்கும். அந்தக் கூடு அதன் குடலுக்குமேல் இருக்கும் ஒருவாறு நீண்ட இரண்டு பைகளிலுள்ள பொன் நிறமான பிசின் தன்மையுள்ள ஒருவகைத் திரவப் பொருளால் நூல் நூற்றுக் கட்டப்படுகின்றது. பட்டு நூலை ஒவ்வொரு சமயத்தில் வெகு நேர்த்தியாக நூற்கும்படி அதற்குத் தகுந்த கருவி பட்டுப்பூச்சிக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கருவி மிகவும் நுண்ணியதாகப் பொன் வெள்ளிக் கம்பிகள் இழுக்கும்படி கம்மாளர் வைத்திருக்கும் கருவியை ஒருவாறு ஒத்திருக்கும். அந்தக் கருவியைக்கொண்டு பட்டுப்பூச்சி வெகு ஜாக்கிரதையாய்ப் பட்டுநூல் நூற்கின்றது. அந்த நூல் இரண்டு பிசின் பையினின்றும் வருவதனுல் முதலில் இரண்டாகவே வந்து பின்பு ஒன்ருய்க் கூடுகின்றது. அந்த நூலைப் பூதக்கண்ணுடியைக் கொண்டு பார்த்தால் ஒருபுறத்தில் தட்டையாய் நடுவே கோடு கீறியிருப்பதுபோல் காணப்படும். அதைக் கொண்டே அந்த நூல் முதலில் இரண்டாய் வந்து, பிசின்தன்மை அதனிடத்தி லிருப்பதால், உடனே ஒன்ருய்க் கூடுகிறதென்பதை நாம் கண்டு கொள்ளலாம். இப்படிக் கூடு கட்டுவதற்கு முன்னமே ஒரு அபாயமும் உண்டாகாத பத்திரமான இடமாய்ப் பார்த்தே பட்டுப்பூச்சி அதைக் கட்ட ஆரம்பிக்கின்றது. இலையோ அல்லது

பாழியோ ஏதாவது ஒன்று ஏற்ற இடமாய் அகப்பட்டால் உடனே அந்தப் பூச்சி தன் தலையை நாற்புறமும் புரட்ட ஆரம்பித்து நூலை அவ்விடத்தில் நாலாமூலையிலும் ஒட்ட வைக்கும். அது முதலில் செய்கிற செய்கையெல்லாம் வழிதுறையில்லாமல் செய்யப்படு வனபோல் காணப்பட்டாலும், அவை ஏதோ ஒரு கருத்தைக் கொண்டுதான் செய்யப்படுகின்றன என்று அவற்றின் காரியத்தால் நன்றாய்த் தெரியும். முதலில் நூற்கப்படுகிற நூல்களெல்லாம் ஒழுங்காய் வைக்கப்படாமல், மழைக்கு ஆதாரமாக மொத்தமாய் வைக்கப்படுகின்றன. வெளிப்புறங்களில் மரங்களிலேயே இருக் கும்படியாக அதைக் கடவுள் சிருஷ்டித்திருக்கிறபடியால், நல்ல பத்திரமான அறைக்குள் கொண்டுவிட்டாலும் இயற்கையான வழக்கமே அதற்கு வருகின்றது.

ஜன விநோதினி (XIX-வால்யம்.)

---

iii. சுத்தவீரன், அமைச்சன், கவிவாணன் ஆகிய இம்மூவரில் தன் நாட்டுக்குப் பெரும் பயனை விளைவிப்பவன் எவன்?

மதுராபுரி என்னும் பட்டணத்தில் அரசு புரிந்து வந்த ஜயதுங்கன் என்னும் வேந்தனுக்கு மங்கையர்க்கரசி என்னும் இல்லறத் துணைவி ஒருத்தி இருந்தனள். அவ்விருவரது தவப்பேருக மீனுட்சி, காமாட்சி, விசாலாட்சி என்னும் பெயருடைய மூன்று பெண்கள் பிறந்து, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து சகல கலைகளிலும் பயின்று, நுண்ணறிவு அமையப் பெற்றிருந்தார்கள். ஒருநாள் மங்கையர்க்கரசியாகிய தாயும், புதல்வியர் மூவரும் அநேக தாதியர், சேடியர் முதலியோர் தம்மைப் புடைசூழ்ந்து உபசாரம் செய்துவர, அவ்வூருக்கு அருகேயிருந்த ஓர் உத்தியான வனத்திற் சென்று, உல்லாசமாகக் காலங்கழித்துக் கொண்டிருக்கையில், ராஜ ஸம்ஸ்தானத்தில் அதிக பிரசித்தி யடைந்த படைவீரர்களைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும், கவிவாணர்களைப் பற்றியும், சம்மாஷிக்கலானுர்கள். தம்முடைய அரசாட்சிக்கு உட்பட்ட நாட்டுக்குப் பெரும் பயனை விளைப்பவர் ஆண்மையிற் சிறந்த போர் வீரரா? அல்லது, மதியூகிகளாகிய மந்திரிகளா? அல்லது, கேட்போர் உள்ளங் கரையும்படி பாக்களைச் செய்ய வல்ல கவிவாணர்களா? என்று அப்பெண்கள் கூட்டத்திற்குச் சபாநாயகியாயிருந்த மங்கையர்க்கரசி, தன் புதல்வியரை நோக்கி வினவினுள்.

அதைக் கேட்ட மீனுட்சி என்னும் மூத்த பெண், 'மேற்சொல்லப்பட்ட மூவகையாருள்ளும் சுத்த வீரர்களே நாட்டுக்குப் பெரும் பயனை விளைத்து வருகின்றனர்' என்றும், காமாட்சி என்னும் இரண்டாம் பெண், 'மந்திரிகளே தேசத்துக்குப் பெரும் பயனைச் செய்து

வருகின்றனர்' என்றும், விசாலாட்சி என்னும் மூன்றும் பெண் 'கவி வாணர்களே நாட்டுக்குப் பெரும்பயனை நல்கி வருகின்றார்கள்' என்றும் விடை பகர, மங்கையர்க்கரசி தன் அருமைப் புதல்விகள், தம்முள் மாறுபட்டு, வெவ்வேறு அபிப்பிராயங் கொண்டதற்காக வியந்து, 'என் கண்மணிகளே, என் செல்வப் புதல்விகளே, நீங்கள் கொண்ட அபிப்பிராயத்துக்கு முறையே தகுந்த காரணங்கள் கூறுவீர்களாக' என்றனள்.

மீனாட்சி செய்த உபந்நியாசம் :

என்னை ஈன்றெடுத்த அன்னையே, என் அருமைச் சகோதரிகளே, மித்திரிகளே, சாஸ்திரங்களில் மிகவும் தேர்ச்சி யுள்ளவர்களாலேயே, விவகரிக்கத்தக்க இந்த அருமையான விஷயத்தைக்குறித்து நான் பேசத் தொடங்குவது,

'குன்றினிற் பிரசந்தன்னை அறிவிலாப் பங்கனேறி
அருந்துவேன் என்பது ஒக்கும்.'

மலையிலுள்ள தேனை அறிவில்லாத முடவன் ஏறிப் புசிப்பேன் என்பதை நிகர்க்கும். இந்தக் கேள்வி, ஒருவனுடைய தேகத்தில், சிரம் இருதயம் கரம் என்னும் மூன்று அவயவங்களில் எது மிகச்சிறந்தது? என்னும் வினாவை ஒக்கும். தேகம் ஆரோக்கிய ஸ்திதியிலிருப்பதற்கு இம்மூன்று அவயவங்களும் முக்கியமானவை. பகைவர்கள் வாராவண்ணம் தேசத்தைக் காப்பதற்கான சௌரியம், பராக்கிரமம் இவற்றைப் பெற்றிருக்கும் சுத்த வீரனே ஒரு தேசம் என்னும் சரீரத்துக்குக் கரம் ஆவான். இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்னவற்றைச் செய்வது யுக்தமென்று எதிர்கால உணர்ச்சியுடன் கூறுவதற்கு வேண்டிய நுட்பபுத்தியாகிய அறிவைப்பெற்றிருக்கும் மந்திரியே அந்தத் தேசம் என்னும் சரீரததுக்குச் சிரம் ஆவான். தேசத்திலுள்ள எவ்வகைப்பட்ட குடிகளும் அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீக்குணங்களை விடுத்துத் தெய்வ பக்தி பெற்றுச் சீலர்களாகிப் பிறவியை ஒழித்துப் பரலோக இன்பத்தை அடைவதற்கு வேண்டிய சுகுணங்களை ஊட்ட வல்லவனாகிய கவிவாணனே அத்தேசம் என்னும் சரீரத்துக்கு இருதயம் ஆவான். ஆகவே, இம்மூவரில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு விஷயத்துக்குஇன்றியமை

யாதவன் என்பது யாவருக்கும் உடன்பாடான விஷயம். ஆயினும் இம்மூவருள் நாட்டுக்குப் பெரும்பயனைத் தரத்தக்கவன் இன்னன் என்பதை நியாய வாயிலாகக் காட்ட வேண்டுமென்பதனால், சுத்த வீரனே ஏனைய இருவரினும் பெரும் பயனை விளைக்கத் தக்கவன் என்னும் என் கொள்கையை நாட்டுவதற்குத் தக்க நியாயங் கூறுகிறேன்:

மதியூகியாகிய மந்திரியும், பாவலனாகிய கவிவாணனும் இருந்த இடத்திலிருந்தே இப்படி அப்படி என்று வாயினாலே அளக்கலாம். பகைவர் எதிர்த்து வந்த காலத்து அமர்க்களத்தில் நின்று சௌரியத்துடனும், வீராவேசத்துடனும் புறங் காட்டாது போர் புரிந்து தன் நாட்டிலுள்ள குடிகளுக்குத் துன்பம் நேரிடாவண்ணம் அவர்களைக் காத்துத் தன் அரசன் விஷயமாகச் செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கும் சுத்த வீரனே ஏனைய இருவரினும் சிறந்தவன். அவன் அமர்க்களத்திலிருந்து பகைவரைச் சேதியாவிட்டால், செங்கோலெங்கே? மந்திரி எங்கே? கவிவாணனெங்கே? இவ்வுத்தியான வனம் எங்கே? நாம் இவ்வளவு மனோகரமாகக் கூடிச் சம்பாஷிப்பதெங்கே? குடிகளுக்கு வாழ்க்கை எங்கே? வர்த்தகம் எங்கே? யாவும் சூறையிற் பட்ட பஞ்சுபோல் அலையவேண்டும் அல்லவா? உலகத்தில் சம்பத்தான தசையிலிருந்த பற்பல தேசங்களின் ஸ்திதியைச் சற்றுயோசித்துப்பார்ப்போம். எந்தத் தேசத்தில் இராணுவ பலம் அதிகமாயிருந்ததோ அதுவே ஏனைய எல்லா நாடுகளையும் தன் அடிப்படுத்தித் தனியரசு புரிந்து வந்ததென்று சரித்திரங்கள் சாட்சி கூறுகின்றன. ரோமாபுரி, ஸ்பார்டா, இங்கிலந்து முதலிய தேசங்களின் பெருமைக்கெல்லாம் புஜபல பராக்கிரமம் பெற்றுத் தேசாபிமானம் பூரணமாக நிறைந்த இராணுவ வீரர்களே காரணமா யிருந்தார்கள். கிரீஸ் தேசத்தின் பூர்விக சரித்திரமும் இந்த விஷயத்தை உண்மையென்று பறையறையும். கல்வி, நாகரிகம், தெய்வ பக்தி முதலிய யாவும் வேற்றரசர் படையெடுத்து வருங்காலத்துக் குடிகளிடத்தில் எங்ஙனம் சிறந்தோங்கும்? போர் நேரிடாதபடி தடுப்பவனும், போர் நேரிட்டவிடத்துப் பகைவரைச் சேதித்துத் தன் நாட்டுக் குடிகளைக் காப்பவனும் ஆண்மையிற் சிறந்த சுத்த வீரனே யாவன். ஆகையால், ஏனைய இருவரினும் ஆண்மையிற் சிறந்த சுத்த வீரனே ஒரு தேசத்துக்கு மிக்க நன்மையைச் செய்யத் தக்கவன்.

காமாட்சி செய்த உபந்நியாசம் :

பாரிவிற் சிறந்த தாயே, பெறுதற்கரிய சோதரிகளே, தோழிகளே, நெடுங்கால அனுபவமும், ஆழ்ந்த கல்வித் தேர்ச்சியும் அத்தியாவசியமாக வேண்டியிருக்கிற இந்த அருமையான செய்தியைப் பற்றி யான் புகலத் தொடங்குவது, 'பாற்கடலைச் சிற்றெறும்பு பருக நினைப்பது' போலும். ஒரு தேசம் என்னும் சரீரத்திற்குச் சுத்தவீரன் கரம் என்றும், மந்திரி சிரம் என்றும், கவிவாணன் இருதயம் என்றும் என் மூத்த சகோதரி எடுத்துக் கூறிய உபமானமே உபமானம் ! பலத்தைக் கொண்டு பகைவரை வெல்லுதல் முதலிய காரியங்களைச் செய்வதனால் சுத்தவீரனைக் கரத்துக்கும், புத்தி நுட்பத்தினால் ஆலோசனை சொல்லுவதிற் சிறந்தவனான மந்திரியைச் சிரத்துக்கும், தெய்வபக்தி முதலியவற்றைப் பிரஜைகளுக்கு உண்டாக்குவதனால் கவிவாணனை இருதயத்துக்கும் மீனாட்சி உவமித்தனள். அவ்வுபமானம் சால அமைவுடையதே.

ஒரு காரியத்தின் யுக்தாயுக்தங்களைப் பற்றியாவது, அதைச் செய்யும் விதத்தைப் பற்றியாவது விவேகம் நிச்சயித்துக்கூறிய பிறகு அல்லவா கை செய்ய ஆரம்பிக்கவேண்டும் ? புத்தியை ஆதாரமாகக் கொள்ளாவிடத்து அசேதன வஸ்துவாகிய கரம் பயனில்லையே? சரீரத்தின் விஷயத்தில் எப்படியோ அப்படியே ஒரு தேசத்தின் விஷயத்திலும் மந்திரி பகைவரை வெல்லும் இடம், காலம், கருவி, வகை முதலியவற்றை விவேகத்தினாலறிந்து கூறினாலன்றி, எவ்வளவு ஆண்மையிற் சிறந்தவனா யிருப்பினும், சுத்த வீரனுடைய செய்கை ஒன்றுக்கும் பயன் படாதன்றோ ?

> 'தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
> சொல்லலும் வல்ல(து) அமைச்சு.'

ஒரு காரியத்தைச் செய்யும் விதங்கள் பலவாகத் தோன்றினவிடத்து அவற்றுள் அதி யுக்தமானதை ஆராய்ந்தறிவதிலும், அப்படிப்பட்டதைச் செய்கையில் அது பயன்படும் விதத்தை நாடிச் செய்வதிலும், சிலரைப் பிரித்தல், பொருத்தல் ஆகிய இச்செயல்களிலே துணிவு பிறக்கும்படி வற்புறுத்திக் கூறுவதிலும் வல்லவனே அமைச்சன் என்று நாயனார் கூறியுள்ளார்.

ஆகவே, இந்தக் காரியங்களை யெல்லாம் விவேகத்தினால் அறிந்து, ஒன்றைச் செய்ய அமைச்சன் உத்தரவு கொடுத்தாலன்றோ அதைச் செய்கையில் சுத்த வீரனது ஆண்மை பயன்படும் தேகத்தினால் மாத்திரம் வருந்தி யுழலுவது பெரிதும் வியக்கத் தக்கதாயினும், உலகத்தில் அதற்குச் சிறப்பில்லை. விவேகத்தைக் கொண்டு உழைத்தல் எவ்வளவு சிறிதாயினும் அதற்கே பெருமை அதிகம்.

நியாயாதிபதி, சேவகன் ஆகிய இருவரில் யாருக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது? யாரை உலகத்தார் அதிகமாக மதிக்கின்றனர் ? வெய்யிலிலும் மழையிலும் வருந்தி ஓடித் திரியும் சேவகனுடைய சரீரப் பிரயாசைக்கெல்லாம் சம்பளம் பத்து ரூபாய் தானே. சுகமாக இருந்த இடத்தில் இருப்பவனைப்போற் காணும் நியாயாதிபதிக்குச் சம்பளம் ஆயிரம் ரூபாய் கணக்காக இருக்கிறது. அதுபோலவே, தேக பலத்தைக்கொண்டு போர்புரியும் சுத்த வீரர்களைக் காட்டினும் அவர்கள் யாவரையும் பிரேரேபிக்க, இருந்த இடத்திலிருந்து விவேகத்தினால் முயன்று யுக்தாயுக்தங்களைச் சொல்லவல்ல அமைச்சனே சிறந்தவனாகின்றான்.

சுத்தவீரர்கள் பாவைகளுக்குச் சமானம். அமைச்சனோ, அவற்றை ஆட்டுவிக்கும் சூத்திரதாரியைப் போன்றவன். கரசரணாதி அவயவங்களுடன் அதிஅற்புதமாக இயங்கும் பாவைக்குவரும் பெருமையெல்லாம் சூத்திரதாரியைத்தான் சேரும்; ஏனெனில்,

> 'நன்றாிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் ஞர்தப்பினல்
> தன்னலும் ஆடிச் சலித்திடுமோ ?'

அன்றியும், சுத்தவீரனுடைய செய்கை யெல்லாம் பெரும்பாலும் தன் நலத்தை நாடியதாகவே யிருக்கின்றது. போர்க்களத்தில் தன் இன்னுயிரைக் காப்பதற்காகவாவது, உலகத்தில் புகழை நாட்டுவதற்காகவாவது, ஒருவேளை இறந்தால் வீரசொர்க்கத்தை யடைவதற்காகவாவது சுத்தவீரன் தன் ஆண்மையைக் காட்டுகின்றானே யன்றி, தன் நாட்டாருடைய நலத்தை அவன் அமர்க்களத்தில் கருதுவதாகத் தோன்றவில்லை. அல்லாமலும், அமர்க்களத்தில் சதா உதிரப்பிரவாகத்தில் நீந்துவது ஒன்றையே தனக்குப் பெரும் பொருளென மதிப்பவனாகிய சுத்தவீரனிடத்து இரக்கம் - பச்சாத்

தாபம், அன்பு, தெய்வ பக்தி முதலிய சற்குணங்கள் எங்ஙனம் அமையும் ? அமைச்சனே மேற்கண்ட சகல சற்குணங்களையும் பொருந்தினவனாகவும்,

'அனைவோர்க்கும் தெய்வம் இலைமுகப் பைம்பூண் இறை'

என்றபடி, குடிகளுக்குத் தெய்வமாயுள்ள அரசனுக்குக் கண்ணுங் கவசமுமாகவும் இருக்கின்றான். கவிவாணன் தரித்திர தசையடைந்து, பிறரிடத்து யாசிப்பதையே தனக்கு விரதமாகப் பூண்டவனானபடியால், ஒரு தேசத்துக்கும் அவனால் ஒரு சிறிதும் நன்மை யுண்டாகமாட்டாது என்பதே என் கொள்கை. மேற்போந்த நியாயங்களினால் சுத்தவீரன், மந்திரி, கவிவாணன் ஆகிய மூவரில் மந்திரியே ஒரு தேசத்துக்குப் பெரும்பயனைத் தரத் தக்கவன் என்பது என் துணிபு.

விசாலாட்சி செய்த உபந்நியாசம் :

ஐயிரு திங்கள் அணிவயிற்றிற் சுமந்து என்னை ஈன்றெடுத்த அன்னையே, அருமைச் சகோதரிகளே, சேடிகளே, இப்போது விவரிக்கப்பட்ட விஷயத்தைக் குறித்து என் சோதரிகள் இருவரும் கடல்மடை திறந்தாற்போல் உபந்நியாசம் செய்தனர். என்னுடைய உபந்நியாசம் சொல்நயம் பொருள்நயம் முதலியவற்றில் மிகவுங் குறைந்ததாயினும்,

'கோவுடனே கூடிவருங் குருட்டாவும் ஊர்புகுதும்
பூவுடனே கூடியநார் புனிதர்முடிக்(கு) அணியாமல்.

பசுக்கூட்டங்களுடன் செல்லும் ஒரு குருட்டுப் பசுவும் அவற்றின் பின் செல்லுங் காரணத்தினால் க்ஷேமமாக ஊர்போய்ச் சேர்வது போலவும், பூவுடன் சேர்ந்த காரணத்தினால் நாரும் நின்மலனாகிய தேவதேவனது திருமுடியில் ஏறுவது போலவும், அறிவிற் சிறந்த சோதரிகள் இருவரும் செய்த உபந்நியாசத்துடன் கடைப்பட்ட என் உபந்நியாசமும் உங்கள் செவிக்கு ஏறுமென்று துணிந்து கூறுகின்றேன்:

என் மூத்த சகோதரியாகிய மீனாட்சி கூறிய நியாயங்களை எதிர் மறுத்துக் கூறுவதன் முன்னர், காமாட்சி கடைசியாக

எடுத்துரைத்த ஒரு விஷயம் என் செவிக்கு நாராசம்போன்றுஇருக்கிறபடியால், முன்னர் அதற்குச் சமாதானங் கூறிப் பின்னர் என் கொள்கையை நாட்ட முயல்வேன். 'கவிவாணர்கள் வறியவர்களாயிருந்து பிறரை யாசிப்பதையே தம் பொருளென மதிக்கின்றார்கள்' என்று காமாட்சி கூறியது ஒருவிதத்தில் ஒப்புக்கொள்ளத் தக்கது தான். அரசனொருவனிடத்தில் தன் கல்வித்திறத்தைக் காட்டிப்பரிசு பெறலாமென்று கருதிச் சென்ற கவிவாணன் ஒருவனது வறுமையின் கொடுமையைப் பார்த்து, அவ்வரசன் மிக்க இறுமாப்படைந்து தன் சமுகத்திலிருந்த மந்திரிகளை நோக்கி, 'பல நூல்களையும் கற்றுணர்ந்தும், வித்துவான்கள், பெருமை யழிந்து வறுமைத்துன்பம் உறுவதற்குக் காரணம் என்ன?' என்று கேட்க அம் மந்திரிகள் விடை கூறாது விழித்துக்கொண்டிருக்கையில், அக் கவிவாணன் அரசனைப்பார்த்து, 'நாமகளாகிய சரஸ்வதி கவிவாணர்களிடத்தில் தங்கியிருப்பதால், பூமகளாகிய இலட்சுமி அவளோடு பிணங்கி ஒத்து வாழ்வதில்லை; இலட்சுமி மாமியும், சரஸ்வதி மருகியும் ஆதலால், மாமியும் மருகியும் உலகவழக்கில் ஒத்து வாழ்வது துர்லபமாயிருத்தல்போல், ஒருவனிடத்து நாமகளும் பூமகளும் ஏககாலத்து ஒருமித்து இருப்பதில்லை' என்றான். இதனால் அவ்வரசனிடத்துச் செல்வத்திற்கு நாயகியாகிய பூமகளிருந்த காரணத்தினால் நாமகளாகிய சரஸ்வதி பொருந்துவதில்லை; எனவே, அவன் மூடன் என்பதை அந்தக் கவிவாணன் குறிப்பித்தான். இவ்விஷயத்தை அமைத்தே,

'பல்லான்ற கேள்விப் பயன்உணர்வார் பாடழிந்(து)
அல்லல் உழப்பது அறிதிரேல்—தோல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.'

என்னும் வெண்பா வழங்குகிறது. இந்த விஷயத்தைப் பற்றி யான் இன்னும் விவரிக்கவேண்டிய அவசியமில்லை. கீழ் மக்களிடத்தும் இருக்கத்தக்க பொருட்செல்வத்தைக் காட்டிலும் இகபர சாதனங்களுக்கு ஏதுவாகிய கல்விச் செல்வம் சிறந்ததென்பது என் சகோதரி காமாட்சி தன் ஞாபகத்தில் வைப்பாளாக. ஆகவே வறுமை கவிவாணர்க்கு ஒருவிதச் சிறப்பைத் தருகின்றதே யன்றி, அவர்களுக்கு அஃது எவ்வளவும் தாழ்வைத் தரவில்லை.

சுத்தவீரனை ஒரு நாட்டுக்குக் கரமாகவும், மந்திரியை விவேக ஸ்தானமாகிய சிரமாகவும், கவிவாணனைத் தெய்வபக்தி முதலிய நற்குணங்கள் விளங்கத்தக்க இருதயமாகவும் மீனாட்சி உபமித்ததே உபமானம்! சுத்தவீரனுக்குரிய புஜபல பராக்கிரமத்தினாலும் மந்திரிக்குரிய நுண்ணறிவினாலும் இகத்தில் ஓர் அற்ப பலனாகிய சில நாளைய சுகங் கிடைக்குமே யன்றிப் பரலோகத்தில் நித்தியானந்தவாழ்வு எவ்வளவும் விளையமாட்டாது. வெறும் தேகபலத்தையாவது, புத்தி நுட்பத்தையாவது ஒருவன் அபிவிருத்தி செய்துகொண்டு, தன்னுடைய இருதயத்தைப் புனிதப்படுத்திக் கொள்ளானாயின், அவன் கேவலம் மானிட விலங்கென்றே பெரியோரால் இகழப்படுவான். விவேகத்தை மாத்திரம் அபிவிர்த்தி செய்து இருதய சுத்தியை விளக்கத்தக்கதல்லாத காரணத்தினால் இக்காலத்திய கல்வி அநேகரை நாத்திகப்படுகுழியில் வீழ்த்துகின்றது.

உலகத்தில் கொலையாளி, கள்வன், காமி, பொய்யன், கட்குடியன் என்னும் பஞ்சமாபாபிகளுள் பெரும்பான்மையோர் தேகபலத்தில் குறைந்தவர்களா? அல்லது, நுண்ணறிவில் குறைந்தவர்களா? இவ்விரண்டும் பூரணமாக அமையப்பெற்றும் அத் தகைய மகாபாதகங்களை அவர்கள் செய்யத் துணிவதற்கு இருதய சுத்தியில்லாமையே காரணம் அல்லவா? ஆகையினால், தேகபலம் ஆண்மை இவைகளினால் போர்புரிந்து, ஒரு தேசத்தாருக்கு நன்மை பயக்கும் சுத்தவீரனையும், புத்தி நுட்பத்தினால் சட்ட நிர்மாணஞ் செய்து ஒரு தேசத்தாருக்கு நன்மை பயக்கும் மந்திரியையும்விட உலக வாழ்க்கையின் அநித்தியத்தையும் இறைவன் திருவடியின்பத்தின் நித்தியத்தையும் உலகினருக்கு விளக்கி, அவர்களுக்கு விதிவிலக்குகளை உணர்த்தி, அவர்களுடைய ஆன்மா கடைத்தேறுவதற்கான நன்னெறிகளைக் காட்டி இருதயத்தைப் பரிசுத்தப் படுத்தும் கவிவாணனே காலத்திரயத்தும் சிறந்தவன்.

தேகபலம், சௌரியம் இவைகளினாலாவது, விவேக விருத்தியினாலாவது கடவுளைக் காணமுடியாதென்றும், நன்னெறியில் ஒழுகும் மெய்யடியார்களுடைய நின்மலமான இருதயத்தையே தடாகமாகக்கொண்டு கடவுளது திருவடி என்னும் தாமரை, ஆனந்தத் தேன் ததும்ப மலருகிறதென்றும் அனுபவஞானிகள் கூறியிருக்கின்றார்கள் அல்லவா?

'மனத்தினுல் வாக்கால் மற்றுங் குறைவிலா அளவினுலுங்
கூறேணு தாகி நின்ற இறைவனுர் கமல பாதம்'

என்றும்,

'அன்பரிதயம் என்னும் செழுமலர் ஓடையில் மலர்ந்து
சிவானந்தத் தேன் ததும்புந் தெய்வக் கஞ்சத் தொழுதகு சிற்றடி'

என்றும் கடவுளது திருவடி ஆன்றோரால் கூறப்பட்டுள்ள தன்மையை யோசிக்கையில், திரிகரணங்களினுலும் அறியப்படாத திருவடி, இருதய சுத்தி யிருக்குமாகில் அங்குத் தோன்றுமென்று தெரியவருகிறது.

ஆகையால், இருதய சுத்தியை உண்டாக்கும் கவிவாணன் புரியும்பயனே யாதொரு தேசத்துக்கு நிரந்தரமான பயன்; அதுவே சத்தியமான பயன். ஒரு நொடியில் தோன்றி நின்றழியும் தேகத்தையும் அதனிருப்பிடமாய் அதைப்போலவே லயப்படும் உலகத்தையும் பற்றிய பயனும் ஒரு பயனுகுமா ? ஒரு மந்திரி தன் தேசத்துக்காகத் தன் நுட்பபுத்தியைக் கொண்டு செய்த சட்ட நிர்மாணமும், விசித்திரமான ஏற்பாடுகளும் அந்தத் தேசத்துக்கு மாத்திரம், அவன் இருக்குமட்டும், விசேஷமாகக் கொள்ளப்படும். அவனுக்குப்பின் வரும் வேறு மந்திரி வேறேவிதமான சட்ட நிர்மாணத்தையும் ஏற்பாடுகளையும் செய்துவிடுவான். அப்படியே ஒரு போரில் தன் பகைவனைக் கொன்ற சுத்த வீரனுடைய செய்கையை அப்போதிருந்தவர்கள் வியந்து மெச்சினுலும் அதற்குப்பிற்காலத்தவர்கள் அதைக் குற்றமானதென்று கூறவும் நேரிடும்.

சிறந்த கவிவாணனுடைய விதி விலக்குகள் அடங்கிய கிரந்தங்களோ அப்படிப்பட்டவையல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னர் உலகினர் உய்யும்படி விதி விலக்குகளைப்பாடி வைத்த திருவள்ளுவ நாயனுருடைய வாக்கை எவ்வகைப்பட்ட தேசத்தவரும் மதாபிமானிகளும் மறுக்கத் துணியாரல்லவா ? பல சட்டங்களை எழுதி வைத்த மனுமுறை இப்போது என்னுய் முடிந்தது? அவற்றில் அநேகம் இக்கால இயல்புக்கு உதவா என்று திரஸ்கரிக்கப்படவில்லையா ? இராவணேசுவரன் போர்க்களத்தில் நின்று தன் ஆண்மையினுல் அநேகரைக் கொன்று, தன் நாடாகிய இலங்கைக்கு

நன்மை புரியத் துணிந்த காலத்து, அசுரர் குலமுழுவதும் அவனை வியந்து கூறினரேனும் இப்போது அவனை மெச்சுவார் யாவர்?

இத்தியாதி நியாயங்களினால், சுத்த வீரனுடைய செய்கையும், மந்திரி போன்ற மதியூகிகளின் ஏற்பாடுகளும் நிரந்தரமான பயன்களைத் தரமாட்டா. யாவரும் நிராக்ஷேபமாக எக்காலத்தும் அன்னோர் செய்கையை வியக்கமாட்டார் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள். வியாசர், வான்மீகி, திருவள்ளுவர் முதலிய செந்நாப் புலவர்கள் தத்தம் தேயத்துக்குக் கிரந்தங்கள் ரூபமாகப் புரிந்த நன்மையை இன்னும் நாம் அனைவரும் துய்த்து வருகின்றோம் அல்லவா? திரேதாயுகத்தில் இந்திரஜித்து முதலிய சுத்த வீரர்களும், சுக்ரீவனுக்கு மந்திராலோசனை சொல்லிவந்த அனுமான் முதலிய மதியூகிகளும்; துவாபரயுகத்தில் அபிமன்னன் முதலிய சுத்தவீரர்களும், சகுனி முதலிய மந்திரிகளும்; தத்தம் காலங்களில் பயன்பட்டனரே யன்றி, எதிர்காலத்தவர்க்கு நிரந்தரமான பயனை நேராகச் செய்யவில்லை. காளிதாசர், தண்டி, கம்பர் முதலிய கவிவாணர்கள் இயற்றிய நித்தியாநித்தியத்தை விளக்கத்தக்க பாக்கள் எக்காலத்தவர்களுக்கும் பயன்பட்டு வருகின்றன.

அன்றியும் யாதொரு சுத்தவீரனும் அமைச்சனும் அயர்விலா ஊக்கத்துடன்முறைமேய செய்துவரும் காரியங்கள் யாவும் புகழைக் கருதியே யாதலின், அப்புகழை அவர்களுக்குக் கொடுப்பவன் கவிவாணனே யாகையால், அவ்விருவரையும் தத்தம் காரியங்களில் ஊக்கத்துடன் பிரவர்த்திக்கச் செய்பவன் கவிவாணனேயாம். ஆகையால், யாதொரு சுத்தவீரன் மூலமாகவும், அமைச்சன் வாயிலாகவும், ஒரு நாட்டுக்கு உண்டாகும் நன்மைகளுக் கெல்லாம், அவர்களுடைய செய்கையை உலகத்தார் எக்காலத்தும் ஞாபகத்தில் வைத்திருக்கும்படி பாடிப் புகழும் கவிவாணனே முக்கிய காரணனாயிருக்கின்றான்.

அல்லாமலும், சுத்தவீரன் என்கிற ஒரு பெயரும், மந்திரி என்கிற ஒரு பெயரும் கவிவாணன் ஒருவனுக்குத்தான் பொருந்தும். எங்ஙனமெனின் தேசத்தைப் பாதுகாக்கும் நிமித்தம் பகைவர்களை வெல்லும் சாமானிய சுத்தவீரனைக் காட்டிலும், விதிவிலக்குகளை

நமக்குப் புகட்டியும், மாயாகாரியங்களாகிய காமம் வெகுளி முதலிய பெரும்பகைவர்களைத் தெய்வபக்தி விளையத்தக்க கவிகள் என்னும் வாளாயுதத்தால் சேதித்தும், ஆன்மாக்களாகிய நமக்கு நித்தியானந்த வாழ்வைத்தேடிக் கொடுக்கும் கவிவாணனுக்கே சுத்தவீரன் என்னும் பெயர் திரிகாலத்தும் தகும், தகும். தேகம் சுகித்துக் கொஞ்சகால மட்டும் வாழ்வதற்கான சட்டங்களை ஏற்படுத்துவதற்கு வேண்டிய சிற்றறிவு உடையவனுகிய ஒருவனைவிட, ஆன்மாக்கள் கடைத்தேறும் வண்ணம் விதிவிலக்குகளை யுணர்த்தி அவைகள் பாசபந்தங்களுக்கு உட்படாவகை சூழ்ச்சி யுரைக்கும் மதியூகியாகிய கவிவாணனே அமைச்சன் என்னும் அரும் பெயர் கவிவாணனுக்குத்தான் காலத்திரயத்தும் அமைவதாகும்.

மேற்போந்த நியாயங்களினுல் கவிவாணனே ஏனைய இருவரைக் காட்டிலும் ஒருதேசத்துக்கு உண்மையில் நிரந்தரமான பெரும் பயனை அளிப்பவனுகின்றுன் என்பது என் சித்தாந்தம்.

இவ்வற்புதமான உபந்நியாசம் முடிந்தவுடனே, அங்கிருந்த யாவரும், ஆனந்தமேலீட்டினுல், கரகோஷம் செய்தனர். மீனுட்சியும் காமாட்சியும் விசாலாட்சி கூறியதே சரி சரி என்று ஒப்புக்கொண்டனர்.

பிறகு சபாநாயகியாக வீற்றிருந்த மங்கையர்க்கரசி எழுந்து அடியில் வருமாறு சொல்லத் தொடங்கினுள்:

மங்கையர்க்கரசி செய்த உபந்நியாசம்:

என் அருமைப் புதல்விகளே, உங்கள் தாயாகிய நான் அன்றி வேறே யாவரேனும் இந்த ஸ்தானத்தில் இப்போது இருந்திலரே என்று வருந்துகின்றேன். எவ்வளவு வழுச்சொற்களை நீங்கள் உரைத்தீர்களாயினும், நீங்கள் மக்களும், நான் தாயும் ஆனபடியால் அவையெல்லாம்,

'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சோற்கேட்டல் இன்பம் செவிக்கு.'

என்றபடி, என் செவிக்கு இன்பமாகத்தான் இருக்கும். ஆயினும், நடுவுநிலைமையுடன் யான் இப்போது சில வசனங்களைச் சுருக்கமா

கச்சொல்லி முடிக்கின்றேன். மீனாட்சியும் காமாட்சியும் முறையே எடுத்துக் காட்டிய விஷயங்கள் யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கனவேயாயினும், விசாலாட்சி எடுத்துக்காட்டிய அதி அற்புதமான நியாயங்களை மறுக்க எவராலும் முடியாது.

இராமாயணத்தில் ஒருவிஷயம் என் ஞாபகத்துக்கு வருகின்றது. உலகமாதாவாகிய ஜானகியாரைத்தேடிச் சென்ற அனுமான், பிராட்டியாரை இலங்கையில் கண்டபோது, இரகுநாதரது விருத்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டே வருகையில்,

கோற்றவர்க்(கு) ஆண்டுக் காட்டிக்
  கொடுத்தபோ(து) அடுத்த தன்மை
பெற்றியின் உணர்தற் பாற்றோ
  உயிர்நிலை பிரிதும் உண்டோ
இற்றைநாள் அளவும் அன்னாய்
  அன்றுநீ யிழித்து நீத்த
மற்றைநல் லணிகள் காணின்
  மங்கலங் காத்த மன்னோ.'

மன்னர் மன்னனாகிய இராமபிரான், நாங்கள் உன் ஆபரணங்களைக் காட்டித் தந்தபோது அவருக்கு உண்டான பெருமகிழ்ச்சியை இன்னதென்று உணர முடியுமோ? அந்த ஆபரணங்களைவிட அவர்க்கு வேறு உயிர்நிலைதான் உண்டோ? அன்னாய், இதுவரையில் அவர் உயிர் தரித்திருப்பது, அன்று நீ கழற்றியெறிந்த ஆபரணங்களினால்தான் என்று அறிக. ஆகையால், அந்த ஆபரணங்களே இரகுநாதரைப் பிழைத்திருக்கச் செய்தன. எனவே, உன் மங்கல நாணைக் காத்தன என்று அனுமான் கூறினான்.

மங்கலநாண் ஒன்றே ஒரு ஸ்திரி ஏனைய ஆபரணங்களைத் தரிப்பதற்குக் காரணமாக நின்று, அவற்றிற்கு ஆதாரமாயிருப்பது உலக இயல்பாயிருக்க, ஏனைய ஆபரணங்கள் பிராட்டியாரது மங்கல நாணைக் காத்தது வியப்பு என்று அனுமான் சொல்லியதுபோல் இருக்கிறது, விசாலாட்சி செய்த உபந்நியாசம். தேகபலத்தில் மிக்கவனான சுத்தவீரனும், மந்திராலோசனையில் வல்லவனான அமைச்சனுமே நாட்டாரைக் காப்பதுமன்றிக் கவிவாணனையும் காப்பாற்றி

வருவது பிரத்தியட்ச அனுபவமா யிருக்க, அவ்விருவரையும் தேசத்தாரையும் பொதுவாக உலகத்தில் யாவரையும் காக்கவல்லவன் கவிவாணனே என்று விசாலாட்சி பிரசங்கித்த அருமையே அருமை! எதிர்வாதம் பேசிவந்த மீனாட்சியும் காமாட்சியுமே அதை ஒப்புக்கொண்டு, தம் கட்சி சாய்ந்ததென்று சொல்வார்களானால், அதை மறுக்கவல்லவர் யாவர்! இப்போது நடந்த சம்பாஷணையினால் தன் நாட்டுக்குப் பெரும்பயனை விளைப்பவன் கவிவாணனே என்பது சர்வ சம்மதமாயிற்று.

அப்போது அங்கிருந்த தோழிமார்களில் ஒருத்தி எழுந்து அடியில் வருமாறு கூறலாயினாள்:

அருமைச் சீமாட்டிகளே, கல்வியிற் சிறந்தவர்கள் ஒருங்குகூடி, அழுக்காறு முதலிய தீக்குணங்களின்றிக் கூரறிவுடன் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், அவர்களோடு கூடியிருந்து அடையும் ஆனந்தத்தைவிட சொர்க்க லோகத்தில் அதிக ஆனந்தம் இருக்குமாயின் அங்குப் போய்ப் பார்ப்போம் என்னும் பொருளமைந்த,

'தவலருந் தோல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எங்குடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்போம் அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி.'

என்னும் வெண்பாவின் கருத்தை இன்று நான் அனுபவசித்தமாகக் கண்டு தெளிந்தேன். பெண்கள் கல்வி பயில்வதானால், இப்போது சொற்சுவை, பொருட்சுவை தோன்ற உபந்நியசித்த வனிதா ரத்தினங்களைப்போல் பயில வேண்டும். 'பெட்டைக் கோழி முட்டையிடும்' என்பது போன்ற உதவியற்ற சில சொற்றொடர்களை எழுதுக் கூட்டிப் படிக்கவும், 'ஞகறத்துநம் அமால்' என்று தடுமாறி எழுதவும் தெரிந்துகொண்டு, கல்வியிற் கரைகண்டு உணர்ந்தவர்கள் போல் இறுமாந்து, ஆடவரை மதியாது கிடக்கும் அற்பப் பேதைகளின் கல்வியும் ஒரு கல்வி யாகுமா!

ஆகையால், இந்தத் தேசத்திலுள்ள பெண்கள் யாவரும், என் நாயகிமாராகிய மீனாட்சியம்மாள், காமாட்சியம்மாள், விசாலாட்சி

அம்மாளைப்போல் கல்விபயின்று, நல்லொழுக்க முடையவர்களாகி இருப்பாராக. கல்வியும் ஒழுக்கமும் பெற்றிருப்பதோடு நடுவுநிலை மையும் அமைந்திருக்கவேண்டும். பிறர் நம் வயதிற் குறைந்தோரா யினும், அவர்கள் கூறுவது உசிதமாகத் தோற்றிய காலத்து, பிடிவாதத்தை அறவே விடுத்து, அதை நன்கு மதித்தலாகிய சற் குணமும் இம்மாது சிரோமணிகளிடத்து விளங்கியதுபோல் யாவ ரிடத்தும் விளங்கக் கடவது என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

பின்னர் அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடன் உத்தியானவனத்தை விட்டுத் தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தனர்.

* சுன்னுகம்—குமாரசாமிப் புலவர் இயற்றிய

சிசுபால சரிதம்

நாரதர் வருகை

உலககாரணராகிய நாராயண மூர்த்தி முன்னொரு காலத்திலே பூவுலகத்திலே பரத கண்டத்திலே வடமதுரையிலே யதுகுல திலகன் வசுதேவன் என்பவனுக்குந் தேவகி என்பவளுக்கும் புத்திரராய்ப் பிறந்து, கிருஷ்ணர் என்னும் பெயரும் பெற்றுப், பற்பலவாகிய அற்புதச் செயல்களைச் செய்தும், விற்பனமான விளையாடல்களைச் செய்தும், வீரச்செயல்களைச் செய்தும், தீரச்செயல்களைச் செய்தும், தீயோர்களைச் செறுத்து நீத்தும், நல்லோர்களை மதித்துக் காத்தும் ஒப்புயர்வற்ற உத்தம புருடராய்த் துவாரகை என்னுந் திருநகரியிலே அரசு வீற்றிருந்தார். அவருக்குக் கண்ணபிரான், வாசுதேவன் முதலிய பெயர்களும் உண்டு.

அந்த நாராயணமூர்த்தியாலே இராமாவதாரத்திற் கொல்லப்பட்ட இராவணன் என்னும் இராக்கதனும் வசுதேவன் தங்கையாகிய சாத்துவதி என்னும் நங்கைக்கும் தமகோஷன் என்பவனுக்கும் புத்திரனாய்ப் பிறந்து, சிசுபாலன் என்னும் பெயரும் பெற்றுத், தூர்க்குணங்கள் மிக்குப், பலர்க்குந் தீங்கு புரிந்து, சேதி என்னுந் தேசத்துக்கு அரசனுமாய், மாகிஷ்மதி என்னும் நகரியிலே அரசு வீற்றிருந்தான். அவனுக்குத் தாமகோஷன், சைத்தியன் முதலிய பெயர்களும் உண்டு.

இவர் இருவரும் இவ்வாறு வீற்றிருக்கும் நாள்களில் ஒருநாள், அங்கங்கே நிகழுங் காரியங்களை அங்கங்கே போய் அறிந்து வந்து அவரவர்க்குத் தெரிவிக்கும் இயல்புடைய தேவமுனிவராகிய நாரத முனிவர் தேவுலகுக்குச் சென்றார். அந்த நாரத முனிவரை இந்திரன் நோக்கி, எதிர் கொண்டழைத்துச் சென்று, இன்சொல்

---

* இவர் வரலாறு அனுபந்தம் III ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

—பதிப்பாளர்.

முதலியவற்றால் இனிதுபசரித்து, ஆசனத்திலிருத்திப் பலவித காரியங்களும் பேசியபின், சிசுபாலன் புரியுந் தீங்குகளையுந் தெளிவாக எடுத்துச் சொல்லி, "இச் சிசுபாலனை எப்படியுங் கொல்லுவிக்க வேண்டும். இவனைக் கொல்வதற்கு வல்லவர் யாவர் என எண்ணும் போதெல்லாம் கண்ணபிரான் என்னும் நாமமே மனத்திலும் வாயிலும் வருகின்றது. சுவாமீ, நீர் இப்பொழுது பூவுலகிற் போய்த், துவாரகாபுரியிலே வீற்றிருக்குங் கண்ணபிரானைக் கண்டு, சிசுபாலன் புரியுந் தீங்குகளைச் சொல்லிச், சிசுபாலனைக் கொல்லும் படி கேட்கின்றேன் என்பதையும் அவர்க்குச் சொல்லி வருதல் வேண்டும்" என்று வணங்கிக் கேட்டான். நாரதமுனிவரும் நன்று என்று உடன்பட்டு, விடையும் பெற்றுத், தேவுலகினின்றும் பூவுலகை நோக்கித் துவாரகாபுரிக்கு நேரே இறங்கி வந்தார்.

இறங்கி வருகின்ற நாரதமுனிவருடைய திருமேனியின் செவ்வொளியே பூமிக்கு முதலிற் புலப்பட்டது. அவ்வொளியைக் கண்டார் யாவரும் "ஒளியுருவமான பொருள் ஒன்று மேலே நின்று கீழே வருகின்றது. யாவதென்று தெரியவில்லை. சூரியனுடைய ஒளியோ? அக்கினியுடைய ஒளியோ? சூரியனுடைய ஒளியாயின் குறுக்கே சரிந்து செல்லும்; அக்கினியுடைய ஒளியாயின் மேலே நிமிர்ந்து செல்லும். இந்த ஒளியோ எந்தப் பக்கத்திலும் பரந்து பாய்கின்றது. ஆதலால் இவை யிரண்டும் அன்று. யாதோ வேறொன்று. அற்புதம்! அற்புதம்!" என்று சிந்தித்துத் திகைக்கும் போது கண்ணபிரானும் அதனைக் கண்டு பலவகையாக எண்ணினார். முதலிலே யாதோ ஒளியின் திரட்சி ஒன்றென்றும், பின்னர் உருவுடைய பொருள் ஒன்றென்றும், அதன்பின் ஒரு புருடன் என்றும் படிப்படியே வரவர எண்ணி, வந்து கிட்டியவுடனே நாரதமுனிவர் என்று நேரே கண்டார். கண்டவுடனே, கதுமென எழுந்து வணங்கி, இன்சொல்லுங்கூறி, உள்ளே கொண்டுபோய், அருக்கியம் முதலியன கொடுத்து, இருக்கையில் இருத்தி, மனம் வாக்குக் காயங்களால் வழிபாடு செய்தார். நாரதமுனிவருந் தீர்த்த நீர் தெளித்து, வாழ்த்துரையுங் கூறி, இருக்கும்படி கட்டளையிடக், கண்ணபிரானும் இருந்து நாரதமுனிவரை நோக்கிச் சொல்லுவார்:

கண்ணபிரான் வார்த்தை

"பகவானே,

"நீர் இப்பொழுது இங்கே எழுந்தருளி வந்து நமக்கெல்லாம் நற்காட்சியைத் தந்தீர். உமது காட்சி புண்ணியங்களை ஆக்குகின்றது! பாவங்களைப் போக்குகின்றது! உமது மகிமை நமது மனவிருளை நீக்குகின்றது! உமது வருகை நமது தைரியத்தை வீக்குகின்றது! நாமுஞ் செயற்பாலன யாவையுஞ் செய்து முடித்துளேமாயினம். ஆயினும், உமது வாக்குகளையுங் கேட்கும் விருப்புடையேம்" என்றார்.

அந்த வார்த்தைகளை நாரதமுனிவர் கேட்டு அகம் மிக மகிழ்ந்து, கண்ணபிரானை நோக்கி, "புருடோத்தமரே,

............சிசுபாலன் இங்கே நின்று யாவரையும் வருத்த விடாமல் இப்பொழுதே யமலோகம் போக அவனை அனுப்பிவைக்கும்படி இந்திரன் உம்மை இரந்து கேட்கின்றான்" என்று கூறிமுடித்தார்.

* * * * *

யாகத்துக்கு எழுகை

கண்ணபிரான் உத்தவர் கருத்தையே உறுதியாக்கி தருமர் நடத்தும் ராஜசூய யாகத்துக்கே போகத்துணிந்து, மணிமுடி, குண்டலம், வாகுவலயம் முதலிய அணிகலங்களையும் அணிந்து, பொன்மயமான புடவையையும் உடுத்து, சக்கரம், வில்லு, தண்டு முதலிய படைக்கலங்களையும் எடுத்து யாகத்துக்குப்போக எழுந்தனர். குடைகளும் எழுந்தன. கொடிகளும் எழுந்தன. சாமரைகளும் எழுந்தன. சங்கநாதமும் எழுந்தன. முரசு முதலிய வாச்சியங்களும் எழுந்தன. அந்தப்புர மகளிரும் எழுந்தனர். கடை காவலர், படை காவலர் முதலிய அரசியல் துணைவரும் எழுந்தனர். அமைச்சர், புரோகிதர் முதலிய குழுவினரும் எழுந்தனர். அடுத்த நட்பாளர், அந்தணர் முதலியோரும் எழுந்தனர். வேறு மைந்தர், மகளிரும் எழுந்தனர். யானை, குதிரை முதலிய சேனைகளும் எழுந்தன. ஒட்டகம், கழுதை முதலியனவும் எழுந்தன.

இவரெல்லாஞ் சூழ்ந்துவரக் கண்ணபிரானுஞ் சென்று அங்கே சிங்காரித்து நின்ற சிப்பிரம் என்னுந் தேரிலேறி வீதியில் வந்தார். வீதியில் வரும் பவனியை மாதராடவர் யாவரும் பார்த்தனர். மாதருள்ளே சிலர் மேல் வீட்டிலிருந்து பலகணி வழியாற் பார்த்தனர்; சிலர் கீழ் வீட்டிலிருந்து வாயில் வழியாற் பார்த்தனர்; சிலர் தேருக்கருகிற் சென்று நின்று பார்த்தனர்; சிலர் தெருவிற் செல்லும் குதிரையின் வேகத்தைப் பார்த்தனர்; சிலர் தெருவிற் புழுதியளைந்து விளையாடுஞ் சிறுவரை எடுக்க ஓடினர். தம்மைப்பார்க்குஞ் சனங்களையும் நகரச்சிறப்புக்களையும் கண்ணபிரானும் பார்த்துக்களித்துக் கோபுர வாயிலையும் கடந்து கிழக்கேயுள்ள பெருந்தெருவிற் சென்றார். சனங்களெல்லாம் ஒன்றோடொன்று முட்டி நெருங்கின.

தோளொடு தோள்முட்டத் தொடையொடு தொடைமுட்டத்
தாளொடு தாள்முட்டத் தலையொடு தலைமுட்ட
ஆளொடும் ஆள்முட்ட ஆணும்பெண் ணோடுமுட்ட
நீளொளி மணிவீதி நிரந்தரித் தனசனமே.

(விநாயக புராணம்)

(நிரந்தரித்தல்—நெருங்குதல்)

சனநெருக்கத்தினாலே தேரை மெல்ல மெல்லச் செலுத்திச் சென்றார். செல்லுந் தெருவின் அருகிலே தோன்றும் கடலையும் பார்த்தார். கடற்கரையும பார்த்தார். கடற்றிரை கொண்டு வந்து கரையில் வீசும் முத்துக்களையும் பார்த்தார். கடற்கரையிலே இருந்து தோணிகளிற்சென்று வாணிகஞ் செய்யுந்தோணிச் செட்டிகளையும் பார்த்தார்- கரையிலே நிற்குந் தென்ன மரங்களிலேறி இளநீர் பிடுங்கிக் குடிக்கும் சேனை வீரர்களையும் பார்த்தார். கமுகிலேறிப் பச்சைப்பாக்குப் பிடுங்கித் தின்னும் யானை வீரர்களையும் பார்த்தார். இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு மெல்ல மெல்லப் போய் எதிரேவந்த இரைவதகம் என்னும் மலையை அடைந்தார். சனங்களும் அடைந்தன.

இரைவதக மலைக்காட்சி

இரைவதகமலை எண்ணுக்கு அமையாத வளங்களாலும், கண்ணுக்கு அமையாத காட்சிகளாலும், நதி, குளம், மரம், நிழல் முதலிய சௌகரிய சம்பத்துக்களாலும் மிகுந்து பொலிந்து விளங்குதலாற் சனங்களோடும் கண்ணபிரான் அங்கே தங்கி இளைப்பாறி அப்புறம் செல்ல எண்ணினர். அற்புதமான அம்மலையின் வைபவங்களையும் பற்பல வாய அழகுகளையுந் தனித்தனி பார்க்க விரும்பிய சனங்களோடு தாமும் பார்க்க விரும்பினர். "புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்போர்," மலையின் அகலத்தையும் பார்த்தனர்; உயரத்தையும் பார்த்தனர். அடி மலையின் படர்ச்சியையும் பார்த்தனர். கொடு முடிகளின் அடர்ச்சியையும் பார்த்தனர். கொடுமுடிகளிற் படியுஞ் சந்திர சூரியர்களையும் பார்த்தனர். அடியிற் கிடக்குஞ் சிறு மலைகளையும் பார்த்தனர். முடியிற் கிடக்கும் முகில்களையும்பார்த்தனர். கரையெங்கும் பாசி படர்ந்த சுனைகளையும் பார்த்தனர். திரையெங்கும் வீசிவந்த நதிகளையும் பார்த்தனர். வச்சிரம், இந்திரநீலம், மரகதம் முதலிய மகத்துவமான இரத்தினங்களையும் பார்த்தனர். பச்சிலை, மூங்கில், பனை முதலிய மரங்களையும் பார்த்தனர். கம்பளமா, கவரிமா முதலிய மிருகங்களையும் பார்த்தனர். தம்பம் போலச் சற்றும் அசையாமற் சிலைப் பாறையிற் கிடக்கும் மலைப் பாம்புகளையும் பார்த்தனர். சாதகம், மயில், சாரசம் முதலிய பறவைகளையும் பார்த்தனர். போதுகள் நிறைந்த தாமரைப் பொய்கைகளையும் பார்த்தனர்.

அடியிலே வீழும் அருவிகளையும் பார்த்தனர். புடையிலே ஒதுங்கும் பூஞ்செடிகளையும் பார்த்தனர். செடியின் கீழிருந்து திடீரென எழுந்து கடுகியோடும் முயல்களையும் பார்த்தனர். சிங்கம் முதலிய சில பிராணிகளுக்கு வாசத்தானமான வங்குகளையும் பார்த்தனர். வங்குகளிலும் எதிரொலி தோன்றப் பிளிற்றொலி செய்யும் களிற்றி யானைகளையும் பார்த்தனர். இல்லறத்திலே நின்று இவ்வுலக போகங்களை அநுபவிக்கும் போகிகளையும் பார்த்தனர். துறவறத்திலே நின்று அவித்தை முதலிய ஐந்தும் நீங்கி இறைவனைத் தியானிக்கும் யோகிகளையும் பார்த்தனர். உணவுக்குரிய வடிக்களையும் காய்கனிகளையும் கொடுக்கும் உத்தமமான மரங்களையும் பார்த்தனர். நானபானாதிகளுக்குரிய நறுநீர் கொடுக்கும் நதி குளம் முதலியவை

களையும் பார்த்தனர். நான்கு திசைகளுந் தெரியாது நடுவே மறை விடமாயிருக்கும் கொடி வீடுகளையும் பார்த்தனர். படுக்க இருக்க வசதியாய்க் கிடங்குங் குகை வீடுகளையும் பார்த்தனர். படவீடுகளைப் பக்கங்கள் இரண்டிலும் அமைத்துப் பலவகைச்சரக்குகளையும் வாணிகர் வைத்திருக்குங் கடைவீதிகளையும் பார்த்தனர். விலைச் சரக்குகளையுந் தனித்தனி பார்த்தனர்.

இவைகளையும் இவை போன்ற பிறவற்றையுங் கண்ணபிரான் பார்த்தபின் தமக்கென்றமைந்த படவீட்டிலேதங்கினர். அவரோடும் வந்த அரசர்களும் அடுத்த வீடுகளிலே தங்கினர். ஏனையோர் தத்தமக்கு ஏற்ற இடந்தோறும் தங்கினர். யானை, குதிரை முதலிய சேனைகளும் அங்கங்கே பரந்தன.

* * * * *

[இந்திரப் பிரத்த நகரத்தில் தருமர் இராச சூய யாகம் நடத்தினர்.] யாசகர்களுக்குத் தருமர் திரவியங்களை வாரி வாரி வறுமை நீங்கும்படி வீசினர்.

தான தருமங்கள் முடிந்த பின், தருமர் "முற்பூசையாகிய அக்கிர பூசைக்குத் தக்கவர் யாவர்?" என்று சபையிலிருக்குந் தக்கோரைக் கேட்டனர். அக்கேள்விக்கு வீட்டுமர் "இந்தச் சபையில் இருக்கும் அந்தணருள்ளும் அரசருள்ளும் பெந்துவாகிய கண்ண பிரானே விசிட்ட குணங்களெல்லாம் நிறைந்து விளங்குகின்றார்; அக்கிர பூசையும் அவர் தாமே கைக்கொள்வார் என்று கருதுகின்றேம்" என்று கூறினர். வீட்டுமர் வார்த்தையைக்கேட்ட தரும புத்திரர் அக்கிர பூசையைக் கண்ணபிரானுக்கே செய்தார்.

சிசுபாலன் நிந்திக்கை.

அக்கிரபூசை கண்ணபிரான்பால் அடைந்த செய்தியைத் தூர்க் குணனுகிய சிசுபாலன் கண்டு மனநிலை திரிந்து பொறாமை கொண்டான். வெடிபட முழங்கி வெட்டெனவான கீட்டுர வார்த்தைகளை வெடுவெடெனச் சொல்லுவான்:

பூபால ரவையத்து முற்பூசை பெறுவார் புறங்கானில்வாழ்
கோபால ரோவென் றுருத்தங் கதிர்த்துக் கொதித்தோதினன்
காபாலி முனியாத வெங்காம னிகரான கவினெய்தியேழ்
தீவால டங்காத புகழ்வீர சுபமன்ன சிசுபாலனே,

சூரன்கு லத்தோர் குபேரன்கு லத்தோர் சுடர்ப்பாவகப்
பேரன்கு லத்தோர் முதலோ ரிருந்தார்கள் பெயர்பெற்றபேர்
வீரங்கொ லோவாகு சாரங்கொ லோசெல்வ மிச்சங்கொலோ?
பூரம்பு ராசிப் புவிக்கென்று முதுவோர்கள் பொதுவோர்கொலோ?

(பாரதம்)

* * * * *

சிசுபாலன் "கண்ணபிரானே,

"அக்கிரபூசையை அரச வரிசையிற் சேர்ந்த தக்கவர் ஒருவரே பெறவேண்டும். நீர் அதற்கேற்ற நிலைமை யுடையீரல்லீர். நீர் யார் என்பதை நீரே ஆராய்ந்து பாரும். பலராமருடைய துணையால் வந்த வலிமை யன்றி உமக்கென வேறுயிருக்கும் வலிமை யாது? வலிமை யுளேன் என்று தலைமை பேசுகின்றீர். காலயனன், சராசந்தன் முதலிய காவலர்களுக்குச் சாலவுந் தோற்றுத் தலைமையிழந்தீர். அப்பொழுது உமது வலிமை ஆரிடம் போயிற்று?" என்றும்,

"அரசர்களே,

"இந்தச் சபையிலே சிங்கவேறுபோல நீங்களெல்லீரும் பார்த்துக் கொண்டிருக்கவும் உங்களை ஒரு சிறிதும் பாராமல் காட்டு நாயை மதித்து அவிப்பாகங் கொடுப்பவர் போல அந்தக் கண்ணபிரானை இந்தத் தருமபுத்திரர் நன்கு மதித்து அக்கிரபூஜை செய்தாரே! இச்செயல் உங்களுக்கெல்லாம் பேரவமானம் என்பதை நீவிரறியாததென்?" என்றும் கூறி, கை கொட்டி அட்டகாசஞ் செய்தான்.

* * * * *

அதனை நோக்கிய யதுகுல வீரர்களுஞ் சிசுபாலன் மேற் சினந்திருகி எழுந்தார். அவரைக் கண்ணபிரான் தடுத்து, "நூறு குற்றம் பொறுப்பேன்" என்றதை நோக்கி "நிந்தைகளில் எத்தனை நிறைவேறிற்று" என்று சிசுபாலன் சொல்லும் நிந்தைகளைச் சிந்தையிற் கணித்து வந்தார். நிந்தையாலே சிந்தை திரிந்து வேறுபட்டாரல்லர். வீட்டுமரோ "சாது நிந்தை தாங்கலாற்றுது" என்று சிந்தை வேறுபட்டுக் கரைகடந்துவரும் கடல் போல முழங்கிக் கம்பீரமாயுந் தைரியமாயும் பேசுவார். "இச்சபையிலே யான் செய்வித்த அக்கிர பூசையிலே உக்கிரமும் பொருமையுமுடையவன் இக்கணம் எழுந்து வில்லு வளைக்கக் கடவன். எல்லா அரசர்கள் சிரசிலும் இந்தப் பாதம் வைக்கப்பட்டது" என்றார்.

சிசுபாலன் எழுந்து படம் விரித்தாடும் பாம்புபோலச் சீறிச், சடலம் நடுநடுங்கிக், கண்களினின்றும் பொறிகள் பறக்க நின்று, விடம்போன்ற சொற்களை விளம்புவான்:

'அரசர்களே,

"சோர புத்திரர்களாகிய பாண்டவரையும், வயது சென்ற கிழவனாகிய வீட்டும சந்நாசியையும், கஞ்சனுடைய ஏவலாளனாகிய கண்ணபிரானையும் நீவிர் இன்னுங் கொல்லாதிருத்தல் என்னையோ? இந்தக் கண்ணபிரான் போர்முகத்திலே வந்து என் முகத்துக்கெதிரே ஒரு காலமும் நிற்கமாட்டார். இவ்ரைக்கொல்லுதல் அரியகாரியமன்று. இவரை அக்கிரபூசைக்குத் தக்கவர் என்று தெரிந்தெடுத்த வீட்டுமருந் தருமபுத்திரரும் யுத்தமாகிய உரைகல்லிலே இவரையும் என்னையும் வைத்து உரைக்கையாகிய பரீக்ஷை செய்து பார்க்கக்கடவர். பார்க்கும்போது தக்கவர் யாவர் என்பதும், தகவிலர் யாவர் என்பதும் யாவர்க்கும் புலப்படும். என்னுடைய பாணங்கள் குடித்துக் கழித்துவிட்ட இவருடைய இரத்தமாகிய எச்சிலைப் பறவைகளும் பூமியும் விரைவிலே பருகுக" எனச் சொல்லித் தருமபுத்திரர் தடுப்பவுங் கேளானுய்ச் சபையை விட்டு வெளியிற் போனுன். அவன் பக்கத் தரசரும் போயினர்.

* * * * *

இப்படியே கண்ணபிரானுஞ் சிசுபாலனும் விண்ணிலே நின்றும், மண்ணிலே நின்றும் எண்ணிலவாகிய படைகளை எடுத்துப் பன்முறை செலுத்திப் பயங்கரமான பெரும் போரை வெகு நேரஞ் செய்தனர். அதன்பின் கண்ணபிரான் இவனை இனிக் கொல்லுதல் கடனுகும் என்று கருதித் தமது திருக்கரத்திலிருந்த சக்கராயுதத்தைச் செலுத்தினுர். சக்கராயுதம் மிக்க பிரகாசத்தொடுஞ் சென்று சிசுபாலனுடைய சிரசைத் துணித்துக்கொண்டுபோய் அண்டகோளகையுற வீசிவிட்டுக் கண்ணபிரானுடைய திருக்கரத்திலே வந்து சேர்ந்தது. தலைபோன சிசுபாலனுடைய உடலிலே நின்றும் ஒரு சோதி தோன்றிச் செங்கதிரையும் பிளந்து போய்த் திரும்பிவந்து எங்கணும் ஒளி பரப்பி மண்ணளந்த கடவுளுடைய மலரடியை மருவிற்று. அதுகண்டு சவையிலிருந்த வேதியர் அரசர் ஆதியர் யாவரும் அதிசயித்தார். தேவர்கள் பூமழை சொரிந்தனர்.

குறிப்புரை.

I

திருநாவுக்கரசு சுவாமிகள்

தேவாரம்.

(i)

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வரும் சைவசமய குரவராவர். (குரவர்-வழிபடத்தக்க பெரியோர்.)

இவர்கள் முறையே ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி, ஆளுடைய அடிகள் எனவும் வழங்கப் பெறுவர்.

இவர்களுள் முதல் மூவர் அருளினவற்றிற்குத் தேவாரம் எனப் பெயர் வழங்கும். சைவத் திருமுறை வைப்பில், சம்பந்தர் தேவாரம் முதல் மூன்று திருமுறைகளாகும்; திருநாவுக்கரசர் தேவாரம் நான்கு முதல் ஆறுவரையில் உள்ள திருமுறைகளாகும்; சுந்தரர் தேவாரம் ஏழாந் திருமுறையாகும்.

தேவாரம்: தே + வாரம்; தே-தெய்வத்தன்மை, வாரம்-தெய்வப் பாடல்.

திருநாவுக்கரசருக்கு அப்பர், வாகீசர், தாண்டகவேந்து என்னும் இவை முதலிய பெயர்கள் வழங்கும்.

சம்பந்தரும் அப்பரும் ஒரே காலத்தவர். சம்பந்தர் திருச்செங்காட்டங்குடித் தேவாரத்தின் பத்தாம் பாசுரத்தில் சிறுத்தொண்டரைக் குறித்திருக்கிறார். சிறுத்தொண்டர் என்பவர் நரசிம்மப் போத்தரையன் என்னும் பல்லவ அரசனிடம் மந்திரியாயிருந்து, படையெடுத்துச் சென்று, வாதாவி நகரத்தை அழித்தது ஏழாம்

நூற்றாண்டின் இடையிலாகும். ஆகவே, அப்பரும் ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் விளங்கினவர் ஆவர்.

அப்பர் சுவாமிகள் நடுநாட்டில் ஆமூர் என்னும் ஊரில் பிறந்தவர். தந்தையார் பெயர்: புகழனார். தாயார் பெயர்: மாதினியார். தமக்கையார் பெயர்: திலதவதியார். குலம்: வேளாள குலம். குழந்தைப் பருவத்தே அப்பர் தாய் தந்தையரை இழந்தமையால் திலதவதியாரால் வளர்க்கப்பட்டார். கல்வி கற்று, சைனமதத்திற்புகுந்து, அச்சமய நூல்களைச் செவ்வனே ஆராய்ந்து, தருமசேனர் என்னும் பெயருடன் சிறந்து விளங்கினர்.

அப்பருக்கு உண்டான சூலை நோயைத் திலதவதியார் வேண்டுகோளுக்கு இரங்கித் திரு அதிகை வீரட்டான ஈச்சுரர் நீக்கினர்.

உடனே, அப்பர் சுவாமிகள் தேவாரம் பாடத் தொடங்கினர். பல ஆயிரம் பாடல்கள் பாடினர். 'அப்பருக்கு எண்பத்தொன்று' என்று கூறும் பாடலால் 81 ஆண்டு வாழ்ந்தனர் என்பது விளங்குகிறது.

அப்பருடைய பாடல்களைப் படிப்பவர்கள் கண்ணீரும் கம்பலையுமாய் உள்ளம் உருகிப் பேரானந்தம் அடைவார்.

1. ஓம்பினேன் - பாதுகாத்தேன். கூடு - உடம்பு: (கூடகங் கொண்ட வாழ்நாள்: சிந்தாமணி, காந்தருவதத்தையார் இலம்பகம், 18). வாளா-பயனில்லாமை. காம்பு இலா மூழை-மூங்கில் இல்லாத அகப்பை. முகத்தல்-மொள்ளல். காம்பு இல்லாத மூழை முகக்காதது போல உறுதிப்பாடு இன்மையால் யான் கருதியவற்றை முடிக்காதவனாயுள்ளேன் என்றார். தேரை-தவளையின் ஒருவகை. பாம்பின்வாயில் அகப்பட்ட தேரையானது தான் இறக்கப்போகின்ற தருணம் சமீபித்திருத்தலை அறியாமல் பலவற்றை நினைத்தல் போல யான் எமன் வரும் நாள் இன்றோ நாளையோ என்று கருதி அச்சப்படாமல் உலக வாழ்க்கையில் பல பல எண்ணி உழல்கின்றேன் என்றார். ஒற்றியூர் உடைய கோவே-ஒற்றியூரை உடைய தலைவரே!

2. தோணி-மரக்கலம். கோல்-(மரக்கலம் செலுத்துவதற்கு நீரில் அழுத்தும்) மரக் கொம்பு. கடல் ஓடும் போது-கடலில் ஓடும்போது.

தோணிபற்றி, சரக்கை ஏற்றி, கோலையூன்றி, செறிகடல் ஓடும் போது என இயைக்க.

மறியும்போது-தடைபடும்போது. மதன்-செருக்கு: (மன் எயில் கதுவும் மதன் உடை நோன் தாள்-பட்டினப்பாலை. 279.) தாக்கி-மோதி. செறி-நீர்மிக்க; செறிகடல்:வினைத்தொகை. உனை உனும்-உன்னை உன்னும் (நினைக்கும்), அறிய ஒண்ணாது-யான் உன்னை அறிதல் முடியாது: ஒண்ணாது-வினைமுற்று: ஆகையால் நீயே உன்னை நான் நினைக்கும்படி அருள் புரிக.

அறிய ஒண்ணாது-அறிய முடியாத பொருளாகிய உன்னை நினைக்கும்படி அருள்க என்றலுமாம் (ஈண்டு 'ஒண்ணாது' என்பது வினையாலணையும் பெயராகும்).

3. தவர்-முனிவர். மூவா-இறவாத, மருந்து-அமுதம். மூவா மருந்து-இறவாமையைச் செய்யும் அமிர்தம். மறிகடல்-(அலைகள்) மடங்கி வருகிற கடல். குலவரை-சிறந்த மலைகள். திருந்து ஒளிய-தாரகை-செவ்வைப்பட்ட ஒளியையுடைய நக்ஷத்திரங்கள் (ஒளிய-குறிப்புப் பெயரெச்சம்); ஒளியை யுடையனவாகிய நக்ஷத்திரங்கள்-(ஒளிய-குறிப்பு வினையாலணையும் பெயர்). திரிசுடர்கள்ஓர் இரண்டும்-ஞாயிறும், திங்களும்;ஞாயிறு, திங்கள், நெருப்பு என்னும் மூன்று சுடருள் நெருப்பு திரியாத சுடராகையால், திரிசுடர் என்றும் கூறியது, திரிகின்ற (சஞ்சரிக்கின்ற) தன்மை வாய்ந்த சூரியசந்திரர்களை மட்டும் உணர்த்தி நின்றது; திரிசுடர்-வினைத்தொகை; பின் இரு சுடர் என்றதனால் முன்னே திரி என்பதற்கு மூன்று என்று பொருள் கொள்ளல் பொருந்தாது.

பெரும் பற்றப் புலியூர்-பெரும்பற்றினால் புலிப்பாதன் பூசித்த ஊர் (சிதம்பரம்): புலிப்பாதன்-வியாக்கிரபாதர். இப்பொருள் சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகள் தாம் பதிப்பித்த தொண்டமண்டல சதகத்தில் கூறியுள்ளனர். இத்தொடர்க்கு, 'தன்னைத் தரிசிக்கும் ஆன்மாக்களுக்குப் பெரும் பற்றை விளைவிக்கும் புலியூர் என்பது' பொருள் என்று மதுரைத் தமிழ்ச்சங்க அகராதி கூறும்.

அரிய பிறப்பைப் பெற்றும் கடவுளது புகழைப் பேசாத நாட்களால் பிறவி எடுத்த பயனைப் பெருமையால் அந்நாட்கள் அரிய பிறப்பைப் பெற்றிராத நாட்களேயாம் என்க.

4. மனத்தகத்தான்-மனத்திலிருப்பவன்: அகம்-ஏழாம் வேற்றுமை உருபு. தலைமேலான்: மேல் ஏழாம் வேற்றுமை உருபு. வாய் ஆர-வாய் நிரம்ப. தன் அடியே-(பிறிது ஒன்றையும் நோக்காமல்) தன் திருவடிகளையே: ஏகாரம்-பிரிநிலை. தொண்டர்-அடியார். சிரம்-தலை.

இப்பால்-இவ்வுலகத்தில். செம்பொன் புனத்தகத்தான்-செம்பொன்னாலாகிய இடத்தில் எழுந்தருளியிருப்பவன்: செம்பொன் புனம்-சிதம்பரம்; பொன்னம்பலம் என்றபடி: புனம்-காடு; இடம்; தில்லைவனம் என்னும்வழக்கு உண்மை அறிக. செம்பொன் மயமான மேருமலையினிடத்தில் இருப்பவன் எனினுமாம்.

செம்பொன் புனத்தகத்தார் என்ற பாடத்திற்கு: மிக்க அழகிய முல்லை நிலத்தில் உண்டாகின்ற.நறுங்கொன்றைப் போது-மணம் மிக்க கொன்றைப்பூ: கொன்றைப் பூ சிவபிரானுக்கு உரிய அடையாள மாலை என அறிக.

5. மை-அஞ்சனம். கண்ணாள் - காமாட்சி அம்மையார். அல்லான்: குறிப்புவினைமுற்று. உவமன் இல்லி-உவமை இல்லாதவன். எழுதி-சித்திரம் தீட்டி.

அளவிலாற்றலுடைமை முதலிய சிறப்புக் குணங்கள் பொருந்திய கடவுளைச் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடைய மக்கள் தங்கள் ஆராய்ச்சி வல்லமையால் உணரமுடியாமல் பலகாலும் அவன் அருளை நினைந்து நினைந்து அன்பினால் உள்ளம் உருகுவாராயின் கடவுள் உள்நின்று உணர்த்த, கடவுள் உருவம், ஊர், உவமை, நிறம், வண்ணம் ஆகிய இவற்றை ஒருவாறு உணர்வார்கள் என்க.

நாலாயிரப் பிரபந்தம்

திருக் குறுந் தாண்டகம்

இது, திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்தது. திருமால் அடியவர்களாகிய ஆழ்வார் பன்னிருவருள் திருமங்கை ஆழ்வார் ஒருவராவர்.

இவர், காவிரியாற்றின் வளஞ்சுரக்கப் பெற்ற சோழ மண்டலத்திலே திருமங்கை என்னும் நாட்டிலே, குறையலூரிலே, கள்ளர் மாபிலே, சோழ அரசனுக்குச் சேனைத்தலைவனாக உள்ள ஒருவர்க்கு மைந்தராய்ப் பிறந்தனர்.

இவர் இளமையில் ஆயுதப் பயிற்சியில் தேர்ச்சிபெற்றுச் சோழ அரசனிடத்தில் சேனாதிபதியாக விளங்கி, பகைவரை வென்று அரசனுக்குப் பெரும்புகழ் வளர்த்தமையால் சோழன் இவரை ஒரு சிற்றரசராக ஏற்படுத்தினான். இவர் இசை நாடகங்களில் பெருவிருப்புடையராய் இச்சையாதி விஷயங்களில் எளியராயினர்.

இவர் மணஞ் செய்துகொண்ட பிறகு பாகவத ஆராதனத்தை மேற்கொண்டு பொருளை விரைவாகச் செலவிட்டு வருதலைச் சோழன் அறிந்து இவரிடம் திறை வாங்கி வரும்படி ஏவலாளரை அனுப்பினான். இவர் திறை செலுத்தாமல் காலதாமதம் செய்தார். பிறகு இவரை நிர்ப்பந்திக்கும்படி சோழன் அனுப்பிய சேனைத்தலைவனைப் புறங்கொடுத்து ஓடும்படி செய்தார். பின்பு, அரசனே நேரில் வந்து இவரது ஆற்றலை உணர்ந்து இவரைத் தன் மந்திரி வசமாக்கிவிட்டுச் சென்றான். அம்மந்திரி இவரை வற்புறுத்தவே, காஞ்சிபுரம் சென்று பொருள் பெற்றுத் திறையைச் செலுத்தினர்.

ததியாராதனம் செய்யும் தொண்டு நாளுக்குநாள் விருத்தியாக, கையில் பொருளில்லாது போகவே, இவர் வழிபறித்தாவது பொருள் சேர்த்து அக்கைங்கரியத்தை விடாது நடத்தவேண்டும் என்று துணிந்து, அங்ஙனமே செய்து, பேறு பெற்றார்.

இவர் ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடவல்லவ ராதலால் இவருக்கு நாற்கவிப் பெருமாள் என்னும் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்வியப் பிரபந்தங்களுக்கும் அங்கங்களாக அமையும்படி, பெரிய திருமொழி, திருக் குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திரு எழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு பிரபந்தங்களைச் செய்தனர் என்ப.

திருமங்கை ஆழ்வார் கி. பி, எட்டாம் நூற்றாண்டில் விளங்கியவராவர்,

I இரும்பு அனன்று: அனன்று-காய்ந்து. உண்டநீர் போல (அச்சூடு அடங்கும்படி) குடித்த நீரைப்போல .அரும்பெறல்-பெறல் அரும். அன்பு புக்கிட்டு-அன்பு (அவன் விஷயத்திலே) வைத்து. உய்ந்து போனேன்-உஜ்ஜீவித்தேன். வரும்-(அன்பர்களை இருந்த இடத்தே தேடி) வருகிற. புயல் வண்ணனுரை-மழைக்காலத்து மேகம்போன்ற நிறத்தை யுடையவரை, வைத்து-பொருந்த வைத்து. பருகினேற்கு: ஒருமை-பருகினேன் + கு-அனுபவிக்கின்ற எனக்கு. அன்பு புக்கிட்டு-அன்பை அவர் பக்கலிலே ஆக்கி. அடிமை பூண்டு-வழுவிலாத அடிமையை ஆன்மாவுக்கு ஆபரணமாகப் பூண்டு.

வரும்புயல் வண்ணனுரை: மலை முதலிய இடங்களில் இருந்து கொண்டே மழைபெய்து மக்களுடைய நீர் வேட்கையைத் தணிக்கும் மேகம் போலன்றி, கடல் நீரைச் செவ்வையாகப் பருகி, உயிர்கள் இருக்கும் இடத்தே வந்து மழையைச் சொரியும் மேகம்போலே அன்பர்கள் இருக்கும் இடத்தைத் தாமே தேடிவந்து அருள் செய்பவரை-என்க.

(புயல் வண்ணனுரை) மருவி என் மனத்து வைத்து-தம்மை மறந்து நெருங்கித் தம்மனத்து வைத்ததனுல் உலக சஞ்சாரம் நீங்கிற்று என்கின்றார்.

எனவே, உலக சஞ்சாரம் இருக்குமாகில் புயல் வண்ணனுரை மனத்தில் வைத்தல் இயலாது என்பது கருத்து.

கரும்பினின் சாறுபோலப் பருகினேற்கு:பருகுதல் என்றதனால், எம்பெருமான் ஆழ்வார் உள்ளத்தில் கலக்கக் கலக்க, ஆழ்வார் விழுங்கும்படியான பெருமுயற்சி இல்லாமல் பருகுவதற்கு உரிய ஒப்பற்ற நீரானுர் திருமால் என்க.

II இம்மையை-இவ்வுலகத்தில் தனக்கு வேண்டிய விஷய ஞான சுகத்தைத் தருமவனை. மறுமைதன்னை.உடல்-கழிந்த பிறகு இன்பவடிவமான தனது தொண்டினைத் தரும் அவனை: உலக பாசங்களில் உண்டாகும் துக்கம் நீங்குவதே சுகம் ஆகும் என்க. மெய்ம்மையை-இம்மை மறுமைக்கு உபாயமாக உள்ள மெய்ப்பொருளை. சோலை-(பரந்து வியாபித்துள்ள கடவுள் சுலபமாகப் பயன்படவே தங்குகின்ற) சோலை. செம்மையைக் கருமை தன்னை-யுகந்தோறும் அவ்வவ் யுகங்களிலுள்ளார்க்குத் தக்க வடிவுகளைக் கொண்டு அவர்களுக்கு அருள்புரிபவனை. திருமலை ஒருமையானை-வேங்கடமலையில் நின்று நித்திய ஸூரிகளுக்கும், நித்திய சமுசாரிகளுக்கும் ஒக்க முகங்கொடுக்குமவனை. தன்மையை—அன்பர் வசமாக நிற்கும் தன்மை யுடையானை. நினைவார்-நினைக்கவல்லவர். என்தன் தலைமிசை மன்னுவாரே-கடவுள் திருவடிகளும் கடவுளை (நினைக்க வல்லவராகிய) இவர்கள் (அன்பர்கள்) திருவடிகளும் என் தலையில் ஒக்கப் பொருந்துவன அல்ல; இவர்கள் திருவடிகளே என்தலையில் பொருந்துவன.

III தெள்ளியீர் ! தேவர்க்கெல்லாம் தேவராய் உலகங் கொண்ட ஒள்ளியீர் ! உள்ளமோ ஒன்றில் நில்லாது ; என்றன் உள்ளம் ஓசையில் எரி நின்றுண்ணும் கொள்ளிமேல் எறும்புபோலக் குழையும் ; எழுமையும் உம்மை அல்லால் துணையிலோம் என இயைக்க.

ஒன்றில் நில்லாது-ஒரு விஷயத்திலும் பொருந்தி யிருக்கிறதில்லை. நின்று-ஒரு படிப்பட நின்று. குழையும்-(பிறப்பினை நினைத்து) நெகிழ்ச்சி யடையும்.தெள்ளியீர்!-தெளிந்த சுபாவத்தை யுடையீர்! உலகம் கொண்ட-உலகத்தை (மகாபலி பக்கத்திலே தாரை நீரை ஏற்று) வாங்கிய, ஒள்ளியீர்!-ஒளியுடையவரே ! (ஒண்மை-அழகு). எழுவகைப் பிறப்பு: தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பன. எழுமை-'எல்லா அவஸ்தைகளிலும்' எனினுமாம்.

என் உள்ளமானது பிறப்பு இறப்புக்களை நினைத்து உருகா நின்றது ; எனக்குத் தேவரீரை ஒழியத் துணை இல்லை என்கிறார்.

கொள்ளிமேல் எறும்புபோலக் குழையுமால் என்றன் உள்ளம்- இருதலைக் கொள்ளியின் இடையில் அகப்பட்ட எறும்புபோல, பிறப்பு இறப்புக்களின் துன்பங்களை நினைத்து என் உள்ளம் உருகுகின்றது.

முழுமையும் துணையிலோம்-உயிர்களின் ஞானத்திற்குப் பயன் பிறவியின் தொடர்பு தீமை என்று அறிதல் ; கடவுள் ஞானத்திற்குப் பயன் உயிர்களைப் பிறவியின் தொடர்பினின்றும் தவிர்த்தல்: ஆகையால், தேவரீர் அருள்செய்ய வேண்டும் என்கிறார்.

மனக் கலக்கம் அடைந்தவர் அக்கலக்கம் தீரத் தெளிவுடையவரைச் சார்வது பொருத்தமாகும்.

தெளிவுடையராவார்:

இந்திரனுடைய அரசாட்சியை மகாபலி கைப்பற்றிக் கொண்டான். இந்திரன் வேண்டுகோளுக்கு இரங்கி, திருமால் மகாபலியிடம் சென்றார். திருமால் இந்திரன் வேண்டுகோளை நிறைவேற்றுவதாயின் மகாபலிக்குத் தீமை விளையும். மகாபலிக்கு நன்மை புரிவதாயின் இந்திரன் வேண்டுகோள் நிறைவுறாது. இவ்விருவருக்கும் நன்மை உண்டாகும்படி காரியம் நிகழ்த்தியவர் தெளிவுடையராவார்:

எங்ஙனம் எனின்,

தேவர்களுக்கெல்லாம் தேவராயிருந்தவர் தடக்கையைத் தாழ ஏற்றுப் பூமியை அளந்து கொண்டார். மகாபலியிடம் திருமால் தாம் சென்று பிச்சை ஏற்றதால் மகாபலியின் வள்ளல் தன்மை மேம்பட்டது. மகாபலி பாதலத்தில் அழுந்தியபடியால் இந்திரனுக்கும் அரசு கிடைத்தது. ஒன்றிற்கு ஒன்று விரோதமான வழியில் முடிக்க வேண்டிய காரியங்களை இருவகைக்கும் சிறப்புண்டாகும்படி செய்தமையின் 'தெள்ளியீர்!' என்றார்.

IV. மடநெஞ்சமே! அந்தணனை, மந்திரத்தை, மந்திரத்தால் மறவாது, வாழுதியேல், என்றும் வாழலாம் என முடிக்க.

முதல்வன்-காரணபூதன். கால்-காற்று. விண்-ஆகாயம். பூதம் ஐந்தாய்-நிலம், நீர், தீ, காற்று, விண் என்னும் ஐமபெரும் பூதங்களின் உள்ளுயிராய வியாபித்து. செந்திறத்த-செவ்வையையுடைய தமிழோசை வடசொல்லாகி-"தமிழோசையாகி, வடசொல்லாகி" என்பர்; தமிழோசையாகி-தமிழ் வேதமான பிரபந்தங்களும் ஆகி; வடசொல் ஆகி-வடமொழி வேதமும் ஆகி. திசை நான்கும் ஆகி-நான்கு திக்குக்களிலும் உள்ள பொருள்களுக்கும் உள் உயிராகி. திங்கள் ஞாயிறு ஆகி-சந்திர சூரியர்களுக்கும் உள்ளுயிராய். அறியலாகா அந்தணனை-அறியக் கூடாத தூய தன்மையாய் விளங்குபவனை. வாழுதியேல்-அனுபவிப்பாயாகில். மடநெஞ்சமே-எனக்கு இசைந்து நடக்கும் நெஞ்சே! மடம்-அழகு (சிலப்); மேன்மை (புறநா). வாழலாம்-நித்திய ஸூரிகள்நடுவே இருந்து அனுபவிக்கலாம்.

செந்திறத்த தமிழோசை வடசொல் லாகி: என்பதில், தமிழ் வேதத்தை முற்கூறியதற்கு நியாயம், தமிழ்வேதம் சாதி வித்தியாசம் இன்றிப் பலரும் ஓதுதற்கு உரியதாய் இருத்தலாலும், தன்னுடைய அர்த்தங்களைச் செம்மையாகத் தெரிவித்தலாலும், தனக்கெனத் தமிழின் துறைகளைக் கொண்டிருத்தலாலும், வடமொழி வேதம் போலத் தமிழ்வேதமும் பிரமாணமாம் என்பதைத் தெரிவித்தலாலும் என்பது.

வடமொழி வேதத்தின் பொருள் உணரவேண்டுமாயின் ஆறங்கங்களின் உதவி அவசியம் வேண்டும். தமிழ் வடசொல் என்னும் இருமொழிகளுள் தமிழை முற்கூறியது தமிழ்நாட்டில் இருமொழிகளும் வழங்குதலும் வடநாட்டில் வடமொழி மட்டும் வழங்குதலும் எனபதனும், தமிழ் மொழியானது உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும் வழங்குகின்ற சிறப்புடையது என்பதனும் எனத் தெளிக.

தமிழ்மொழி தன் அர்த்தத்தைச் செம்மையும் இன்மையுமாக விளக்குவது ஆகையால் 'செந்திறம்' என்னும் அடைமொழியைக் கொடுத்தார்.

தேவர்க்கும் அரியானை: தேவர்கள் உயிர்த் தொகுதியில் அறிவாற்றலால் மேம்பட்டவர்களாகையால் தேவர்களாலே அறியப் படாதவன் எனவே, மற்ற உயிர்களால் உணரப்படாதவன் என்பது விளங்கும்.

அந்தணனை-'சுத்தனை' (ஆழ்வார்கள் அந்தணர் என்னும் சொல்லால் தூய்மையைச் சொல்லுவர்.) அந்தணர்மாட்டு-அந்தணர்களுக்குச் செல்வமான வேதத்தின் சிரசிலே. அந்திவைத்த-மறைவாயிருக்கும் மந்திரத்தை (அஷ்டாக்ஷர மந்திரத்தை). மறவாது-உலக விஷயங்களில் செலுத்தாமல்: தன் நன்மையை விரும்பியும் தன் துன்பம் நீங்கவும் கடவுளை உபாசிக்கிற தன்மையை நீக்கி, கடவுளை இடைவிடாது சிந்தித்தலை மறவாது என்பது விளங்கும்.

நெஞ்சைப் பார்த்து 'வாழுதியேல்' என்றது:
வாழ்க்கையின் அனுபவம் நெஞ்சிற்கு உரியதாகையால்.

என்றும் வாழலாம்-நித்திய ஸூரிகளோடு உயிருள்ள அளவும் வாழலாம்.

V. நீரகத்தாய்-திருநீரகம் என்னும் பதியிலே நித்திய வாசம் பண்ணுகிறவனே! நெடுவரையின்-உயர்ந்துள்ள வேங்கடமலையின், உச்சிமேலாய்!-சிகரத்திலே நின்றருளினவனே!

நிலாத்திங்கள் துண்டத்தாய்!-சகல கலைகளாலும் நிறைந்தவனான சந்திரனைப்போலத் தாபத்தைப் போக்குபவனாய் (பூமியில்) ஒரு பிரிவான நிலாத்திங்கள் துண்டம் என்கிற பதியில் நின்றருளினவனே!

நிறைந்த-(அழகும் சீலமும்) நிறைந்த, கச்சி ஊரகத்தாய்-காஞ்சிபுரத்திலே திருவூரகத்தில் நின்றவனே! ஒண்துறைநீர்-ஒள் நீர்த் துறை-அழகிய தடாகத்தின் கரையிலே.

வெஃகா உள்ளாய்!-திருவெஃகாவிலே கண் வளர்ந்தருள்பவனே! கிடந்த திருக்கோலம்; திருவெஃகா என்பது சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில் என்றும் வழங்கும். விஷ்ணுகிரகம் என்னும் சொல் வெஃகா எனத் திரிந்தது என்பர்.

உள்ளுவார்-(இறைவனே என்று) சிந்திப்பார். உலகம் ஏத்தும் காரகத்தாய் !-மக்கள் யாவரும் துதிக்கும்படி திருக்காரகத்தில் நின்றருளினவனே ! கார்வானத்துள்ளாய் !-கார்வானம் என்னும் பதியில் எழுந்தருளி யிருப்பவனே !

கள்வா!-(அடியவர்களுக்காக உள்ள திருமேனியை அவர்களுக்குக் காட்டாத) கள்வனே!

காமரு- காமம் மருவு-அழகு பெருந்திய. பேரகத்தாய்!-திருப்பேரகம் என்னும் பதியில் எழுந்தருளி யிருப்பவனே!

பேராதென் நெஞ்சின் உள்ளாய்!-என் நெஞ்சில் பேராது உள்ளாய்.

நீரகம்: நீரின் தன்மையை யுடையவன் எழுந்தருளிய பதி; நீரின் தன்மையாவது: உயிர்கள் இருவினையின் தொடர்பினாலே தேவர்கள் மனிதர்கள் முதலிய பிறப்புக்களை அடைகின்றன. அவ்வப் பிறப்புக்களைக் கொண்ட உயிர்களுக்கு வெவ்வேறு வகையாக உணவுகள் அமைகின்றன. ஆயினும், எல்லா உயிர்களுக்கும் பொதுவாக நீர் (தண்ணீர்) ஒரே வகையில் பயன் படுகிறதுபோல் கடவுள் யாவராலும் அனுபவித்தற்கு உரியரா யிருக்கின்றார் என்க.

நெடுவரையின் உச்சி: இந்தப் பூமியில் உள்ளவர்களே அன்றிச் சொர்க்கம் முதலிய உலகங்களில் உள்ளவர்களும் தரிசிக்கும்படி உயர்ந்துள்ள மலை.

நிறைந்த கச்சி ஊரகம்: அழகாலும் சீலத்தாலும் ஓங்கி இருக்கும் கச்சி; பலதிருப்பதிகளாலே நிறைந்த கச்சி.

ஒண்துறை நீர் வெஃகா உள்ளாய்!-திருவெக்காவில் அழகிய துறையைப் பற்றிக் கண்வளர்ந்தருளினவனே! (திருமழிசைப் பிரான் நீராடிய துறையாதலால் ஒண்துறை என்றார்).

திருவெஃகா வரலாறு: கணிகண்ணர் என்பவர் திருமழிசை ஆழ்வார் சீடர். அவர் ஒருகாலத்தில் தன் நாட்டரசன் வேண்டுகோ

ளுக்கு இணங்காதவராய் மறுக்க, அரசன் கோபித்துத் தன் நாட்டைவிட்டுச் செல்லும்படி கட்டளை யிட்டான்.

கணிகண்ணர் தன் ஆசிரியராகிய திருமழிசை ஆழ்வாரிடம் விண்ணப்பிக்க, ஆழ்வார் கோயிலுக்குச் சென்று திருமாலைப்பார்த்து,

வெண்பா.

கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா ! நீ யிங்(கு) இராதே-துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயும் உன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

என்று வேண்ட, அப்பெருமாள் அவர்கள் பின் சென்றார் என்பது 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்பதை விளக்கும்.

உள்ளுவார் - இறைவன் ஒருவன் உண்டு என்று கொண்டு தியானிப்பவர்.

உள்ளத்தாய்!-உள்ளத்தில் என்றும் வசிப்பவனே! கார்வானத்து உள்ளாய் !-என்பது மேகம் கைம்மாறு கருதாது மழை பொழியுமாறு போல, திருமால் கைம்மாறு கருதாது உயிர்களுக்கு அருள் செய்யும் குணத்தைக் குறிப்பிக்கின்றது.

கள்வா-திருடனே ! திருடன் என்றது கடவுள் தன் அடியார்கள் அனுபவித்தற்கு உரிய வடிவத்தைத் தனக்குக் காட்டாமையினால் என்க. காவிரியின் தென்பால் மன்னு பேரகத்தாய் !-காவிரியின் தென்திசையிலுள்ள திருப்பேரகம் என்னும் பதியில் இருப்பவனே!

ஒருவன் ஜீவனம் செய்வதற்கு ஆற்றின் கரை ஓரத்தில் வருவார் போவாரை நோக்கிக் காத்துக்கொண்டிருப்பது போல, கடவுள் தான் காக்கும் தன்மை பயன்படும் பொருட்டுத் தன்னிடம் அன்பர் யாரேனும் வருவாரோ என்று கரையிடத்தே தங்கியுள்ளார் என்க. பேராது என் நெஞ்சின் உள்ளாய் !-இடைவிடாது என் நெஞ்சினுள்ளே விளங்குபவனே !

திரு அருட்பா.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் கி. பி. 1823-ம் ஆண்டில் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூரில் பிறந்தனர். தந்தையார் பெயர்: இராமைய பிள்ளை. தாயார் பெயர்: சின்னம்மையார். குலம்: கருணீகர் குலம். சமயம்: சைவம்.

இவர், சிறு பருவத்தே தாய் தந்தையரை இழந்தமையால், சபாபதிப் பிள்ளை என்னும் தம் தமையனுருடன் சென்னைக்குச் சென்று அங்கே தங்கினர். இளம் பிராயத்திலேயே பத்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடும் அருளில் திளைத்தனர். திருஒற்றியூர் உடைய பெருமானைப் பற்பல பதிகங்களால் துதித்தனர். நால்வர் மீது பதிகங்களும், கந்தகோட்டப் பெருமான்மீது தெய்வமணிமாலையும், தணிகை நாயகன் மீது பற்பல பதிகங்களும் இயற்றினர்.

பின்பு இவர், சிதம்பரத்திற்குச் சென்று நடராசப் பெருமான் மீது பல அரிய பதிகங்கள் பாடினர். அதன் பின்னர், சிதம்பர ஸ்தலத்தின் நான்கு கோபுரங்களும் ஒருங்கே தெரியும்படியான வடலூரில் எழுந்தருளி, அவ்வழியே நாற்பக்கங்களுக்கும் செல்லும் மக்களுக்கு உணவும், விலங்குகளுக்குப் புல் முதலியனவும், உதவ வேண்டும் என்னும் உயிர் இரக்கம் பற்றி வாழும் பெரு நெறியில் நின்று, அங்ஙனமே சத்திய தருமச்சாலையில் உதவி, வள்ளலாய்த் திகழ்ந்தனர்.

தில்லை நடராசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் சபையைச் சேக்கிழார் சுவாமிகள் திருமாளிகை என்று குறித்திருக்கும் கருத்துக்கு ஏற்ப, வள்ளலார் எண்கோண வடிவமாகப் பெரியதோர் ஞான சபையை வடலூரில் கட்டுவித்தனர்,

நடராசப் பெருமான் திரு உருவத்தின் பொருள் :

"கேழில் பரஞ் சோதி கேழில் பரங் கருணை" (கேழ்-உவமை) என்னுந் திருவாசகக் கட்டளைப்படி, அருட்பெருஞ் சோதி தனிப் பெருங் கருணை யாகும் (God as the Order of Intelligent Love) என்று தம் அன்பர்களுக்கு அறிவுறுத்த 1598 அடிகொண்ட அருட் பெருஞ்சோதி அகவலைப் பாடி அருளினர்.

இவர் ஜீவகாருணிய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம், விண்ணப்பங்கள் முதலிய வசன பாகங்களும் இயற்றினர்.

ஸ்ரீமுக (1873) ஆண்டில் தைத்திங்கள் புனர்பூசத்தில் மேட்டுக் குப்பத்தில் உள்ள சித்தி வளாகத் திருமாளிகையில் திருக்காப்பிட்டுக் கொண்டனர். வள்ளலார் மாணுக்கர் தொழுவூர் வேலாயுத முதலி யார் அக்ஷய (1867) வருஷத்தில் திருவருட்பா முதல் நான்கு திரு முறைகளும், பின்னர் 1880 ஐந்தாம் திருமுறையும் வெளியிட்டனர். தொழுவூர் முதலியார் காலத்திலேயே, ஆறுந்திருமுறை சோடச அவதானம் சுப்பராய செட்டியாரால் (1885) வெளியிடப் பட்டது.

திருவருட்பாப் பாடல்களைப் படிக்குந்தோறும் 'ஊற்றெழுங் கண்ணீரதனல் உடம்பு நனைந்து நனைந்து' மனமெலாம் தித்திக்கும், வாயெலாம் தித்திக்கும், மெய் அறிவெலாம் தித்திக்கும் என்பதும், எல்லா மக்களும் ஓர் உரிமைச் சகோதரர்கள் என்று கொண்டு சாதி யாசாரம் முதலிய தடைகளை நீக்கித் திருவருளில் ஈடுபடுதல் வேண் டும் என்பதும் எளிதில் விளங்கும்.

1. அருள் விளக்க மாலை 25-ம் பாசுரம்.

அறையாத - (இயல்பாக) வீசாத. அண்டம்-உலகம். பகி ரண்டம்-பேரண்டம். பிண்டம்-சரீரம். களங்கம்-கறுப்பு (குற்றம்). பனிக்காது-பனி பெய்யாது. தூண்டாதே விளங்குகின்ற - பிறர் தூண்டாமல் இயல்பாக விளங்குகின்ற. அகப்புறம் - ஒருசார் தொடர்புகொண்டு புறம்பானது.

2. ஆளுடைய நம்பிகள் அருள்மாலை 7-ம் பாசுரம்: தேன் படிக்கும்-தேனை ஒத்திருக்கின்ற (படிக்கும்-ஓர் உவம உருபு). திருப் பாட்டு-திருநெறித் தமிழ் (தேவாரம்). இப்பாசுரம் சுந்தரமூர்த்தி

சுவாமிகள் தேவாரத்தினைத் திருஅருட் பிரகாச வள்ளலார் அனுபவித்த திறத்தினைப் புலப்படுத்தும் என்க. வள்ளலார் சுந்தரமூர்த்திகள் தேவாரத்தினை ஓதும்போது மெய் புளகிக்கும்; உள்ளம் உருகும்; உயிர் இன்புறும்; உயிர்க்கு உயிராகிய கடவுளும் அன்பு வடிவமாகத் திகழ்வர் என்க.

இதன் ஆழ்ந்த கருத்தை வள்ளலார் அருட்பெருஞ்சோதி அகவலில் 1449 முதல் 1476 வரை உள்ள அடிகளில் கூறியுள்ள அனுபவ நிலையைக் கொண்டு ஒருவாறு தெளிக: அவ்வடிகள் வருமாறு:

தோல்எலாம் குழைந்திடச், சூழ்நரம்(பு) அனைத்தும்
மேல்எலாம் கட்டவை விட்டுவிட்(டு) இயங்கிட,
என்பெலாம் நெக்குநெக்(கு) இயலிடை நெகிழ்ந்திட,
மென்புடைத் தசையெலாம் மெய்உறத் தளர்ந்திட,

* * * * *

மடல்எலாம் மூளை மலர்ந்திட, அமுதம்
உடல்எலாம் ஊற்(று) எடுத்(து) ஓடி நிரம்பிட,
ஒள் நுதல் வியர்த்திட, ஒளிமுகம் மலர்ந்திடத்,
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட,
உள் நகை தோற்றிட, உரோமம் பொடித்திடக்,
கண்ணில்நீர் பெருகிக் கால்வழிந்(து) ஓடிட,
வாய்துடித்(து) அலறிட, வளர்செவித் துணைகளில்
கூயிசைப் பொறிஎலாம் கும்எனக் கொட்டிட,
மெய்எலாம் குளிர்ந்திட, மென்மார்(பு) அசைந்திடக்,
கை எலாம் குவிந்திடக், கால் எலாம் சுலவிட,
மனம் கனிந்(து) உருகிட, மதிநிறைந்(து) ஒளிர்ந்திட,
இனம்பெறு சித்தம் இயைந்து களித்திட,
அகங்காரம் ஆங்காங்(கு) அதிகரிப்(பு) அமைந்திடச்,
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட,
அறிவுரு அனைத்தும் ஆனந்த மாயிடப்,
பொறிஉறும் ஆன்மதற் போதமும் போயிடத்,
தத்துவம் அனைத்தும் தாம்ஒருங்(கு) ஒழிந்திடச்,
சத்துவம் ஒன்றே தனித்துநின்(று) ஓங்கிட,

உலகெலாம் விடயம் உளஎலாம் மறைந்திட,
அலகிலா அருளின் ஆசைமேற் பொங்கிட,
என் உளத்(து) எழுந்(து)உயிர் எல்லாம் மலர்ந்திட,
என்உளத்(து) ஓங்கிய என்தனி அன்பே !

3 "எத்துணையும்......" என்னும் பாசுரம் தனிப்பாடல்கள் என்னும் பகுதியில் உள்ளது.

பராபரன் உண்மை நிலையத்தைக் கூறுவது.

எத்துணையும்-எவ்வளவும் (சிறிதும்). உள்ளே ஒத்து-மனத்தில் பொருந்தி. சித்து உரு-ஞான வடிவாய். வித்தகர்-ஞானிகள்.

இது, வள்ளலார் உள்ளம் உவகை பூத்துத் தாம் அனுபவித்துத் தெளிந்ததைத் தம்மேல் வைத்து மக்கட்குக் கூறுவது. இதனல் வள்ளலாரது உள்ளத்தின் பரந்த நோக்கும், கருணை நிறைவும் புலனுகும். அன்றியும் உயிர் இரக்கம் பற்றி வாழும் அருளாளரிடத்துக் கடவுள் எளிதில் விளங்குவார் என்னும் உண்மையும் செவ்வனே விளங்கும்.

முருகதாசர் தாம் இயற்றிய வினைப்பதிகத்தில் 'மிளகைநேர் ஒரு சிறிய வண்டு எழுந்து விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி, இளகுநெஞ்சகம் பெறும் வடலூரான்' என்றும், 'இரக்கமே வடிவாம் வடலூரான்' என்றும் கூறியது ஈண்டு சிந்திக்கற்பாலது.

II

திருக் குறள்.

திருக்குறள்: திரு- அறிஞரால் விரும்பப்படும் தன்மை; குறள்-குறள் வெண்பாவால் ஆகிய நூல்.

குறள் வெண்பா: இரண்டு அடி வெண்பாவாக வரும்; முதலடி நாற்சீர் அடியாகவும் இரண்டாம் அடி முச்சீர் அடியாகவும் வரும். குறள்-குறுமை.

சங்க மருவிய நூல்களுள் திருக்குறள் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகும். கீழ்க்கணக்கில் அடங்கிய நூல்களில் உள்ள பாக்களின் அடிகள் சிலவாக வரும்.

கீழ்க்கணக்கு நூல்கள் 18:

1. நாலடியார்
2. நான்மணிக் கடிகை
3. இனியது நாற்பது
4. இன்னா நாற்பது
5. களவழி நாற்பது
6. கார் நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. ஐந்திணை எழுபது
9. திணைமொழி ஐம்பது
10. திணைமாலை நூற்றைம்பது
11. திருக்குறள் (முப்பால்)
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி
15. சிறு பஞ்சமூலம்
16. முதுமொழிக் காஞ்சி
17. ஏலாதி
18. கைந்நிலை

திருக்குறளுக்கு முப்பால் என்னும் பெயரும் வழங்கி யிருக்கிறது. முப்பால்-மூன்று + பால்-மூன்று பகுதி: அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் கூறுவது.

திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள்: தமிழ்மறை, பொய்யாமொழி, பொதுமறை, திருவள்ளுவப் பயன் முதலியன.

இந்நூல் 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரமும் பத்துக் குறட்பாக்களைக் கொண்டுள்ளது.

இந்நூல், மணிமேகலை ஆசிரியர், கம்பர், சைவ சமயாசாரியர், நச்சினார்க்கினியர் முதலிய பல பேராசிரியர்களால் ஆளப்பட்டது.

தம் ஆயுட்காலமெல்லாம் அரும்பாடு பட்டுத் தமிழ் முதலிய பல பாஷைகளையுங் கற்றுத் தெளிந்த டாக்டர் போப்துரையவர்கள் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

திருக்குறள் பொதுமறை என்று போற்றப் படுவதற்குக் காரணம்: ஆண் பெண் என்னும் வேறுபாடு இன்றி, சாதி ஆசாரம் சமய ஆசாரம் முதலிய தடைகளும் இன்றி, எல்லா மக்களாலும் கற்றற்கு உரிய பெருமை வாய்ந்திருப்பதாகும்.

திருவனந்தபுரம் மஹாராஜாவின் கல்லூரியில் தத்துவ ஆசிரியராய் விளங்கிய புரொபசர்-சுந்தரம் பிள்ளை, M. A. அவர்கள் தாம் இயற்றிய மனோன்மணீயம் என்னும் நாடகத்தில், திருக்குறளின் பெருமையைக் குறித்து,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன்(கு) உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக்(கு) ஒருநீதி".

என்று கூறியுள்ளனர்.

ஒப்பதும் மிக்கதும் இல்லாத இத்தமிழ்ப் பெருநீதிநூல் பண்டைக் காலத்துத் 'தமிழ் மக்கள் கடவுள் உண்டு' என்று கொண்ட கொள்கையோடு ஒழுகிய சிறப்புத்தன்மைகளைப் (The Simple Theism of the Early Tamils) பலவாற்றானும் விளக்கிக் காட்டுவதாகும்.

இத்தகைய அரிய நூலை இயற்றியவர் இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன் விளங்கிய வள்ளுவனார் என்பவர். அவர் வள்ளுவக் குடியில் பிறந்தனர் என்பர்.

வள்ளுவர் என்பார் யானை மேல் ஏறிப் பறை அறைந்து அரசர் கட்டளையைச் சாற்றும் தொழிலுடையாராவர் என்பது, 'முரசு கடிப்பிடூஉம் முதுக்குடிப் பிறந்தோன்' என்னும் மணிமேகலையாலும்,

கம்பராமாயணம், பாலகாண்டம், திரு அவதாரப் படலம்,

என்புழி வள்ளுவர் யானை மீமிசை
நன்பறை அறைந்தனர் நகர மாந்தரும்
மின்பிறழ் நுசுப்பினர் தாமும் விம்மலால்
இன்பம் என்(று) அளக்கரும் அளக்கர் எய்தினர்.

என்னும் 113-ம் செய்யுளாலும் விளங்கும்.

முருகதாசர் தாம் இயற்றிய புலவர் புராணத்தில்,

எள்ளுபுன் மதத்தோர் நாண எனும்(பு)ஓர்பெண் உருவாம் ஊரில்
உள்உளா ரொடுவா ழாமல் ஊர்ப்புறஞ் சேரி சார்ந்து
தெள்ளுசொற் புலமை வாய்ந்து சேலைநெய் திருந்த வாற்றால்
வள்ளுவன் என்றார் பல்லோர் வளமையோன் எனல் ஓ ராரே.

என்னும் செய்யுளில் வள்ளுவர் என்னும் பெயர் (தமிழ்) வளப்பம் உடையவர் என்பதைக் காட்டும் என்று கூறினர்.

திருக்குறளுக்குப் பல ஆசிரியர்கள் எழுதிய உரைகள் பரிமேலழகர்க்குப் பயன் பட்டன ஆகையால் பரிமேலழகர் உரை சிறந்ததற்கு அவை ஒருசார் காரணமாகும்.

நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்று வழங்குவதில், நாலு என்பது நாலடியார், இரண்டு என்பது இரண்டு அடிகளாலாகிய திருக்குறள் என்று கொள்க.

சங்க நூல்களுள் திருக்குறளின் பாக்களே இன்றும் கிராமங்களிலும் ஆளப்படுகின்றன. கற்றோர்கள் யாவராலும் இந்நூல் இடைவிடாது போற்றப்பட்டு வந்ததால் இதில் சொற் சிதைவுகளும் பாட பேதங்களும் காணப்படவில்லை.

திருவள்ளுவ நாயனார் திருவுருவம் மயிலாப்பூரில் முண்டகக் கண்ணி அம்மன் (முண்டகம்-தாமரை) கோயில் தெருவில் மிகப் பெரியதோர் இலுப்பை மரத்தின் கீழ் உள்ள கோயிலில் திருக்குறளைக் கையில் தாங்கிய கோலத்துடன் விளங்குகின்றது.

திருவள்ளுவர் மனைவி வாசுகி அம்மையாரது கற்பின் மாண்பு அவ்வம்மையாரைப் பற்றி வழங்கும் கதைகளால் விளங்கும்.

நும் பாடப் பகுதி அதிகாரங்கள் இல்லற வியலுள் அடங்கும்.

அன்புடைமை

1. எல்லாம் தமக்கு உரியர்-(பிறர்க்குப் பயன்படாமையினால்) எல்லாப் பொருளானும் தமக்கே உரியவர் (உரிமையுடையவர்). என்பு-எலும்பு-உடம்பு (சினையாகு பெயர்). தமக்கு-தமக்கே.

தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவுக்காகச் சிபிச்சக்கர வர்த்தி அப்புறாவைத் துரத்தி வந்தவனுக்குத் தன் மாமிசத்தை அறுத்துக் கொடுத்தார் என்றும், ததீசி முனிவர் ஒருகாலத்தில் இந்திரனுக்காகத் தன் முதுகு எலும்பைக் கொடுத்தார் என்றும் வழங்கும் கதைகளை இக் குறட்பாவுக்கு எடுத்துக் காட்டாகக் கூறுவர்.

2. இயைந்த-பொருந்துவதற்குவந்த.வழக்கு-நெறியின் பயன், ஆர் உயிர்க்கு-பெறுதற்கு அரிய மக்கள் உயிர்க்கு. என்பு-உடம்பு வழக்கு-வழக்கினால் ஆகிய பயன் (கருவி யாகுபெயர்.)

இவை இரண்டு பாட்டாலும், அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

3. அன்பு அகத்து இல்லா-அகத்து அன்பு இல்லாத, அகம்-மனம். வாழ்க்கை-இல்லறத்தோடு கூடி வாழ்தல். வன்பாற்கண்-வலிய பூமியினிடத்து, வற்றல் மரம்-உலர்ந்துபட்ட மரம், தளிர்த்தற்று-துளிர்விட்டது போலும். வற்றல்-வற்றுதலை உடையது-(பால் பகா அஃறிணைப் பெயர்).

4. அன்பின் வழியது-அன்புமுதலாக அதன் வழி நின்ற உடம்பே. உயிர்நிலை-உயிர் நின்ற உடம்பாகும்: உயிர் நிற்றற்கு இடமானது உடம்பு: நிலை-தொழிலாகு பெயராய் உடம்பைக் குறித்தது.

அஃது இலார்க்கு-அந்த அன்பு இல்லாதவர்க்கு, உடம்பு-உளவான உடம்புகள், தோல்-தோலால், போர்த்த-போர்த்தனவாம். எனவே, உயிர் நின்ற உடம்புகள் என்று சொல்ல முடியாது.

அன்பினை இன்றியமையாத சிறப்பாகக் கொண்ட இல்லறத்தில் இருந்தும் அந்த அன்பினை மேற்கொள்ளாது வாழ்தலால் உயிரோடு கூடிய உடம்பு கொண்டு வாழ்வதாகச் சொல்ல முடியாது என்பர். ஆகவே அன்பிலார் நடைப்பிணம் ஆவார் என்க.

இவை இரண்டு பாட்டாலும், அன்பு இல்லாத வழி உண்டாகும் குற்றம் கூறப்பட்டது.

5. இருந்து-(பிறப்பினை அஞ்சிக் காட்டினிடத்தே செல்லாமல்) மனைவியோடு இருந்து. இருந்து-(சுற்றத்தார் சூழ) இருந்து; இல் வாழ்வது-மனைவியோடு வாழ்வது எனினுமாம்.

ஓம்பி-(இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைப்) பாதுகாத்து. இல்-வீடு. வாழ்வது எல்லாம்-வாழும் செய்கை எல்லாம். விருந்து- விருந்தினரை. ஓம்பி-உபசரித்து. வேளாண்மை-உபகாரம். இல்வாழ்க்கையிலிருந்து உபகாரம் செய்யாதபோது இல்வாழ்க்கையில் இருத்தலாலும் பொருளைத் தேடிக் காப்பாற்றுதலாலும் உண்டாகிற துன்பச்செயல்களுக்கு எல்லாம் பயனில்லை என்க.

6. விருந்து-(தன்னை நோக்கி வந்த) விருந்தினர், புறத்தது ஆக-தன் வீட்டின் வெளிப்பக்கத்தே உட்காந்து கொண்டிருக்க, சாவா மருந்து-(உண்ணப்படும் பொருள் சாவாமையைக் கொடுக்கும்) அமிர்தமே ஆயினும், தான் உண்டல்-தானே அதனை உண்ணுதல், வேண்டற் பாற்றன்று-விரும்பப்படு முறைமையை உடையதன்றும்.

இவை இரண்டு பாட்டாலும், விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

7. முகன் அமர்ந்து-முகம் இனியனாய், நல் விருந்து-தக்க விருந்தினரை, ஓம்புவான்-உபசரிப்பவனது, இல் - வீட்டினிடத்தில், செய்யாள்-இலக்குமி, அகன் அமர்ந்து-மன மகிழ்ந்து, உறையும்-வாழும்.

இலக்குமி மனம் மகிழ்தற்குக் காரணம் அந்தஇலக்குமியால் கொடுக்கப்பட்ட செல்வம் நல்வழிப்படுதல். விருந்தினர்க்குத் தகுதியாவது ஞானத்தினாலும் ஒழுக்கத்தினாலும் மேம்படுதல். விருந்

தினரை உபசரித்தால் செல்வம் வளரும் என்னும் உண்மை பெறப் பட்டது.

இப் பாட்டால், விருந்தினரை உபசரிப்பவர் இப் பிறப்பிலே அடையும் பயன் கூறப்பட்டது.

8. அனிச்சம்-அனிச்சப்பூ, மோப்ப-மோந்தபோதே, குழையும்-வாடும்; விருந்து-விருந்தினரோ, முகம் திரிந்து நோக்க-முகம் வேறுபட்டுப் பார்க்க.

(1) விருந்தினரைத் தூரத்தே கண்டபோது முகமலர்ச்சி காட்டவேண்டும். (2) அம்முக மலர்ச்சியை அவர் கண்டு மகிழ்ந்து அருகில் நெருங்குவார். நெருங்கினபோது இன்சொல் கூறவேண்டும். (3) இனிய சொற்களால் மகிழ்ந்து உடன் பட்டபோது, உணவு முதலியவற்றை ஏற்க உபசாரஞ் செய்யவேண்டும். இம்மூன்றும் விருந்தினரை உபசரிப்பவர் அவசியம் மேற்கொள்ள வேண்டிய கடமைகள். முக மலர்ச்சியாகிய முதலுபசாரம் நிகழாதபோது தூரத்தே வருகின்ற விருந்தினர் உடனே வேறு வழியாகத் திரும்பிப் போவர். ஆகவே கண்டு, முகமலர்ச்சியைக் காணுமையால் நீங்கிவிடும் விருந்தினர், தொட்டு மோந்தால் மாத்திரமே வாடிப் போகும் தன்மை வாய்ந்த அனிச்சப் பூவைவிட, மெல்லிய தன்மை யுடையவர் என்க.

இப் பாட்டால், விருந்தோம்புவார்க்கு, முதலிலே முகமலர்ச்சி வேண்டும் என்பது கூறப்பட்டது.

9. ஒருவற்கு அணி பணிவுடையன், இன்சொலனுதல். பிற (அணி) அல்ல என இயைக்க.

பணிவுடையன் - (பெரியோரிடத்தே) வணக்க முடையனுகி, இன்சொலனுதல் - (எல்லாரிடத்தும்) இனிய சொல்லையுடையவனு யிருத்தல். பிற-(இவ்விரண்டு குணமும் அல்லாமல் உடம்பில் அணியும்) மற்ற ஆபரணங்கள், அல்ல-உண்மையில் ஆபரணங்கள் ஆக மாட்டா.

ஆபரணங்கள் உடம்பிற்கு அழகு செய்யும்; ஒருகால் கள்வரால் துன்பமும் உண்டாக்கும். வணக்கமும் இன்சொல்லும் மனத்துக்கு

மகிழ்ச்சி யுண்டாக்கி அக்குணங்களை யுடையவர்க்குப் பேரழகுசெய்வ தோடு அவர்களோடு பழகுகிறவர்களையும் பெருங்குணம் பற்றும்படி செய்யும் என்க.

இப் பாட்டால், இனிய சொல் சொல்லுவார்க்கு உண்டாகும் இம்மைப் பயன் கூறப்பட்டது.

10. இனிய-(அறத்தை உண்டாக்கும்) இன்சொற்களும், உள வாக-(தன்னிடத்தே) உண்டாயிருக்க, (அவற்றைச் சொல்லாமல்), இன்னாத (பாவத்தை விளைக்கும்) கொடிய சொற்களை, கூறல்-(ஒருவன்) சொல்லுதல், கனி-(இனிமை வாய்ந்த) பழங்களும், இருப்ப-(தன்னிடத்தே) இருக்க, (அவற்றை உண்ணாமல்), காய்-(இனிமை யில்லாத) காய்களை, கவர்ந்தற்று-உண்பதனோடு ஒக்கும்.

இனிய கனிகள் அவ்வையார் உண்ட கருநெல்லிக்கனிபோல் சிறந்தவை. அதியமான் நெடுமான் அஞ்சி யென்னும் வள்ளல் தான் உண்ணாது அவ்வையாருக்குக் கொடுத்த கருநெல்லிக் கனியை அவ்வையார் உண்டு நெடுங்காலம் உயிர்வாழ்ந்தனர் என்பது (புறநானூறு-91-ம் செய்யுளால்) விளங்கும்.

இன்னாத காய்-கசப்பு மிகுந்த எட்டிக்காய் போன்றவை.

இப் பாட்டால், கடுஞ்சொல் சொல்லுதலின் குற்றம் கூறப்பட்டது.

11. செய்யாமல்-(தனக்குமுன்புஒர் உதவியும்) செய்யாதிருக்க, செய்த-(ஒருவன் பிறனுக்குச்) செய்த, உதவிக்கு—,வையகமும்-நிலவுலகமும், வானகமும்-விண்ணுலகமும், மாற்றல்-(ஈடாகக்) கொடுத்தாலும், அரிது-(ஒத்தல்) அரிது.

12. தினை-தினையளவு, நன்றி-உபகாரம். பனை-பனையளவு. கொள்வார்-நினைப்பார். பயன்-(அந்தநினைப்பின்)பயனை, தெரிவார்-ஆராய்வார்.

தினை, பனை என்பன சிறுமைபெருமைகட்குக் காட்டும் அளவைகள்.

13. நன்றி-(ஒருவன் முன்செய்த) நன்மையை. நன்று அன்று-(ஒருவனுக்கு) அறன் அன்று. நன்று அல்லது - (அவன் செய்த) தீமையை, அன்றே-செய்த அப்பொழுதே. நன்று-அறமாம்.

இப் பாட்டால், நன்மையும் தீமையும் ஒருவனாலே செய்யப்பட்ட போது, அந் நன்மைதீமைகளுள் மறப்பது இது (தீமை) என்றும், மறவாதது இது (நன்மை) என்றும் வகுத்துச் சொல்லப்பட்டது.

14. (ஒருவனை) அடக்கம்-அடக்கமாகிய அறமானது, அமரருள் - (பின்) தேவருலகத்தில், உய்க்கும் - கொண்டுபோய் விடும். அடங்காமை-அடங்காமையாகிய பாவமானது, ஆர் இருள்-பொறுத்தற்கு அரிய நரகத்தில், உய்த்துவிடும்-செலுத்தி விடும்.

இருள் - இருளையுடைய நரகம் (ஆகுபெயர்). இப்பாட்டால் அடக்கம் என்பதன் சிறப்புக் கூறப்பட்டது.

15. யா-(காக்கவேண்டிய) எல்லாவற்றையும். நா-நா ஒன்றையும், காக்க-காக்கக் கடவர். இழுக்கு-குற்றம். சோகாப்பர்-தாமே துன்பப் படுவர். யா-யாவற்றையும்: முற்றும்மை விகாரத்தால் தொக்கது. சோகாப்பர் என்பது ஒருசொல் (சோகாப்பு-பகுதி). இப் பாட்டால் மொழி யடக்கம் கூறப்பட்டது.

16. பயனில் சொல்—பயனை உண்டாக்காத சொற்களை, பாராட்டுவானை-(பல முறையும்) சொல்லுவோனை, மகனெனல்-மனிதன் என்று சொல்லாதே; மக்கட் பதடி எனல்-மனிதர்களுக்குள்ளே பதர் என்று சொல்லக் கடவாய்.

பதருக்கு அரிசியாகிய உள்ளீடு இல்லாமை போல், பயனில்லாத சொற்களைக் கூறுவோர்க்கு அறிவாகிய உள்ளீடு இல்லாமையால் "மக்கட்பதடி" என்றார். மகன் எனல்: அல்லீற்று வியங்கோள் எதிர்மறை. பதடியெனல்: அல்லீற்று வியங்கோள் உடன்பாடு.

இப் பாட்டால், பயனில்லாத சொல் சொல்லுதலின் குற்றம் கூறப்பட்டது.

17. உலகு-உலக நடையை, அவாம்-அவாவும்-விரும்பிச் செய்யும். திரு-செல்வம், ஊருணி-ஊரில் வாழ்வார் நீர் உண்ணும் குளமானது, நீர் நிறைந்தற்று-நீரினாலே நிறைந்தது போலும்.

ஊருணி-ஊருண் பகுதி, இ-செயப்படு பொருண்மை விகுதி: ஊராரால் உண்ணப்படுவது.

உலகநடையை அறிந்தவனிடம் உள்ள செல்வம் பாழ்படாமல் நெடுங்காலம் இருந்து எல்லாருக்கும் வேண்டுவனவற்றைத் தப்பாது உதவும் என்க.

இப் பாட்டால், உபகாரம் செய்பவனது பொருள் பயன் படும் விதம் கூறப்பட்டது.

18. வறியார்க்கு-(ஒரு பொருளும்) இல்லாதார்க்கு, ஒன்று ஈவது-(அவர் வேண்டியது) ஒன்றைக் கொடுப்பது. மற்றெல்லாம்-(வறியவர்க்குக் கொடுத்தல் அல்லாத) மற்ற கொடைகளெல்லாம், குறியெதிர்ப்பை-குறிக்கப்பட்ட பின்வரும் பயனை (க்கொடுக்கும்), நீரது-தன்மையை, உடைத்து-உடையதாகும்.

மற்ற கொடைகள் என்பன: வறியவர் அல்லாதவர்க்கு ஒரு பயனை நோக்கிக் கொடுப்பன.

குறியெதிர்ப்பு என்பது பிறரிடத்தே ஓர் அளவுகுறித்துப் பொருளை வாங்கி, வாங்கியபடியே அவர்க்கு எதிரதாய்க்கொடுப்பது. (உதாரணம், சுபகாரியங்களில் ஒருவர்க்கொருவர் செய்யும் பாத்திரம், காசு முதலிய மரியாதைகள் வட்டியில்லாத கடன்கள் என்று வழங்கும்).எதிர்ப்பை-ஐ-சாரியை.

இப் பாட்டால், ஈகையினது இலக்கணம் சொல்லப்பட்டது.

19. அற்றார்-(பொருள் முதலிய வசதி)அற்றவர்களாகிய வறியவரது, அழிபசி-(எல்லா நன்மைகளையும்) அழிக்கும் பசிப்பிணியை. தீர்த்தல்-(அறம் நோக்கித்) தீர்க்கக் கடவன். அஃது-அவ்வறம், வைப்புழி-(பொருளைப்பெற்றவன் தனக்கு உதவும்படி) வைக்கும் இடம், ஆதலால். தீர்த்தல்-அல்-வியங்கோள் விகுதி.

"வயிறு காய் பெரும்பசி" யால் எல்லா நன்மைகளும் அழியும்; "உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்" என்று மணிமேகலை கூறும்.

இப் பாட்டால், ஈகையின் சிறப்புக் கூறப்பட்டது.

20. தோன்றில்-(மனிதராய்ப்) பிறந்தால், புகழொடு-புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு. அஃது இலார்-புகழுக்கு ஏதுவாகிய குணம் இல்லாதவர். தோன்றாமை-பிறவாமை.

மக்களாய்ப் பிறவாமை என்றதால் விலங்கு முதலிய மற்ற உயிர்களாய்ப் பிறத்தல் நல்லது என்க.

இப் பாட்டால், புகழில்லாதவருடைய தாழ்வு கூறப்பட்டது.

III

பழமொழி நானூறு

சங்க மருவிய நூல்களுள் பழமொழி நானூறு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

(திருக்குறட் பகுதிக்கு எழுதியுள்ள முன்னுரையைப் பார்க்க).

பழமொழி நானூறு என்னும் நூல் முன்றுரை யரையனார் என்னும் ஜைன ஆசிரியரால் இயற்றப்பட்டது. ஒவ்வொரு பழமொழியை ஒவ்வொரு பாட்டிலும் கடைசி யடியில்கொண்டு வருகிற 400 செய்யுளைக் கொண்டுள்ளதால் இந்நூலுக்குப் "பழமொழி நானூறு" என்னும் பெயர் வழங்கி வருகிறது.

இந்நூல் வெண்பாப் பாட்டுகளால் செய்யப்பட்டது. இந்நூலின் ஒவ்வொரு வெண்பாவிலும் முதலிரண்டு அடிகளில் ஆசிரியர் கூற விரும்பும் பொருளும், நான்காம் அடியில் ஒரு பழமொழியும், மூன்றும் அடியில் பெரும்பாலும் ஆடூஉ முன்னிலையும், சிறுபான்மை மகடூஉமுன்னிலையும் அமைந்துள்ளன.

"தமிழ் மொழியின் புராதனத்தையும், தமிழர்களுடைய புராதன நாகரிக நிலைமையையும் விளக்குதற்குக் குன்றின் மேலிட்ட விளக்குப்போல இன்றளவும் சான்றான பழமொழிகளையே சார்பாகக் கொண்டிருத்தலால், தமிழர்களுடைய புராதன நிலைமையை ஆராய்வதற்கான சாதனங்களில் இந்நூல் தலையான சாதனம்" என்று இந்நூலைப் பதிப்பித்த புரொபசர் திருமணம்-செல்வக்கேசவராய முதலியார், M. A. அவர்கள் தம் பதிப்புரையில் இதன் பெருமையை விளக்கி யுள்ளனர்.

முன்றுறை யரையர்: பாண்டிநாட்டிலுள்ள முன்றுறை என்னும் ஊருக்கு அரசர் என்க.

1. ஆற்றவும்-மிகவும். செல்லாத-(சொல்) செல்லாத. அந்நாடு-சென்ற நாடுகள். தமவே-தம்முடைய நாடுகளே. ஆற்றுணா-ஆறு + உணா—வழிப்பிரயாணத்துக்கு உதவும் உணவு. வேண்டுவது-கொண்டுபோக வேண்டுவது.

வேற்று நாடுகளில் செல்லும்போது பசித் துன்பம் போக்கிக்கொள்ளத் தாமே உணவு கொண்டுபோக வேண்டியதில்லை: ஆங்காங்கே தம் கல்வியின் பெருமையை அறிந்தவர்கள் தாமே வர வேற்று உணவு முதலியன கொடுப்பர் என்க.

உணா-உணவு: (நிலா-நிலவு:).

2. உரை முடிவு-உரைத்துக் கொண்ட வழக்கினது வார்த்தை முடிவை, காணான் இளமையோன்-கண்டறியக் கூடாதவனான இளம் வயதுடையவன், என்ற-என்று இகழ்ந்த, நரை முது மக்கள்-நரை மயிருள்ள முதியோர். நரை முடித்து-நரைமயிர் இல்லாதிருந்தும் நரைமயிராலாகிய முடியைச் செயற்கையாகச் செய்து தலையில் தரித்து, சொல்லால்-வழக்குரைத்தவர்களுடைய சொற்களைக் கொண்டே ஆராய்ந்து அறிந்து. சோழன்-கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழ அரசன். குல விச்சை-தம்தம் குலத்துக்குரிய வித்தைகள். பாகம் படும்-செம்பாகமாக அமையும் (மணிமேகலை-பளிக்கறை புக்க காதை-107-108.)

3. புலம்-அறிவு. தெரிதல்-ஆராய்ந்தறிதல். புனல்-நீர்வளம், ஊர-ஊரையுடையவனே; விளி. மக்கள் சிறப்பில்லாத பொது மக்கள்: மக்களுள் கல்வியறிவுடையாரையே அறிவுடையார் சிறப்பாக மதிப்பர் என்க.

பாம்பின-பாம்பினுடைய: பாம்பின-அ-ஆறும் வேற்றுமை உருபு: (தன கைகள்).

4. நற்கு-மிகவும் சிறியதாய்: நற்கு-நன்கு. நளிர்வரை-பெரிய மலை. கை உய்ந்தார்-கை வருந்துதலைத் தப்பினவர். இல்-இல்லை. மிக்கு உடையராகி-மிக்கபொருள் உடையராகி, ஒற்கப்பட-தரித்திரராகும்படி- முயறும்-முயல் + தும்-முயல்வோம். என்றல்-என்று நினைத்தல்; இழுக்கு-குற்றம்.

5. மாடம்-வீடு. மற்றும்-பின்னையும். எடுப்பது ஓர் கூடம்-கட்டுவதான ஓர்வீடு. துப்பு-உதவி. பீடு-செல்வம். இலாக்கண்ணும்-அழிந்த போதும். பெருந்தகையர்-பெருந்தகைமையின்கண் தவறமாட்டார். ஈடு-வலிமை. பாடு-பெருமை. கூடம் மரத்திற்கு-மரம் கூடத்துக்கு என மாற்றி இயைக்க.

வீடு பழுதானாலும் கட்டடத்திலிருந்த மரம் முதலியன வேறு ஒரு வீடு கட்டுவதற்குப் பயன் பட்டுச் சிறப்படைவன போல, செல்வமுள்ள பெரியோர், அச்செல்வம் நீங்கிய காலத்திலும், தங்கள் அருங்குணம் முதலியவற்றால் பிறர்க்குப் பயன்பட்டுச் சிறப்புடன் விளங்குவர். இடிந்த வீட்டின் மண் கல் முதலியன பயன் படாதன போல், கீழ்மக்கள் தங்களுக்கு ஆதாரமான பொருள் முதலியன ஒழிந்த காலத்தில் உதவியற்றவராய்ப் பெருமை யிழப்பர்.

6. குடிப்பிறந்தார்-நற்குடியிற் பிறந்தார். மற்றொன்று அறிவாரின்-நற்குடியிற் பிறவாமல் கற்றாரைக் காட்டிலும். மாண் - மாட்சி. பொற்ப - பொலிவுறும்படி. உரைப்பான்-(அவரிடம் ஒரு விஷயத்தைச்) சொல்லும்பொருட்டு: பான்-எதிர்கால வினை எச்ச விகுதி. கொல் சேரி-கொல்லர் சேரி-கருமாருடைய சேரி: சேரி-சேர்ந்திருக்கும் இடம்,சேர்ந்து வசிக்கும் இடம் (உதாரணம்-பார்ப்பனச் சேரி). துன் ஊசி-தைக்கும் ஊசி.

7. நிரை-வரிசை, தொடி-கடகம்,நீடோள்-நீள் தோள்-நீண்ட தோள், மாற்கு ஏயும் உரை-குற்றத்தைச் செய்தவர் திருமாலே யாயினும் அத்திருமால் குற்றஞ் செய்தான் என்னும் பழிச் சொல். நரையான்-வெண்மையான மாடு: ஆன்-ஆ + ன் (சாரியை) "ஆமா கோ னவ் அணையவும் பெறுமே."

8. சிறியவர்-கீழ்மக்கள்,எய்திய-அடைந்த,மாண-மாட்சிமைப் பட, நல்குரவு-வறுமை: நல்கூர் பகுதி. தெரியின்-ஆராய்ந்தால். மது மயக்கும்-தேன்மிக்க, கோதை-மாலை, மாணிழாய்-மாண் இழாய்-மாட்சிமைப்பட்ட ஆபரணம் உடையாய் (இழை-ஆபரணம்). முது நெய்-பழைய நெய்.

நோயால் துன்பப்படுவார்க்கு மோர் கெடுதி செய்யும்: கீழ்மக்கட்குச் செல்வம் துன்பம் உண்டாக்கும். நெய் எல்லார்க்கும் நன்மை

செய்யும்: பெரியோருடைய வறுமையும் அவர்க்கும் பிறர்க்கும் நன்மையே உண்டாக்கும், தீமை விளைக்காது என்க.

9. ஒன்றி-பொருந்தி. தமர்-உறவினர் (தமர்-தம்மவர்). மிக்காரால்-மிக்கார்-(ஆல்-அசை) மிக்க குணத்தை உடையார். தேறார்-தெளிந்து நட்புக் கொள்ளார். கொக்கு-மாஞ்சோலை. அக்காரம்-சருக்கரைப் பாகு.

10. நீர்மை-தகுதி. தங்கள் நேர் வைத்து-தங்களுக்குச் சமானமாக எண்ணி. தகவு அல்ல-தகுதியல்லாத வார்த்தைகள். திங்களைக் குரைத்தற்று-சந்திரனைப் (பார்த்துக்) குரைத்தாற் போலும்.

11. எமக்குத் துணையாவார்-எமக்கு (ஒரு துன்பம் நேர்ந்தால்) உதவி செய்பவர். தெரிதல்-தேடுதல், பிறர்க்கு-பிறர் ஒருவருக்கு, பிறர் செய்வது-பிறர் செய்யலாவது, உண்டோ-யாதேனும் ஒன்று உண்டோ? மற்று இல்லை-(துணையாவாரைக் கண்டிடினும்) ஒரு நன்மையும் உண்டாகாது. பருத்துவர்-வைத்தியர்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்திய(து)
அற்றது போற்றி உணின்"

என்னும் திருக்குறளின் கருத்தை நோக்குக.

12. நிலைஇய-நிலை நின்ற, பண்பிலார்-குணமில்லாதவர், நேர் அல்லர்-நடுநிலைமையை உடையர் அல்லர். உளைய-வெறுக்கத்தக்க விதமாக, ஒன்றும் - ஒரு சொல்லும். உறுதியே கொள்க-அவரிடம் தாம் கொள்ளவேண்டும் உறுதியாகிய பயனையே கொண்டு விடுக.

வளை ஒலி ஐம்பாலாய்-வளையல்கள் ஒலிக்கின்ற மாதே: ஐம்பாலாய்-சுருண்டு தழைத்த கூந்தலை யுடையாய்: ஐம்பால் - ஐந்து பகுதி: மகளிர் கூந்தல் (1) மயிரை உச்சியில் முடித்தலாகிய முடி, (2)பக்கத்தில் முடித்தலாகிய கொண்டை,(3) பின்னிச் சொருகலாகிய சுருள், (4) சுருட்டி முடித்தலாகிய குழல், (5) பின்னி விடுதலாகிய பனிச்சை என ஐந்து வகையாக முடிக்கப் படுதலால் ஐம்பால் எனப் பெயர் பெறும்.

13. மடியை - சோம்பல் உள்ளவனை, வியம் கொள்ளின்-ஒரு கருமத்தின்கண் ஏவினால்; வியம்: ஏவல்-(உதாரணம்-வியம் கோள்-ஏவலைக் கொண்டிருப்பது). மற்றை கருமப் - அந்த ஏவலையடுத்த காரியம். கொடியன்னாய்-கொடிபோலும் இடையை உடையாய்.

பாரித்தவனைத் தொழில் கோடல் - (ஒரு காரியம் செய்யப்) பருத்த உடம்புடையவனை ஏவுதல்: பாரித்தவன் - (பாரி-பருமன்) பருத்த உடம்புடையவன்; எனவே மனத்தில் ஊக்கம் இல்லாமல் உடல் மட்டும் பெரிதாய் உள்ளவன்.

நலிந்து-வருத்தி. மூரி-கிழ எருது.

14. கட்டு உடைத்தாக-காவல் உடையதாம், வகைபட்டு-அந்தக் காரியத்தை மேற்கொண்டு, ஆங்கு உண்டு-அதன்கண் உள்ள பயனைத் தாம் அனுபவித்து, ஓடும்-செல்லும், வறியாரை - அன்பில்லாதவரை, பட்டுண்டாங் கோடும்-பட்டு ஆங்கு உண்டு ஓடும் எனப் பிரித்திசைக்க. தொட்டாரை-கையால் தொட்டவரை. அட்டாரை-சமைத்தவரை, ஒட்டா-பொருந்திப் பயன்படாத.

தான் செய்யும்படி நியமிக்கப்பட்ட காரியத்தால் விளையும் பயனைக் கைக் கொள்பவனை அக்காரியத்தில் ஏற்படுத்தக் கூடாது.

15. அருமை உடைய பொருளுடையார்-(பெறுதற்கு) அரிய பொருள் (யாதானும் ஒன்றை) உடையவர். தங்கண்-கருமம் உடையாரை-தம்மிடத்துக் கொள்ளும் கருமம் உடையவரை, நாடார்-தேட மாட்டார்: தேடவேண்டிய அவசியம் அவர்க்கு இல்லை என்பது கருத்து. துயில் வதியும்-தூங்கும்: ஒரு சொல் நீர்மைத்து. தொட்டு-தோண்டி, தேரைவழிச் சென்றார்-(அக்குளத்தில் வசிப்பதற்காகத்) தேரையுள்ள இடத்தைத் தேடிச் செல்பவர்.

16. உள்ளூரவரால் உணர்ந்தா முதல் எனினும்-முதல் உள்ளூரவரால் உணர்ந்தாம்-(ஒருவனுக்குள்ள) முதலாகிய பொருளின் சிறுமையைத் தம் உள்ளூரின் வாழ்பவர்களாலே தெரிந்துகொண்டோம் என்று மனத்தினிடைக் கொண்டாராயினும், எள்ளாமை-(அவனைப் பொருளில்லாதவன் என்று) இகழாமை. இலங்கு இழாய்-

விளங்கும் ஆபரணம் அணிந்தோய். அழுங்கல்-ஒலி.முதுபதி-பழைய நகரம். அங்காடி-கடை: (இச்சொல் தெலுங்கில் அங்கடிஎன வழங்குகிறது). தள்ளாது மேயும் பழங்கன்று-ஒழியாது மேய்ந்து திரியும் பழங்கன்று, ஏறு ஆதலும்-(வளர்ந்து) எருது ஆதலும்.

முதுகன்று-(பால் கறக்கும் பசுவிற்கு அப்பொழுது பயன்படும் கன்றுக்கு) முன் தோன்றிய கன்று-அதனை வளர்ப்போர் கவனியாமையால் ஊரிலுள்ள கடையில் இலை முதலியவற்றை உண்டு ஏறு ஆதலும் உண்டு என்க.

17. தொன்மையில்-பழைய நூல்களில்: பழமை என்பது பழமையாகிய நூலுக்குப் பண்பாகு பெயர். மாண்ட-மாட்சிமைப்பட்ட, நன்மையின்-நன்மையால். மா-மாமரம், குணில்கொள்ளுமாறு-(பிறர் எறியும்) கவண் கல்லை ஏற்றுக் கொள்ளுமாறு போலும்.

காய்த்த மாமரம், பழுத்து முழுப்பயன் தருவதற்கு இல்லாமல், கல்லால் எறியப்பட்டுச்சிதறுண்டுபோவதுபோல், கல்வியறிவில்லாதார் பெற்ற பொருள், தகுந்தபடி பயன் படாமல் சிதைந்து போகும். நீர்-அருவி நீர். கல்மேல் இலங்கும் - கற்பாறைமேல் வந்து இலங்குகின்ற.

18. கணிவேங்கை-ஜோசியனைப் போல நாளை அறிவிக்கும் வேங்கை மரம், நல்நாளே நாடி-தான் மலர வேண்டிய நாளை அறிந்து. தொகற்பால போழ்தே-ஒருவர்க்குக் கூடும் காலத்தே, தொகும்-வந்து கூடும்.

கணிவேங்கை-உவமைத்தொகை: கணிகளைப்போல நாளை அறிவிக்கும் வேங்கை என்பது. ("கணிகளும் சொற்ற"-கந்த புராணம் வள்ளியம்மைத் திருமணப் படலம்-148.)

19. இது மன்னும் தீது என்று இசைந்ததும் அது-(இவர்க்கு) மிகவும் தீங்கினைத் தருவது ஒன்றே என்று பிறர் சொல்லும் வகை வந்து பொருந்தியதாகிய வினையும், ஆவார்க்கு-செல்வம் பெருகுதற்குரிய புண்ணியம் உடையார்க்கு. திரு-புண்ணியம். தீநாள்-தீமையைத் தரும் நாட்கள்.

20. செயிர்-குற்றம். பயிர் அறு-அருவருப்பு அற்ற, பக்கத் தார்-அமைச்சரும், கொள்வர்—செய்வர். துகிர்-பவழம். செவ்வாய்-சிவந்த வாய், முறுவல்-வெண்மையான பல் வரிசை, நல் சில் மொழியாய்-நல்ல மெல்லிய மொழியையும் உடையாய், செய்தானே-எழுது மவன் கருத்துக்கு, ஒவ்வாத-ஒத்திராத, பாவை-சித்திரம்.

எழுதிய சித்திரம் எழுதினவன் பாவனையை ஒட்டியிருக்கும்; மந்திரி முதலானோர் அரசன் தன்மையை ஒட்டி நடப்பர். குற்ற மற்ற நீதியை உடைய அரசன் ஒரு தீமையைச் செய்யின், வெளிக்கு அது தீமை யுடையதாகத் தோன்றினும், ஆராய்ந்து பார்க்கின் அஃது ஒரு நற்பயனைக் குறித்ததாகவே இருக்கும். ஆகையால் அரசன் செய்யும் தீயகாரியங்களைக் கண்டிக்க வேண்டிய அறிவுடை யமைச்சரும் அரசன் சொல்படி அதனை நிறைவேற்றுவர் என்க.

IV

கம்ப ராமாயணம்

குகப் படலம்

கம்பர் சோழவளநாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தர் என்பவருக்கு அருமை மகனுகப் பிறந்தனர். குலம்: உவச்சர் குலம். திருவெண்ணெய் நல்லூர்-சடையப்ப முதலியாரால் ஆதரிக்கப் பெற்றுக் கல்வியிற் சிறந்து பெரும்புகழ் அடைந்தனர். "கல்வியிற் பெரியவன் கம்பன்" என்றும் "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றும் வழங்குகின்றமையால் அவரது பெரும் புலமை விளங்கும். சடையப்ப முதலியார் ஆதரித்து வந்த அருமையை இராமாயணத்தில் பல இடங்களில் பாராட்டி இருக்கின்றனர்.

இவர்க்கு வழங்கும் பெயர்கள்: கம்பர், கம்பநாடர் என்பன.

கம்பர் என்பது அக்காலத்தில் பெயராக வழங்கியதால் இயற்பெயர் என்பர்.

கம்பர் இயற்றிய வேறு நூல்கள் ஏரெழுபது, திருக்கை வழக்கம் முதலியன.

இராமாயணத்திற்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டனர். இராமாயணத்தைப் பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களாக வகுத்துப் பாடினர்.

இராமாயணம்-இராம + அயனம்: அயனம்-செலவு: இராமனது செலவு எனப் பொருள் படும். அயனம் என்பதற்குக் கதை எனவும், அவதாரம் எனவும் பொருள் கொண்டு இராமாயணம் என்பதற்கு இராம கதை, இராமாவதாரம் என்றும் சிலர் பொருள் கூறுவர்.

கம்பர் இராமாயணத்தைத் திருவழுந்தூரில் சில பாகமும் திருவொற்றியூரில் சில பாகமுமாகப் பாடி முடித்தனர் என்பர்.

கம்பர் காலம்

(1)..........'கம்பனுரிடைப் பெருமையும் உண்டு' என்று குறித்துள்ள இடத்தில் அடியில் வருவனவற்றைச் சேர்த்துக் கொள்க:—

"கம்பனுரிடைப் பெருமையும் உண்டு" என்று அந்நூலின் உரையாசிரியரால் உதாரணமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

வீரசோழியத்திற்கு உரையிட்ட பெருந்தேவனுர் என்பவர் அந்நூலாசிரியரான புத்த மித்திரரை அடுத்திருந்தனர் என்பதும், அவர் அபயனுகிய முதற்குலோத்துங்கன் காலத்துக்கு முற்பட்டவர் என்பதும், அவருக்கும் அந்நூலாசிரியருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பதும் ஆராய்ச்சியால் விளங்கும்: (செந்தமிழ், வால்யம் 24, பக்கம் 166–167.)

ஆகவே, வீரசோழிய நூலாசிரியர் காலத்திற்கும், அதன் உரையாசிரியர் காலத்திற்கும் முன்னரே கம்பர் பெரும்புகழ் அடைந்திருக்க வேண்டும் என்பது துணியப்படும்.

கம்பர் காலம்:

ஆசிரியர் தி. த. கனகசுந்தரம் பிள்ளை, B. A. அவர்கள் தாம் பதிப்பித்த கம்பராமாயண பாலகாண்டத்தில் கம்பர் காலம்

எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவிஅரங்(கு) ஏற்றி னானே.

என்னும் செய்யுளுக்குப் பொருந்த கி. பி. 885 என்று கூறியுள்ளனர்.

இந்தக்கொள்கையை வலியுறுத்த, இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையினரும், கல்வெட்டு ஆராய்ச்சியிற் சிறந்தவரும் ஆகிய தமிழ் அறிஞர் திருவாரூர் சோம சுந்தர தேசிகர், Pandit, Tamil Lexicon Office, Madras கூறும் ஆதாரங்களுள் சில வருமாறு:

(1) வீரசோழியம் என்னும் இலக்கணநூல் வீரராஜேந்திர சோழன் காலத்தில் அவன் பெயர் அமைய இயற்றப்பட்டது. அவன் காலம் கி. பி. 1063-1070 ஆகும். அந்நூலில், வேற்றுமைப் படலம் ஏழாம் செய்யுளின் உரையில்,

"கம்பனரிடைப் பெருமையும் உண்டு"

என்று அந்நூலாசிரியரே உதாரணமாகக் கம்பரைக் குறித்துள்ளார். ஆகவே இச்சோழன் காலத்திற்குப் பல ஆண்டுகள் முன்னரே கம்பர் புகழ் அடைந்திருக்கவேண்டும் என்பது விளங்கும்.

(2) சடையப்ப முதலியார் பல்லவர்களுள் கடைசியாக ஆண்ட கம்ப வர்மன் ஆட்சிக் காலத்தில் அவன் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு சமயம் 1000 காடி நெல்லும், உக்கல் என்ற ஊரி லுள்ளார்க்கு 500 காடி நெல்லும் கொடுத்ததாகக்கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இந்தக் கம்பவர்மனைப் பற்றி மதுராந்தக உத்தம

சோழனது செப்புப் பட்டயம் ஒன்றிலும் கூறப்பட்டிருக்கிறது. (South Indian Inscriptions III)

(சோமசுந்தர தேசிகர் "சைவசிகாமணிகள் இருவர்" பக்கம் 36 பார்க்க.)

T. A. கோபிநாத ராவ் M. A. அவர்கள் தாம் எழுதிய சோழ வமிச சரித்திரத்தில் 12-ம் பக்கத்தில் "பராந்தகன் I (906-7) பின், அவன் பெரியப்பன் கண்டராதித்தன் மகனாகிய மதுராந்தகன் அரசு புரிந்தான்" என்றும், "மதுராந்தகனுக்கு உத்தமசோழன் என்னும் மறுபெயர் இருந்தது என்பது விளங்கும்" என்றும் கூறுகின்றனர்.

சோமசுந்தரதேசிகர் "சைவசிகாமணிகள் இருவர்" பக்கம் 50, சோழ வமிசாவளியும் சோழவமிச சரித்திரம் பக்கம் 6-ம் பார்க்க.

ஆகவே, பத்தாம் நூற்றாண்டிலிருந்த மதுராந்தக உத்தம சோழனது பட்டயத்தில் குறிக்கப்பட்ட கம்பவர்மன் இந்தச் சோழனுக்குப் பல ஆண்டுகள் முன்னரே இருந்திருக்கவேண்டும் என்பதும், அந்தக் கம்பவர்மன் காலத்தில் இருந்த சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்ற கம்பர் கி. பி. 885-ல் இராமாயணத்தை அரங்கேற்றினர் என்பதும் பொருந்தும்.

இனி, கம்பர் இராமாயணத்தில் பல இடங்களிலும் சடையப்ப முதலியாரைப்பற்றிப் புகழ்ந்து கூறுகின்றனரே அன்றி, ஜெயங்கொண்டாரும் ஒட்டக்கூத்தரும் தம் அரசர்களைச் சுட்டிப் புகழ்வது போல, ஓர் அரசனையும் அவ்வாறு புகழ்ந்து கூறாமையால் கி. பி. 1132-63 ஆண்ட குலோத்துங்கன் II காலத்தில் கம்பர் விளங்கினர் என்று கூறுதல் பொருந்ாது.

குறிப்பு:—கம்பர் பிறந்த ஊராகிய திருவழுந்தூர் மாயவரம் தாலுக்காவில் குற்றாலத்திற்குத் தெற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. தமிழ் மாணவர்கள் அந்த ஊருக்குச் சென்று "கம்பர் மேடு" என்னும் இடத்தைப் பார்த்து வருதல் நலம்.

—பதிப்பாளர்.

கம்பரைப் பற்றிக் கர்ணபரம்பரையாக வழங்கும் சரித்திரங்களை அச்சிறுபாக்கம்-வீராசாமிச் செட்டியார் எழுதிய விநோதரச மஞ்சரியிற் காணலாம்.

செய்யுள் நடை: சுருங்கச் சொல்லல் என்னும் அழகையே மேலாகக் கொள்வர். வாக்கியங்களும் பெரும்பாலும் சிறு வாக்கியங்களாவே அமைப்பர். கதைகளோடு அறம், ஈகை, இரக்கம், நன்றி மறவாமை முதலிய நன்னெறிகளையும் கூறுவர்.

உயர்தனிச் செம்மொழிகளில் சொற்சுவை, பொருட்சுவை, கவிச்சுவை முதலியன கொண்டுள்ள நூல்களாக உலக முழுவதும் பாராட்டத்தக்க பெரு நூல்களுள் கம்பராமாயணமும் ஒன்றாக விளங்கும் அருமை கொண்டது என்பது ஆராய்ச்சி வல்லுநர்க்குப் புலனாகும். பரந்த அறிவினால் நுனித்தறியும் புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்களைப்போலவே ஒருவரது அறிவின் ஆற்றலுக்கு ஏற்பவும், பிராயம் முதிருந் தோறும் பெருகுகின்ற உலக அனுபவத்திற்கு ஏற்பவும் கம்பராமாயணத்தில் பொருள் நயங்கள் மேன்மேலும் தோன்றும் என்க.

குகப்படலம் அயோத்தியா காண்டத்தில் பதினோராவது படலமாகும். இராமர் அயோத்தியா நகரத்தைவிட்டு நீங்கிக் காட்டிற் புகுந்தபோது, இச்செய்தியைக் கேள்வியுற்ற பரதன் வருந்தி இராமனைப் போலவே சடைமுடி தாங்கி, காட்டுக்குச் சென்று இராமனை அழைத்து வரப் புறப்பட்டான். குகனென்பான், பரதனது சேனையைப்பார்த்தவுடன், பரதன் இராமனிடம் பகைமை பூண்டு துன்புறுத்தக் காட்டிற்கும் வந்தானென்று முதலில் தவறாக எண்ணிவிட்டான். பரதன் நெருங்கினவுடன் குகன் உண்மை தெளிந்து பரதனிடம்அன்பு பாராட்டி, பரதனது சேனை கங்கையைக் கடந்து செல்லும்படி ஓடங்கள் கொண்டுவந்து உதவினான். சேனை கங்கையைக் கடந்து சென்றது.

1. பூ-அழகு. பொலம் கழல்-பொன்னுலாகிய வீரக் கழல். பொன் என்றது பொலம் என்று திரிந்தது. பொருவு இல்-ஒப்பு இல்லாத. தானை-சேனை. கழனி நாடு-வளம்பெருகிய கழனிகளை உடைய நாடு-கோசலை நாடு.

கம்பர் தமது தேசாபிமானம் தோன்றும்படி, காவிரிவளம் பெற்ற சோழநாட்டைக் கோசல நாட்டிற்கு உவமை கூறினர்.

ஒரீஇ-ஒருவி-நீங்கி. பரதன் நிலைமையைக் கண்டு அசையும் பொருளும் அசையாப் பொருளும் இரக்கங் கொண்டன என்பர்.

2. கான்றலை-காட்டினிடத்து: (தலை, ஏழாம்வேற்றுமை உருபு) படர்-செல்லும். தோன்றல்-பரதன். ஆன்றவர்-ஆன்றோர்-சான்றோர்-பெரியோர், மூன்று பத்தாயிரம்-30,000, இரட்டி 30,000 × 2 = 60,000.

3. ஆயிடை - ஆ + இடை - அச்சமயத்தில். துப்பு - வலிமை. மேகத்தை ஒப்புடை அண்ணல்-கார்மேக வண்ணனுகிய இராமன், உடற்ற-போர் செய்ய, எடுத்த சீற்றத்தான் - மூண்டெழும் கோப முடையவனாய்.

4. கூற்றின் ஆற்றலான்-எமனுக்கு ஒப்பானவலிமை அமைந்த வன்: குகன். முரண்-பகைமை. துகளின்-மேலே யெழும்புகின்ற புழுதியினுல்: மேலே எழும்புகின்ற புழுதியைப் பார்த்தவுடன் அப் புழுதியை உண்டாக்கிய பெரியதோர் சேனை வருவதை உணர்ந்தான் குகன்; சேனையை ஒரு தூசாக மதித்தவன் என்று கூறுவதும் பொருந்தும்.

கோபத்தால் சிரிப்பு மிகுத்து, கண்களில் தீப்பொறி உண்டாகி யது; மூக்கிற் புகை உண்டாகியது; புருவம் வளைந்தது என்க.

தீ நாற-தீப் பொறி பறக்க.

5. கட்டிய-(அரையில்) கட்டிய, சுரிகை-உடைவாள். கடித்த-உதடுகளைக் கடித்த. வெட்டிய-கடிந்து பேசும். துடி-உடுக்கை. குறிக் கும் கொம்பினன்-போருக்கு அறிகுறியாக ஒலிக்கும் ஊதுகொம்பை யுடையவன். அமர் கிட்டியது - சண்டை நெருங்கியது. கிளர்ந்த-

பூரித்த. குகன் சிறந்த வீரன் என்பது தோன்ற, சண்டை நிகழப் போவதைக் குறித்து அவன் தோள்கள் பூரித்தன என்றார்.

6. எலி எலாம் இப்படை-இப்படை எலாம் எலி - இச்சேனை முழுதும் எலிகளாம். யான் அரவம்-(இச்சேனையை அழித்தற்கு) யான் பாம்பாவேன். ஒலி உலாம்-ஆரவாரம் மிக்க. கூயினன் - கூவி அழைத்தான். வலி உலா(வு)ம் புலி எலாம் என இயைக்க. வள்உகிர்-கூர்மையை உடைய நகம். புலிக்கூட்டம் எல்லாம் ஓரிடத்தே கூடியிருந்தன போல ஆரவாரம் மிக்க சேனையைக் கூவி அழைத்தான் என்க.

வலி உலாம் உலகினில் வாழும் வள்ளுகிர்ப் புலி எலாம் ஒருவழி புகுந்தபோல ஒலியுலாம் சேனையை உவந்துகூயினன் என இயைக்க.

7. மருங்கு அடை-பக்கத்தே உள்ள, ஆர்ப்பு - ஆரவாரம், தென்கரை-கங்கை யாற்றின் தென்னண்டையில் உள்ள கரை. அருங் கடையுகம்-(உயிர்கள் தப்பிப் பிழைத்தற்கு) அரிய மகா பிரளய காலம். அசனி-இடி. கருங்கடல்-பெரிய கடல். கிளர்ந்தென-மிக்கு எழுந்தாற் போல.

கங்கையாற்றின் வடகரையில் பரதன் சேனை தங்கியது; தென் கரையில் குகன் சேனை வந்து தங்கியது. குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்-எழுவாய்; தோன்றினன்-பயனிலை.

யுகமுடிவில் மகா பிரளயம் உண்டாகும் என்பது வடமொழி நூல்களின் கருத்து.

அருங்கடை கிளர்ந்தென, ஒருங்கடை நெடும்படை ஒல்லென் ஆர்ப்பினொடு கலந்து சூழ மருங்கடை தென்கரை வந்து தோன்றினன் என இயைக்க. அசனிமாமழையும் கருங்கடலும் கிளர்ந்தன என்க.

8. புளினர் - வேடர். சூழ்ச்சியின் ஊன்றிய - (இராமனைக் கொன்றுவிட வேண்டும் என்ற) நோக்கத்துடன்வந்து தங்கிய. உம்பர்-விண்ணுலகு. என்றனென்-தொடங்கியுள்ளேன். ஊன்ற-அகன்ற. அமைதிர்-ஒத்துக்கொள்வீர்களாக.

என் உயிர்த்துணைவற்கு ஆன்ற பேர்அரசு ஈகுவான்; நீர் அமைதிர் என்றான். அமைதிராம்-ஆம்-அசை. நெறி-வழி. துறை-நீர்த்துறை.

9. துடி எறி-பறைகளை அடி. ஒடி-காட்டுப்புதர், அம்பிகள்-படகுகள், ஓட்டலிர்-ஓட்டாதீர்கள். கடி எறி-காவல் பொருந்திய. பிடி-பிடித்துக்கொள், பட-அழியும்படி, எறி-குத்து, பெயர்த்தும்-மறுபடியும்.

குகன் தன் சேனையிலுள்ள வீரரைத் தனித்தனி பார்த்து, பிடி, எறி, என்னும் ஏவல் ஒருமை வினைமுற்றுகளால் கூறினன்; சேனை முழுதும் பார்த்து 'ஓட்டலிர்' என ஏவல் பன்மையில் கூறினன்.

10. அஞ்சன வண்ணன் - மைபோலும் கரியமேனி உடையான், நாயகன்-இராமன். ஆளாமே-எதிர்மறை வினை எச்சம்-ஆளாமல். வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும்-மூத்தமகனாகிய இராமனுக்கு உரிய அரசாட்சியைக் கைகேயி செய்த வஞ்சனையால் பெற்ற பரதரும் வந்தாரே-வந்தனரன்றே. செஞ்சரம் - செந்நிறமடைந்த அம்பு, தீ உமிழ்கின்றன-நெருப்பைச் சொரிகின்றன. வண்ணம்: தமிழ்ச்சொல்.

மன்னரும் என்று பரதனைப் பன்மையால் கூறியது இகழ்ச்சி; மன்னரும்-உம் இழிவு சிறப்பு. ஓதாரோ - இரண்டு எதிர்மறைகள் சேர்ந்து ஓர் உடன் பாட்டைத் தெரிவிக்கிறது.

இச்செய்யுள் முதல், சண்டைக்குப் புறப்படச் சித்தமாயிருக்கிறான் குகன் என்பது தோன்றப் பாக்களும் மிக மிடுக்கான சந்தத்தில் அமைந்துள்ளன. சந்தர்ப்பத்திற்குப் பொருந்தப் பாடுவது கம்பரது சிறப்பியல்புகளுள் ஒன்றாகும்.

11. திரை - அலை, வேழம் - யானை, விலங்கிடும் - ஒதுங்கிப் போகும், வில் ஆளோ-வில்லையுடைய வீரனோ? தோழமை என்று அவர் சொல்லிய சொல்-இராமன் குகனைப்பார்த்து "நீயும் நானும் நண்பாயிருப்போம்" என்றுகூறிய வார்த்தை. ஒரு சொல் அன்றோ-(நான் அந்த வார்த்தையின்படி நடவா விட்டால்) இராமர் சொன்ன

நன்கு மதிக்கத்தக்க அந்த வார்த்தை மதிப்பில்லாத சொல்லாக முடியும் அன்றோ? (mere words: words without meaning) ஏழமை வேடன்-அறிவுபோதாத இவ்வேடன், இறந்திலன்-(இராமன் சொன்னதற்கு ஒத்துக்கொண்டபடி நிறைவேற்றுமையின் உயிர் வாழ்வதைப் பார்க்கிலும்) இறந்துபடக் கூடாதா?

12. முன்னவன்-தமையன்-இராமன். மொய் புலி அன்னன் - வல்லமையுடைய புலியை ஒத்தவன் (இலக்குமணன்), பின்னவன் - தம்பி, என் இவன் என்னை இகழ்ந்தது இவ் எல்லை கடந்தன்றோ- இந்தக் கங்கை யாற்றைக் கடந்த பின்பு அல்லவா இவன் என்னை இகழ்ந்தது பொருந்தும். சரம்-அம்பு, மன்னவர் நெஞ்சில் - அரசர் மார்பில், வாயாவோ-பாயமாட்டாவோ? எனவே, அம்புகள் தாழ்மை யான வேடுவர்கள் விடுதலினாலே அரசர்கள் மார்பில் பாயாமல் அடங்கி விடுமோ? என்றான்.

13. பகை நண்போடு ஏவமும்-(இவர்) பகைவர் என்பதும், (இவர்)நண்பர் என்பதும், (இது) குற்றம் என்பதும் (ஏவம்-குற்றம்), தோழமை தந்தான்-இராமன். ஆ! அது போக-அது கிடக்க.

இராமனை அழிக்கப் பரதன் சேனை போவது (குகன் அம்புக்கு இரையாகாமல்) பரதன் சேனை தம் உயிரைப் பாதுகாத்துக்கொண்ட பின்பு அல்லவா? என்றான் குகன்.

நின்ற பெரும்பழி-உலகம் உள்ள அளவும் மறையாமல் நிற்கும் பழி என்க.

14. தவம்-தவக்கோலம்; என் துணை-என் நண்பனாகிய இராமன். உயிர் மருந்து எனின்-உயிரானது அமிர்தம்போல் இனியதோ என்றால். வண்புகழ்-இராமனுக்குத் தன்னால் ஆன உதவி செய்தலால் உண்டாகும் பெரும் புகழ்; (உதவியாவது-பரதனை எதிர்த்தல்) புகழைப் பெற்ற பின்னரே இறப்பேன் என்றான்.

கேண்மை உகந்தவர்-நட்பை விரும்பியவர்-இராமர். கடன் கடமை.

15. இச்செய்யுள் குகன் தன் படைவீரர்க்குக் கூறுவது.

தும்பி-யானை. மா-குதிரை. மிடைந்த-நெருங்கிய, சூழ்வாரும்-சூழ்ந்து வரும்: சூழ்வரும் என்பதன் விகாரம். வம்பு இயல் தார்-வாசனை வீசும் மாலை. வாள் வலி கங்கை கடந்தன்றோ-கங்கையைக் கடந்தபின்பு அன்றோ பரதனது வாளாயுத வல்லமை உள்ளது என்பது ஏற்படும். எனவே, நாம் ஓடம் விட்டுப் பரதன் சேனையை ஏற்றிக்கொண்டு வந்து கங்கையின் மறுகரையில் இறக்கின பின்பு தானே பரதன் சேனை சண்டை செய்ய முடியும்.

வெம்பிய-கோபம் மிக்க. ஓடம் விலக்கீரோ-ஓடம் விடுதலை விலக்குவீராக: ஏன் எனின், பரதன் வந்து தங்கிய கங்கைத்துறையில் ஓடங்கள் இருந்தால் ஒருகால் பரதன் ஆட்கள் அவற்றை உபயோகித்துக் கொள்ளவும் கூடும். நம்பி-இராமன்; நம்பி முன்னே இனி நம் உயிர்மாய்வது நன்று அன்றோ-இராமனோடு பரதன் போர் செய்து துன்பம் விளைக்குமுன், அவன் நண்பர்களாகிய நாம் பரதனிடம் போர் நிகழ்த்தி உயிரை விடுவது நன்றியறிதலான காரியம் அன்றோ? எனவே, நம்மை வென்ற பின்பே பரதன் இராமனிடம் செல்ல முடியும் என்றான்.

16. இச்செய்யுள் கம்பர் செய்யுள் நடையின் சிறப்பியல்புக்கு உதாரணமாகும்.

சோனை பட, குடர் சூறை பட, தானை பட, யானை பட, திரள் சாயேனோ, என்று குகன் தன் படையிலுள்ள வீரர்களுக்கு ஆவேசம் பிறக்கும்படி கூறும் சந்தர்ப்பத்திற்கு ஏற்பப் பாட்டும் மிடுக்காக அமைத்திருப்பதை நோக்குக.

போன-நம்முடன் வந்த; படைத்தலை வீரர் - சேனையிலுள்ள வீரர்: தலை-ஏழாம் வேற்றுமை உருபு. கிடக்கிடு-கிடக்கட்டும்: (கிடக்கிடுக என்பதன் விகாரம்). தேவர் வரின்-(மக்களே யன்றித்)தேவர்கள் ஒருங்கு கூடி வந்து எதிர்த்தாலும், சிலை மா மேகம்-வில்லாலாகிய காளமேகம், சோனைபட-(அம்பாகிய) விடாத பெருமழை பொழிய, குடர்-குடல், சூறைபட-அலைபட, தானை திரள் சாயேனோ-சேனைக் கூட்டத்தை அழிக்கேனோ.

17. நின்ற-(பட்டாபிஷேகம் செய்து கொள்வதற்குச்) சித்தமாயிருந்த. கொடை-வள்ளல் தன்மை, சீரம்-மரவுரி. அன்று-பட்டாபி

ஷேகம் நடக்கவேண்டிய நாளைக்கு முந்திய நாளில். கொடுத்தவள்-கைகேயி. நிணம்-கொழுப்பு, குவை-கூட்டம். கொண்டு - இழுத்துக் கொண்டு. துன்று திரை-நெருங்கிய அலை,இடை-கடலின் இடத்தை, மடுத்து-நிறைத்து, தூராதோ-தூர்த்து விடாதோ.

கங்கையானது பிணக் குவியலைத் தாங்கிக்கொண்டு ஓடிக் கடலில் நிறைத்து அக்கடலிடத்தைத் தூர்க்காதோ என்க.

18. கொடிப்படை-துகிற் கொடிகளையுடைய சேனை. சாடி மோதி, அழித்து. அறத்தவர்-தருமவடிவமான இராமன். வேடு-வேடர் குலம் (தொழிலாகு பெயர்). வேடர்கள் இராமனுக்கு அரசாட்சியைக் கொடுத்தார்கள் என்று சொல்லும்படியான பெரும் புகழை அடைய மாட்டீரோ என்றான். நாடுகொடுத்த - (பட்டாபிஷேகம் செய்துகொண்டு ஆளவேண்டிய) நாட்டை (பரதன் ஆளட்டும் என்று) விட்டுவிட்ட; நாயகன்-இராமன். காடு கொடுக்கிலர் ஆகி-வேடர்களாகிய நாம் வசிக்கிற காட்டையும் (இராமனுக்குக்) கொடுக்கச் சம்மதிக்காதவராய். எடுத்தது-படை எடுத்து வந்த செய்கை: தொழிற் பெயர்.

19. மா-சிறந்த, கோ-தலைவன் (இராமன்), முனியத்தகும் - (பரதனை நான் எதிர்த்தால) கோபிக்கக் கூடும். இறை - சிறிதும். முனை உற்று-போர் முனையில் நின்று, வ-அம்பு, இடில்-செலுத்தினால், ஆ முனையில்-பசு மேய முனைந்தால், சிறுகூழ் என-(மேயும் போது அகப்பட்ட) சிறிய இளம்பயிர் (அழியும் விதம்) போல.

பசு மேய்ந்தால் இளம்பயிர் அழிவது போல மிகப்பெரிய சேனையை முழுதும் அழிப்பேன் என்றான்.

20. என்பன சொல்லி-என்ற இவ்வார்த்தைகளைச் சொல்லி, இரும்பன மேனியர்-இரும்பை யொத்த உடம்பு உடையவர்: (அன-அன்ன என்பதன் விகாரம்). பணை-பெரிய, மல் உயர்தோள்-மல் யுத்தத்திற் சிறந்த தோள்.வாள்வீரன்-இராமன். அன்பன்-குகன். நின்றனன்-(கங்கையின் தென் கரையில்) நின்றான். அரி ஏறு அன்னமுன்பனில்-ஆண் சிங்கம் போன்ற வல்லமையுடைய பரதனிடத்தில்: முன்பன்-முன்பு (வலிமை) + அன். மூரிய - வலிய, தேர்வல்லான் - தேரைச் செலுத்துலில் வல்லவனான சுமந்திரன்.

21. இச்செய்யுளிலும் அடுத்த செய்யுளிலும் சுமந்திரன் பரதனுக்குக் குகனைப்பற்றிக் கூறுதல் சொல்லப்படும்.

இரு கரை உடையான்-(குகன்) இரண்டு கரைகளையும் (தனக்குச் சொந்தமாக) உடையவன். இறந்த-கடந்த. நாவாய்-படகு தனி நாதற்கு-ஒப்பற்ற தலைவனுக்கு (இராமனுக்கு). உயிர்த்துணைவன்-உயிர் போன்ற நண்பன். கரியின் ஏறு-ஆண் யானை.

வில் பிடித்த வேலையினன்-வில்லை ஏந்திய கடல் போன்ற சேனையை உடையவன்: (வேலை-கடல்). கொங்கு-தேன். அலரும்-சொரிகிற. தண்டார்-தண்- குளிர்ச்சி பொருந்திய + தார்-மாலை. குறி-பெயர்.

கணக்கு இறந்த நாவயான், உன்னைக் குறித்துச் சொல்லுகின்ற அளவிறந்த வசைச் சொற்களை யுடையவன்: (இப்பொருளில் நாவான் என்பதே போதியதாக இருக்க, வாயான் என்ற மிகை மொழியினால் வசைச்சொற்கள் என்பது கொள்ளப்பட்டது.) கொங்கலரும் தண்டார்க் குகன் என்னும் குறி உடையான், (வீரத்தினால்) முருகக்கடவுளே என்று சொல்லத்தக்க தோற்றத்தை உடையவன் என்று பொருள் கூறுவதும் பொருந்தும்.

22. கல்காணுந் திண்மை - மலையில் காணப்படும் வலிமை; காணும் என்பதை உவம உருபாகக் கொண்டு மலையைப் போன்ற என்றலுமாம். கரை காணாக் காதலான் - (இராமனிடத்தில்) எல்லை காணாத அன்புடையவன். அல்-இருள். மழைகாணும்-நீல நிறமுள்ள மேகத்தை ஒத்த. நிற்காணும் உள்ளத்தான் - நின்னை (பரதனை)ப் பார்க்கவேண்டும் என்னும் எண்ணம் உடையான்.

23. அவன்-குகன். தந்தை துணை-தன் தந்தையாகிய தசரதனுக்கு ஆலோசனைக்கு உரிய சுமந்திரன். உவக்கின்ற - மகிழ்கின்ற, துரிசு-குற்றம்.

பரதனைத் 'திரு மனத்தான்' என்றது: குகன், பரதனது சேனையைக் கண்ட அளவில், பரதன் இராமனை உயிர் நிலையாகக் கொண்டான் என்பதை அறியாமல், இராமனுக்குப் பகைவன் என்று ஆராயாமல் எண்ணினனே யன்றி, உள்ளபடி பரதன் மனம் இராமபிரானிடத்துப் பற்றுடையது என்பது தெரிவித்தற்கு-என்க.

மன்-தலைவனான இராமனால், மனக்கினிய-மனத்துக்கு இனிய; மனக்கு: அத்துச்சாரியை தொக்கு நின்றது. என் முன்னே-அவன் என்னை வந்து காண்பதற்கு முன்னே; யானே சென்று அவனைக் காண்பேன் என்க.

24. இச்செய்யுளில் பரதன் உண்மையான ராமபக்தன் என்று குகன் அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தது கூறப்பட்டுள்ளது.

வற்கலை-மரவுரி. மாசு-புழுதி. மெய்-உடம்பு. நல் கலை இல் மதி-அழகிய கலைகள் இல்லாத சந்திரன் போல. நகை-ஒளி. கல்கனிய-கல்லும் உருகும்படி. விற்கையினின்று இடைவிழ - கையினின்று வில் நழுவி விழுந்துவிட, விம்முற்று-பெருமூச்செறிந்து, நின்றொழிந்தான்-அசையாமல் நின்று விட்டான்.

25. நம்பி-பரதன். நாயகன்-இராமனை. அயல்நின்றான்-அருகில் நின்றவனான சத்துருக்கினன். தம்பி-இலக்குமணன். தவவேடந் தலைநின்றான்-தவவேடத்திலே சிறந்து நின்றான். துன்பம் ஒரு முடிவு-துன்பத்திற்கு ஒரு எல்லை. திசைநோக்கி-(இராமனும் இலக்குமணனும் சென்ற திக்கு நோக்கி: திக்கு நோக்கி வணங்குதல் இராமனிடம் கொண்ட அன்பின் செயலாகும். எம்பெருமான்-எமது தலைவன்-(இராமன்). பின் பிறந்தார்-தம்பியர். பிழைப்பு-தவறு. இழைப்பரோ-செய்வாரோ?

26. உண்டிடுக்கண்-உள்ளது எனப்படும் துன்பம். உலையாத-கெடாத. கொண்ட-இராமன் தரித்துக்கொண்ட. குறிப்பு-கருத்து, கண்டு உணர்ந்து பெயர்கின்றேன்-(அருகிற் சென்று அவனைப்) பார்த்து(குறிப்பெல்லாம்) தெரிந்து கொண்டு வருகிறேன். நெறி காமின்கள்-வழியைப் பாதுகாத்திருங்கள். நாவாய்-படகு. ஒரு தனியே-தன்னந் தனியனாய்.

உண்டு என்பதற்கு (பரதனிடத்தில் நாம் அறிதற்கு உரிய மனக் குறிப்புகள் பல) உண்டு என்றும், குறிப்பெல்லாம் என்பதற்கு அம் மனக் குறிப்புகளை எல்லாம் என்றும் பொருள் கூறுதலும் பொருந்தும்.

27. எதிரே வந்து-(ஓடத்திற் சென்ற குகன்) பரதன் எதிரிலே வந்து, தொழுதானை-(இராமன் சென்ற திக்கு நோக்கித்) தொழுத

பரதனை, வணங்கினான்-. மலர் இருந்த அந்தணனும் - (திருமாலின் நாபித்) தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், தன்-தன்னை (பரதனை) வணங்கத்தக்க, அவனும்-அந்தப் பரதனும், அவன் அடி வீழ்ந்தான்-அக்குகனுடைய அடியில் விழுந்துவணங்கினான். தந்தையினும் களிகூரத் தழுவினான்-(மகனைக் கண்டபோது) தந்தைக்குண்டாகும் மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியுடன் குகன் பரதனை அணைத்துக் கொண்டான். தகவு-பெருந்தகைமை, சென்னி-தலை, சீர்த்தியான்-புகழ்வாய்ந்தவன் (குகன்), தகவுடையார்-சான்றாண்மையுடையவர் (சால்பை ஆளுந் தன்மை உடையவர்: சால்பு-அறிவு) சான்றோரால் கொண்டாட்ப்பெறும் புகழ் வாய்ந்த குகன் என்க.

28. தழுவின-(அவ்வாறு பரதனைத்) தழுவிய, புளிஞர் வேந்தன்-வேடுவர் தலைவன்-குகன், தாமரைச்செங்கணானை-பரதனை, எழு-இரும்புத் தூண், எய்தியது என்னை-(நீ இங்கு) வந்தது என்ன காரணம் பற்றி? தந்தை-தசரதன்.

பின் இரண்டு அடிகளில் சொல்தோறும் உள்ள சொல்நயம் பொருள் நயங்களை ஊன்றி நோக்குக:

பரதனுடைய நெஞ்சில் தசரதனாகிய தன் தந்தை தவறி விட்டான் என்ற எண்ணமே இடைவிடாது குடிகொண்டிருந்ததால், தந்தை யென்றும் பாராட்டாமல் தவறியதே பெரியது என்று துணிந்து "வழுவினன்" என்றான்.

உலக நடையில் சாதாரணமாகப் பெரியோராவார், சிறியோர் செய்த தவறுகளை எடுத்துக் கூறுவரன்றிச், சிறியோராவார், பெரியோர் செய்த தவறுகளை எடுத்துக் கூறமாட்டார்கள். ஆயினும் செய்த தவறு, அரசன் மட்டிலும் அன்றி, பரதன் மட்டிலும் அன்றி, அந்நாட்டுக் குடிகள், மற்ற அரசர், முனிவர் முதலான கோடிக்கணக்கான மக்களுக்குத் துன்பம் விளைத்தமையால், அவ்வளவு பெரிய தவற்றினைச் செய்தவர் தந்தையேயாயினும் பொறுத்தற்கு அரியது என்னும் தீவிரம் தோன்ற, "தந்தை வழுவினன்" என்றான்.

தவறு செய்தவன் சாமானிய மகன் அன்று ; காத்தலில் வல்லவன் என்பது தோன்ற "அளித்த (காத்த) தந்தை வழுவினன்" என்றான்.

அளித்தது பொன் அன்று; பொருள் அன்று; தன் நீதி நோக்கி வாழும் கோடிக்கணக்கான மக்களை என்பது தோன்ற "உலகு அளித்த தந்தை வழுவினன்" என்றான்.

அளித்தவன் சிறிய ஊரை ஆளும் தலைவனோ? சிற்றரசனோ? அரசனோ? அல்லன்; சக்கரவர்த்தி அன்றோ? சக்கரவர்த்தி தவறியது பெருங்குற்றம் என்பது தோன்ற "முழுதுலகு அளித்த தந்தை வழுவினன்" என்றான்.

எங்ஙனம் சக்கரவர்த்தி வழுவினான் எனின், தனக்குப் பின் அரசாட்சி உரிமை மூத்த மகனுக்கு உரியது என்னும் முறையை நிறைவேற்றாது வழுவினன் ஆதலின் "முழுதுலகு அளித்த தந்தை முறையினின்றும் வழுவினன்" என்றான்.

தன் காலத்திலே மட்டும் சக்கரவர்த்தியாக இருந்து அரசாட்சி செய்யும் பெருமை பெற்றவனாயின், புதுச்செல்வம் பெற்றார் இன்ன வாறு ஒழுகுவது என்று அறியாமை போல், இன்ன சமயத்தில் இன்னவாறு இன்ன நூலின் கருத்துப்படி துணிந்து செய்வதே நன்மை என்று அறியாதவனாய்த் தவறு செய்வான். அந்தத் தவறு பொறுத்துக்கொள்ளக் கூடியது. தசரதனோ என்னில், கணக்கில் அடங்காத நெடுங்காலமாக அரசாண்ட பரம்பரையில் வந்தவன் என்பதையும் மறந்து, அவ்வக்காலங்களிலே நேர்ந்த சந்தர்ப்பங் களுக்கு ஏற்பத் தன் மூதாதையர் பொதுவாக எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையும் மறந்து, சிறப்பாக அவர்கள் வழக்க மாகக் கொண்டுவந்த பட்டாபிஷேக முறைமையும் மறந்து, தன் பரம்பரையினர் அனுசரித்த நெறியினின்றும் வழுவினான் என்பது தோன்ற "முந்தையோர் முறையினின்றும் வழுவினன்" என்றான்.

தந்தை என்பான் இழைத்த தவற்றினை அறிவு அறிந்த மகன் அறியின், அதனைத் திருத்த முயல்வது மகனாவான் மேற்கொள்ள வேண்டிய கடமை என்பது தோன்ற "நீக்க" என்றான்.

தசரதன் செய்த தவறு உலகம் உள்ள அளவும் பழியாகப் பேசப்படும் என்பது தன் மனத்தே துன்புறுத்திக் கொண்டிருத்தல் தோன்ற "அதனை" என்றான்.

தந்தை சொல்லை மறுக்காது போற்றவேண்டும் என்னும் கடமையே பெரிதாகக்கொண்டு அரசாட்சியைத் தியாகம் செய்தவனே, பெரியோரைப் பணிந்த பெருமையால், தன் நாட்டுக் குடிகளை யாளும் திறமுடையான் என்பது தோன்ற இராமனை "மன்னன்" என்ருன்.

இராமனுக்குக்கிடைக்கவேண்டிய அரசாட்சி தன் முயற்சி இல்லாமலே தனக்குக் கிடைத்தபோதும், அதனை வேண்டாமென்று தடுத்துவிட்டதே பெரியதோர் தியாகமாயினும், அரசாட்சிக்கு உரிமையுடையானை மீண்டும் அழைத்துவந்து பட்டாபிஷேகம் செய்தால் மட்டும் 'முந்தையோர் முறை' சிதையாது போற்றப்படுவதாகும் என்பதும், அதுவே நல்லதோர் ப்ரம்பரையில் வந்த தான் செய்யவேண்டிய கடமையாகும் என்பதும் தோன்ற "மன்னனைக் கோணர்வான்" என்ருன்.

அப்படிச் செய்தால்தான், தசரதனது மங்கிய புகழ் மீண்டும் நிறுவப்பெற்றதாகும் என்க.

பரதன் மன்னனைக்கொணர்வான் "வந்தேன்" என்று வினைமுற்ருேடு கூருது, கொணர்வான் என்று எச்சத்தோடு நிறுத்தியது:

இராமனை அழைத்துக்கொண்டு செல்லவேண்டும் என்கிற எண்ணம் ஒன்றே பரதன் மனத்திலே மேலோங்கி நின்றதால், தாய்மார்களும் வசிஷ்டர் முதலிய பெரியோரும் மந்திரி முதலியோரும் பரதனுடன் வந்திருந்தனர் என்பதும், இன்ன இன்ன இடங்களில் தங்கினேம் என்பதும் முதலிய விவரங்களைச் சொல்லால் அளந்து கூறுதல் இயலாமையின் 'வந்தேன்' என்று கூற மறந்தனன் என்பதைப் புலப்படுத்தும். அழைத்துக்கொண்டு வரும் செயலில் தான் கர்த்தாவாகக் கூறின் தன் பெருமிதம் தோன்றுமாதலின் கூருது விட்டனன் எனினுமாம்.

கம்பருடைய கவியாதலின், இச் செய்யுளின் பொருளாழம் முற்றும் தெளிவார் உளரோ ?

29. கிராதர்-வேடர். கிளர்ந்தெழும் உயிர்ப்பன் ஆகி-மேலிட்டெழும் பெருமூச்சு உடையவனுகி, விம்மினன்-உடம்பு பூரித்து, உவகை பொங்க-மகிழ்ச்சி மேலிட. தீட்டு அருமேனி - சித்திரத்தில்

எழுதுதற்கு அரிய மேனி, மைந்தன்-பரதன், சேஅடி-சிவந்த பாதங்களாகிய, கமலப் பூவில்-தாமரை மலர்களில், பூட்டிய கையன்-சேர்த்த கைகளை உடையவனாய். எனவே, பரதனை மீண்டும் வணங்கினான்குகன் என்க; மீண்டும் வணங்கியதற்குக் காரணம்: பரதன் கூறிய சொற்களால் அவனது அரிய குணங்களை உணர்ந்து பேருவகை பூத்துத் தன் மனம் அக்குணங்களில் ஈடுபட்டதாம் என்க.

பொய்இல் உள்ளத்தன்-பொய்மை இல்லாத மனமுடையனாய்: (குகன்).

30. தாய்-கைகேயி. தாதை-தந்தை. தரணி-பூமி; ராஜ்யம். சிந்தனை-துக்கம். தேக்கி-நிறைத்து. தெரியின்-ஆராய்ந்தால்.

ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ-ஆயிரம் இராமர்கள் (சேர்ந்தாலும்) உனக்கு ஒப்பாவாரோ?: ஒப்பாகார் என்க: ஓகாரம் எதிர்மறை.

தன்னுடைய கடமை இன்னது என்று அறிந்த இராமன், தந்தை சொல்லை மறுக்காது போற்றவேண்டியே, அரசாட்சியை மேற்கொள்ளாது சென்றது பெரிய காரியம் அன்று. இராமன் தம்பியாக இருந்தும், அரசாட்சி தன்முயற்சி இல்லாமல் தனக்குக் கிடைத்தும், தன்குற்றம் இல்லாமல் தந்தையால் கொடுக்கும்படி நேரிட்டும், பரம்பரையாக அரசாண்டுவந்த குடும்பத்தைச் சேர்ந்தவனாகையால் அரசாளுதற்கு உரிய உரிமையும் ஆற்றலும் தனக்கும் இருந்தும், கோடிக்கணக்கான குடிகள் வாழும் நாட்டிற்கு அரசன் ஒருவன் ஏற்பட்டு ஆளவேண்டியது அவசியமென்று அறிந்திருந்தும், தான் அரசாட்சி ஏற்காது, இராமனை அயோத்திக்கு அழைத்துக்கொண்டு போக, இராமன் இருக்கும் காட்டிடத்தே தேடி அலைந்து திரிந்த பரதனது அன்பின் திறத்தைக்கருதி அவன் குணமென்னுங் குன்றேறி நின்ற பெருந்தகையாளரிற் சிறந்தவன் என்பது தோன்ற "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ?" என்றான் குகன்-என்க.

31. என்-என்ன என்று. ஏழை-அறிவு போதாத, எயினனேன்-வேடுவனாகிய நான். இரவி-சூரியன், புகழ்க் கற்றை-புகழாகிய கிரணத்தின் தொகுதி, மற்ற ஒளிகள்-மற்ற சந்திரன் முதலிய மண்டலங்களின் ஒளிகள். மன்புகழ்—அரசர்களாலே புகழப்பட்ட, மரபினோர்-வமிசத்தினர்.

பரதன் மூதாதையருடைய புகழ்களெல்லாம் திரட்டி ஒரு உருவமாக அமைத்துப்பார்த்தால், இவ்வரிய செய்கையினால் பரதன் அடைந்த பெரும்புகழின் முன், ஒரு சிறிதாய் முடியும் என்பது தோன்ற குகன் இங்ஙனம் கூறினான் என்க.

32. இவை அன்ன-இவை போன்ற. மாற்றம்-சொற்கள், இயைவன-தகுதி உள்ளன. புனை கழல்-அணிந்த வீரக்கழல். புலவு வேல்-(பகைவரைக் குத்தும்போது இரத்தம் படிதலால்) புலால் நாற்றம் வீசுகின்ற வேல். பொருவு இல்-ஒப்பு இல்லாத, காதல் அனையவற்கு-அன்பே வடிவமாக விளங்கியவருக்கு, அமைவில்-தகுதியாக அவற்கு-பரதனுக்கு, அன்பிலாதார் யார் என இயைக்க. நினைவு அரும்-மனத்தினால் ஆராய்தற்கு அருமையான. (இராமன் மேல்) காதல் நிமிர்ந்தது-குகனுக்கு அன்பு மிகுந்தது.

33. அருள் தரு வாரி-கருணை நிரம்பிய கடல். செவ்வழி-நடுநிலைமை. அண்ணல்-பெருமையிற் சிறந்தவன்-பரதன். கூப்பி-குவித்து. நம்முன்-நமது தமையன். எயினர் (வேடர்) வேந்தன்-குகன். காட்டுவெல்-காட்டுவேன்.

34. கார் என-மேகம்போல, கடிது-விரைவாக. கல்லிடை-கல்லினிடத்தே, படுத்த-பரப்பிய, புல்லின் - புற்களால் அமைத்த, பள்ளி-படுக்கை. புல்லின்மீது படுத்திருக்கின்றவன் உள்ளபடியே வறுமையுடைய ஏழை யல்லன்; பெரிய இராச்சியம் ஆளவேண்டிய நிலையுடையான் ஒரு விரதம் காக்கவே இத்தகைய வேடம் பூண்டான் என்பது தோன்ற "வார்சிலைத் தடக்கை" என்றும், உலகினர்க்குத் தன் வாழ்க்கை நெறியால் பல பெருங்குணங்கள் விளங்க நின்ற பெரியோன் என்பது தோன்ற "வள்ளல்" என்றும் கூறினார் கம்பர்.

பருவரல் பரவை-துன்பமாகிய கடல். பார்மிசை-பூமியின்மேல், வார்-ஒழுகுகின்ற, மணி-முத்துப் போன்ற, புனல்-நீரால், மண்ணு நீராட்டும்-கழுவுகின்ற.

35. இராமன் அடைந்துள்ள எளிய நிலையைப் பரதன் கண்டு வருத்தம் மிக்கவனாய்த் தன்னை வெறுத்துக் கூறுதலை இச்செய்யுள் உணர்த்துகின்றது.

இயன்றது-நேர்ந்தது, இடர்-துன்பம். கிழங்கும் காயும் அமிர்தம் என அயின்றனை (உண்டனை) என்க. துயின்றனை - உறங்கினாய்; ஆவி-உயிர், துறந்திலேன்-விட்டேனில்லை. சுடரும்-ஒளி வீசுகின்ற, காசு-இரத்தினங்கள், குயின்ற உயர் மகுடம்-பதித்த சிறந்த முடி, குயின்ற + உயர் = குயின்றுயர்: நிலை மொழியின் ஈற்று அகரம் தொக்கது.

36. தூண்தர நிவந்த-தூண்போல் உயர்ந்த, நீண்டவன்-நெடியோன் ஆன இராமன், துயின்ற சூழல்-உறங்கிய இடம். நிமிர்ந்த நேயம்-மிக்க அன்பு. போந்தவன் - சென்றவன் (இலக்குமணன்), பொழுது நீத்தது யாண்டு-காலத்தைக் கழித்தது எங்கே ?

37. அல்லை ஆண்டு அமைந்த - இருளினை ஒத்துப் பொருந்திய, மேனி-கரியமேனி, அழகனும்-இராமனும், அவளும்-சீதாபிராட்டியும். வெய்துயிர்ப்பு-பெருமூச்சு, வீரன்-இலக்குமணன், கல்லையாண்டு உயர்ந்த தோள்-மலையை ஒத்து உயர்ந்த தோள். கங்குல் எல்லை காண்பளவும்-இராக் காலத்தின் எல்லை பார்க்கும் வரையில்: எனவே இரவானது விடியும் வரையில். நயனம் இமைப்பிலன்-கண் இமை கொட்டிலன்.

38. என்பத்தை-என்பதை (விரிக்கும் வழி விரித்தல்)-என்று குகன் சொன்னதை. மைந்தன்-பரதன். முன்பு ஒத்த தோற்றத்தேமில்-முன்பு பிறப்பினால் ஒத்த எங்களில், அவன் - இலக்குமணன், துடைக்க-நீக்க, அன்பத்துக்கு - அன்பினுக்கு, (அத்துச்சாரியை பெற்றது.)

39. அவ்விடை-அ + இடை-அவ்விடத்தில், அண்ணல் தானும்-பரதனும், அரும்பொடியில் வைகி-அருவருக்கத் தகுந்த புழுதியிலே தங்கி, தெவ் இடைதர-பகைவர்கள் (அஞ்சி) விலகும்படி, நின்று ஆர்க்கும் செறிகழல்-நிலையாக நின்று ஒலிக்கின்ற நெருங்கிய வீரக்கழல், புளினர் கோமான்!-வேடுவர் தலைவனே! அண்மைவிளியாதலின் ஈறு விகாரப்படாமல் நின்றது. இ இடை = இப்போது. ஏற்றினையாயின்-(கரை) ஏற்றினையானால், இடர்க்கடல்-துன்பக்கடல். வேந்தன்பால் விடுத்தது-இராமனிடம் சேர்த்தது ஆகும்.

40. தமரை-தம்மவரை-தம் இனத்தவரை. நாவாய்-ஓடம். வெள்ளிக் குன்று-கைலாய மலை, குனிக்கும்-(முன் வில்லாக)

வளைத்த, அம்பொன் குவடு என-அழகிய பொன் மலையாகிய மேருவும். குபேரன் மானம்-குபேரனது புஷ்பக விமானம்: (மானம்-விமானம் என்பதன் முதற்குறை), ஒன்று என நாணி-ஒன்ருயிருத்தலுக்கு வெட்கப்பட்டு.

குபேரன் விமானம், தான் ஒன்ருய் இருத்தற்கு வெட்கப்பட்டு, வெள்ளிக் குன்றென, அம்பொற்குவடென, பல்வேறு உருவு கொண்டாற் போல, நாவாய்கள் விளங்கின என்க.

41. நங்கையர் நடையின்-பெண்களின் நடைபோன்ற நடையினாலே, அன்னம் நாணுறு செலவின் நாவாய்-அன்னங்கள் வெட்கப்படும் படியான செலவை உடைய ஓடங்கள்.

பெண்களின் நடையைக் கண்டு அன்னம் நாணும்; அது போலவே, இந்நாவாய்களின் செலவைக்கண்டும் அன்னம் நாணும் என்பது கருத்து.

இடம் இலாமை-வெறும் (காலியான) இடம் இல்லாமல்: இலாமை-எதிர்மறை வினை எச்சம். மிடைந்தன கலந்த-நெருங்கிக் கலந்தன; மிடைந்தன: முற்றெச்சம், கலந்த:அன் சாரியை பெற்ருல் கலந்தன என்ருகும். அங்கொடு இங்கு இழித்தி ஏற்றும்-அந்தக் கரையிலிருந்து இந்தக் கரையிலும், இந்தக் கரையிலிருந்து அந்தக் கரையிலும் ஆட்களை இறக்கி ஏற்றும். அமைதி-தன்மை. அமரர் வையம்-தேவருலகம். இங்கொடு அங்கு இழித்தி ஏற்றும் இருவினை- இவ்வுலகினின்று அவ்வுலகுக்கும், அவ்வுலகினின்றும் இவ்வுலகுக்கும் உயிர்களை இறக்கி ஏற்றும் நல்வினை தீவினைகள்.

42. வரம்பில் நாவாய்-கணக்கில்லாத ஓடங்கள். வரி-கட்டமைந்த. குரிசில் மைந்த-தசரதன் மகனே! (பரதன்) சிந்தனை யாவது-இனிச் செய்யவேண்டியது யாது. சிருங்கி பேரியர்கோன்-சிருங்கிபேரம் என்னும் நகரத்தினர்க்கு அரசனுகிய குகன். எந்தை-எனது தந்தையே! தசரதனுக்கு அமைச்சனுயிருந்த சுமந்திரனைப் பரதன் 'எந்தையே' என்று பாராட்டினன்.

43. குரிசிலது-பரதனது, ஏவல் -கட்டளை. குரகதத் தேர்வலான்-குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்தவல்ல பாகனுகிய சுமந்

திரனும், வரிசையின் வழாமை நோக்கி-ஓடங்களில் ஏற்றவேண்டிய முறைமை தவறாமல். மரபுளி-மரபினால்: (உளி - மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு.) கரி-யானை, பரி-குதிரை, கணக்கு அறு கரையில் வேலை-எண்ணில் அடங்காத கரை அற்ற சேனையாகிய கடல். எரிமணி-ஒளி வீசுகின்ற மணிகளை, திரையின்-அலைகளால்.

44. எறிகடல்-கரையை மோதுகின்ற கடல்; சேனையாகிய கடல் என்க. வெஃகி முகந்து-வாரிக் கவர்ந்து, வீசி - விரைவில் கொண்டு போய்ச் சேர்த்து, வறியன அணுகும் - வெறுமையாகத் திரும்பும். புக்கலை ஆழி-அலை ஆழிபுக்கு-அலைகளை உடைய கடலில் சேர்ந்து, பொறுத்தன-மொண்டு கொண்டவை, உவரிமீளும்-கடலுக்குத் திரும்புகின்ற, அகன்மழை-பெரிய மேகம், நிகர்த்த-ஒத்தன.

45. ஆனனம் கமலத்தன்ன-(முகம் தாமரை போன்ற) குழலார் ; மின் அன்ன (மின்னலை ஒத்த) குழலார் (மின்னல் உடலுக்கு உவமை); அமிர்தச் செவ்வாய்க் குழலார் எனக் கூட்டுக. தேன் நனை குழலார்-கூந்தலில் அணிந்த மலரின் தேனினால் நனைந்த கூந்தலையுடைய மகளிர். அம்பிகள்-மரக்கலங்கள், சிந்து முத்தம் மீன் என-(கங்கையின் அலைகள்) சிதறும் முத்துக்கள் நக்ஷத்திரங்கள் என்று சொல்லும்படி, பண்ணைமுற்றி-விளையாட்டு முதிர்ந்து: மானம்-விமானம்.

உபமானம்:	உபமேயம்:
ஆகாயம்.	கங்கை.
நக்ஷத்திரங்கள்.	முத்துக்கள்.
ஆகாயத்திற் செல்லும் விமானம்.	மகளிர் செல்லும் நாவாய்.

46. மய் அறு-குற்றம் அற்ற. முற்றும் மெய்வினை-முழுதும் உண்மையான. செய்வினை-கைத்தொழில் அமைந்த.

முனிவர்கள் மனிதர்களால் செய்யப்பட்ட மரக்கலங்களில் செல்லாமல் ஆகாய வழியே சென்றனர் என்பது முனிவர்கள் ஓடங்களில் ஏறிக் கடத்தல் கூடாது என்னும் கொள்கையை விளக்கும் என்க.

47. சுழித்து-நீர்ச் சுழிகளோடு கூடி. சூழ்படை- பரதனைச் சூழ்ந்து வந்த சேனை. கள்ள ஆசை-வஞ்சனையோடு கூடிய பொருளாசை. பண்டு-பழமையாக. இழித்து-கீழ்ப்படுத்தி. மேலேறினான் தானும்-(பழமையாக ஆண்ட அவ்வரசர்களைப் பார்க்கிலும்) மேம்பட்டவனான பரதனும், ஏறினான்-(மரக்கலத்தில்) ஏறினான்.

48. தன் அன்ன-(குணம், செயல் முதலியவற்றால்) தன்னை ஒத்த. தம்பி-சத்துருக்கினன். தேர் வலான்-தேரைச் செலுத்த வல்லவன் (சுமந்திரன்). தூய தோழன்-குகன். துன்னினர்-நெருங்கி. துடுப்பாகிய சிறந்த நயம் அமைந்த கால்களினால் நாவாகிய ஆண் மகன் நடக்கலானான் என்க.

49. குகன் கோசலையைச் சுட்டி "இவர் யார்?" என்று பரதனைக் கேட்க, பரதன் கூறுகின்றான்.

தார் குரிசில்-வெற்றிமாலையை உடைய தலைவனே! கோக்கள்-அரசர்கள். வைகும் முற்றத்தான்-(சக்கரவர்த்தியைக் காணச் சமயம் வாய்க்காது) காத்துக் கொண்டிருக்கும் முன்றிலை உடையான். முதல் தேவி-மூத்த மனைவி. மூன்றுலகும் ஈன்றானை-பிரமனை, முன் ஈன்றானை-முன்னே படைத்த திருமாலை. பெற்றத்தால்-(இராமனைப்) பெற்றெடுத்தமையால். துறந்த-இழந்து விட்ட.

50. அழுவானை-குகனை. கன்று பிரி கார் ஆவின்- கன்றைப் பிரிந்த காராம்பசுவைப்போல. கொடி-பூங்கொடி போன்ற கோசலை. கழல்கால் மைந்தன்-வீரக் கழலை யணிந்த பரதன். இ நின்ற குரிசில்-இதோ அருகில் நின்ற பெரியோன்.

51. நைவீர் அலீர்-துயரத்தால் வருந்தாதீர்கள். இறந்து-கடந்து. மெய்வீரர்-இராமலக்ஷ்மணர். பெயர்ந்ததுவும்--(காட்டுக்குப்) புறப்பட்டுச் சென்றதுவும். விலங்கல்-மலை. கை-துதிக்கை. நீர்கள்-நீங்கள். ஐவீரும்-குகனோடு நீங்கள் ஐந்து பேரும் (இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்னன், குகன்). ஒரு வீராய்-ஒருவராக இருந்து (ஒற்றுமை யுடையவர்களாய்).

52. அறந்தானே என்கின்ற-தரும சொரூபி என்று சொல்லத் தகுந்த. அயல் நின்றாள்-கோசலை யருகில் நின்ற சுமத்திரை. ஐய !.

பரதனே! உரை-(இன்னுள்) என்று சொல். நெறிதிறம்பா-நல்நெறியி னின்றும் ஒரு சிறிதும் தவருத. மெய்-சத்தியம். நிற்பதாக்கி - நிலை நிறுத்தி. இறந்தான்-இறந்துவிட்ட தசரதன். இராமன் பின்பு பிறந் தானும்உளன் என்னப் பிரியாதான்-இராமனுக்குத் தம்பியும் ஒருவன் இருக்கின்றுனென்று உலகத்தார் சொல்லும்படி எந்நேரமும் இராம னைப் பிரியாதிருக்கும் இலக்குமணனை.

53. துணை-வாழ்க்கைத் துணையாகிய தசரதன். தோன்றல்-பர தன். கடுமை யார் கானகம்-கொடுமை மிக்க காடு. கருணை யார்கலி-கருணை நிரம்பிய கடல் (இராமன்). மாயன்-திருமால். நெடுமையால்-திருவிக்கிரம அவதாரத்தில் கொண்ட நீண்ட வடிவத்தினுல். உல கெல்லாம் கொடுமையால் அளந்தாள்-உலக முழுவதையும் (தன் மனத்தில் ஊன்றி ஆராய்ந்து வகுத்துச் செய்யும்) கொடுமையினுல் அளந்தவளை: கைகேயியை.

54. படர்-துன்பம்.செவிலி-செவிலித்தாய் (வளர்க்குந் தாய்). பாழ்த்த-பாழ் அடைந்த. குடர்-குடல். கிடந்தேற்கு - (வயிற்றில்) பலநாள் தங்கியிருந்த எனக்கு. உயிர்ப்பாரம்-உயிராகியசுமை. உடர்-உடம்பு (உடல்-உடர்). உயிரிலா என-உயிர் இல்லாதன போல. இடர் இலாத-(தான் ஒருத்தி மாத்திரமே) துயரம் காட்டாத. ஈன்ருள் - பெற்றெடுத்த கைகேயி.

55. இரக்கம் இலாள்-இரக்கம் இல்லாதவளாகிய கைகேயி. தோணி வந்தது சிறகுகளில்லாத அன்னம் வந்தது போன்றது.

56. பரத்தின் நீங்கும்-வினைச் சுமையினின்றும் நீங்கிய. வரத் தில்-பெருமையால். அருத்தி-அன்பு. விருத்தி வேதியர் - அறு தொழிலால் மேம்பட்ட முனிவர்.

V

காஞ்சிப் புராணம்

இது 130 ஆண்டுகளுக்கு முன் விளங்கிய சிவஞான முனிவரால் இயற்றப்பெற்றது.

சிவஞான முனிவர் பாண்டிவள நாட்டில் பாவநாசம் என்னும் பதியைச் சார்ந்த விக்கிரம சிங்கபுரம் என்னும் ஊரில் பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தனர். தந்தையார் பெயர்: ஆனந்தக் கூத்தர். தாயார் பெயர்: மயிலம்மையார். சிவஞான முனிவர்க்குச் சிறு வயதில் வழங்கிய பெயர்: முக்களாலிங்கர்.

சிவஞான முனிவர் சிறுபருவத்தே ஒருகால் சில அடியார்கள் தம் வீட்டில் அமுதுண்ண நேர்ந்தபொழுது, தம் தாயார் அவர்களுக்குச் செய்த உபசாரத்தின் அருமையைப் பாராட்டி,

அருந்ததிஎன் அம்மை அடியவர்கட்(கு) என்றும்
திருந்த அமு(து)அளிக்கும் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெய்யும்
மானந் தவாத மயில்.

என்னும் வெண்பாவைப் பாடினர்.

பிறகு, கல்வி கேள்விகளில் பெரு விருப்புடையராய்ச் சிவாலய வழிபாடு செய்யக் கருதித் திருஆவடுதுறை ஆதீனம் அடைந்து, பின் வேலப்ப தேசிகரிடம் சைவ சந்நியாசம் பெற்றுச், சித்தாந்த நூல்களைக்கற்றுத் தேர்ந்து, தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் வட மொழி நூல்களிலும் வல்லவராயினர்.

சிவஞான முனிவர் செய்த நூல்கள்:—தொல்காப்பியப் பாயிர விருத்தி, தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி, தருக்க சங்கிரக மொழி பெயர்ப்பு, அன்னம்பட்டீய மொழிபெயர்ப்பு, சித்தாந்தப் பிரகாசிகை மொழி பெயர்ப்பு, சிவஞான போத திராவிட மகா பாஷியம், சிவஞான போதச் சிற்றுரை, சிவஞானசித்தியார் பொழிப்

புரை, காஞ்சிப்புராணம், சோமேசர் முதுமொழிவெண்பா, திரு ஏகம்பர் அந்தாதி, வடதிருமுல்லைவாயில் அந்தாதி, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி, கலைசைச் செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ், குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலியன.

சில கண்டன நூல்களும் எழுதினர்.

இவர் மாணுக்கர்கள்:—இலக்கணம் சிதம்பரநாத முதலியார், காஞ்சிபுரம் சிதம்பர முனிவர், திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை, திருமுக்கூடல் சந்திரசேகர முதலியார், காவாந்தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார் முதலிய பல பெரும்புலவர்களாவார்.

சிவஞான முனிவர் பாடிய காஞ்சிப்புராணம் 67 படலங்கள் கொண்டு, 2742 செய்யுளின் முடிந்தது. நும்பாடப்பகுதி 427 செய்யுள் கொண்ட தழுவக்குழைந்த படலத்துள் சிறியதோர் பாகமாகும்.

1. எம்பெருமாட்டி-உமாதேவி, விழு-சிறந்த, கம்பத்தலைவர்-ஏகம்பம் உடையார் (ஏகாம்பரநாதர்), விதியான்-சிவாகம விதிப்படி, ஓகை-ஒசை, மங்களம்-மங்கலச்செய்தி, கேளா-கேட்டு, உருத்திர மடந்தையர்-பார்வதிக்குத் தொண்டு செய்யும் மாதர், அலகு இலா-அளவில்லாத, ஆர்த்து-ஆரவாரித்து, ஒருங்கு-ஒருசேர, இறுத்தார்-தங்கினுர்.

2. தாமரைமடவார்-தாமரைப்பூ ஏந்திய மடவார், புடை பரந்து-பக்கத்திலே சென்று, தாமரைமடவரல்-செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி, நாமிசைக்கிழத்தி-நாவில் வாழும் கலைமகள், வெள்ளநாரியர்-கூட்டமாகிய மாதர்கள், புடை-பக்கத்தில், கோமள வனப்பு-இளமையோடுங்கூடிய அழகு, ஆம்பல் மெல்லியலார்-ஆம்பல் போன்ற மெல்லிய தன்மை வாய்ந்த பெண்கள், குழாம்-கூட்டம், சசி-இந்திராணி, மாதர் எழுவர்-சப்தமாதர்கள், சங்கக்கன்னியர்-கூட்டமாகிய பெண்கள், சூழ்தர: சூழ்தா-பகுதி.

3. வான் மகளிர்-தேவ மாதர்கள், ஊன்மலிசூலம்-(குத்துத லால் பொருந்திய) புலால் நிறைந்த சூலாயுதம். இடாகினி, காளி, யோகினி: இவர்கள் ஒருவகைப் பெண் தெய்வங்கள். நீல்-நீலம்; கருநிறம். முனிவர்பன்னியர்-முனிவர்களின் மனைவிமார், நிரந்தரம்-எப்போதும், மிடைந்தனர்-நெருங்கினர். பான்மை-தன்மை, அடுத்த-கட்டளை யிடப்பெற்ற. பணி-வேலை. உடன்போத-உடன்வர.

4. பொருவரும்-பொருவு அரிய-ஒப்புமை அரிய. சமயதேவர்-சமயத்தவரால் வழிபடும் தேவர்கள்.

5. தண்ணுமை-மத்தளம் (தாழ்குரல் தண்ணுமை, சிலப்பதி காரம், அரங்கேற்று காதை, 27). குடமுழா - ஒருவகைத் தோற் கருவி. முருடு-மத்தளம். தக்கை-பம்பை வாய்ச்சியம். பதலை - வாய் அகன்ற பறை. பண் - இராகம். சின்னம்-திருச்சின்னம். காகளம்-எக்காளம். கோடு-கொம்பு வாத்தியம். பணிலம்-சங்கு. தீம்குழல்-புள்ளாங்குழல். திறத்தின்-வகைகளால், ஊதுவ-ஊதப்படும் இசைக் கருவிகள். கடல்முழக்கு-கடலின் ஆரவாரம். மொந்தை-ஒருகண்ணை யுடைய பறை. தகுணிச்சம்-ஒருவகைத் தோற்கருவி.

6. பயின்மணி-மணிபயில்-இரத்தினங்கள் பதித்த, கவரி-சாம ரம். கவிகை-குடை. சாந்தாற்றி-விசிறி. வயின்வயின்-இடந்தோறும், தாரு-மரம். மலர்மழை-மலராகிய மழை, இறைப்ப-சொரிய. குயின் மொழி-குயிலின் குரல்போன்ற இனிய ஓசையையுடைய சொற்கள், இசைப்ப-பாட. மணி-இரத்தினங்கள் பதித்த. கயின் - பூட்டுக்களை யுடைய ; குழையார் - குண்டலங்கள் தாங்கிய பெண்கள். ஆண் உடை தாங்கி-ஆண்வடிவம் பூண்டு. கதிர்த்த-ஒளி வீசுகின்ற, வாள் ஏந்தினர்-வாளாயுதத்தைத் தாங்கினர்.

7. வேதகம் பயக்கும் கல்-விஷ ஜந்துக்களின் விஷம் போக்க வல்ல கல் (குளிகை).

விம்மிதத் திறத்தன-ஆச்சரியம் விளைப்பன. பூதி - செல்வம். தரு-மரம். ஏதம்-குற்றம். சிந்து-நொண்டி. குறள்-குட்டையானவர். கதும்என-விரைவாக. குறுகுறு-மெல்ல அடிவைக்க. கலகல, களகள, கலின்கலின், சலசல, சளசள, சடசட என்னும் இவை ஒலிக்குறிப்பு இடைச் சொற்கள்.

8. கருவி-இசைக் கருவி. படி-பூமி.

9. மறைமுதல்-வேதநாயகன் (சிவபிரான்)ஒருபால்-ஒருபக்கம் (சிவபிரானது இடப்பக்கத்தில் வீற்றிருப்பாள் பார்வதி). நிர்மலப் பேரொளி-ஆணவம், கன்மம், மாயை முதலிய தடைகள் இயல்பில் நீங்கப்பெற்றுப் பெரிய ஒளி வடிவாய் இருப்பவள் (காமாட்சிஅம்மையார்). கம்பரை-ஏகம்பநாதரை. ஆதிநாள்-படைப்புக்காலம். பயந்த-படைத்த. யாங்கணும்-எவ்விடத்திலும், விம்ம-ஒலிக்க.

10. அடர்ந்த-நெருங்கிய.வல் இருள்-மிக்க இருள். உடைந்து-சிதைந்து. துருவி-ஆராய்ந்து. துரந்துகொண்டு - (இருளை) ஓட்டிக் கொண்டு. கேழ்-நிறம். ஒளிக்குழாம்-ஒளிக்கூட்டம். வளம்மலி-வளம் மிக்க. தென்பால்-தென்திசையில். உலவா-கெடாத. களிவரு சிறப்பின்-களிப்பினுல் வருசிறப்பின்,வான்நெறி-ஆகாயவழி, படர்ந்தாள்-சென்றுள், கணவனுர் அருள்வழி நின்றுள்-தலைவராகிய சிவபிரான் ஆணையின்படி நடப்பவள் (காமாட்சி யம்மையார்).

மிக்க வன்மையான இருள், ஒளியின் பெருக்கால் சிதைந்து, ஓடித் தங்கும் (சோலை முதலிய) கிளைவழிகளிலும் தேடி, இருட்டைத்துரத்திக்கொண்டு செல்லும் ஒளிக்கூட்டம் என்று சொல்லும் படியும் கணவனுர் அருள்வழி நின்றுள் படர்ந்தாள் என்க.

11. எண்ணிலார்-கணக்கில்லாதவர், மிடைந்து-நெருங்கி, விண் பரப்பு-ஆகாயத்தின் பரந்த இடத்தை. இயங்கலால்-செல்லுதலால், அண்ணல் ஞாயிறு ஆதி-பெருமை பொருந்திய சூரியன்முதலியோர். வாள்-ஒளி. அடர்ந்திட-சூழ்ந்து கொள்ள.

சூரியன் முதலிய ஒளிகள் மறைய, அதனுல் இருள் மிக, அதைக்கண்டு மாந்தர்கள் கண்ணை மூடி, "இப்படி இருள்உண்டானதற்குக் காரணம் யாது ?" எனச் சந்தேகித்து யோசிக்குமுன், விரைவாக வருவோர் வண்ண (அழகிய) ஒளி அவ்விருளைப்போக்க என்க. கடுப்பின்-விரைவாக. ஒளிவண்ணம்-வண்ணம் ஒளி-அழகாகிய ஒளி. இருள் கிழிப்ப-இருளை மறைப்ப. ஞாலம்-பூமி.

12. மால்உறுக்கும் நீர்மை-மயக்கம் தரும் தன்மை, மாய்ந்தது-மறைந்தது, நீலமின்னல் போலும்-கருநிறம் பொருந்திய மின்னற்

கொடிபோலும். உமாதேவியார் தோன்றினதும், நெடுந்தூரம் விரைவிற் சென்றதும், நீலமின்னல் தோன்றி மறைவதே போன்றது என்பர். காலும்-வீசுகின்ற, ஓதையாங்கொல் என்று காதின் ஓர்த்து நிற்பரே-அம்மையாரைக் காணோம், போகும் ஒலிமட்டும் கேட்கின்றது; அந்த ஒலி எங்கிருந்து வருகின்றது என்று காதால் கேட்டறிய நிற்பார்கள் என்க.

மின்பயந்த தண்முகில்காலும் (உண்டாக்கிய) ஓசையோ-மின்னலோடு கூடிய மேகத்திலிருந்துவந்த ஓசையோ (மின்னல்-உமாதேவி)

13. செல்லுவோர்-பரிவாரங்கள், நெருக்கிடை-நெருக்கத்தின் மத்தியில், தெறித்திடும்-(கீழே) சிதறிவிழும, கலன்கள் உக்க பல் மணித்திரள்-ஆபரணங்கள் சொரிந்த பல இரத்தினங்களின் கூட்டங்கள். ஒல்லே-விரைவாக, ஆர்த்த-முழங்கிய, ஒன்பதிற்று மாமணி-நவரத்தினங்கள், கல்லின்மாரி-கல் மழை.

பரிவாரங்கள் செல்லும்போது அவர்கள் அணிந்துள்ள ஆபரணங்களில் பொருந்திய இரத்தினங்கள் கீழே விழுவது, மேகங்கள் நவரத்தினக்கல்மழையைப் பொழிந்ததோ என்று, கண்டோர் ஆச்சரியம் எய்துவர் என்க,

14. அடுக்க நண்ணும்-ஒரு கூட்டத்திற்குப் பின்னே மற்றொரு கூட்டம் பொருந்த. மொய்-நெருங்கிய. குழாம்-கூட்டம். சின்னம்-திருச்சின்னம். கேட்குவார்-கேட்பார் (கு சாரியை. வ் எதிர்கால இடைநிலை ஈண்டு எதிர்காலத்தை உணர்த்தாமல் முக்காலத்திற்கும் பொதுவாம் தன்மையை உணர்த்தி நின்றது). கிளர்ந்து-பூரித்து.

15. தனிப்ப-தனியாக அமர்ந்திருக்க, அம்மை-உமாதேவியார், இங்கு-இந்த நகரத்திற்கு (காஞ்சிபுரத்திற்கு), வந்தது-எழுந்தருளியது, என்னென-என்ன காரணமென்று கேட்க, கம்பவாணர்-ஏகாம்பரநாதர். வாணர்-வாழ்நர். நம்பினேங்கள்-நம்பின நாங்கள். இம்பர்-இவ்விடம். ஞாலம்-பூமி. விள்ளுவார்-விளக்கமாகப் பேசுவார்.

16. மண்ணகம்-பூமி. இன்னராக - இப்படிப்பட்ட தன்மையுடையராய் (இன்-இடைச்சொல்பகுதி, அர்-விகுதி). மாண் இழைப் பெண்ணின் நல்லவள்-மாட்சிமைப்பட்ட மாதர்களுள் நல்லவளாகிய

உமாதேவியார். போர்விடை-போர் செய்தற்குரிய ரிஷபம். அண்மினாள்-நெருங்கினாள்.

17. முச்சகம்-மூன்று பூமிகள் (சொர்க்க பூமி, மக்கள் வாழும் பூமி, பாதாள பூமி) விச்சுவேசர்-காசி விஸ்வநாதர். பூசை ஆற்றி-பூசையை நிறைவேற்றி. கச்சியம்பதி-காஞ்சிபுரம் (கச்சிப்பதி-அம்-வேண்டா வழிச்சாரியை). காதல் உய்ப்ப-அன்பு தூண்ட.

18. அங்கண் அங்கண்-அந்த அந்த இடங்களில், எந்தையார்-சிவபிரான். வாழிடம்-எழுந்தருளி யிருக்கின்ற ஸ்தலங்கள், பொங்குகின்ற-மேலிடுகின்ற, காதல்-அன்பு. மங்கலத்தமிழ்ப் புவி - (இறந்தோரை எழுப்பும் ஆற்றல் வாய்ந்த) தமிழ்மொழி வழங்கும் நாடு. வாள்முகம்-ஒளி பொருந்திய முகம். துங்கம்-பரிசுத்தம். தொண்டை நாடு-ஆதொண்டைச் சக்கரவர்த்தியால் ஆளப்பட்ட நாடு.

19. இனி, இறைவி காஞ்சிபுரம் வந்துசேர்ந்து கோயிலுக்கு எழுந்தருளுதல் கூறப்படும்.

மலையான் மடமகள்-பர்வதராஜன் பெற்றெடுத்த பார்வதி. மறுகூடு-தெருவினிடத்து. உலவாநசை - கெடாத விருப்பம். வயின் வயின்-ஆங்காங்கு. கதலி-வாழை.

கமுகம்-கமுகம் பிள்ளை: கமுகினை மரம் என்று வழங்குவது சிறப்பன்று; கமுகப்பிள்ளை, வாழைச்செடி, தென்னம்பிள்ளை என்றே வழங்குவது சிறப்பாகும். இவை உள்வயிரம் இல்லாதனவாகலின் இவற்றை மரம் என்று கூறல் கூடாமை அறிக:

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், 85:

புறக்கா ழனவே புல்என மொழிப
அகக்கா ழனவே மரம்என மொழிப.

"பனையும் தெங்கும் கமுகம் முதலாயின புல் எனப்படும்; இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரம் எனப்படும்"

துகில்விரி கொடி-துணி கட்டிய கொடிகள். மலர்மாலிகை-பூமாலை. மணிமாலிகை-இரத்தினமாலை. எழில்-அழகு. நிரை-வரிசை.

20. மறுகு-தெரு. விரை-வாசனை. கமழும்படி-வீசும்படி. நிறுவும்-பொருந்தப்பெற்ற. கரமிசை-கைகளின்மேல், நிறைபொற்குடம்-பூரண கும்பம். எதிர் கொள்வார் - வரவேற்பார். மறை மடவார்-பார்ப்பன மாதர். நறவம் பயில் குழல்-தேன் ஒழுகும் மலர் நிறைந்த கூந்தல். அரமங்கையர் - தேவமாதர்கள், நரமங்கையர் - பூலோக மாதர்கள். நடம்-கூத்து.

21. எழில் புனையும்-அழகாக அலங்கரிக்கப்பெற்ற. புரிவின்-ஆசையினால். வலம் வருதல்-பிரதட்சணம் செய்தல். மலர்மாது - இலக்குமி. இமையவர் மடவார்-தேவமாதர்கள். சாத்தன்-ஐயனார்; வயிரவர். யோகினி-ஒருவகைப் பெண்தெய்வம். எழுமாதர் - சப்த மாதர்கள். இருவினள்-இருக்கச் செய்தாள், என் நெஞ்சு இருவிய-என் நெஞ்சில் எழுந்தருளிய, அம்பொன் திருவடி-அழகிய பொன் போன்ற திருவடி, பிறர்காணாள் - பிறரால் காணப்படாதவள்: (காமாட்சி அம்மையார்) காணாள்-செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த செய்வினை; ஈண்டு இவ்வினைமுற்று வினையாலணையும் பெயராய் நின்றது.

22. குணபால்-கிழக்குத்திசை. நதிமுடியார்-சடையில் கங்கையைத் தரித்தவர். இணர்-பூங்கொத்து. எனை ஆளுடையவள்-என்னை அடிமையாக உடையவள். அலமரும்-(காணாது) திகைக்கின்ற, பேரொளி-அருட்பெருஞ்சோதி (ஏகம்பர்), மாநிழலிடை-மாமரத்தின் நிழலின்கண், எளிவர-எளிதிலே தோன்றுதலாலே, மாகம்-விண்ணுலகம். உடையவள் ஏகம்பத்தை எய்துற்றாள் என்க.

23. ஏணில்-சிறப்பினால், மலைஅரசன் தருமயில்-பர்வத ராஜன் பெற்ற பார்வதி. ஆணை-உத்தரவு. கடவுளர்பவனன்-தேவதச்சன், புரியும்-கட்டுகின்ற. மணிதுயிலும்-இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற. தமனியம்-பொன், புரிசை-மதில். 'புரிசையி னோக்கத்தை' என்பதை, 'புரிசையின் நோக்கத்தை' என்று பிரித்தால், நோக்கத்தை-அழகை என்றும், 'புரிசையின் ஓக்கத்தை' என்று பிரித்தால், ஓக்கத்தை-உயர்ச்சியை என்றும் பொருள் கொள்க.

தேவதச்சனால் கட்டப்பட்ட கோயிலினது பொன்மயமான வடிவினையுடைய மதிலின் உயர்ச்சி என்க.

காணப்பெறு-காணப் பெற்றதனுல் ஆன (ஈண்டு, பெறு என்னும் வினைத்தொகை காரணப் பொருளில் வந்தது). கழிகாதற் கடலிடை-மிக்க அன்பு என்னும் கடலில், துளைபவள்-அனுபவிப்பவள்.

24. விழிநீர்-கண்ணீர்,பொழிதர-பொழிய (தர: துணைவினை.) குழைவுற-நெகிழ்ச்சியடைய. மெய்-உடம்பு. புளகம் முகிழ்ப்பு எய்த-மயிர் சிலிர்த்துத் தோன்ற. கார்மழை-கரியமேகம். கற்றைப் புரிகுழல்-தொகுதியாகிய முறுக்கு அமைந்த கூந்தல். கை இணை-இரண்டு கைகளும். குழு-கூட்டம். மிடை-நெருங்கும். விண்வத்து-விண்ணில், அத்துச்சாரியை பெற்றது: வத்து என்பதிலுள்ள வகர மெய் உடம்படு மெய்யல்லாத மெய்யாகும். வாய்தல்-வாசல். தொழு நீர்மையின் வணங்கவேண்டியமுறையுடன்.உவகையின் உள்புக்காள்-மகிழ்ச்சியோடு கோயிலுள் சென்ருள்.

25. ஏகம்பம் உடையாரைக் காமாட்சி யம்மையார் பூசை செய்து வழிபட்டபோது இறைவன் அருளைப் புகழ்வது இச்செய்யுள் என்க.

கறைமணி மிடற்ருய்!—நீலகண்டனே ! மிடறு-கழுத்து. மறவியின்-மறப்பினுலாயினும். நெஞ்சக விளக்கே! - நெஞ்சாகிய உள்ளிடத்தே ஒளிர்கின்ற விளக்கு போல்பவனே ! புற இருளை ஒழிக்கின்ற எண்ணெயிட்ட விளக்குப் போலன்றி, நினைவார் நெஞ்சினுள்ளே அழுந்திக்கிடக்கும் ஆணவம் முதலிய மலங்களாகிய இருளை நீக்குகின்ற ஞானவிளக்கே என்க. மாநீழல் வள்ளல் - மாமரத்தின் நிழலிலே (எழுந்தருளி அடியார்கள் வேண்டும் வரங்களை) வரையாது கொடுப்பவனே !

VI

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்

பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழ் நாட்டில் பாடல் சான்ற பெரும்புலவர்களாய்த் தோன்றி, பல ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடி விளங்கிய மேதாவிகள் சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் முருகதாசர், திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்னும் மூவராவார்.

திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பவ (1814) ஆண்டில் பிறந்து யுவ (1875) ஆண்டுவரையில் வாழ்ந்தனர்.

திரு ஆவடுதுறை ஆதீனத்தில் மஹாவித்வானாகத் திகழ்ந்தனர்.

இவர் இயற்றிய நூல்களுள் சில: பிள்ளைத் தமிழ் பல; அந்தாதி பல; கலம்பகம் சில; திருவிடை மருதூர் உலா, குளத்தூர்க் கோவை, வியாசக் கோவை, திருப்பெருந்துறைப் புராணம், பட்டீச்சுரப் புராணம், தியாகராஜ லீலை, குமரகுரு சுவாமிகள் சரித்திரம் (பாடல்) சிவஞான யோகிகள் சரித்திரம் (பாடல்) முதலியன. பல ஸ்தல புராணங்களும் இயற்றினர்.

இவரது செய்யுளின் கற்பனையும் நயமும் காண்போமானால், இவர் தற்கால கம்பர் என்று புகழத்தக்க பெருமையுடன் விளங்குபவராவர்.

இவர் தாம் பல நூல்களை இயற்றிக் கொண்டே இருந்தும், பல மாணவர்களுக்குத் தம் பொருட்செலவில் பசிக்கு உணவு ஊட்டியும், செவிக்கு உணவாகப் பாடம் சொல்லியும் பாடல் சான்ற புலவர்களாக்கிய பெருந்தகையாளர்.

இவர் மாணவருட் சிலர்:—

மஹாவித்வான் சி-தியாகராய செட்டியார், மஹாவித்வான்-சித்தாந்த ரத்தினகரம்- அரன்வாயல்-வெங்கடசுப்புப் பிள்ளை, சோடச

அவதானம்-சுப்பராய செட்டியார், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் மகனார் சுவாமிநாததேசிகர், பிரஸிடென்ஸி காலேஜ்-புரசை பொன்னம்பலமுதலியார் (இராஜ கோபால பிள்ளை அவர்களுக்கு முன் இருந்தவர்), தேவி கோட்டை-வன்றொண்டச் செட்டியார், சிதம்பரம்-வாமதேவ முருக பட்டாரகர், சீகாழி-சிதம்பர வாத்தியார், திருப் பாதிரிப்புலியூர்-சிவசிதம்பர முதலியார், தஞ்சாவூர்-ஐயாசாமிப் பிள்ளை, தஞ்சை-இராமகிருஷ்ண பிள்ளை, கும்பகோணம்-நாராயணசாமி பிள்ளை, வல்லம்-கந்தசாமி பிள்ளை, மாயூரம்-முத்துசாமி பிள்ளை, டிஸ்டிரிக்ட் முனிசிப்-வேதநாயகம் பிள்ளை, ஷைப்பர் தம்பி ஞானப்பிரகாசம் பிள்ளை, புதுவை. சவரிராயலு நாயகர், வல்லூர்-தேவராச பிள்ளை, முத்துசாமி பிள்ளை, தெய்வநாயகம் பிள்ளை, முத்துசாமி பாரதி, திருமங்கலக்குடி-சேஷையங்கார், திருவாரூர்-இராகவாசாரியர் காரைக்கால்-சவேரிநாத பிள்ளை, மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாத ஐயரவர்கள் முதலிய பலர்.

இவர் இயற்றிய பிள்ளைத் தமிழ் நூல்களுள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் ஒன்றாகும்.

பிள்ளைத் தமிழ் என்பது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒரு வகைப் பிரபந்தம்.

இந்நூல் இயற்றுபவர் கடவுளையேனும் பெரியோரையேனும் குழந்தையாகப் பாவித்துத் தாம் கொண்டுள்ள அன்பு தோன்றப் பாராட்டிப் பாடுவர்.

இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப் படும்.

ஆண்பாற் பிள்ளைத் தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பத்துப் பருவங்களும் கூறப்படும்.

1. செங்கீரைப்பருவம்: தலைவணுகிய குழந்தை செவ்விய மழலைச் சொற்களைப் பேசும் பருவம்: கீர்-சொல். (நற்கீரர் - நல்ல சொல்லை உடையவர்). புண்ணிய முதலே-புண்ணியத்திற்கு முதன்மை வாய்ந்தவரே! பொங்கு ஒளி-மிக்க ஒளி. பொள்ளல்

இல் முத்தே-துளை இடாத (முழு) முத்து போல்பவனே ! கள்ளம் - குற்றம். புரை-குற்றம். தண்ணிய-குளிர்ந்த. மண் இயல் மதியே - அழகு அமைந்த சந்திரனே. சத்துவம்-முக்குணங்களுள் ஒன்று. பொத்திய-(ஆன்மாக்களை) மூடி யிருக்கின்ற. சாடு-அழிக்கின்ற. அண்ணிய-பொருந்திய; மதரித்த. ஆய்பவர்-ஆராய்பவர். ஆர் அருள் ஆகர-நிறைந்த அருட்கடலே. சேவையர்-வழிபடுவோர்.

2. தாலப்பருவம்: தாலாட்டுதலை அக்குழந்தை கேட்கும் பருவம்: தால்-தாலு-நாக்கு, தால் ஆட்டுதல்-நாக்கு ஆட்டுதல்: குழந்தை தூங்கும்படி நாக்கை ஆட்டிப்பாடுவது. தால்-தொங்கவிடுவது: தாலி-(மாங்கிலியம்)-தொங்க விட்டிருப்பது; ஐம்படைத்தாலி-காத்தற் கடவுளாகிய திருமாலின் ஐந்து படைகளை (ஆயுதங்களை)ச் செய்து குழந்தைக்குப் பூதபைசாசங்களால் துன்பம் நேரிடாதபடி கழுத்தில் கட்டித் தொங்கவிடுவது.

சுவணம் ஆடை-பொன் ஆடை (சரிகை). தொங்கல்-மாலை. குண்டம்-ஓமகுண்டம். சகலாகமபண்டித-எல்லாச் சிவாகமங்களையும் உணர்ந்த புலவனே.

VII

புலவர் புராணம்.

புலவர் புராணம் என்பது புலவர்களது பழமையான கதையைச் சொல்லும் நூல் ஆகும். புலம் - அறிவு: புலவர் - அறிவுடையோர்.

முருகதாசர் என்பவர், திருநெல்வேலிப் பரம்பரைச் சைவ வேளாள குலத்தில் கலியுகத்தில் 4941-ம் ஆண்டில் (1838) பிறந்து, விழுப்புரத்திற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள திரு ஆமாத்தூர் என்னும் பதியில் கலியுகம் 5090 (1898)ல் சமாதி அடைந்தனர்.

தந்தையார் பெயர்: செந்திநாயகம் பிள்ளை. இவர் சிறுவயதிலேயே முருகப் பிரானிடத்துப் பேரன்பு கொண்டவராய்ப் பல பாடல்கள் பாடத் தொடங்கினர்; வேலாயுதத்தையே பூசைசெய்து வந்தனர்.

இவர்க்கு வழங்கும் பெயர்கள்: முருகதாசர், தண்டபாணி சுவாமிகள், திருப்புகழ்ச் சுவாமிகள், அபர அருணகிரி நாதர் முதலியன.

இவர் பாடிய திருப்புகழ்களில் வடமொழிச் சொற்கள் மிகச் சிலவே.

இவர், மக்கள் புலை கொலை தவிர்த்த புண்ணியர்களாகத் திகழ வேண்டும்என்று பல பிரசங்கங்களிலும் தம் பாடல்களிலும் வற்புறுத்திக் கூறினர். வடலூரில் இராமலிங்க சுவாமிகளைச் சந்தித்தபோது, முருகக் கடவுள் அருள் அனுபவத்தைக் குறித்துச் சில நாள் இருவரும் அளவளாவினர்.

இவர் பாடிய செய்யுளின் தொகை ஐம்பதினாயிரம் (50,000) இருக்கும் என்பது புலவர் புராணத்திற்கு அமைந்த சிறப்புக் கவிகளுள் இவரது ஆன்மார்த்த அன்பராகிய சித்தாந்த சரபம்-அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியார் பாடிய கவியால் விளங்கும்.

* முருகதாசர் இயற்றிய நூல்கள் :

சிவபிரான்.

தில்லைத் திரு ஆயிரம்	1000	பாடல்

சிவன் ஏகபாதத் தந்தாதி 30 (முருகதாசர் உரையுடன்)

திரு ஆமாத்தூர் ஸ்தல புராணம்:	1000
திரு ஆமாத்தூர்ப் பதிகச் சதகம்:	1000
திரு ஆமாத்தூர்ச் சதகப் பதிகம்:	1000

முருகர்.

பழனித் திரு ஆயிரம்	1000
திருச் செந்தூர்ப் பிரபந்தங்கள்:	2000 (பாடல்)
கௌமார முறைமை	300
கௌமார ஏகத்தாள் இதழகல் அந்தாதி	30 (முருகதாசர் உரையுடன்)
சென்னைக் கந்தர் இதழகல் அந்தாதி	30
(முருகர்) திருமேனிச் சிறப்பு	36
வேல் அலங்காரம்	100
மயில் ,,	100
ஆறெழுத்து ,,	100
முருகானந்த லகரி	100
கௌமார லகரி	100
அருணகிரிநாதர் புராணம்	400

திருமால்.

திரு அரங்கத் திரு ஆயிரம் 1000
அரி ஏகபாதத் தந்தாதி 30 (முருகதாசர் உரையுடன்)

திருவல்லிக்கேணி-பார்த்தசாரதிப் பெருமாள் மீது பதிகமும், எழு கூற்றிருக்கையும்.

சத்தி துதி.

திருமகள் அந்தாதி	100
கலைமகள் பதிகம்	10
சத்தி கவசம்	100
சத்தி விஜயம்	144

---

* இந்தக் குறிப்பு நமது பரீக்ஷைக்குப் பாடம் அன்று.

—பதிப்பாளர்.

பொது

ஏழாயிரப் பிரபந்தம் (சண்மத சமயாதீத பரம்)	7000
தெய்வத் திரு ஆயிரம் (பரம்பொருளைத் துதிப்பது)	1000
திருவருள் நாட்டம்	1000
நானிலைச் சதகம் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)	100
தியானுனுபூதி	33

நீதி நூல்.

மனுநெறித் திருநூல் (குறட்பாவால் அமைந்தது)	1300
வருக்கக் குறள் (நீதி நூல்) :	247

(சோழவந்தான்-கந்தசாமி சுவாமிகள் உரை இயற்றினர்)

அந்தாதி	(20)	2000 (பாடல்)
கலம்பகம்	(10)	1000 ,,
பிள்ளைத் தமிழ்	(6)	600 ,,
பதிகம், மும்மணிக்கோவை, நான்மணி மாலை		2000 ,,

தமிழ்ச் சிறப்பு.

தமிழலங்காரம்	100
அறுவகை இலக்கணம்	800 சூத்திரம்
புலவர் புராணம்	3000 பாடல்

சரித்திரம்.

குருபர தத்துவம் (Auto-biography)	1300 பாடல்

வசனம்.

சத்திய வாசகம்.

புலவர் புராணம் 3003 செய்யுள் கொண்டது; 72 புலவர்கள் சரித்திரம் கொண்டது; அனுபந்தமாக, குலசேக ராழ்வார் புராணம் 29 பாடல்கள் முருகதாசர் மாணக்கரும் மகனும் ஆகிய வித்துவான் சந்தப்புலமை செந்தில்நாயகம் பிள்ளை யவர்களால் பாடிச் சேர்க்கப்பட்டுள்ளன.

1. கணம்-கூட்டம். நாரணன் கழல் அன்றி மற்றொன்றும் போற்றலான்-திருமாலின் திருவடிகளன்றி வேறு ஒன்றும் துதிக்க மாட்டான். பட்டர்-பராசரபட்டர்: இவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்க்கு ஆசாரியராவர்.

2. ஒரு சொல்லால் பொருள் பல தரும் கவிகள்-சிலேடைக் கவிகள். பெருமிதன்-கல்வி மேன்மை உடையவன். பிள்ளைப்பெருமாள் என்பது இவரது இயற்பெயர்: அழகிய மணவாள தாசர் என்பது இவரை அடிமைகொண்ட ஆசாரியர் இட்ட பெயர்.

3. ஔவியம் - பொறாமை. ஐயங்காருக்குத் 'திவ்விய கவி' என்ற சிறப்புப் பெயர் வழங்கும். கீர்த்தி-சிறப்பு.

4. ஆனைக்கன்றைப் பார்த்தவர்கள் இனிமையும் மகிழ்ச்சியும் அடைந்து, விட்டுப் பிரிவதற்கு மனம் இன்றி, அதனையே மகிழ்ந்து பார்த்துக் கொண்டிருப்பது போல், இவர் பாடல்களைப் படிப்பவர்கள், சொல்நயம் பொருள் நயங்களைக் கண்டு, ஈடுபட்டு, மீண்டுமீண்டும் படித்து இன்புறுவர் என்க.

பூனைபோல் வஞ்சனைப் புந்தி கொண்டிலான்: பூனை பார்ப்பதற்கு மெல்லிய தன்மையுடையது போல் காட்டினாலும், யாரும் இல்லாத சமயம் பார்த்துப் பால் தயிர் முதலிய உணவுப் பொருள்களை உண்டு விடும் வஞ்சனைத் தன்மைபோல், புறத்தே கடவுள் பத்தி காட்டி மனத்தின் கண்ணே கடவுளிடம் அழுத்தமான பற்று இல்லாமல் சிலர்வஞ்சிப்பார்கள். அவர்களைப் போலன்றி, ஐயங்கார் திரு அரங்கப் பெருமாளிடத்து அகத்தும் புறத்தும் உள்ளபடியே நிறைந்த அன்புடையவர் என்பது இதன் கருத்து.

5. அயன் புரை-பிரமனைப்போன்ற. செயம்-ஜெயம். சீய ஏறு-ஆண்சிங்கம். ஆய்ச்சியர்-ஆயர் மகளிர். வயங்கு - விளங்குகின்ற. கண்ணனுக்கு இளம்பருவத்தில் வழங்கிய பெயராகிய பிள்ளைப்பெருமாள் என்னும் பெயர் ஐயங்காருக்குப் பெற்றவரால் இடப்பெற்றது. என் பேரினன்: வினைத்தொகை (என்ற, என்கின்ற, என்னும் பேரினன்).

6. கவின்-அழகு. பாம்பணை மேவினன்-சேஷ சயனத்தில் பள்ளிகொண்டிருக்கும் அரங்கநாதர். அரங்கநாதர் மீது இவர் திரு அரங்கத் தந்தாதி, திருஅரங்கத்து மாலை, திருஅரங்கக் கலம்பகம், ஸ்ரீரங்கநாயகர் ஊசல் என்னும் பிரபந்தங்கள் பாடினர்.

7. கலம்பகம்-பல உறுப்புக்களும் கலத்தலை உடைய பிரபந்தம். அந்தாதி-ஒருபாட்டின் இறுதியிலுள்ள எழுத்து, அசை, சீர், அடிகளுள் யாதானும் ஒன்று அடுத்த பாட்டின் ஆதியாக வரத் தொடுப்பது. கற்பு உறழ்-கற்றற்குப் பொருந்திய. நலம்-நயம். நான் மறை-இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்பன. இலம்பகம்-சாகை. (வேதத்தின் கிளைகளாகிய பிரிவுகள்). புகழ் பதத்து இட்டு-(நான்மறைகளால்) புகழப்படும் திருவடிகளுக்குச் சமர்ப்பித்து. எள் துணை - எள் அளவும்: உம்மை இழிவு சிறப்பு; செய்யுள் விகாரத்தால் தொக்கது. அலம்படாது-சோர்வு அடையாமல். இன்புற ஆசித்து-பேரின்பத்தை அடைய விரும்பி.

இன்புற ஆசித்து, கலம்பகம் யமகம், அந்தாதி ஆதிய இவற்றைக் கற்புறழ் நலம் பயந்திடும்படி ஓர் எள் துணை அலம்படாது நவின்று நான்மறை புகழ் பதத்திட்டு உற்றனன் என இயைக்க. உற்றனன்-திருவரங்கத்திலேயே வாழ்ந்தனன்.

8. பூரணன் - எங்கும் நிறைந்திருப்பவன். எணுவிடினும் - எண்ணுவிட்டாலும். பார் அணங்கின் தலை-பூமிதேவியினிடத்து - பூமியின்கண். சீரணங்கின் பலர்-கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள கோலங்கள் உடைய திருமால் மூர்த்தங்கள் பல:நாரணன் ஒருவனே என்றும் கொள்ளாமல், பல கோயில்களிலும் விளங்கும் வடிவங்கள் என்று கொண்டார் ஐயங்கார் என்க.

9. அப்படிக் கருதவன்-திருமாலையே அவ்விதமாகக் கருதும் ஐயங்கார் (வினைத்தொகை). வேதனை-பிரமனை. பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலிய தெய்வங்களுள் அரனையும் பிரமனையும் எந்த முறையில் வைத்து ஐயங்கார் எண்ணினரோ என்பர். கொல்: வினு ஓ: அசை. படிறு-குற்றம். அவற்கு-அவன் + கு- ஐயங்காருக்கு. இதம்-நன்மை. ஆட்கொள்வான்-அடிமை கொள்ளும்படி: வான் ஈற்று வினையெச்சம். முப்படியினர்-மூன்று உலகத்திலும் உள்ளவர்களும்; உம்மை தொக்கது. முகுந்தன்-திருமால்.

10. உலகம் உண்டு உமிழ் திரு நெடு மால்-மகா பிரளயத்தில் உலகங்களை எல்லாம் தன் வயிற்றில் அடக்கி, பிரளயம் தீர்ந்த பிறகு மறுபடியும் உலகங்களைத் திருநாபிக் கமலத்தால் வெளியே தோற்றும்படி அருள் செய்பவன். திருநெடுமால் என்றது: நிலங்கடந்த நெடுமுடி அண்ணல் என்பது தோன்ற. பொருவு இல்-ஒப்பில்லாத. அரோ-அசை.

11. வரம் கமழ்-அருள் விளங்குகின்ற, அம்மொழி-திருவேங்கடத்தில் உள்ள கடவுள் தன்னைப் பாடும்படி கனவில் கூறிய அவ்வார்த்தை. சிரம் கொடு-தலைமையாகக் கொண்டு:

திருவேங்கடத்திலுள்ள கடவுள் ஒருகால் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரைத் தன்மீது பிரபந்தம் பாடும்படி ஏவ, ஐயங்கார் 'அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாட மாட்டேன்" என்றார் (குரங்கன்-குரங்குகள் வசிக்கின்ற வேங்கடமலையை உடையவன்.)

12. விண்டபோது-ஐயங்கார் விடையளித்தபோது, ஐயங்காருக்குக் கண்டமாலை என்னும் நோய் உண்டாகும்படி வேங்கடமுடையான் செய்ய என்க. கதுவிட-உண்டாகும்படி, கண்டமாலை-கழுத்தில் வரும் ஒருவகை நோய், கண்டு-செய்ய, இங்கு 'காண' என்னும் செயவெனெச்சம் 'கண்டு' எனச் செய்தெனெச்சமாகத் திரிந்தது: காணல்-செய்தல். அவன்-ஐயங்கார், சிலேடையாம் ஒள்தகைச் சொல் உறும் ஒரு மாலையும்-சிலேடையாகிய அழகிய மேம்பாடுற்ற சொற்கள் பொருந்திய ஒரு பிரபந்தத்தையும் (திருவேங்கடமாலையும்). ஆண்மை-தைரியம்; மனமுயற்சி.

13. திரிவு அந்தாதி-திரிபு என்னும் சொல்லணி பொருந்திய அந்தாதி (திருவேங்கடத்தந்தாதி). சோலை மலை-திருமாலிருஞ் சோலை: மதுரைக்கு வடக்கே 15 மைல் தூரத்திலுள்ள அழகர் கோயில் என்னும் திவ்விய தேசம். சோலை மலைக்கு ஓர் அந்தாதி: அழகர் அந்தாதி என்னும் பிரபந்தம்.

பின்னும் சிற்சில-நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி முதலியன.

14. எண்வகைப் பிரபந்தம்-அஷ்ட பிரபந்தம். ஆ-ஆக. மண் வயின்-பூமியில். தாமரைப் பூத்துணைக் கண்வலான்-தாமரைப் பூவை ஒத்த கண்ணை யுடைய வல்லவனான திருமால். கணிப்ப-நன்கு மதிக்க.

15. இளஞ் சைவர்-சைவ சமயத்தின் ஆழ்ந்த உண்மையை உள்ளபடி அறியாத சைவர். ஏசுவார்-இகழ்வார். மாயவன் ஆகத்தில் பாதி-(சிவபிரான்) திருமாலின் திருமேனியில் பாதிவடிவமாக அமைந்துள்ளான்.

16. இட்டதெய்வம்-இஷ்டதெய்வம்: தன்மனத்திற்குப் பிரிய மான தெய்வம், அச்சுதன்-அழியாதவன்.

17. தாமரைக் கண்ணன்-புண்டரீகாக்ஷன்-திருமால். மைவனக் கள வள்ளலை: மை-கருநிறம், வனம்-அழகு, களம்-கழுத்து: நீல கண்டன்.

நீலகண்டனை வள்ளல் என்றது தேவர்களை அழிக்க வந்த நஞ்சினைச் சிவபிரான் ஏற்று உண்டுவிட, தேவர்கள் இறவாதிருந்தமை யால் தேவமாதர்கள் மாங்கலியத்திற்குக் கெடுதி நேராதபடி காத்த வர் என்பது தெரிவித்தற்கு என்க.

18. வானந்தத்தற-வானம் தத்து அற-தேவர்களின் ஆபத்து நீங்க; வானம்: இடவாகு பெயர். வல்வில்-மேருவாகிய வலிய வில்லை. கூனந்தக்கரக்கொண்டல்-கூன்-வளைந்த, நந்து-சங்கு, அக்கரக்கொண்டல்-கொண்ட அந்தக் கையை யுடைய மேகம் போன்றவன். திருமாவின் பாதங்களிலிருந்து வந்த நீரை அரன் எற்று நடனம் செய்தான் என்பர். மேருவின் நாதன் - மேருமலையை வில்லாக உடையவன்.

19. அத்தன்-சிவன். வேதன்-பிரமன். பிரமனது அணித் தலை கொண்டது-தலையை அறுத்தது (தக்ஷயாகத்தில்) என்க. சிவன் பயித்தியம் அடைந்து, சுடுகாட்டிற்குச் சென்றார் என்றும், பின்பு தன் கையில் வந்துள்ள பிரமனது அறுபட்ட கபாலத்தைத் திருமால் நீக்கி, சிவபிரானைக் கயிலாயத்தில் சேர்த்தனன் என்றும் கதைகள் வழங்கும்.

20. திருமாலின் உந்தியில் பிறந்த பிரமன் படைத்தலினலே சிவன் உயர்ந்தவனக விளங்கினன் என்ற கருத்தும் ஐயங்கார் பாடினர் என்பர். 18 முதல் 22 வரை முடிபு: என்றதும் (18), சொன்னதும் (19), நவின்றதும் (20), ஆகிய இவற்றை, நித்திய சித்தர் தாம் (20) (எழுவாய்), கொண்டனன் என்றதிலும் என்று சொல் பண்பினும் (21), கொன்டான் எனும் சொல்லினும் (22) தீய என்று செப்பார் என இயைக்க. நீதம்-நீதி.

21. அண்டம் உண்டவன்-உலகம் உண்ட திருமால். ஆகம் - திருமேனி. திருமாலின் திருமேனியைச் சிவபிரான் சூலத்தின்மேல் ஏற்றுக்கொண்டார் என்பதும், திருமால் கண்டனே - கண்தனை - கண்ணை-தன் குளிர்ந்த கண்ணை அரன்காலில் அணிந்தான் என்பதும் புராணக் கதைகள்.

22. சோரி-இரத்தம். மால்விடை-மாலாகிய ரிஷபவாகனம்.

23. திரிவு-திரிபு என்னும் சொல்லணி. கருவை மன்-கருவை என்னும் ஊருக்கு அரசன்:வரதுங்க பாண்டியன்.

24. துறை மங்கல வாசன்-சிவப்பிரகாச சுவாமிகள்.

25. பவம்-பிறப்பு. அரனுக்கு அடிமை பூண்டவர் மாணிக்க வாசகருக்கு ஒப்பாவார்.அரிக்கு அடிமை பூண்டவர் நம்மாழ்வாருக்கு ஒப்பாவார். கரவில் மந்திரி-வஞ்சனை இல்லாத மந்திரி-மாணிக்க வாசகர். புளிக்கண் உழை உரம் உளான்-(பிறந்தபோது) புளியமரத்தின் கீழ் அமர்ந்த மன உறுதி உடையவன்-நம்மாழ்வார்.

26. பொன் உறைந்த-இலக்குமி வசிக்கும். பொற்பு ஆர் உரத்தான்—அழகு நிறைந்த மார்புடையானது (திருமாலினது). புகழ் பன்னு நாவலர்-புகழைப் பாடுகின்ற புலவர். மாற்றம்-சொல்.

27. திருமாலின் திருநாமங்களில் ஒன்றைக் கூறினவர்க்கும் வைகுந்தம் கிடைக்கும் என்க. வாமம்-அழகு. தொடை-தொடுக்கப் படுவது. சேமம்-இன்பம். நல்கல்-கொடுத்தல். தேரினே-தெளிந்தால்.

''தெய்வமே துணை''—முருகதாசர்.

அனுபந்தம் I*

சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம்

பூவை-கலியாணசுந்தர முதலியார் சரிதம்.

இவர், ஆனந்த ஆண்டில் (10–5–1854) பிறந்து, காளயுக்தி ஆண்டில் (டிஸம்பர் 1918) திருஒற்றியூரில் சமாதி அடைந்தனர்.

தந்தையார் பெயர்: பூவிருந்தவல்லி அண்ணுசாமி முதலியார். தாயார் பெயர்: உண்ணுமுலை அம்மாள். ஆசிரியர் பெயர்: பூங்காவன உபாத்தியாயர், பேறை-ஜெகநாதப் பிள்ளை, சொர்க்கபுரம் இராமலிங்கத் தம்பிரான்.

1873ல் மஹா வித்வான் திரசிரபுரம் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் திருமயிலையில் வந்திருந்தபோது, முதலியார்

சீர்பெருகுஞ் சிரபுரத்து மீனுட்சி சுந்தரநற் செம்ம லேறே!
ஏர்பெருகு நின்வீட்டு வாயிலினில் நிற்கின்றேன்; எனைஅ ழைத்துப்
பேர்பெருகுங் கல்விநலம் மென்மேலும் என்றனக்குப் பிறங்கி ஓங்க
† ஆர்பெருகு நின்ஆசி யினைக்கூறி அன்புடனே ஆட்கொள் வாயே.

என்று பாடிக்கொண்டு காணச் சென்றவுடன், பிள்ளையவர்கள் அன்பு பாராட்டிச் சில பாக்களுக்கு உரைகேட்டு மகிழ்ச்சி அடைந்து தாம் இயற்றிய நூல்களுள் சில கொடுத்து,

கலியாண சுந்தர!என் கண்மணியே! நின்பால்
மலிவாக்க் கல்வி வளரும்—பொலிவாகப்
பொற்புவியிற் கற்றோர் புகழச் சிவஞான
விற்பனனுய் வாழ்ந்திருக்க வே.

என்று எழுதிக் கொடுத்தனுப்பினர்.

---

* இந்த அனுபந்தம் நான்கும் பரீக்ஷைக்குப் பாடம் அன்று: பழைய வித்வான்களின் சரித்திரங்களை மாணவர்கள் படித்து அறிந்தால் அவர்களுக்குத் தமிழில் ஊக்கம் பெருகும் என்று கருதி, அவை இங்கே சேர்க்கப் பட்டுள்ளன. † ஆர்-அருமை; நிறைவு.

—பதிப்பாளர்.

முதலியார் சிறு பருவத்தே சமயோசிதமாகப் பல தனிப்பாடல் கள் பாடினர். இவர் பாடிய அடிமைத்திறம் என்னும் அகவலில்,

சேந்தமிழ் நூல்களைச் செவ்வே கற்றுப்
பைந்தேன் என்னப் பாடுவார்க்(கு) அடியேன்,

என்று கூறித், தம்பெயரை "மணவழகு" என வழங்க லாயினர்.

1878ல் திருக்கழுக்குன்றம் வேதமலை அடிவாரத்து மகாமண்டபத்தில் இலக்கணக் கடல் பேறை-ஜெகநாதப் பிள்ளை முதலிய வித்வான்கள் முன்னிலையில் இவர் அஷ்டாவதானம் செய்தபோது, வக்கீல்-சுந்தர முதலியார் புத்தகத்திற்கும் கரத்திற்கும் சிலேடை செப்புக என, முதலியார்

மூடித்தி றத்தலினல் மொய்ரேகை யேயுறலால்
நாடி எவரும் நண்ணுகையால்—கோடலினல்
வித்தகர்கள் நத்துகின்ற வேதகிரி தண்பதியில்
அத்தமது புத்தகமும் ஆம்.

எனப் பாடினர்.

சிவக்கொழுந்து பண்டாரம் "பால்" என்னும் மொழி பத்து முறை வரும்படி பாடுக என, முதலியார்

பற்றுங் கொடிக்ககனும் பங்கயனும் காணவும்
பற்றே லுரித்தவன்னப் பா * லேபால்—மற்றப்பால்
மாட்டுப்பால் பூப்பால் மரப்பால் வனிதையர்பால்
ஆட்டுப்பால் அப்பாலிப் பால்.

என இயற்றினர்.

செய்யூர் ஜமீன்தாரர் தொடர்ந்தார் வைத்தியநாத முதலியார் 'நாடு என எடுத்து ஊர் என முடிக்க வேண்டும்' என, முதலியார்,

நாடுசே ரன்சோழன் நற்பாண்டி யன்முதலோர்
தேடுபொருள் யாவும் சிறக்குமால்—நீடுதொண்டை
மண்டலத்திற்(கு) ஓர்திலகன் வைத்தியநா தச்சீமான்
ஒண்திறலோ டேவாழ்செய் யூர்.

என முடித்தனர்.

அவதானியார், ஜமீன்தாரர் தமக்குக் கொடுக்க வந்த பரிசைத் தம் ஆசிரியர் செகநாதப் பிள்ளை அவர்களுக்குக் கொடுக்கும்படி செய்தனர்.

---

* அன்னப் பால்-பரமசிவம்: அன்னம்-உமை, பால்—(இடப்) பக்கம்.

இவர் இயற்றிய நூல்கள்:—

செய்யுட் பகுதி:— திருவான்மியூர்ப் புராணம் (1000 செய்யுள்), பரத கண்டேதிகாசம், நீதி சாகரம், திருஒற்றியூர்க் கலம்பகம், பூவைச் சிங்கார சதகம், திரிபுரசுந்தர மாலை, மகாதேவி மந்திர மாலை, உருத்திராக்கமாலை, கடம்பன் கவசம், கண்ணப்பர் பதிகம், சிவானுபூதி வெண்பா, ஞானப்பிரகாச தேசிகர் சற்குருமணி மாலை என்பன; பதிகங்கள் பற்பல; சாற்றுகவிகள் பலப்பல.

சித்திர கவிகள்:— பட்டினத்துப் பிள்ளையார் மீது பாடிய கமல பந்தம், சிவலிங்க பந்தம், மாலை மாற்று; திரு ஆவடுதுறை ஆதீன மஹாசந்நிதானம்-சுப்பிரமணிய தேசிகர் மீது பாடிய கமலபந்தம்; சாற்றுகவிகளாகக் கொடுத்த கமலபந்தம், இரட்டை நாக பந்தம், அஷ்ட நாக பந்தம் முதலியன.

இலக்கணப் பகுதி:— மாணவர்களுக்கு யாப்பிலக்கணம் எளிதில் பயன்படும்படி வசன நடையில் எழுதிய செய்யுளிலக்கணம் சர்வகலா வல்லவரான பூண்டி-அரங்கநாத முதலியார் M. A. முதலிய பேரறிஞர்களால் புகழ்ந்துரைக்கப் பெற்றது.

உரைப் பகுதி:— சித்தாந்த நூல்களுள் ஒன்றாகிய "நெஞ்சு விடு தூது" என்பதற்குப் பதவுரையும், பட்டினத்தார் திருப்பாடல் திரட்டிற்கு ஞானார்த்ததீப உரையும், தாயுமானவர் திருப்பாடல் திரட்டிற்கு மெய்கண்ட விருத்தியுரை என்னும் சிறந்ததோர் உரையும் இயற்றினர்.

வசனப் பகுதி:— சிவராத்திரி புராண வசனம்; பூவாளூர், திருப்பாசூர், திருவலிதாயம், திருப்பாலவனம், பஞ்சேட்டி, திருஒற்றியூர் முதலிய ஸ்தலங்களின் புராண வசனங்கள்; ஆண்டார் குப்பத்தலமான்மியம், வேத சிரோமணிமான்மியம், வாயிலார் நாயனார் வைபவம், ஞானசித்தப் பிரபாவம், சேக்கிழார் சரித்திரம் என்பன; தருக்க சோபானம், சித்தாந்தக் கட்டளை, சித்தாந்த தசகாரியக் கட்டளை, சித்தாந்த வசன பூஷணம், சில கண்டனங்கள் முதலிய சித்தாந்த நூல்களுமாம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்குப் பாண்டித் துரை தேவர் அவர்களுக்கு உதவி புரிந்தும், அச்சங்கத்தில் பல பிரசங்கங்கள் செய்தும், அச்சங்கத்து மகா வித்துவானுயும் விளங்கினர்.

முருகதாசர் ஏகத்தாள் இதழகல் அந்தாதி என்பதை இயற்றி அச்சிடுகையில் "இந்நூலின் அருமையினை அறியும் வித்துவான் ஒருவனைக் காண்பனோ" எனக் கவலையுற்றபோது, முதலியார்,

தண்டங் கையேந்த லியற்றிடந் தாதியைச் சாற்றரிதே

என நான்கு அடிகளும் இவ்வடியே அமையப் பாடிக் கொடுத்தபின், முருகதாசர் இச்செய்யுளையே ஷை அந்தாதிக்குச் சாற்று கவியாக அமைத்து,

ஏகத்தாள் அந்தாதி யின்பெருமை அறிபவரியார்? எனும்க லக்கம்
போகத்தான் உயர்முனிவர் துதிகொள்செந் தமிழதனிற் புலமை வாய்ந்த
வேகத்தால் ஓர்கவியை அதுபோல் இயற்றிட்டான் வேலோன் ஞானத்
தாகத்தான் கலியாண சுந்தரநற் சித்தாந்த சரப மாதோ.

எனப் பாடி அருளினர். அன்று முதல், இவர்க்குச் சித்தாந்த சரபம் என்னும் பட்டம் வழங்கியது.

இவர், சைவசித்தாந்த மகாசமாஜத்தின் "சித்தாந்தம்" பத்திராசிரியராயும், ஷை சமாஜத்தின் மகாநாடு 1917-ம் ஆண்டில் பிரம்பூரில் கூடியபோது அதன் தலைவராயும் விளங்கினர்.

இவர், திருக் கைலாய பரம்பரை காஞ்சிபுரம் ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடத்தில் சிவதருமணி என்னும் தீக்ஷாநாமத்துடன் சைவசந்நியாசம் பெற்று, அவ்வாதீனத்து மஹாவித்வானாக அமர்ந்து, கலியாணசுந்தர யதீந்திரர் என்னும் சிறப்புப் பெயருடன் விளங்கினர்.

இவர் மாணவர்கள்: வல்லை-சண்முகசுந்தர முதலியார் (Indian School ot Medicine), காஞ்சி-நாகலிங்க முனிவர், பாலூர்-வேலு தேசிகர், வல்லி-ப. தெய்வநாயக முதலியார், புழலை-திருநாவுக்கரசு முதலியார், சோ-தெய்வசிகாமணி செட்டியார், நின்றை-தங்கவேலு முதலியார், மோசூர்-கந்தசாமி முதலியார், மணிமங்கலம்-திருநாவுக்கரசுமுதலியார், தணிகாசலம் பிள்ளை, கா. இ-சிதம்பரசாமி பாண்டியர் முதலிய பலர், கிறிஸ்தவர் சிலர், மகம்மதியர் சிலர், ஆதித் திராவிடர் சிலர், மாதர் சிலர்.

—பதிப்பாளர்.

அனுபந்தம் II

ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள் பிரசங்கம்.

திருமயிலை வி-சுந்தரமுதலியார் சரிதம்.

பச்சையப்பன்மீது பாடல்.

[இது பச்சையப்பமுதலியார் பெயரால் விளங்கும் கலாசாலை மண்டபத்தை 1850-ம் வருஷத்தில் திறந்தபோது ஜியார்ஜ் நார்ட்டன் துரையவர்கள் செய்த பிரசங்கமாகும்.

இது, பச்சையப்பன் தர்ம விசாரணைக்கர்த்தர்களின் அக்கிராசனுதிபதியாக இருந்த திவான் பஹதூர் பாக்கம்-இராஜரத்தின முதலியார், ஸி. ஐ. இ. அவர்கள் விருப்பத்தின்படி திருமயிலை வி. சுந்தர முதலியார் 1911-ம்ஞு சென்னை ரிப்பன் அச்சியந்திர சாலையில் பதிப்பித்த பச்சையப்ப முதலியார் சரித்திரத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுந்தரமுதலியார்-திருமயிலையில் தென்னண்டை மாடவீதியில் உள்ள சித்திரச்சத்திரம் கட்டி உதவிய வள்ளல் வியாசர்பாடி—விநாயக முதலியார் (1803--1868) தம்பி அப்பாசாமி முதலியார் மகனுராவர். திருஆவடுதுறை ஆதீனத்து மஹா வித்வான்-மீனுட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் அச்சத்திரத்தின் பெருமையைப் பாராட்டிச் சித்திரச்சத்திரப் புகழ்ச்சிமாலையும், வள்ளல்—விநாயக முதலியார் மீது வியாசக்கோவையும் பாடினர். சுந்தரமுதலியார் திருவள்ளுவநாயனுர் சந்நிதியில் தொண்டுசெய்தவர்; திருக்குறளுக்குக் கருத்துரை எழுதிவெளியிட்டவர்; சிவநாம சங்கீர்த்தனம் இயற்றியவர்; திருத்தொண்டர் புராண வசனம், கிறிஸ்துமதக் கண்டனம், சைவ தூஷண பரிகாரம், மாதரொழுக்க இலக்கணம் என்னும் வசன நூல்களும் எழுதியவர்; இந்துஜனபூஷணி என்னும் பத்திரிகை சிலகாலம் நடத்தியவர்; பழைய வித்வான்களிடம் பழகியவர். எட்டயபுர ராஜா அவர்களிடமிருந்து எட்டயபுரம் சமஸ்தான வித்வான் என்றபட்டம் இவர் பெற்றபோது சென்னைப்புலவர்களும் தென்னுட்டிலிருந்தபுலவர்கள்பலரும் பாக்களும்நற்சாட்சிப்பத்திரங்களும் கொடுத்து இவரைச் சிறப்பித்தனர். இவர் எழுபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து 1918-ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் சென்னையில் சமாதி அடைந்தனர்.

பச்சையப்ப முதலியார் சரித்திரத்தில் அவர்மீது மஹாவித்வான் உரையாசிரியர்-காஞ்சிபுரம் சபாபதி முதலியார் முதலிய பிரபல வித்துவான்கள் புகழ்ந்து பாடிய பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அப்பாட்டுக்களுள் சில வருமாறு:—

உரையாசிரியர் மஹாவித்வான்

காஞ்சிபுரம் சபாபதி முதலியார் பாடியது.

அண்ணலருட் கடல்படிந்தோம்; ஆழ்கடலைக்
குடித்துவந்தோம்; அரிய சீரே
நண்ணுதமிழ்க் கடல்கடந்தோம்; காஞ்சிநகர்ப்
பச்சையப்ப நகுலன் ஈட்டும்
எண்ணுபுகழ்க் கடல்எங்கும் பரந்த(து);இதை
அளவிடவும் ஏலா(து) என்னக்
கண்ணி,அகத் தியமுனிபோய்க் குன்றேறி
இருந்தனனுல் கவலை கொண்டே.

அகத்தியர் "சிவபிரானது அருட்கடலில் திளைத்தோம்; ஆழ்ந்த கடலையும் குடித்து மகிழ்ந்தோம்; செந்தமிழ்ப் பெருநூல்களையும் கற்று மேம்பட்டோம்; பச்சையப்ப முதலியார் புகழாகிய கடல் எங்கும் பரவியுள்ளது, இதனை அளவிடவும் முடியாது" என்று எண்ணிக் கவலைகொண்டு பொதிய மலையில் ஏறியிருந்தனர் என்க.

சந்திரசேகர முதலியார் பாடியது.

ஈனர்கடை செல்லாமே, இல்லாமை சொல்லாமே,
மானமற நின்றுமுகம் வாடாமே;—தீனரைப்போல்
பிச்சை, அப்ப! என்னுமே பெற்(று) உய்ய லாம்புலவீர்!
பச்சையப்பன் நல்கும் பரிசு.

தாங்காபுரம்

அஷ்டாவதானம் கதிர்வேல் கவிராயர் பாடியன.

மால்வேலை உற்றுன்; மலர்அயன்பூத் தானமுற்றுன்;
பால்வண்ணன் வாழும் பலம்உற்றுன்—மால்கச்சிப்
பச்சையப்ப வள்ளலன்றிப் பாவலர்க்கு வேறுளரோ
இச்சகந் தன்னில் இயம்பு. (சகம்-பூமி) 1

மெச்சுசீனி வாசதுரை வேண்டிமுனே யாவிட்டால்
பச்சையப்பன் பணத்தைப் பார்ப்பவர் ஆர்?—இச்சகத்தில்
பங்குனி அமாவாசைப் பாவலர்க்கோர் கந்தாயம்
எங்குவரு மானே இயம்பு.

பச்சையப்ப முதலியார் தமது சொத்துக்களைத் தருமத்திற்கு எழுதிவைத்த பின், ஷை சொத்துக்கள் வரவரக் குறைவாகி விட்ட படியால், சீனிவாச பிள்ளை என்பவர் அட்வகேட் ஜெனரலாக இருந்த நார்ட்டன் துரையைக் கொண்டு நியாய ஸ்தலத்தில் ஷை சொத்துக்களைப் பரிபாலித்து உயிலின்படி தருமங்களை நடத்த டிரஸ்டிகளை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்தனர் என்பதும், பச்சையப்ப முதலியார் 1794-ம் ஆண்டில் பங்குனி மாத அமாவாசை யன்று இறந்து விட்டதை டிரஸ்டிகள் ஆண்டு தோறும் கொண்டாடினபோது பச்சையப்ப முதலியார் மீது பாடிவந்த வித்வான்களுக்குப் பரிசு கொடுத்துவந்தனர் என்பதும் இச் செய்யுளால் விளங்கும் உண்மைகள் என்க. 2

எட்டயபுரம் சமஸ்தான வித்வான்
திருமயிலை-வி. சுந்தர முதலியார் இயற்றித் தம் பதிப்பில் சேர்த்த

வாழ்த்து

தருமகுண தயாநிதியாந் தனதன் காஞ்சித்
தலப்பச்சை யப்பன்சீர் தழைத்து வாழி
அருமைபெறும் அவன்கல்விச் சாலை எங்கும்
அமர்ந்துகலை கற்குமா ணவரும் வாழி
ஒருமைமிகும் பிரின்சிபல் உபாத்தி யாயர்
* ஒன்பதின்ம ராம்சபையார் உலகில் வாழி
பெருமைசெறி தளிகளிற்பேர் அறங்கள் ஓங்கிப்
பிரபலமாய் எஞ்ஞான்றும் பிறங்க வாழி.

—பதிப்பாளர்.]

---

* டிரஸ்டிகள்

அனுபந்தம் III

சிசுபால சரிதம்

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம்-குமாரசாமிப் புலவர் 1855–1922 தந்தையார் பெயர்: அம்பலவாண பிள்ளை; தாயார் பெயர்: சிதம்பர அம்மையார்; ஆசிரியர் பெயர்: முருகேச பண்டிதர், கனகசபைப்புலவர், நாகநாத பண்டிதர்.

இவர் மொழி பெயர்த்த நூல்கள்:—மேகதூதக் காரிகை, சாணக்கிய நீதி வெண்பா, சிசுபாலவதம், இராமோதந்தம், சாந்தோக்கிய உபநிடதம், பிரச்சினேபநிடதம், சூதசங்கிதை என்பன.

இவர் இயற்றிய நூல்கள்:—இராவணன் சிவதோத்திரம், நகுலேசுரப்பெருமான் ஊஞ்சல், இலக்கண சந்திரிகை, கண்ணகி கதை, நீதிநெறி விளக்க வுரை, வினைப் பகுபத விளக்கம், இலக்கியச் சொல்லகராதி, தமிழ்ப் புலவர் சரித்திரம் என்பன.

இவர் பதிப்பித்த நூல்கள்:—நகுலமலைக் குறவஞ்சி நாடகம், சூடாமணி நிகண்டு (முதல் தொகுதி), யாப்பருங்கலக்காரிகை யுரை, ஆசாரக்கோவை, சதாசாரக் கவித் திரட்டு, நான்மணிக்கடிகை, யாப்பருங்கலமும் வெண்பாப் பாட்டியலும், இரகுவமிசக் கருப்பொருள், திருவாதவூரர் புராணம், தண்டியலங்கார வுரை, முத்தக பஞ்ச விஞ்சதி, (தி. த. கனகசுந்தரம் பிள்ளை B. A. அவர்களுடன்) அகப் பொருள் விளக்கவுரை, இராமாவதாரம் - பாலகாண்டம் என்பன.

இவர், ஏழாலைச் சைவப் பிரகாச வித்தியாசாலையில்உபாத்தியாயராயிருந்தனர்; பல்லாவரம் சுவாமி வேதாசலம் (மறைமலை அடிகள்) அவர்கள் நடத்தும் ஞானசாகரப் பத்திரிகைக்கும், செந்தமிழ்ப் பத்திரிகைக்கும் விஷயதானம் செய்தனர்; தமிழிலும் வடமொழியிலும் சிறந்த வித்வான்என விளங்கினர்.

இவர் சரித்திரம் புன்னாலைக் கட்டுவன்-சி. கணேசையரவர்கள் எழுதியுள்ளனர்.

—பதிப்பாளர்.

அனுபந்தம் IV

ஜனவிநோதினி

தமிழில் மாதாந்த பத்திரிகை தோன்றுவதற்கு முன், ஜன விநோதினி என்னும் பத்திரிகை அரசாங்கத்தாரால் நடத்தப் பெற்றது. வித்வான் - கா. ரா. நமசிவாய முதலியார் அவர்கள் அப் பத்திரிகையில் கண்ட வியாசங்களுள் சிலவற்றை இப்போது பதிப் பித்து வருகின்றனர்.

இவர், 1876ம்-ஆண்டில் பிறந்து, புலமையும் செல்வமும் அடைந்து, புலவர் பலர் சூழ வாழும் வேளாளர்.

இவர் தந்தையார் பெயர்: காவேரிப்பாக்கம்-இராமசாமி முதலியார்; தாயார் பெயர்: அகிலாண்டவல்லி அம்மை.

திருமுல்லைவாயிற் புராணம், சந்தான குரவர் நான்மணி மாலை என்பவற்றின் ஆசிரியரும், கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்தின் உரையாசிரியரும், மணிமேகலை என்னும் பேரிலக்கியத்தை முதன் முதலில் பதிப்பித்தவரும் ஆகிய மஹாவித்வான் திருமயிலை சண்முகம் பிள்ளை அவர்கள் இவர்க்கு ஆசிரியராவர்.

இவர் இயற்றிய நூல்கள்: தணிகைச் சிங்கார சதகம், பிருதிவிராஜன் நாடகம், குணவான் தன் குற்றம் உணர்வான், பேராசைப் பேயன், கீசகன் முதலியன. இவர் இயற்றிய செய்யுள்கள் இனிமை வாய்ந்து செம்பாகமாக அமைந்துள்ளன.

இவர் இயற்கைப் பொருள்களைப் பற்றிச் சிறு பிள்ளைகள் அறியும்படி எழுதியுள்ள வாசக பாடங்களை அன்றி, திருவாசகம், தொல்காப்பிய மூலம், பத்துப்பாட்டு மூலம், தஞ்சைவாணன் கோவை, தணிகைப் புராணம், நன்னூல், தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம் பூரணர் உரை) முதலியன பதிப்பித்துள்ளனர். இதுவரையும் அச்சில் வெளிவராத சில ஏட்டுப் பிரதிகளும் ஆராய்ச்சிக் குறிப்புக்களும் இவர் வைத்துள்ளனர்.

"என்றும் உ[ள்]ள தென்தமிழ்"—கம்பர்

நலம்

எங்கணும் பரவுக.

திருவனந்தபுரம்-மஹாராஜா கல்லூரியில்

தத்துவ சாஸ்திர ஆசிரியராயிருந்த ராவ்பகதூர்

P. சுந்தரம் பிள்ளை M. A, F. M. U, M. R. A. S, F. R. H. S.

(1855—1897)

இயற்றிய

மனோன்மணீயம்

என்னும் நாடகத்தில் கூறிய

தமிழ்த் தெய்வ வணக்கம். *

நீராருங் கடல்உடுத்த நிலமடந்தைக்(கு) எழில்ஒழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழ்அணங்கே!

பல்உயிரும் பலஉலகும் படைத்(து)அளித்துத் துடைக்கினும்ஓர்
எல்லைஅறு பரம்பொருள் முன்இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்உதரத்(து) உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்(கு) அழிந்(து)ஒழிந்து சிதையா உன்
சீர்இளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

---

* இப்பாட்டுக்கள் தமிழ் மாணவர்களின் உள்ளத்தில் பதிய வேண்டிய சிறப்பு வாய்ந்தவை. —பதிப்பாளர்.

அருஞ்சொல் உரை.

அ

அகப்புறம்—ஒருசார் தொடர்பு கொண்டு புறம்பானது
அகன்—மனம்
அக்காரம்—சருக்கரைப் பாகு
அங்காடி—கடை
அச்சுதன்—அழியாதவன்
அட்டார்—சமைத்தவர்
அண்டம்—உலகம்
அம்பிகள்—படகுகள்
அருத்தி—அன்பு
அல்—இருள்
அற்ருர்—பொருள் அற்றவர்: வறியவர்
அனன்று—காய்ந்து
அனிச்சம்—அனிச்சப்பூ

ஆ

ஆர்கலி—கடல்
ஆர்ப்பு—ஆரவாரம்
ஆவார்—புண்ணியமுடையார்
ஆற்றுணு—வழிப் பிரயாணத்திற்கு உதவும் உணவு
ஆனனம்—முகம்

இ

இரவி—சூரியன்
இருள்—நரகம்
இழுக்கு—குற்றம்
இறுத்தார்—தங்கினர்

ஈ

ஈடு—வலிமை

உ

உகந்தவர்—விரும்பியவர்
உகிர்—நகம்
உடர்—உடம்பு
உம்பர்—விண்ணுலகு
உலகு—உலகநடை
உளைய—வெறுக்கத்தக்க விதமாக

ஊ

ஊருணி—குளம்

எ

எழில்-அழகு
எழுவகைப் பிறப்பு—தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்
எழு—இரும்புத் தூண்
எள்ளாமை—இகழாமை
என்பு—எலும்பு—உடம்பு

ஏ

ஏணில்—சிறப்பினுல்
ஏவம்—குற்றம்

ஒ

ஒடி—காட்டுப்புதர்
ஒரீஇ—நீங்கி
ஒள்ளியீர்—ஒளியுடையவரே
ஒற்கம்—தரித்திரம்

ஓ

ஓகை—ஓசை
ஓம்புதல்—பாதுகாத்தல்

ஔ

ஔவியம்—பொறாமை

க

கடவுளர்யவனன்—தேவதச்சன்
கடன்—கடமை
கடையுகம்—பிரளயகாலம்
கணம்—கூட்டம்
கணிவேங்கை — ஜோசியனைப் போல் நாளை அறிவிக்கும் வேங்கைமரம்
கம்பத் தலைவர்—ஏகாம்பரநாதர்
கயின்—பூட்டு
கவிகை—குடை
களம்—கழுத்து

கா

காகளம்—எக்காளம்
காசு—இரத்தினம்
கார்ஆ—காராம் பசு
கார் வானம்—ஒரு திருப்பதி

கி

கிராதர்—வேடர்

கு

குடமுழா—ஒருவகைத் தோற் கருவி
குடர்—குடல்
குணபால்—கிழக்குத் திக்கு
குணில்—கவண்கல்
குண்டம்—ஓமகுண்டம்
குயிலுதல்—பதித்தல்
குவை—கூட்டம்
குழாம்—கூட்டம்
குழையும்—வாடும்
குறள்—குட்டையானவள்
குறி எதிர்ப்பு—குறிக்கப்பட்ட பின்வரும் பயன்

கூ

கூடு—உடம்பு

கே

கேழ்—நிறம்

கை

கை—துதிக்கை
கை உய்ந்தார்—கை வருந்து தலைத் தப்பினவர்

கொ

கொக்கு—மாஞ்சோலை
கொடை—வள்ளல் தன்மை

கோ

கோடு—கொம்பு வாத்தியம்
கோமளம்—இளமை

ச

சசி—இந்திராணி
சரம்—அம்பு

சா

சாடி—மோதி
சாடு—அழிக்கின்ற
சாந்தாற்றி—விசிறி
சாவாமருந்து — சாவாமையைக் கொடுக்கும் அமிர்தம்

சி

சித்துரு-ஞானவடிவம்
சிந்து—நொண்டி
சிரம்—தலை
சிருங்கி பேரியர்கோன்—சிருங்கி பேரம் என்னும் ஊருக்கு அரசன்
சிறுகூழ்—இளம் பயிர்
சின்னம்—திருச்சின்னம்

சீ

சீரம்—மாவுரி

சு

சுவணம்--பொன்
சுரிகை—உடைவாள்

சூ

சூறைபட—அலைபட

செ

செங்கீரை -- செவ்விய மழலைச் சொல்
செயம்—ஜெயம்
செய்யாள்—இலக்குமி
செய்வினை — கைத்தொழில் அமைந்த

சே

சேமம்—இன்பம்
சேரி—சேர்ந்திருக்கும் இடம்
சேவையர்—வழிபடுவோர்

சோ

சோகாப்பர்—தாமே துன்பப்படுவர்
சோரி—இரத்தம்
சோலைமலை — திருமாலிருஞ் சோலை
சோழன்—கரிகாற் பெருவளத் தான்
சோணை—விடாப் பெருமழை

ஞா

ஞாலம்—பூமி

த

தகவு—பெருந்தகைமை; சான்றாண்மை
தகுணிச்சம்—ஒருவகைத் தோற் கருவி
தக்கை—பம்பை வாச்சியம்
தண்ணுமை—மத்தளம்
தமர்—தம்மவர்—உறவினர்
தமனியம்—பொன்
தவர்—முனிவர்

தா

தாரகை—நட்சத்திரம்
தாரு—மரம்

தி

திங்கள்—சந்திரன்
திருப்பாட்டு—தேவாரம்
திறம்பா—தவறாத

து

துகிர்—பவழம்
துடி-உடுக்கை; பறை
துணை—வாழ்க்கைத் துணை
துப்பு—வலிமை
தும்பி—யானை
துரிசு—குற்றம்
துன் ஊசி—தைக்கும் ஊசி

தெ

தெவ்—பகைவர்
தெள்ளியீர் — தெளிந்த சுபாவமுடையீர்
தெறித்தல்—சிதறுதல்

தே

தேரை—தவளையின் ஓர் இனம்

தொ

தொடி-கடகம்
தொண்டர்—அடியார்

தோ

தோணி—மரக்கலம்

ந

நயனம்—கண்
நரை ஆன்-வெண்மையான மாடு
நல்குரவு—வறுமை
நற்கு—நன்கு
நன்றி—நன்மை

நா

நாரியர்—மாதர்
நாவாய்—ஓடம்

நி

நிணம்—கொழுப்பு
நிரந்தரம்—எப்போதும்
நிலாத்திங்கள் துண்டம் — ஒரு திருப்பதி

நீ

நீரகம்—ஒரு திருப்பதி
நீர்—அருவி நீர்
நீர்கள்—நீங்கள்
நீர்மை—தகுதி

ப

பகிரண்டம்—பேரண்டம்
பக்கத்தார்—அமைச்சர்
படர்—துன்பம்
பணிலம்—சங்கு
பண்ணை—விளையாட்டு
பதடி—பதர்
பதலை—வாய் அகன்ற பறை
பயிர்—அருவருப்பு
பரவை—கடல்
பருவரல்—துன்பம்
பள்ளி—படுக்கை

பா

பாரித்தவன் — பருத்த உடம்புடையவன்

பி

பிண்டம்—சரீரம்
பின்னவன்—தம்பி

பீ

பீடு—செல்வம்

பு

புயல் வண்ணன்—திருமால்
புலிப்பாதன்—வியாக்கிரபா,
புளிஞர்—வேடர்

பூ

பூதம் ஐந்து—நிலம், நீர், காற்று,

பூதி—செல்வம்

பெ

பெரும்பற்றப்புலியூர்—சிதம்

பே

பேரகம்—ஒரு திருப்பதி

பொ

பொத்திய—மூடிய
பொருப்பு—மலை
பொருவரிய—ஒப்புமை அரி
பொன்—இலக்குமி

போ

போது—பூ

ம

மடி—சோம்பலுள்ளவன்
மண்ணு நீராட்டும்—கழுவும்
மய்—குற்றம்
மறுகு—தெரு

மா

மா—மாமரம்; குதிரை
மாகம்—விண்ணுலகம்

மி

மின்—மின்னல்

மு

முகத்தல்—மொள்ளல்
முகன்—முகம்
முச்சகம்—மூன்று பூமி
முத்தம்—முத்துகள்
முரண்—பகைமை
முருடு—மத்தளம்
முன்னவன்—தமையவன்

மூ

மூரி—கிழ எருது
மூவா மருந்து—இறவாமையைச் செய்யும் மருந்து
மூழை—அகப்பை

மை

மை—அஞ்சனம்

மொ

மொந்தை—ஒரு கண்ணையுடைய பறை

மோ

மோப்ப—மோந்து பார்க்க

வ

வம்பு—வாசனை
வரம்—பெருமை
வரை—மலை
வற்கலை—மாவுரி
வன்பால்—வலிய பூமி

வா

வாமம்—அழகு
வாரி—கடல்
வாயாவோ—பாய மாட்டாவோ
வாய்தல்—வாசல்
வாள்—ஒளி

வி

வியங்கொள்ளின்—ஏவுதல் கொண்டால்
விருந்து—விருந்தினர்
விலங்கல்—மலை

வெ

வெம்பிய—கோபம் மிக்க
வெஃகா—ஒரு திருப்பதி

வே

வேடு—வேடர் குலம்
வேதகம்—குளிகை
வேலை—கடல்போன்ற சேனை
வேழம்—யானை
வேளாண்மை—உபகாரம்

வை

வையகம்—நிலவுலகம்

Thompson & Co., Ltd., University Printers, Madras.